குறிப்பு: இது, சைவசித்தாந்த சாஸ்திரம் பதினான்கனுள் ஒன்று. ஆசிரியர் உமாபதி சிவாசாரியார் இதற்குக் காஞ்சீபுரம் இலக்கண சிதம்பரநாத முனிவர் உரை வகுத்துள்ளார். இச்சுவடியில் மூலம் மட்டும் உள்ளது.

பூர்த்தி.

Beginning:

ஒளியான திருமேனி யுமிழ்தான மிகமேவி
களியார வருமானை கழலொரு மறவாம
லளியாரு மலர்தூவு மடியார்க ளுளமான
வெளியாகும் வலிதாய வினைகூட னினையாவே.

* * * *

End:

திருவருள் கொடுத்து மற்றிச் சிவப்பிர காச நன்னூல்
விரிவது தெளியு மாற்றால் விளம்பிய வேது நோக்கிப்
பெருகிய வுவமை நான்கின் பெற்றியி னிறுவிப் பின்முன்
றருமலை வொழியக் கொள்வோன் றன்வயிற் சாற்ற லாமே.

Colophon :

பெருநூற் பொருளைப் பின்முன் மலைவற வருளுடன் கொள் பவர்க் கறைக வென்றது.

திருவரு ளொன்றுங் குருநூல் கொடுப்பது
சிவப்பிரகாசம் முற்றும்.

No. 1184. CIVA-P-PIRAKĀCAM—[TEXT]

சிவப்பிரகாசம்—[*மூலம்*]

[253-C]

Size, 12″ × $1\frac{1}{4}$″. Pages, 30. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 1183.

Complete.

குறிப்பு : *இது, முன் எண் 1183 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1185. CIVA-P-PIRAKĀCAM—[TEXT]

சிவப்பிரகாசம்—[*மூலம்*]

[1196-A]

Size, $10\frac{1}{4}$″ × $1\frac{1}{2}$″. Pages, 38. Lines, 10 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note : Same as No. 1183.

Complete.

குறிப்பு : *இது, முன் எண் 1183 பிரதி போன்றது. ஏடுகள் செல்லரிக்கப்பட்டும் ஓரங்கள் ஒடிந்தும் உள்ளன. சிதிலம்.*

பூர்த்தி.

No. 1186. CIVA-P-PIRAKĀCAM—[TEXT]

சிவப்பிரகாசம்—[மூலம்]

[574-C]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 30. Lines, 13 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1183.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1183 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1187. CIVA-P-PIRAKĀCAM

[TEXT AND ANNOTATIONS]

சிவப்பிரகாசம்—[மூலமும் உரையும்]

[539]

Size, $11\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 120. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is the same as No. 1183 but contains text and annotations.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1183 பிரதி போன்றது. இந்தப் பிரதி காவை அம்பலவாணத் தம்பிரான் மரபு, சிவப்பிரகாசன் எழுதிய உரையுடன் பூர்த்தியா யுள்ளது.*

பூர்த்தி.

Beginning:

ஒளியான திருமேனி யுமிழ்தான மிகமேவு
களியார வருமானை கழலுளு மறவாம
லளியாளு மலர்தூவு மடியார்க ளுளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே.

எ - து. ஒளியான திருமேனி - ஞானப்பிரகாசமான திருமேனி யிலே நின்றும், உமிழ்தான மிகமேவு - பொழியா நின்ற மதத்தினை மிகவும் பொருந்தப்பட்டு, களியார வருமானை - கர்வ மிகுதியாலே யெழுந்தருளா நின்ற யானை முகத்தினையுடைய கடவுளது, கழல் நாளும் மறவாமல் - சிறிய பாதத்தை நாடோறும் மறவாதபடி, அளியாரு மலர்தூவு மடியார்கள் - வண்டுகளை யாளப்பட்ட பூக் களினாலே யருச்சித்து வழிபடுகின்ற தொண்டரா யுள்ளவர்களது, உளமான வெளியாகும் - இதயமானது அஞ்ஞான நீங்கிச் சிவம் பிரகாசியா நிற்கும்; வலிதாய வினைகூட நினையாவே - ஆகையாலே யவர்கள் மிக்க வினைகளானவை பொருந்த விசாரியா தென்றவாறு. என்னவே இந்நூலைக் காப்பது நிமித்தமாக வழிபடா நின்றது என்பது கருத்து.

* * * *

End:

திருவருள் கொடுத்து - பலபாகமும் வந்து சத்தினிபாதமுண் டாய் வந்தானொரு சீடனுக் காசாரியன் றனது திருவடியை வைத்து, மற்றிச் சிவப்பிரகாச நனூல் விரிவது - இங்ஙனஞ் சிவப்பிரகாச மென்னு நல்ல நூலினது வந்த ...... விரிவானதை, தெளியுமாற்ருல் - அறிந்து தெளியும் வழியால், விளம்பிய வேது நோக்கி - நூல்களிற் சொல்லப்பட்ட இயல்பு காரிய மனுபலத்தி யென்கிற வேதுவாகிய காரண காரியங்களை யாராய்ந்து பார்த்து, பெருகிய வுவமை நான்கின் பெற்றியினிறுவி - மிகவு முவமையாகச் சொல்லப்பட்ட வினைப்பயன் மெய்யுருவென்னு நால்வகையி னுண்டாகிய வியல்பிலே கருத்தை நிறுத்தி, பின்முன் றருமலை வொழியக் கொள்வோன்றன்..... த்திலே தெளியச் சொல்லலா மென்றவாறு. 10

திருச்சிற்றம்பலம்.

Colophon:

....
நிலவுல கொன்று நூற்கருத் தாகுந்
திருவரு ளொன்று மருளுரை நூலைக்
கொடுக்கு முறைமை படுத்திய தாகு
மென்றிப் படிய...... பதிதேவ னுரைத்த

மெய்ப்படு சிவப்பிர காச விருத்தக்
கருத்தின துண்மை விரித்துரைத் தருளினன்
சண்டையில் வாழுந் தவகுரு நாதன்
பண்பமர் சிற்றம் பலவன் ருனே.

ஓங்கொளி யென்ற விருத்தந் தொடங்கித் தொன்மையவா வென்னும்.........முடிவாகிய செய்யுட் பனிரெண்டும் பாயிரமாக வகுத்தருளிச் செய்து.........ல் பதியிலக்கணமாகி.........பல்கலை யென்ற விருத்தந் தொடங்கி யேற்றவிவை யென்ற விருத்த முடிவாகிய செய்யுளாறு முதற் சூத்திரமாகவும், பசுவிலக்கணமாகிய யெண்ணரிதா யென்ற விருத்தந் தொடங்கி அரிவைய ரின்புறு முத்தி யென்ற விருத்த முடிவாகிய செய்யுள் முப்பத்திரண்டும் இரண்டாஞ் சூத்திரமாகவும், ஆகப் பொது வைப்பது மிங்ஙனம் வகுத்து மேலுண்மை யைம்பதில் இங்கிவை யென்ற விருத்த மொன்று மிந்த வுண்மைக்கு அதிகார வகுப்பாகவும், மேலான்ம விலக்கணமாகிய செறிந்திடு மென்ற விருத்தந் தொடங்கி ஓரிடத் திருத்தி யென்ற விருத்த முடிவாகிய செய்யுளெட்டு மூன்று, நாலாஞ் சூத்திரமாகவும், உணர்த்து முறைமையாகிய மருவிய பொறியிலென்ற விருத்தந் தொடங்கி அறிந்திடு மறுதியென்ற விருத்த முடிவாகிய செய்யுளைந்து மஞ்சாஞ் சூத்திரமாகவும், ...மையாகிய காட்டிடும் பன்னிற மாயை மாமாயை என்னும் விருத்தம் மூன்றினுள் காட்டிடுங்.........மென்று மாருஞ் சூத்திரமாகவும், நின்ற விருத்த மிரண்டு மேலதற்கே புறனடையாகி.........வேழாஞ் சூத்திரமாகவும், மேலதன் ....ய னென்னும் ......சுர......னுள தேசு......... மரு......... மென்ற விருத்தந் தொடங்கி எல்லையிற் பிறவியென்னும் விருத்த முடிவாகிய செய்யுட் பத்தொன்பது ....னிதனும மென்னு மதிகாரமாகிய பந்தமானவை திருவெழுத்து ஆசுறு என்னும் விருத்த மூன்று ஆக முன்னுங் கூட்டச் செய்யு ளிருபத்திரண் ......னு......தசுறு மருவு மென்ற விருத்த மொன்றும் இவையிற் றுக்கு அதிகார வகுப்பாகவும் ஆத்ம தெரிசனமாகிய தன்னறி வதனு லென்னும் விருத்தந் தொடங்கி சுத்தமாஞ் சத்தியென்ற விருத்த முடியச் செய்யுள் நாலும் எட்டாஞ் சூத்திரமாகவும், நிறைதென ......ஆக...... சூத்திரம் பன்னிரண்டும் வகுத்து நிலவுலகாயு -தி என்னும் விருத்த மொன்று மிந்நூலின் கருத்தாகவும் திருநள் கொடுத்தென்னும் விருத்த மொன்றுஞ் சீடனுக்கு நூலு

மத்தமுங் கொடுக்கு முறைமையாகவும் வகுத்து இந்நூ லருளிச் செய்ததெனவறி ..... இந்த வியாக்கியானஞ் செய்தது மெய்கண்ட சந்ததியில் காவை யம்பலவாணத் தம்பிரானுர் திருவடி மரபி லாசாரியரில் மதுரையில் ஞானப்பிரகாச தம்பிரானுர் திருவடி யடியாரில் சிவப் பிரகாசன் செய்த வியாக்கியே......

திருச்சிற்றம்பலம்.

மார் தொட்டாதெம.........ம் விடா தேவரதுகள் பேசாதே
வோவொட்டாயிலே பறியாதே வீறுகள் போகாதே
யார்செத்தா லெனவார் கெட்டாலென வாழுகபொய் மனமே
நீ செத்தேயிரு நீ கெட்டேயிரு தேசத்தோ டுறவே மனமே.

No. 1188. CIVA-P-PIRAKĀCAM—[ANNOTATIONS]

சிவப்பிரகாசம்—[உரை]

[710]

Size, 15″ × 1⅛″. Pages, 1 82. Lines, 10 on a page. Condition, Very injured. Appearance, Very old.

Note: This is the same as No. 1183 but the annotations are different.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1183 பிரதி போன்றது. உரை மட்டும் உளது. இவ்வுரை முன் உரையின் வேருக வுள்ளது. உரையாசிரியர் இன்னுரென்று தெரியவில்லை. நூல் முழுதும் உளது. முதலில் ஓர் ஏடு இல்லை; ஏடுகள் முழுதும் சிதிலமா யுள்ளன.

பூர்த்தி.

Beginning:

உமாபரமேஸ்வரி திருக்கண் சாத்தியருள, தேங்கமழு மலரி,தழி திங்கள்...............மளா சடைமேற் சேரவைத்து என்பது, மணங்கமழப்படா நின்ற விரிந்த கொன்றை மாலேயினேயுஞ் திரனேயுங் கங்காதேவியையும் பணுமணிகளாலே விளங்கா நின்

பாம்பினையும் நீண்ட திருச்சடை பாரத்தின் மேலே பொருந்த வைத்து ; நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க என்பது, விட்டு நீங்குதற்கு அரிதாகிய பிறவித் தொடர்ச்சி விட்டு நீங்க ; மன்றுணின்று என்பது, சிதம்பரமாகிய பொதுவிலே நின்று ; இமையோர் துதி செய்ய என்பது, தேவர்கள் தோத்திரம் பண்ண ; நிருத்தம் செய்யும் என்பது, ஆனந்த நிருத்தஞ் செய்தருளுஞ் சிவனது ; ஆங்கமல மலர்த்தாள் என்பது, பொலிவினை யுடைத்தாகிய கமல மலர்போன்ற ஸ்ரீபாதங்களை ; சிரத்தின்மேலும் புந்தியிலுமுற வணங்கிப் போற்றல் செய்வாம் என்பது, என்னுடைய தலையினும் மனத்தினு முறும்படி நமஸ்கரித்துத் தோத்திரம் பண்ணி நின்றே மென்றவாறு.

* * * *

End :

திருவருள் கொடுத்து என்பது, அழகிய ஞானத்தைப் பிரகாசிப்பித்து ; மற்றச் சிவப்பிரகாச நன்னூல் விரிவது தெளியுமாற்றால் என்பது, இந்தச் சிவப்பிரகாச மென்கிற ஞானநூலினகத்தில் விரிவைத் தெளியத்தக்க ; வழியாலே விளம்பிய வேது நோக்கி என்பது, சொல்லப்பட்ட வேதுக்களைப் பார்த்து ; பெருகியவுவமை நான்கின் பெற்றியினிறுவி என்பது, மிகுந்த பண்புவமை, பயனுவமை, வினையுவமை, உருவுவமை யென்று சொல்லப்பட்ட நாலுவமையின் முறைமையிலே நிறுத்தி ; பின்முற்றருமலை வொழியக் கொள்வோன் றன்மையிற் சாற்றலாமே என்பது, இந்த அத்தத்தைக் கொள்ளு முறைமையினை யுடையோர்க்கு முன்னொடு பின் மலைவறச் சொல்லலா மென்றவாறு.

சிவப்பிரகாசவுரை முற்றும்.

Colophon :

| சிவஞான தேசிகன் திருவடியே கதி. | திருவெ.........சங்கர ~~........~~ படிக்க எழுதினேன். சொக்கலிங்கம் துணை.

No. 1189. TIRU-K-KAḶIṞṞU-P-PAṬIYĀR

[TEXT]

திருக் களிற்றுப் படியார்—[மூலம்]

[628-F (7)]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Pages, 12. Lines, 20 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: A Saiva Siddhānta treatise by Tirukkaṭavūr Uyyavanta-Tēvanāyanār, traditionally believed to have been placed on the Tirukkaḷiṟṟu-p-paṭi of Chidambaram shrine by the author and was placed at the feet of the Lord by the sculptured elephants, one of 14 Mey-kaṇṭa-Cāttiram.

Complete.

குறிப்பு: *இது, சைவசித்தாந்த சாஸ்திரம் பதினான்கில் இரண்டாவதாக விளங்குவது. இதன் ஆசிரியர்* திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார் *என்டவ ராவார். 100* வெண்பாக்களா *லாகியது. அச்சிடப் பெற்றுள்ளது. இந்தப் பிரதி முற்று முள்ளது. சிற்சிலவிடங்களில் பாடபேதங்கள் காணப்படுகின்றன.*

பூர்த்தி.

Beginning :

அம்மையப்ப ரேயுலகுக் கம்மையப்ப ரென்றறிக
வம்மையப்ப ரப்பரிசே வந்தளிப்ப—ரம்மையப்ப
ரெல்லா வுலகுக்கு மப்புறத்தா ரிப்புறத்து
மல்லார்போ னிற்ப ரவர்.

* * * *

End :

சிந்தையிலு மென்றன் சிரத்தினிலுஞ் சேரும்வண்ணம்
வந்தவனை மன்னிடைநாம் வாராமற்—றந்தவனை
மாதினுட னெத்திறமும் வாழ்ந்திருக்க வென்பதல்லா
லேதுசொல்லி வாழ்த்துவனி யான். 100

No. 1190. TIRU-K-KAḶIṞṞU-P-PAṬIYĀR

[TEXT]

திருக் களிற்றுப் படியார்—[மூலம்]

[574-M]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Page, 19. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1189.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1189 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1191. TIRU-K-KAḶIṞṞU-P-PAṬIYĀR

[TEXT]

திருக் களிற்றுப் படியார்—[மூலம்]

[743-B]

Size, $12'' \times 1\frac{1}{4}''$. Pages, 10. Lines, 12 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: Same as No. 1189.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1189 பிரதி போன்றது. முதலில் 2, 3 ஏடுகள் ஒடிந்துபோ யுள்ளன. 11-ஆவது செய்யுளிலிருந்து இருக்கின்றன. ஏடுகள் சிதிலம்.*

அபூர்த்தி.

No. 1192. TIRU-V-ARUṬ-PAYAṈ—[TEXT]

திருவருட் பயன்—[மூலம்]

[574-J]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 8. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a text book on Saiva Siddhānta philosophy by Umāpati-Civācāriyār—one of 14 Mey-kaṇṭa-Cāttiram.

Complete.

குறிப்பு: இது, சைவசித்தாந்த சாஸ்திரம் பதினன்கனுள் ஒன்று. இதன் ஆசிரியர் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார். இந்தப் பிரதியில் மூலம் மட்டும் முற்றும் உள்ளது.

பூர்த்தி.

Beginning:

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து. 1

* * * *

End:

கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக.

அணைந்தோர் தன்மை முற்றும்.

ஆகக் குறள் 100.

No. 1193. TIRU-V-ARUṬ-PAYAṈ—[TEXT]

திருவருட் பயன்—[மூலம்]

[820-A]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 12. Lines, 6 on a page. Condition, Good. Appearance, New.

Note: Same as No. 1192.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1192 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1194. TIRU-V-ARUṬ-PAYAṈ—[TEXT]

திருவருட் பயன்—[மூலம்]

[613-E]

Size, $8\frac{3}{4}'' \times 1\frac{5}{8}''$. Pages, 10. Lines, 10 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 1192.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1192 பிரதி போன்றது. மூலம் மட்டும் உள்ளது. ஏடுகள் செல்லரிக்கப்பட்டுத் துளைகள் விழுந்துள்ளன.*

பூர்த்தி.

No. 1195. TIRU-V-ARUṬ-PAYAṈ

[TEXT AND ANNOTATIONS]

திருவருட் பயன்—[மூலமும் உரையும்]

[539-A]

Size, $11\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 48. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This Mss. contains the text described in No. 1192 but annotation annotations also.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1192 பிரதி போன்றது. இந்தப் பிரதி உரையுடன் பூர்த்தியாய் உள்ளது. உரையாசிரியர் நிரம்ப வழகியர் என்று ஊகிக்கப்பெறுகிறது. நூலின் முன் சில அதிகப் பாடல்கள் இருக்கின்றன.* அர்சானது.

பூர்த்தி.

Beginning :

நேசத் தடியார் நினைந்துருகி நின்றிட்ட
வாசத் தளைகடக்க மாட்டாது—பாசத்
திருகோட்டு முக்கட் சிவபெருமான் றந்த
ஒருகோட்டு நால்வா யுவா.

தேமாலை மெய்கண்ட தேவனுக்குஞ் சண்பையர்தங்
கோமாற்கு முண்டாதல் கூடுகினும்—பாமாலை
யுந்துற்ற கீர்த்தியு மாதிதேவெனவுரைக்கு
மெந்தைக்குங் கைம்மா றிலை.

அம்பவள மேனி யருணிரம்ப வேயழக
னும்பரொடு மாலவனு முன்னறியா—விம்பரின்மேன்
வந்தா னடியிணையை வஞ்சமற வேநினைந்து
சிந்தா குலந்தீர்ந்த தே.

மறையகத் தடக்கிய வொருதனிக் கலையும்
.... னிறைந்த பொருண்முழு துணர்த்து
மாடியும் போலக் கூடிய காட்சியிற்
புகல்சிவ ஞான போதநூற் றெருக்க.

* * * *

குறளடி வெள்ளை யொருநூ றியம்பினன்
மற்றவன் புலியூர் வளநகர் கீழ்பாற்
கொற்றவன் குடியிற் குடிகொண் டுறைந்த
பூசுர னணிந்த புதுமதி வேணியுங்
காசுறு கண்டமுங் கரந்த
தேசிக னுமாபதி சிவனென் பவனே.

உமாபதி சிவனென்னும் பிள்ளைத் திருநாமத்துக்கும் இந்நூற்கும் முதல்வராகிய கொற்றவன்குடி முதலியார் அறம் பொருள் இன்பம் வீடு என நான்கினுள் வீட்டுநெறி காட்டுவான் றம்மா லெடுத்துக் கொள்ளப்பட்ட இலக்கியம் இடையூறின்றி முற்றுதற் பொருட்டு ஆதிக்கண்ணே கரிமுகக் கடவுளை வணக்கஞ் செய்தருளுகின்றார்; வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து மங்கல மொழி முதல் வகுத் தெடுத்துக்கொள்ளப்பட்ட இலக்கண விலக்கியம இடுக்கணின்றி யினிது முடியுமென்பா ராகலின்......

* * * *

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

எ - து. அடைந்தோர்பாற் செய்யு நல்ல வருளினையும் யானை முகத்தினையு மென்று மொருபடித்தா யிருக்கு மிளமையினையும் பெற்ற கடவுளை யொருவர் மனமொழி மெய்களால் வந்திப்பா ராயின் அவர்க்கு வேதாகம புராண முதலிய கலைகள் யாவும் கற்கும் பண்ட மல்ல. எனவே, தானே வெளிதின் வருமென்பதாம்.

உலகத்தானைக ளெல்லா மடைந்தோர்பாற் றுன்பஞ் செய்த லினிதனை நற்குஞ்சரக்கன் றென்றருளிச் செய்தார். யானை யறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் என்றவாறறிக; இஃதாகுபெயர்.

* * * *

End:

கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக.

எ - து. யானென தென்னும் வஞ்சத் தலைமையினை யுடைய வான்மாக்கள் படுந்துன்பத்தினை யெண்ணித் தம்மிடத் தெழுந்த அருணையாகிய கடலினுள்ளே மிகவு மலைதலைச் செய்வ ரென்றவாறு.

No. 1196. TIRU-V-ARUṬ-PAYAṈ

[TEXT AND ANNOTATIONS]

திருவருட் பயன்—[மூலமும் உரையும்]

[1200-C]

Size, $10\frac{5}{8}'' \times 1\frac{3}{8}''$. Pages, 70. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: The annotations here are different from those found in No. 1193.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1193 பிரதி போன்றது. முன் சுவடியிற் கண்ட உரையினின்று வேறுபட்டதோர் உரையுடன் கூடியது. உரையாசிரியர் பெயர் தெரியவில்லை.

பூர்த்தி.

Beginning:

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

எ - து. நற்குஞ் சரக்கன்று - நல்ல ஞானமாகிய ஆனை முகத்தினையுடைய விக்கினேசுரனை, நண்ணிற் - பொருந்தினவன்றே மெய்ஞ்ஞானம் நீங்கிச் சிவஞானம் பிரகாசிக்கும் சிவஞானம் பிரகாசிக்கையினாலே, கலைஞானங் கற்குஞ் சரக்கன்று காண் - பல கலை ஞானங்களையுங் கற்கிறதுக்குப் பாரமல்ல வென்றவாறு. இது விநாயக துதி.

சிவனுக்குத் தன்னியல்பே தென்னில், 'அகர வுயிர்போல்'...

* * * *

End :

கள்ளத் தலைவர் துயர்கருதித் தன்கருணை
வெள்ளத் தலைவர் மிக.

எ - து. கள்ளத் தலைவர் துயர் கருதி - கவட்டிந்திரியங் களுக்கு முதன்மையாகிய ஆன்மாக்கள் படுகிற துன்பத்தைத் திருவுள்ளத்திலே நினைந்து, தன் கருணை வெள்ளத் தலைவர் மிக - தம்முடைய கிருபையாகிய ஞான சமுத்திரத்திலே மிகுதியும் அழுந்தி நிற்பார்கள் என்றவாறு.

அடைந்தார் தன்மை முற்றும்.

Colophon :

உமாபதி சிவாசாரியர் அருளிச்செய்தது. குருபாதம். ஸ்ரீம்கா குரு சுயம்பிரகாச சுவாமிநே நம:. சச்சிதானந்த குருபாதமே கதி.

No. 1197. TIRU-V-ARUṬ-PAYAṈ

[TEXT AND ANNOTATIONS]

திருவருட் பயன்—[மூலமும் உரையும்]

[642-A]

Size, $7\frac{1}{8}'' \times 1\frac{1}{4}''$. Pages, 110. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains annotation by one Nirampa-V-Aḷakiya Panṭāram.

Complete.

குறிப்பு : இது, உரையுடன் கூடியது. உரையாசிரியர் நிரம்ப வழகிய பண்டாரம். இப்பிரதி முற்று முள்ளது. அச்சிலுள்ளதற்கும் இதற்கும் ஓரோரிடங்களிற் சில வேறுபாடுகளுள்ளன.

பூர்த்தி.

Beginning:

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

எ - து. அடைந்தோர்பாற் செய்யு நல்லருளினையும் யானை முகத்தினையு மென்று மொருபடித்தா யிருக்கு மிளமையினையும் பெற்ற கடவுளை யொருவர் மனமொழி மெய்களால் வந்திப்பாராயின் அவர்க்கு வேதாகம புராண முதலிய கலைகள் யாவும் வருந்திக் கற்கும் பண்டமல்ல வென்றவாறு. தானே யெளிதின் வருமென்பதாம். உலகத்து ஆனைகளெல்லாம் அடைந்தோர்பாற் றுன்பஞ் செய்தலின் இதனை 'நற்குஞ்சரக் கன்று' என்று அருளிச்செய்தார். 'யானை யறிந்தறிந்து பாகனையே கொல்லும்' என்றவாறறிக. இஃதாகுபெயர்.

பதி முது நிலை—அஃதாவது, மேலாகிய விறைவன தியல்பு.

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரி லிறைநிற்கு நிறைந்து.

எ - து. அகரமாகிய வுயிரெழுத்துக்க ளெல்லாவற்றினும் பொருந்தி வேறற நின்றாற்போலத் தனக்கோருவம மில்லாத் தலைவனு முலகுயிர் முழுவது மொழிவற நிரம்பி ஞான வுருவா யழிவின்றி நிலைபெறு மென்றவாறு.

அகரந் தானே தனித்து மேனை யுயிருடம்புக ளெல்லாம் வேறின்றிப் புணர்ந்து நிற்றலானு மங்ஙனம் புணர்ந்த வழியுந் தன்னுருவு தோன்றா தாதலானு முதற்கண்ணே வைக்கப்படுதலானும் விகாரமின்றி நாதமாத்திரையாயில் பிறபிறத்தலானு மிறைவற் குவமை யாயிற்று.

இவ்வொப்புமையாற் சடமாகிய ஒலி வடிவன் றென்பதற் கறிவாகி யென்றும் அகரம்போல வொருகாற் புணர்ந்து நீங்காது என்பதற்கு நிறைந்து என்று மவ்வக்கர முதலிய வெழித்துக்களு முளப்படுதற் கெங்குமென்று மாணுக்கற் கறிவித்தற் பொருட்டு வும்மோடு புணர்த்தினு மன்னதன் றென்பதற்கு நிகரிலென்றுங் கூறியருளினர். அக்கரங்கடோறுஞ் சென்றிடு மகரம்போல நின்றன்ன சிவனுஞ் சேர்ந்தே யென்றது முணர்க. இதனு லிறை

வன் துண்மையு மவன் வேரற நின்றமையுங் கூறப்பட்டது. அகர வுயிர் பண்புத்தொகை.

* * * *

End :

கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக.

எ - து. யானென தென்னும் வஞ்சகத் தலைமையினையுடைய வான மாக்கள்படுந் துன்பத்தினை யெண்ணித் தம்மிடத் தெழுந்த கருணையாகிய கடலினுள்ளே மிகவு மலைதலைச் செய்வ ரென்ற வாறு. அலைதலிரக்கத்தாற் றளர்தல்; இதனு லவர் வீட்டினை விரும்பாத வுயிர்கள்மாட் டிறைவன்போ லருளுடையா ராதல் கூறப்பட்டது 100

அணைந்தோர் தன்மை முற்றும்.

ஆகத் திருவருட்பயன் அதிகாரம் பத்துக்குத் திருக்குறள் நூற்றுக்கும் உரை முடிந்தது.

Colophon :

தண்கடந்தை வந்தருளுஞ் சம்பந்தன் றன்னருளா
லெண்கடந்த நூறு குறளென்றுங்—கண்கடங்கட்
குண்டாகி லுண்மை யுளதாகி லுள்ளத்துக்
கொண்டாய்வார் கொள்ளார் குறை.

திருச்சிற்றம்பலம்.

அம்பலத்தாடும் அப்பர் திருவடித்தாமரையே துணை.

நிரம்ப வழகிய பண்டாரம் உரை.

திருச்சிற்றம்பல முடையாரே துணை.

திருச்சிற்றம்பலம்.

No. 1198. TIRU-V-ARUṬ-PAYAṈ

[TEXT AND ANNOTATIONS]

திருவருட் பயன்—[மூலமும் உரையும்]

[613-E (1)]

Size, $8\frac{3}{4}'' \times 1\frac{5}{8}''$. Pages, 26. Lines, 10 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note : This Mss. contains different annotations from the one found in the previous Mss.

Incomplete.

குறிப்பு : *இது, முன் எண் 2222 பிரதிபோன்று உரையுடையதாயினும் அவ்வுரை வேறு, இவ்வுரை வேறு. திருவருட் பயன் சிந்தனையுரை யென்று பெயர் காணப்படுகிறது. அறியுநெறி என்னும் தலைப்பில் இரண்டாவது குறள்வரை யுளது. நூல் முற்றும் இல்லை. ஏடுகள் சிதிலம். நூல் அச்சாகி யுள்ளது.*

அபூர்த்தி.

Beginning :

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் - நல்ல ஞானமாகிய யானை முகத்தினை......விக்கினேசுரனை பொருந்தினவே............ஞானம் நீங்கிச் சிவஞானம் பிரகாசியா நிற்கும், அப்படிச் சிவஞானம் பிரகாசிக்கவே, கலைஞானங் கற்குஞ் சரக்கன்று காண் - கலை முதலிய வேதாகம சாத்திர புராணங்களை வருந்திக் கற்கவேண்டியதா மில்லை யென்றறிவாயாக.

* * * *

End :

* * * *

No. 1199. TIRU-V-ARUṬ-PAYAṈ—[KARUTTURAI]

திருவருட் பயன்—[கருத்துரை]

[628-F (8)]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Pages, 30. Lines, 19 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains text and a summarised meanings of the stanzas.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1196 பிரதி போன்றது. கருத்துரையுடன் முற்று முள்ளது. இஃது அச்சிட்ட பிரதிபோன்று இல்லை. இதில் முதற்கண் பின்வருமாறு ஒரு செய்யுள் அதிகமாய்க் காணப்படுகிறது.*

பூர்த்தி.

Beginning:

குருவே யுபதேசங் கூறென குருவின்
குருவின் குருவிற் குருவின் குருவின்
குருவின் குருவின் குருவின் குருவின்
குருவுப தேசஞ் சொல்வேன் கொள்க.

கொற்றங் குடிவாழ் குருவா முமாபதிசொல்
நற்றிருவ ருட்பயனை நாடியே—யற்பாய்
விளுவுமவன் சொல்லும் விளுவெண்பா நூறு
மனுலயமாய்க் கேட்டருளின் வாழ்.

இவை பிர............

* * * *

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

இதன் கருத்து:—நல்ல குஞ்சரக் கன்ருகிய பிள்ளையாரை வந்திப்பவர்க்குச் சகல ஞானங்க ளெளிதின் வருமென்பது.

* * * *

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து.

எ - து. அகரமாகிய உயிரெழுத்துக்க ளெல்லாம் பொருந்தி வேறற நின்றாற்போல உலகுயிர் முழுவதும் ஒழிவற நிரம்பி ஞான வுருவாய் நிற்பதோ ரிறைவ னுளன் என்பது கருத்து.

*   *   *   *

End :

அணைந்தோர் தன்மை

அதாவது பேரின்பமாகிய சிவத்தினை யணைந்தோர் தன்மை. அருண்ஞான நிட்டை பெற்ற அன்பரென்ன செய்வர் திருமுறைத் திரட் டுணர்த்துந் தேவேயொரு முதலே.

ஒங்குணர்வி னுள்ளடங்கி னுள்ளத்தி னின்பொடுங்கத்
தூங்குவர்மற் றேதுண்டு சொல்

எ - து. நிறைந்த ஞானத்தினுள்ளே அந்த ஞான மயமாகிய தாமடங்கிப் பேரின்பத்தினை யிடைறாது நுகர்வ ரென்பது கருத்து.

....

No. 1200. TIRU-V-ARUṬ-PAYAN̲—[KARUTTURAI]

திருவருட் பயன்—[கருத்துரை]

[642]

Size, $7\frac{1}{8}'' \times 1\frac{1}{4}''$. Pages, 41. Lines, 9 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This is the same as No. 1199 with a few variations.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1199 பிரதியினின்றும் சில மாறுபாடுகளுடையது. கருத்துரையுடன் கூடியது. நூல் முழுதும் உள்ளது. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

எ - து. நல்ல குஞ்சரக் கன்றாகிய பிள்ளையாரை வந்திப்பவருக்கு கலைக்கியானங்கள் எளிதின் வரும் என்பது கருத்து.

பதிமுதுநிலை : அஃதாவது, மேலாகிய விறைவன தியல்பு.

அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து.

எ - து. அகரமாகிய உயிரெழுத்துக்க ளெல்லாம் பொருந்தி வேறற நின்றாற்போல வுலகுயர் முழுவது மொழிவற நிரம்பி ஞான வுருவாய் நிற்பதோ ரிறைவனுள னென்பது கருத்து.

* * * *

End :

கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக.

எ - து. வஞ்சத் தலைமையா லருளொடு கலவாது துன்புறு முயிர்களைக் கருதி யிறைவன்போலத் தம்மிடத் தெழுந்த விரக்கத் தான் மிகவுந் தளர்வ னென்பது கருத்து.

அணைந்தோர் தன்மை முற்றும்.

ஆகத் திருவருட் பயன் திருக்குறள் நூறுக்கும்
கருத்துரை எழுதி முடிந்தது.

திருச்சிற்றம்பலம்.

No. 1201. TIRU-V-ARUṬ-PAYAṈ—[KARUTTURAI]

திருவருட் பயன்—[கருத்துரை]

[780]

Size, 9½″×1½″. Pages, 10. Lines, 14 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1199.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1199 பிரதி போன்றது. இந்தப் பிரதி பூர்த்தியா யுள்ளது.*

பூர்த்தி.

No. 1202. TIRU-V-UNTIYĀR—[TEXT]

திருவுந்தியார்—[மூலம்]

[574-L]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{5}{8}''$. Pages, 5. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a text-book of Saiva Siddhānta philosophy by Tiruviyalūr Uyyavantatēva-Nāyanār—one of 14 Mey-kaṇṭa-Cāttiram.

Complete.

குறிப்பு: *இது, சைவசித்தாந்த சாஸ்திர நூல் பதினன்கனுள் முதலாவது. ஆசிரியர்* திருவியலூர் உய்யவந்ததேவ நாயனூர்.

பூர்த்தி.

Beginning:

அகளமா யாரு மறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானுகத் தந்ததென் றுந்தீபற.

பழக்கந் தவிரப் பழகுவ தன்றி
யுழப்புவ தென்பெணே யுந்தீபற
வொருபொரு ளாலேயென் றுந்தீபற.

* * * *

End :

வைய முழுது மலக்கயங் கண்டிடு
முய்யவந் தானுரை யுந்தீபற
வுண்மை யுணர்ந்தாரென் றுந்தீபற.

திருவுந்தியார் முற்றும்.

குமரன் றுணை.

No. 1203. TIRU-V-UNTIYAR—[TEXT]

திருவுந்தியார்—[மூலம்]

[628-F (6)]

Size, 5¾″ × 2″. Pages, 5. Lines, 19 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note : Same as No. 1202.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1202 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1204. TIRU-V-UNTIYAR—[TEXT]

திருவுந்தியார்—[மூலம்]

[574-L]

Size, 9¾″ × 1½″. Pages, 6. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : Same as No. 1202.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1202 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1205. NEÑCU-VIṬU-TŪTU—[TEXT]

நெஞ்சுவிடு தூது—[மூலம்]

[8-F (3)]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Pages, 10. Lines, 19 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: A treatise of Saiva Siddhānta philosophy by Umāpati-Civācāriyar—one of 14 Mey-kaṇṭa Cāttiram.

Complete.

குறிப்பு: இது, சைவசித்தாந்த சாஸ்திரம் பதினான்கனுள் ஒன்று. தமது ஞானாசாரியர்மீது கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியரால் செய்யப்பட்டது.

பூர்த்தி.

Beginning:

பூமேவு முந்திப் புயல்வண்ணன் பொற்பமைந்த
நாமேவு மாதுபுணர் நான்முகத்தோன்—றேமேவிப்

பன்றியு மன்னமுமாய்ப் பாரிடந்தும் வான்பறந்து
மென்று மறியா வியல்பினா—னன்றியும்.

* * * *

End:

பூங்கொன்றை வாங்கிப் புகழ்ந்துபுரி நெஞ்சமே
யீங்கொன்றை வாரா யினி.

வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனிவன் றார்வாங்கி—யம்புந்தும்
வஞ்சமே யும்விழியார் வல்வினையெல் லாமகல
நெஞ்சமே வாராய் நினைந்து.

No. 1206. NEÑCU-VIṬU-TŪTU—[TEXT]

நெஞ்சுவிடு தூது—[மூலம்]

[574]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 10. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1205.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1205 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1207. NEÑCU-VIṬU-TŪTU—[TEXT]

நெஞ்சுவிடு தூது—[மூலம்]

[1177-A]

Size, $12\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 8. Lines, 13 on a page. Condition, Good. Appearance, New.

Note: Same as No. 1205.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1205 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1208. PŌṞṞI-P-PAKṞOṬAI—[TEXT]

போற்றிப் பஃறொடை—[மூலம்]

[628-F (2)]

Size, 5¾" × 2". Pages, 6. Lines, 20 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: A text-book of Saiva Siddhānta philosophy by Umāpati-Civācāriyar—one of 14 Mey-kaṇṭa-Cāttiram.

Complete.

குறிப்பு: இது, சைவசித்தாந்த சாஸ்திரம் பதினான்கனுள் ஒன்று. கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் இயற்றியது.

பூர்த்தி.

Beginning:

பூமன்னு நான்முகத்தோன் புத்தேளி ராங்கவர்கோன்
மாமன்னு சோதி மணிமார்ப—னாமன்னும்
வேதம்வே தாந்தம் விளக்கஞ்செய் விந்துவுட
னாதநா தாந்த நடுவேதம்—போதத்தா

* * * *

End:

முன்கண்ட காலத்து நீங்காத முன்னோனை
யென்கொண்டு போற்றிசெய்பே னியான்.

போற்றி திருத்தில்லை போற்றி சிவபோகம்
போற்றியவன் மெஞ்ஞானப் புண்ணியநூல்—போற்றியெங்கள்
வெம்பந்த வாழ்க்கைவிட வேறுய்வந் துண்ணின்ற
சம்பந்த மாமுனிபொற் றாள்.

No. 1209. PŌṞṞI-P-PAKṞOṬAI—[TEXT]

போற்றிப் பஃறொடை—[மூலம்]

[574-F]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Page, 10. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1208.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1208 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1210. VIṈĀ-VEṆPĀ—[TEXT]

வினா வெண்பா—[மூலம்]

[574-G]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 2. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: A text-book in 13 stanzas, on Saiva Siddhānta philosophy by Umāpati-Civācāriyār, in veṇpa metre and in the form of questions—one of 14 Mey-kaṇṭa-Cāttiram. The subject matter of this work is Māya Lakshanam or characteristics of Māya.

Complete.

குறிப்பு: *இது, சைவசித்தாந்த சாஸ்திரம் பதினான்கனுள் ஒன்று; மாயா லக்ஷணத்தைப்பற்றிக் கூறுவது. இதன் ஆசிரியர் கொற்றவன்குடி* உமாபதி சிவாசாரியார்.

பூர்த்தி.

Beginning :

நீடு மொளியு நிறையிருளு மோரிடத்துக்
கூட லரிது கொடுவினையேன்—பாடிதன்மு
னொன்றவார் சோலை யுயர்மருதச் சம்பந்தா
நின்றவா றெவ்வாறு நீ.

* * * *

End :

அருளா லுணர்வார்க் ககலாத செம்மைப்
பொருளாகி நிற்கும் பொருந்தித்—தெருளா
வினாவெண்பா வுண்மை வினாவாரே லூமன்
கனாவின்பா லெய்துவிக்கும் காண். 13

No. 1211. VIṈĀ-VEṆPĀ—[TEXT]

வினா வெண்பா—[மூலம்]

[1196-C]

Size, $10\frac{1}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 3. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 1210.

Complete.

குறிப்பு : *இது, முன் எண் 1210 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1212. VIṈĀ-VEṆPĀ—[ANNOTATIONS]

வினா வெண்பா—[உரை]

[628-G]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Pages, 8. Lines, 18 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This is an annotation of the work described in No. 1210 (the text being indicated in the annotation).

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1210 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் உரைமட்டும் பூர்த்தியாகவுள்ளது. இது நமச்சிவாயத் தம்பிரான் உரையென்பர்.

பூர்த்தி.

Beginning :

நீடு மொளியும் நிறையிருளும் ஓரிடத்திற் கூடலரிது என்பது, விரிந்த பிரகாசமும், நிறைந்த இருளும் ஓரிடத்திலே கூடமாட்டாது; கொடுவினையேன் பாடிதன்முன் என்பது, கொடுவினையேன் பககற் றெரிசிப்பதற்கு முன்பு; வார்சோலை வுயர்மருத சம்பந்தா நின்ற தெவ்வாறு என்பது, அழகுசோலை யுயர்ந்த மருத நகர்வாழ் சம்பந்த மாமுனியே யடியேனிடத்துத் தேவரீர் பொருந்தி நின்ற தெப்படி? விடை ; அந்தகன் கண்ணுக் காதித்தப் பிரகாசம் வியர்த்தமா யிருக்கையிலேயுந் தெரியாதிருந்த தன்மைபோ லென்றது, (உ-ம்.) அக்கணெளி நிற்பினு மென்பது கண்டுகொள்க.

மலம் ஆன்மாவைச் சகசமாய் மறைத்திருக்கையிலே சிவான்மாவைப் பொருந்தி யிருப்பதெப்படி யென்னின், வினு. (உ-ம்.) மெய்ஞ்ஞானந் தன்னினென்றும் சிவதருமோத்திரத்திற பரமசிவன் பராசத்தி பல்லுயிர்க்கும் பயின்றிருக்க வென்றும் கண்டு கொள்க. 1

* * * *

End :

அருளா லுணர்வார்க் ககலாத செம்மைப், பொருளாகி நிற்கும் பொருந்தித்—தெருளா, வினுவெண் பாவுண்மை வினு வாரேனுமன், கனுவின்பா லெய்துவிக்குங் காண் எ-து.

அறியத்தக்கதாக வினுவெண்பா வுண்மையை வினுவி யறியாத பேருமன் கனவிலே பால்குடித்ததற் கொக்குமென்ற வாறு; விடை: ஞான மிகுதி யுடையோர்க்குச் சத்தியமாகவே தோன்றுமென்று மல்லாதபே ரெத்தனை சாத்திரம் படித்தாலும் வினுவெண்பாப் பாராதவர்க்கூமன் கனவிலே பால்குடித்ததுபோல வென்றுந் தெரியா தென்றவாறு.

வினுவெண்பா முற்றும்.

Section II. PIṞA CATTIRAṄKAḶ

பகுதி 2. பிற சாத்திரங்கள்

No. 1213. ATTUVITA-VEṆPĀ—[TEXT]

அத்துவித வெண்பா—[மூலம்]

[911-B]

Size, $5\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 90. Lines, 12 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a work in 410 veṇpās on Sivā-Attuvitam, by one Civa-Prakāca-C-Civan.

Complete.

குறிப்பு: *இது, சிவப்பிரகாசச்சிவன் என்பவரால் இயற்றப்பெற்றது எனக் காப்புச் செய்யுளால் தெரியவருகிறது. இந்தப் பிரதி முற்று முள்ளது. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.*

பூர்த்தி. அச்சானது.

Beginning:

பெத்த மலமகற்றிப் பேதமறத் தாளுக்குஞ்
சித்தஞ் சிவப்பிரகா சச்சிவன்செய்—தத்துவித
சைவநூ லுண்மைதனைத் தந்திமுகத் தைகரநற்
றெய்வமே யென்னுளத்திற் சேர்.

சிற்றம் பலவா சிவனே சிவாயபவ
வுற்றம் பறிக்கு மாளுகிக்—குற்றமென்றுஞ்
சாராத சைவமெனற் சம்பந்த மிங்குனைச்
சீரார் திருவாயாற் செப்பு.

* * * *

End:

ஆனவன்ன வாச்சிரமக் கட்டுவிட்டால் மேலான
தானசிவாச் சிரமத் தாஞ்சீல—மானதெல்லாங்
கைவிட்டா லிங்கமந்த லிங்கவிரத சீயமதாம்
....யச் சடத்தலமே மெய்

Colophon:

ஆகப் பொதுவுண்மையுங் கூடின வெண்பா 410. பராபவஹு புரட்டாசிமீ 11வ. கந்தப்ப அய்யர் அத்துவித வெண்பா முற்றும்.

No. 1214. ATĪTA-V-ĀṈANTAM—[TEXT]

அதீத வானந்தம்—[மூலம்]

அத்திடம் பரந்தீ

[155-A]

Size, 12″ × 1¼″. Pages, 36. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a work on Saiva Siddhānta philosophy by one Namaccivāya Tēcigar. It contains 31 verses.

Complete.

குறிப்பு: இது, நமச்சிவாய தேசிகர் இயற்றியது என இறுதிச் செய்யுளால் தெரியவருகிறது. 31 செய்யுட்களுள்ளது. இந்தப் பிரதியில் நூல் முழுது முள்ளது. மற்றை விவரங்கள் அறியக் கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

அரிய மறையின் முடிவாக அரும்பிரம புரத்தரசாய்
பெருகு மீசன் பதம்பெறவே பேசவேண்டிப் பிரணவத்தால்
துரியாதீத துவாதசத்திற் துலங்கு மனதைது ரோணமுருஞ்
செருபொற் கணேபோறத்தி னஞ்செலுத்தித்
[தெய்வப்பதத்தைத் தியானிப்பாம்.

* * * *

End:

துரியமது தனிலே வளர்சோதிப் பிரகாசவெளி
தோன்றியே நின்ற பொருளே
சூட்சாதி சூக்ஷமா யாதிமுதல் அந்தம்வரை
தோன்றுமல் நின்ற பொருளே

தெரியமது விதமாய் அத்தவா னந்தமிது
செப்பினேன் முப்ப துக்குள்
திறமுடைய மூலவளர் கணேசபதஞ் சிவசத்தி
முருகன் வடுகன்
பெரியவர்க ளடிதொழுது நமசிவா யஞ்சொலும்
புனிதமா இயகவிதை யி......
பொடுகினைப்ப வர்படிப் பவர்க ளுலகுமிசை
புகழ் பெற்று
அரியபொரு ளாகவளர் மேலாம் பதத்தினரு
ளாகப்பெற் றுயர்ந்து
ஆதித்தனம் புலிகள்உள்ள வரையுமிருந் த...திகள்பதவி
கள்பெறு வரே.

No. 1215. AMPALA-VĀṈA-AIYAR-AṈUPŪTI-VIḶAKKAM—[TEXT AND ANNOTATIONS]

அம்பலவாண அய்யர் அனுபூதி விளக்கம்

[மூலமும் உரையும்]

[114-A]

Size, $15'' \times 1\frac{1}{4}''$. Pages, 62. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This is a work on Tacakārya (Ten spiritual experiences of the soul in the path towards final deliverance viz. Tattuvarūpam, Tattuvataricaṉam, Tattuvacutti ; Aṉmarūpam, Āṉmataricaṉam, Āṉmacutti ; Civarūpam, Civataricaṉam, Civayōkam, Civapokam) by one Ampalavāṉa Aiyar. An annotation by Tiruccirrampala Tēcikar is added to it. The work consists of 55 stanzas.

Complete.

குறிப்பு: இது, சித்தாந்த சாஸ்திரம்; அம்பலவாண ஐயர் என்பவ தசகாரிய அனுபூதி விளக்கத்தை 55 செய்யுள்களிற் பாடியுள்ளனர். திருச்சிற்றம்பல தேசிகர் உரை செய்துள்ளனர்.

பாயிரமும் இறுதிச் செய்யுளும் சிற்றம்பல தேசிகரே இயற்றி, உரையும் கூறியுள்ளனர்.

பூர்த்தி.

Beginning :

தலையானே மாவித் தலையானே மின்பத்
தலையா வடுதுறைத் தாடந்த—தலையம்
பலவாணன் பாட்டிற் றசகா ரியத்தைப்
பலவாம் வணங்குகையாற் பார்த்து.

என்பது பாயிரங் கூறியது; இதன் பொருள் அந்வயம்:

ஆவடுதுறையின்கண் எழுந்தருளி யிருந்து தலையாய பேரின்பத்தைத் தனது பாத தாமரைகளாற் றராநின்ற மேன்மையையுடைய அம்பலவாண தேசிகன் திருவுளம்பற்றின திருவிருத்தமைம்பத்தைந்தினு முள்ள தசகாரியங்களென்னு முபதேசக்கிரமத்தைப் பலவா யாராய்ந்து பார்த் திவ்வனுபூதி வியபத்தினெலவன் பாத தாமரையை வழிபடுகையாற் றத்துவ சுத்திப்பட்டுப் பாசத்துக்குத் தலைமையான நாம் மேலு மாத்ம சுத்திப்பட்ட வாத்மாக்களுக்குத் தலைமையான சிவமானோ மென்றவாறு.

* * * *

End :

தசகா ரியமைம் பத்தைந்தாய் விருத்தத்
திசையா வருள்புரிந் தானின்று—வசைதீர்ந்த
மேலா வடுதுறைக்கோர் வீறம் பலவாணன்
மாலாய் மருவினர்க்கு வந்து.

எ-து. தசகாரியத்தை ஐம்பத்தைந்தாக விருத்தபாவிலே யிசைத் திப்பொழுது திருவுளம்பற்றினான்; வசைதீர்ந்த புகழையுடைய மேலான திருவாவடுதுறைக்குத் தலைமையான அம்பலவாண தேசிகன் சிவமே மோகம் பொருந்தியவர்களுக்குத் திருமேனி கொண்டு வந்தா னென்றவாறு.

No. 1216. AMPALA-VĀṆA-AIYAR'S-TACAKĀRYAM—[TEXT]

அம்பலவாண ஐயர் அருளிச்செய்த தசகாரியம்—[மூலம்]

[594-H]

Size, $12\frac{3}{8}'' \times 1\frac{1}{8}''$. Pages, 9. Lines, 12 on a page. Condition, Injured. Appearance, New.

Note: This contains the text only of the work described in No. 1215.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1215 பிரதி போன்றதாயினும் பல வேறுபாடுகளை யுடையது. அம்பலவாண ஐயர் அருளிச் செய்தது. நூல் முற்று முளது.*

பூர்த்தி.

Beginning:

தலையானே மாவித் தலையானே மின்பத்
தலையா வடுதுறைதா டந்த—தலையம்
பலவாணர் பாட்டிற் றசகா ரியத்தைப்
பலகால் வணங்குங்கையால் பார்த்து.

இது பாயிரம்.

ஒருவிய விச்சை யாதி யுதையமா யொடுங்க வென்பான்
மருவிய கலாதி யிச்சை மறைந்திட வீசன் றன்பால்
விரவிய விச்சையாதி விளங்கியாங் கொடுக்க வேண்டித்
திருவருள் வாரணத்தின் திருவடி சென்னி வைப்பாம்.

* * * *

End:

முன்னவன் வடநூல் நோக்கி மொழிந்தனன்
போத மற்றோன்
பின்னவன் னன்னூ(ந்நூ)ல் நோக்கிப் பெயர்த்தனன்
சித்த யோக

வன்னவை யிரண்டு நோக்கி யுறைந்தனன்
புடைநூல் மற்றோன்
சொன்னவை மூன்று நோக்கித் தொடுத்தன
னவத்தைப் பத்தாய்.

தசகாரிய மன்பத் தஞ்சாய் விருத்த
திசையாய் யருள்புரிந்தா னின்று—வசைதீர்ந்த
மேலா வடுதுறைக் கோர்வீறம் பலவாணர்
மாலாய் மருவி னர்க்கு.

தசகாரியம் முற்றுப் பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

No. 1217. ARCCAṈA-NAVANĪTAM—[TEXT]

அர்ச்சனா நவநீதம்—[மூலம்]

[1035]

Size, 17¼″ × 1″. Pages, 66. Lines, 5 on a page. **Condition**, Slightly injured. Appearance, Old.

Note: This is in Sanskrit in Granta script.

Complete.

குறிப்பு: இது, கிரந்த லிபியில் உள்ளது.

பூர்த்தி.

No. 1218. AṈUPŌKA-VIḶAKKAM—[TEXT]

அனுபோக விளக்கம்—[மூலம்]

[1200-A]

Size, 10¼″ × 1¼″. Pages, 6. Lines, 8 on a page. **Condition**, Slightly injured. Appearance, New.

Note: This is a work on Saiva Siddhānta philosophy in the form of a dialogue between a Guru and his disciple. This is in Kuraḷ veṇpā metre.

Complete.

குறிப்பு: இது, சைவசமயத்தைச் சார்ந்தது; நிட்டை முதலிய வற்றைக் கூறுகின்றது. குறள் வெண்பாவாலாகியது. குரு சீட னுக்குக் கூறுமுறையில் கூறுகின்றது. இயற்றியவர் இன்னார் என்று அறியக்கூடவில்லை. இப் பிரதி நூல் முற்று முள்ளது.

பூர்த்தி.

Beginning:

உளக்கணருள் நற்களிறே உத்தவனு போக
விளக்கமெனப் பாடவருள் வீர்.

என்னைத்தா னென்னுஞ் சிவப்பிரகா சன்னிருதாள்
தன்னைத்தா னெங்குந தரி. 1

என்போல நீயிருந்தா லென்னுகு மென்குருவே
யுன்போ லுணற்(ர்த்)திய ருள். 2

தன்னைப்பார் தன்னை யறிவிக்குந் தற்பரைப்பார்
பின்னைப்பா ரெற்பார் பிளாய்.

* * * *

End:

ஏதுமிலான் றன்னை எடுத்தடிமை கொண்டகுரு
பாதத்தைப் போற்றிப் பணி.

அனுபோக விளக்க முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ குருவே நவா(மா):

No. 1219. [YŌKA-VITI] ATTĀṄKA-YŌKAM

[TEXT]

[யோக விதி] அட்டாங்க யோகம்—[மூலம்]

[623-E (1)]

Size, 7″ × 1¼″. Pages, 6. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This consists of descriptions of 8 forms of Yōga. Other particulars are not avāilable. It contains only 9 stanzas.

Complete.

குறிப்பு: இது, எட்டுவகையான யோகங்களை விவரிக்கும் யோகவிதி என்பது. இந்தப் பிரதியில் 9 செய்யுட்க ளுள்ளன. மற்றைய விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

அஷ்டாங்க யோகம்

ஆங்கொரு கால மழிவிலா தான்மா அடுத்தொரு
    சிலவுரு வெடுத்தே
ஓங்கிய பதினே ருருத்திரர் குருவி னுருவினுக்
    குருவென வுதித்துத்
தேங்கு சாரூப பதத்திடை யடைந்து தெக்ஷண
    மூர்த்தஞ் செலுத்த
ஈங்குயர் பதவி யளித்திடும் யோகமெட் டெனவிரு
    கிலத்துரைப் பாம்.

சிவ யோகம்

கதிருற வுதிக்கு முன்னமே யெழுந்து
    கருத்துறச் சாத்திணைப் பார்த்து
வதிருறு ஞான பாதமே யடைந்து
    விழித்திடா திருகண்ணு டைத்துச்

சதிர்பெற நவத்து வாரங்க ளடைத்துச்
சங்கிலி போல்பிணைந் திடத்தே
முதிருறு மங்கி சுழிமுனை விந்தில்
மூட்டுவர் சிவயோக முறையே. 1

* * * *

End:

பிராண யோகம்

வலக்கதி ரிடத்து மிடக்கதிர் வலத்து
மாறியே மவுனமந்தி ரமா
யிலக்கண விதியா லியங்கிய வாயு
இருபத்தோ ராயிர மதனைப்
புலப்பட வாறு தாரத்தி லிடத்தே
புரைவறுத் தித்திரைகொள் வார்க்கு
நலக்கமு மாறி நமனுறு யரகற்றும்
நலமுறு பிராணனோர் யோகம். 9

No. 1220. ĀCĀRA-ATTAVAṆAI—[PROSE]

ஆசார அட்டவணை—[உரைநடை]

[587-F]

Size, $16\frac{1}{2}'' \times 1\frac{3}{8}''$. Pages, 8. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This work details in prose the daily observances of Caiva-religionists. Author's name is not known.

Complete.

குறிப்பு: இது சைவசமய ஒழுக்க நூல். நித்யகருமானுஷ்டானங்களைச் செய்யு முறையைக் கூறுகின்றது. ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை. உரைநடையில் உள்ளது. இப் பிரதி முற்று முள்ளது. கடைசி ஏடு உடைந்து குறையாகிக் காணப் படுகிறது. சிதிலம்.

பூர்த்தி.

Beginning :

சூரிய வுதயத்துக்கு அஞ்சு நாளி(ழி)கை என்ன யெ(எ)ழுந் திருந்து சுசியா யிருந்தாலும் சுசியா யிருந்தாலும் கூடினமட்டுக் குச் சரீரசுத்தி பண்ணிக்கொண்டு விபூதி தரித்துத் தீஷா(க்ஷா)க் கிரமத்திலே சிவத் தியானம் பண்ணி(ப்) பின்பு மூல மந்திரம் இரு நூறு சபித்துத் தோத்திரங்கள் பண்ணி விபூதி தரித்துக் கொண்டு வெளியிலே பி(பு)றப்பட்டு மணலுவர்மண் நீர்க்குள் மண் வேர்மண் புற்றுச் சுவர்மண் சுக்கான்மண் இந்த மண்ணெல் லாம் விட்டு(ப்) புனிதமா யிருக்கிற விடத்திலே மழைக்கால மல் லாத காலத்திலே எட்டுவிரற் கிடைக்குக் கீழே அத்திரத்தால் வெட்டி இறு(ரு)தயத்தா லெடுத்து நாலு மாதத்துக்குமேல் வையாமல் அதற்குள்ளே வைச்சிருக்கப்பட்ட மண்ணுக்குள்ளே செல்லுமண் ணெடுத்துத் தண்டு கமண்டலம் பற்கொம்பு முதலானது(யின) கொண்டு, பி(பு)றப்பட்டுத் தானிருக்கிற ஊருக்கு ஈசான திக்கல்லாமல் மற்றத் திக்கிலே சிவாலயத்துக் காயிரத்தாறு நூறடிக்கப் புறப்பட்டு ....ரது மறையச் சிரசிலே வேட்டி கட்டிக்கொண்டு ஒரு வேட்டி யிடதுதோள் மறைய மாராப் பாகப் போட்டுக்கொண்டு விழை(ளை) நில மாறு குளம் வீதி கடங் கோவி லளர் நிலங்கல்லு ....ணுச்சி லக்கரைவழி மரத்தடி, பசு மந்தை யறுகம்பூமி குழிமேடு தோப்பருகு அசுத்த நிலஞ் செந் துக்கள் சஞ்சரிக்கிறவிடம் சுடுகாடு யி(இ)வையல்லாத விடத்திலே ....ரு துரும்பைக் கீழேபோட்டுக் கையை மூன்றுதரந் தட்டி யவடத்தி (அவ்விடத்தி)லுள்ள தேவதைகளை யாப்பாஒ........ போக வேண்டிக்கொண்டு மௌனமாய்க் கௌபீனத்தை யவிழ்த்து யி(இடப் பி(பு)றத்திற்........கிக்கொண்டு........

* * * *

End :

மூலத்தாற் சிவனுக்(ஞ்)........வாங்கி ஙாக்கூரம் சிறுகாதே தேவதத்த தருண செய்ப்பிய........ண்டு அத்திர மந்திரத்தா லுதராக்கினியை யெழுப்பி..................வென்று பெலி கொடுத்து மூலத்தை யுக்கரித்துப் பொசி..................களைப் பாராமலப்(ற்)

பொசித்து முன்போ லுத்தார போசனங்கொண்.....................
மற்றது எடுத்து பதினாறுதரம் வாய் கொப்புளித்து முழங்கால்
....................லிருக்கிற அக்கினியில் காலாக்கினி ருத்திராய
சுவாகா வென்று....................ணிய கோர் நூறுருச் செபித்து
மவுனம் விட்டு சுக்கடைக்..............

No. 1221. ĀṞĀTĀRA-K-KATTAḶAI—[PROSE]

ஆருதாரக் கட்டளை—[உரைநடை]

[789-B]

Size, $7\frac{1}{2}'' \times 1\frac{1}{8}''$. Pages, 12. Lines, 5 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Six Cakras or dynamic Tattvic centres which are nerve-plexuses in the body are called Aṟatāras. This is a prose description of them. The Author's name is not known.

Complete.

குறிப்பு: இது, சைவசாஸ்திரத்தைச் சார்ந்தது. இதில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை இவைகளும், அக்கினி குண்டம், ஆதித்த குண்ட முதலியவைகளும் ஆகியவை தேகத்தில் இன்ன இன்ன இடங்களில் உள்ளன என்பதும் அவற்றிற்கு அக்கரங்களும் தெய்வங்களும் ஆகிய இவைகள் இன்ன இன்ன என்பதும், இவைபோன்றனவும் கூறப்படுகின்றன. இயற்றியவர் பெயர் முதலியவை அறியக்கூட வில்லை. இப் பிரதியில் நூல் முற்று முள்ளது. ஏடுகள் சிதிலம்.

பூர்த்தி.

Beginning:

ஆருதாரக் கட்டளை : மூலாதாரம்

றெ(இர)ண்டு காலெலும்பு றெ(இர)ண்டுங் கதிரெலும்பு றெ(இர)ண்டுங் கூடின யி(வி)டத்தில் குய்யம்; குய்யத்துக்குங் குதத்துக்கும் நடுவே குண்டலி வட்டமாய், அந்த வட்டத்தி னடுவே

முக்கோணமாய், அந்த முக்கோணத்தி னடுவே நாலிதழை(ழு)யுடைய ஒரு புறவட்டமாய் அந்தப்புறம் கடப்பம் பூப்போன்றிருக்கும்.

* * * *

End :

.... ஆகாசத்தானமா யிருக்கும் புற்(ஷ்)ப மத்திபத்தினடை..............ளியா யிருக்கும் இதுவும் வட்டமா யிருக்கும். இந்த வட்டத்தி னடுவே மூன்றிதழை(ழு) யுடைய புற்(ஷ்)பவட்டமா யிருக்கும் அந்த(ப்) புற்(ஷ்)ப வட்டத்தி னடுவே யகார வெழுத்து ....டுவே சதாசிவனும் மனோன்மணியும் யெ(எ)ழுந்தருளி இருப்பார்கள். அந்த வட்டம் புகை நிறம். அந்தப் புற்(ஷ்)பம் துய்ய வெண்மை நிறம். அந்த யகாரம் கொடி பகவதிப்பிரகாசம் அதற்குமேலே சந்திர மண்டலம். இதுக்கு மந்திரம் (குரு) சொன்னபடி...............மவுனம். இதற்குச் சக்கரம்...............

No. 1222. ĀṈMĀ-MARAṆA-IYALPU—[PROSE]

ஆன்மா மரண வியல்பு—[உரைநடை]

[623-H]

Size, 7″ × 1¼″. Pages, 26. Lines, 8 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note: This is a prose work treating about the soul after the body is dead. The Author's name etc. are not known. The Mss. is very much injured.

Incomplete.

குறிப்பு: இது, குரு சீடனுக்கு உபதேசிப்பது போன்றது. அச்சிடப் பெறாதது. இந்தப் பிரதியில் முற்று முள்ளதெனினும் ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளமையால் தெளிவாக அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning :

ஆன்மாவானது ஒரு கவ.........த்திலே பந்தப்பட்டிருக்கும் பொழுது, பிராரத்தவினை தொலைந்த வுடனே இறக்கும்போது முன்னிருந்த காயத்தை விட்டு ஆத்மாவானது எப்படி நீங்கு மென்னில் சொல்லுதும். ஆத்மாவானது முன் செனனங்களிலே பண்ணியவினைக் கீடாகச் செனன மெடுத்து, வினை போகங்களைத் தேக முன்னிலையாகப் பொசிக்கும். இப்படிப் பொசிக்கும்போது முன்வினைக்கு ஈடாகச் சிவன் பொசிப்பு போகங்களைக் கூட்டிவைக் கிரு னென்பதைத் தெரியாமல் ஆணவ மலத்தாலே மறைப்புண்டு தன்னையுஞ் சிவனையு மறந்து..................

* * * *

End :

சிவனை தெரிசித்து சிவனது சீர்பாதங்களை யடைந்து......... பிறவித் துன்பமும் மனக்கவலையும் நீங்கு மென்பதை...............

No. 1223. ĀṈANTA-VIḶAKKA-T-TIRATTU

✓ஆனந்த விளக்கத் திரட்டு—[மூலம்]

[574-QQ]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Page, 1. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This Mss. contains only 2 stanzas taken from a bigger work of the same name. It deals about Saiva Siddhānta philosophy.

Incomplete.

குறிப்பு : இது, தத்துவ ரகசியங்களை விளக்குவது. இந்தப் பிரதியில் அடியிற்கண்ட இரு செய்யுட்கள் மட்டில் காணப்படு கின்றன.

அபூர்த்தி.

Beginning :

சத்தமே யீசான முகமதாகுந் தாங்கியதோர்
 பரிசஞ்சா தாக்கிய மதாகு
சித்தமிகு முருவமே வாம மாகுஞ்
 சிறந்தவிர தந்தானே யகோர மாகும்
பத்தியுடன் கெந்தத்தைப் பகர வேண்டிற்
 பரிவினுந்தற் புருட முகம தாகும்
எத்தலமும் விளங்கியதோ நயன மூன்று
 மெரிகதிர் சந்திரனுக வியம்பும் வேதம். 1

* * * *

End :

சடத்தையுருப் படுத்திடுதல் சிருட்டி யாகுஞ்
 சாருமிரு வினையறுத்த நிதிய தாகு
மிடத்தினின்ற பொசிப்பறல்சங் கார மாகு
 மியக்குமுயிர் நடத்தறிரோ பாவ மாகும்
படித்தபல நூன்முதலா மறிவு சோரப்
 பற்றியதோ ருறக்கமனுக் கிரக மாகுந்
திடத்துடனே கேட்டிடுமா ணுக்க னேகேள்
 செப்பினேம் நீகேட்ட செய்கை யெல்லாம். 2

No. 1224. UṆMAI-NIṬṬAI-KŪṬUM-UPĀYAM

உண்மைநிட்டை கூடுமுபாயம்—[உரைநடை]

[594-C]

Size, $12\frac{1}{4}'' \times 2\frac{1}{4}''$. Pages, 2. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This deals with the Yoga methods. Other particulars are not known.

Complete.

குறிப்பு: இது, சைவத்தைச் சார்ந்த நூல். யோகஞ் செய்யு முறையைக் கூறுகின்றது. இயற்றியவர் பெயர் முதலியன அறி

யக்கூடவில்லை. இப்பிரதி முற்று முள்ளது. உரைநடையி லுள்ளது.

பூர்த்தி.

Beginning :

பக்குவம் வந்துழி குருகடாட்சத்திஞலே யுதித்த சிவஞானத் தான முப்பொரு ளுண்மையை யறிந்து சூடானது நெருப்பை யடைந்தவிடத் தல்லது நீருக்குள தாகாத முறைமைபோல யானென தென்னுந் தற்போதங் கருவியை யடைந்த விடத்தல்ல தாற்(த்)மாவுக்கு யி(இ)யல்பாக உளதாகா தென்றறிந்து நீங்கிப் படிமம்போல, வாற்(த்)மா வடைந்த தன்மயமா யிருக்குந் தன்மை யாற் கேவலத்தி லாணவத்தை யடைந்து வியாபித்தசைவ நின்ருற் போலச் சிவத்தை யடைந்து வியாபித் தசைவற நின்றவப்புடை யுந் தன் முயற்சியா லடைந்ததாய்க் கருதாது வாயுவெங்கு நிறைந்து நின்ருலுந்தா னறியாமலது தாஞய்ச் சீவித்துத் தன்னை யடைந்தாற்போல.

* * * *

End :

.........சிவானந்த மின்பமயமாயே யிருத்தலால் அதனை விட்டு நீங்காம லனுபவித்துக்கொண்டே யிருக்குமென் றிப்படிப் பல காலுஞ் சிந்தித்துத் தெளியத்தெளிய நிட்டைகூடும் பக்குவமில் லாத விடத்து யி(இ)ந்த நிட்டை கூடாது. ....புருவ மத்தி யிலே யருளிச்செய்யப்பட்ட உபாய நிட்டை கூடவே உண்மை நிட்டையுங் கூடுமென்று அறிந்து அவ்வாறே நிற்க யி(இ)ருளிலே விழித்திட்டவனைபோலச் சிவானந்த நிறைவிலே விளி(ழி)க்க வேறொன்றுந் தோன்ருதென்பதாம்.

உண்மைநிட்டை கூடுமுபாயம் முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

No. 1225. UṆMAI-Y-ATITAM—[TEXT]

உண்மை யதீதம்—[மூலம்]

[1250-B]

Size, 10″ × 1⅛″. Pages, 30. Lines, 7 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: This Mss. deals about the Ñana part of Saiva Siddhānta philosophy. Other particulars are not available.

Complete.

குறிப்பு: இது, சைவசமயத்தைச் சார்ந்தது. ஞானமார்க்கத்தைக் கூறுகின்றது. இயற்றிவர் பெயர் முதலியன விவரம் அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்று முள்ளது. ஏடுகள் சிதிலம்.

பூர்த்தி.

Beginning:

பெருவடிவா யெவ்வுலகுந் தானே தானாய்
　　பெண்ணாகி யாணாகிப் பெண்ணாணண்ணி
அருவடிவா யல்லாம லண்டத் தப்பா
　　லந்தவெளி காட்டியெனை யாளவேண்டிக்
குருவடிவாய் வந்துனக்கண் ......துறந்த போதக்
　　குருமகிட்சி யனுபோகங் கூறப்பார்மேல்
கருவடிவுந் தானாகி நிற் .... னின்ற
　　கற்பகத்தின் பொற்பதமே காப்புத்தானே.

அங்கமென் னுருவா......ந்து அருளிய வனுபோகத்தை
யிங்கினை யியம்பவென்று யானதற் காளோவல்லன்
எங்குமாய் நிறைந்துநின்ற யிறையவ னுட்டெ......த்தம்
வங்கணம்பிரியா தந்தி மலரடி வணங்கலுற்றேன். 1

காவைப் பதிதனில் வாழ்கின்...... ரணதெகி............தான் மேவிக் கொடுத்த பொருளை............மரு ஞானப் பொருளாவித் .... தெ............சடத்துள............கண்ணிலத் தரித்து நின்று பா............து வென்று சொன்றான் பரமநிலை யிதென்றே.

* * * *

End :

> நிட்டையு மில்லை யில்லை நிலைமைய தானபோது
> நிட்டையி லிருந்து பின்னும் நினைப்பது மறப்பதில்லை
> வட்டமோ டோவ்வா வெல்......... மரித்தபே ரொளியதானால்
> ஒட்டியு மொட்டப்போத உண்மையை உரைக்கொணாதே. 26

உண்மை யதீத மெழுதி வளர்ந்தது.

முற்றும்.

குருபாதந் துணை.

No. 1226. UPATECA-AKAVAL

உபதேச அகவல்

[633-D]

Size, $5\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 14. Lines, 7 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note: This is a song in Akaval metre stating how the author got initiation and advising readers right conduct. Name of the author etc. are not known.

Complete.

குறிப்பு: இது, இறைவன் தன்னை ஆட்கொண்டமையையும், மக்கள் நடக்கவேண்டிய முறையையும் குரு சீடனுக்கு உபதேசிப்பதுபோன் றுள்ளது. மற்றைய விவரம் அறியக்கூடவில்லை. இந்தப் பிரதியில் நூல் முழுவது முள்ளது.

பூர்த்தி.

Beginning :

> கமலையை மணந்த கமல வாசி
> பூசனை யுகந்து வாசவன் பதியிற்
> பன்னாள் மாந்த பொன்னு டொருவி...
> யமலை தவம்புரி கமலைமான் காரண.

* * * *

End:

சீத சாகர மாடித் திளைத்தனம்
வண்மையும் பக்குவ மார்க்கமுங் கண்டுகைக்
குண்மை யீங்கி துரைத்தனம் புதல்வ
நீயு நம்மரு ணெறிநின்
றுயபே ரின்ப மருந்தி யன்றே.

No. 1227. UPATĒCA-AKAVAL

உபதேச அகவல்

[764]

Size, 9″ × 1¼″. Pages, 4. Lines, 9 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note: Same as No. 1226.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1226 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1228. UPATĒCA-P-PAKROṬAI

உபதேசப் பஃறொடை

[594-E]

Size, 12¼″ × 1¼″. Pages, 14. Lines, 11 on a page. Condition, Injured. Appearance, New.

Note: This work is by Taksiṇāmūrti Aiyer on Saiva Siddānta philosophy. This is considered as a Paṇṭāra Sāstra.

Complete.

குறிப்பு: இது பண்டார சாஸ்திரங்களுள் ஒன்று. தட்சணா மூர்த்தி ஐயரவர்களாலியற்றப் பெற்றது. நூல் முற்றுமுளது.

பூர்த்தி.

Beginning:

தேனுர்......ந்திருந்திய மூவாயிரங்கொண்
டானுத வன்பா லருச்சிக்கு—மேனுளி
லாங்கதனிற் றெய்வீக மாயொன்ற கன்றிடவே
யேங்கி யுயிர்த்தங் கிரங்கியே—யோங்கியதோ
பத்தி விசேடப் பரிவாற் படிமீதிற்—சித்திர

*   *   *   *

End:

அருளா லுனைத்துதிக்கு மன்பரைப்போற் றீய
விருளா லுயர்ந்தேனு நின்றிங்—கருளான
சுத்தாபுன் சொல்லாற் றொடுத்ததொடை நீபுனைந்தா
ளத்தா நமச்சி வாயா.

உபதேசப் பஃறொடை வெண்பா முற்றுப் பெற்றது.

நமச்சிவாய தேசிகன் வாழ்க.

சுப்பிரமணிய தேசிகன் திருவடி வாழ்க.

No. 1229. UPATĒCA-VEṆPA—[SELECTIONS]

உபதேச வெண்பா—[திரட்டு]

[574-RR]

Size, 9½″ × 1½″. Pages, 2. Lines, 11 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a selection of 5 stanzas from a bigger work with the same name. The theme is in the form of teaching a pupil by a guru. Other particulars are not known.

Incomplete.

குறிப்பு: இது பண்டார சாஸ்திரத்தைச் சார்ந்தது. ஐந்து வெண்பாக்களை யுடையது. இயற்றியவர் பெயர் முதலியவை அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning:

உய்வா னுயிர்க்குயிரா யுன்னுணை யென்னுனை
மெய்யாக வொன்று விளம்பக்கேள்—பொய்யுளோர்
காணரிய வுண்மைதனைக் காணிலது மாணவகா
வாணவத்தின் பேதமையே யாம்.

* * * *

End:

வாங்கு சிலைநுதலாள் மாயக் கலவியிலே
யேங்கி மனமே யிளையாதே—மாங்கனிக்குத்
தம்பியொக்கச் சண்டையிட்டுத் தந்தையைச்சுற் றந்த வொற்றைக்
கொம்பனைச்சற் றன்புவைத்துக் கூடு.

உபதேச வெண்பாவிற்றிரட்டு முற்றும்.

No. 1230. URUTTIRĀṬCA-UṞPATTI

[TEXT AND PROSE]

உருத்திராக்ஷ உற்பத்தி—[மூலமும் வசனமும்] ✓

[1255-B]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 2. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a treatise on Rudraṭcam. It is in the form of Lord Siva's telling about its merits to Goddess Pārvati. A portion of it is in poetry and the other in prose.

Incomplete.

குறிப்பு: இது சைவ சமயத்தைச் சார்ந்தது; உருத்திராக்ஷத்தைப் பற்றிச் சிவபெருமான் உமாதேவியாருக்குக் கூறுவது. முதலில் செய்யுளும் பின் உரை நடையுமாயுள்ளது. இயற்றியவர் பெயர் முதலியன அறிதற் கூடவில்லை. இப்பிரதி முற்றுமில்லை.

அபூர்த்தி.

Beginning:

அனைத்துயிர்க்கு மேகமா யாகுவாய் நின்னை
நினைத்திருபா தம்பரவு நீதி—தனைத்திரமா
யோதுவா யென்ன வுமையா ளுரைத்தருள
வோதுவா னீச னுகந்து.

எச்சரிதை பெற்றாலு மெக்கிரிகை யுற்றாலும்
வச்சபல யோகங்கை வந்தாலு—நிச்சயஞ்
சிவத்தின்கண் மெய்ஞ்ஞானஞ் சேர்வதே செய்யுந்
தவத்தின்கண் மெய்ஞ்ஞானந் தான்.

* * * *

End:

மாக முதலானபல வாயுவனல் நீர்வனி
யாகமுதற் றேவர் பிரானமையு—மேக
வுருவாகி மோனவெழுத் துள்ளிருந்த ஞான
வுருவா மணியருள் வானுற்று.

இதுக்கு உரை ஆகாசமுதல் பஞ்ச பூதமும் தேவ ரிஷிகள் முதலான சமத்த காருண்யரும்............

No. 1231. ULMANAI-VAKUPPU-TARICANAI

[IN PROSE AND VERSE]

உள்மனை வகுப்பு தரிசனை—[உரைநடையும் செய்யுளும்]

[624-G]

Size, 9¼″×2¼″. Pages, 2. Lines, 16 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a short description of the Ātaras in the human body. It is written in Prose and in Verse. Its authorship is not known.

Complete.

குறிப்பு: *இது, சரீரத்திலுள்ள ஆறுதாரத்தை விளக்குவது. இந்தப் பிரதி பூர்த்தியாயுள்ளது. மற்றைய விவரம் அறியக்கூடவில்லை.*

பூர்த்தி.

Beginning:

அபானத்துக்கு மிலிங்கத்துக்கு நடுவே முக்கோணம் அசையைய மிலிங்கந் தொடங்கி யுந்திக்குக் கீழ் ஒங்காரமும் இரீங்காரமு முக்கோணத்தைச் சூழ்ந்து சொரிதழற் பிரகாசமாயிருக்கும். உந்திக்குமேல் நாலங்குலத்திலே அகாரங் கொழுந்து விட்டெரிகின்ற அக்கினி பிரகாசமாயிருக்கும்.

* * * *

End:

எட்டுமண்ட லத்துளே யிரண்டுமண்ட லம்வளைந்
திட்டமண்ட லத்துளே எண்ணிலாத் மண்டலந்
தொட்ட மண்ட லத்துளே தோன்று மூன்று மண்டல
கட்ட மண்ட லத்துளே நாதனோடு நின்றதே.

No. 1232. ELUVAKAI-T-TORRAM—[TEXT]

எழுவகைத் தோற்றம்—[மூலம்]

[229-C]

Size, $8\frac{1}{2}'' \times 1''$. Pages, 8. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a description of seven-fold divisions of creation. There are only 9 stanzas in this work.

Complete.

குறிப்பு: இது, உயிர்களைத் தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் முதலிய வகுப்பாகப் பிரிக்கப்பட்ட விவரம் கூறப்பட்டுள்ளது. இந்தப் பிரதியில் 9 செய்யுட்களுள்ளன. மற்ற விவரங்கள் அறியக் கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

நலந்திகழுந் தேவர்களு மனித ராவர்
நாடோறும மானிடரும் மனித ராவர்
நிலந்தனிலே யூர்வனவும் மனித ராவர்
நீர்வாழுஞ் சாதிகளு மனிதராவர்
விலங்கினொடு பறவைமுதன் மனிதராவர்
மிக்கதொரு தாபரமும் மனிதராவர்
குலங்கள்தனை யின்னதெனக் கூறும்போது
குலத்தையவர் குணத்தாலே கூறலாமே. 1

* * * *

End:

சந்தியென்னுஞ் சண்டையிட்டுச் சாடுஞ் சொல்வர்
வாயிருந் திடத்தே சார்வாய்ச் சொல்வர்
எந்தவகை சொன்னாலு மிடரே செய்வ
ரேதுமித மில்லாத வார்த்தை சொல்வர்

வந்திருந்த நல்லுறவை யதரப்பேசி
வன்மையுள்ள பெரியாரை வைதழிப்பர்
நிந்தையுடன் யந்திரங்கள் நித்தஞ் செய்யார்
நீர்வாழுஞ் சாதியிட நிலைமை தானே. 9

No. 1233. EḶUVAKAI-T-TŌṞṞAM—[TEXT]

எழுவகைத் தோற்றம்—[மூலம்]

[815-A (3)]

Size, $10\frac{1}{4}'' \times 1''$. Pages, 8. Lines, 6 on a page. **Condition**, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1232.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1232 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1234. OḶVILOṬUKKAM—[TEXT]

ஒழிவிலொடுக்கம்—[மூலம்]

[1250-F]

Size, $10'' \times 1\frac{1}{8}''$. Pages, 74. Lines, 7 on a page. **Condition**, Very injured. Appearance, Old.

Note: This is a Saiva treatise by Kaṉṉuṭaya Vaḷḷal, about 18th C.

Complete.

குறிப்பு: *இது, சைவசமய நூல். இது வேதாந்தத்தைச் சார்ந்தது என்றும், சித்தாந்தத்தைச் சார்ந்தது என்றும் இரண்டற்கும் பொதுவென்றும் கூறுவர். இதனுள் ஆன்மா முத்தியடையும்*

நிலை கூறப்படுகின்றது. இது வேதாகமப் பொதுவிலுபதேசம், சத்திநிபாதத் துத்தமரொழிவு, யோகக்கழற்றி, கிரியைக்கழற்றி, சரியைக்கழற்றி, விரத்தி விளக்கம், துறவு, அருளவத்தைத் தன்மை, வாதனை மாண்டார் தன்மை, நிலையியல்பு என்னும் 10 பிரிவுகளை யுடையது. இயற்றியவர் சீகாழிக் கண்ணுடை வள்ளல் என்பவர். இப்பிரதி முற்றும் உள்ளது. அச்சாகியுள்ளது. இப் பிரதியின் இறுதியில் ஒழிவிலொடுக்கச் சடைப்பிரிப்புச் செய்யுள் 11 சேர்ந்துள்ளன. ஏடுகள் சிதிலம்.

பூர்த்தி.

Beginning:

தன்னுண்மை தானே யனுபவிக்குந் தன்மைபோ
லென்னுண்மை தானாக இனிப்புற்றான்—புன்னெறியை
வாட்டியருட் போதற்கு வாழ்வுவர வாழ்முதலைக்
காட்டியகா ழிக்கற்ப கம். 1

வேதா கமம்பவுரி வீசுங்க ளாசநிலை
யாதார வெற்பி னபிடேகம்—போதத்
திருளினெழு பானு வெனதொழிவி லின்பக்
கருணைபொழி வானெடுத்த கை. 2

தன்னிழப்பை யென்னகத்துச் சாதிப்பார் சற்குருவாய்
மன்னுபெருஞ் சீய மதவானை—தன்னடைமேற்
சொற்பனத்தே தோன்றத் துடிப்பற்றுக கேவலமாய்
நிற்பதுபோற் பாரா னெனில். 3

* * * *

End:

கருப்பு நிலத்தைக் கற்கண்டு திரிவார்க்கு(ச்)
சருக்கரையே வாயிற் சனித்தாங்—கிருத்திவிடு
மெந்தலைமை யென்பீரா யினர்வர்க் கென்னவே
தந்தலைமை மாண்ட தலம்.

நிலையியல்பு முற்றும்.

ஆக வெண்பா 255.

Colophon:

கண்மணியி னாகாச நீழல் கலந்தாற்போ
லுண்மையை நீயுண்டென் றனையுணர்த்தித்—துன்னவே
பார்த்திருந்த சித்திரம்போற் பார்த்தானை நம்பாத
தோத்திரஞ்செய் யாப்பிறவாச் சொல்.

* * * *

ஆக வதிகாரம் பத்துக்கு வெண்பா 256. இந்தப்படி யெழுதி வளர்ந்தது. முற்றும். குருபாதந் துணை.

இந்த ஒழிவி னொ(லொ)டுக்கங் காப்பேடு முதல் கடையேடு வரைக்கு மிருநூற் றன்பத்தாறு வெண்பாவு முகபாடமாகத் தரிச்சவற்கு மறந்துபோனாற் றலையெழுத்தைப் பிடித் தெடுத்துரைக்கும்படிக்குச் சடைத் திரிப்பென்று பாட்டுக்குத் தலையெழுத்து முதலிரண் டெழுத்து மூன்றெழுத்து நாலெழுத் தஞ்செழுத் தாறெழுத்துக் குள்ளாகக் கூட்டி விருத்தப்பாவாகச் சொல்லுவது சடைத்திரிப்பென்று பேர் கெழும்.

முதற்பாட்டு,

தன்னுவே தாதம் தன்னிழப்பைக் கூலித்...........
செப்பு குருநாதன் யக. [சடைத்திரிப்புச்

ஒழிவி னொ(லொ)டுக்கச் சடைத்திரிப்பு முற்றும்.

No. 1235 OḶVILOṬUKKAM

[TEXT AND ANNOTATIONS]

ஒழிவிலொடுக்கம்—[மூலமும் உரையும்]

[85-A]

Size, 19″×2″. Pages, 178. Lines, 16 on a page. Condition, Good. Appearance, Old.

Note: This is same as No. 1234 but it has also a commentary on the work by Citampara Cwāmikal of Tiru-P-Pōrūr.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1234 பிரதி போன்றது. இதற்குத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் இயற்றிய வுரையுடன் இந்தப் பிரதி பூர்த்தியா யுள்ளது. அச்சிடப்பெற்றது.

பூர்த்தி.

Beginning :

நிம்ப நிழற்பா லும்பன் முகத்தார்
செம்பது மத்தா ளம்பு கருத்தே.

ஒழிவி லொடுக்கத் துரைவர நாயேற்குஞ்
செழுவி லொடுங்கருணை சேர்க்கு—முழுதின்பப்
பண்டைவள நாட்டும்பரம குருபே ரூரன்
றண்டைவள நாட்டுதிருத் தாள்.

வள்ள லுரைத்த வழுவி லொழிவி லொடுக்கத்
தெள்ளுமுறை யெல்லாந் தெரிவிக்கு—முள்ளம்
யெம்பந்த நீக்கு மிறைவன் றமிழ்க்காழி
சம்பந்தன் பூஞ்சதங்கைத் தாள்.

ஆனைமுக னாறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுண் ணாடு.

ஆசாரியர் ஆசாரிய லிலக்கண முதலியனவு மிந்நூலிற் கூறிய கருத் தெல்லாவற்றையுந் தொகுத்துப் பொதுவா னுபதேசமாகக் கூறினமையா னிவ்வதிகாரத்திற்குப் பொதுவி னுபதேச மென்று பெயராயிற்று.

வேதா கமப்பவுரி வீசுங் களாசநிலை
ஆதார வெற்பி லபிடேகம்—போதத்
திருளிலெழு பானு வெனதொழிவி லின்பக்
கருணைபொழி வானெடுத்த கை.

இ-ள். வேதாகமப்பவுரி வீசுங் களாசநிலை என்பது, வேதாகமங்களினது பவுரிக்கூத்தினைப் பிரம்போடுங் கைவாரங் கொண்டு வீசி நிறுத்தும் ஓர் உண்மை நிலை. ஆதார வெற்பில் அபிடேகம் என்பது, ஆறுதாரங்களாகிய பொருப்பரையன் முடியிற் சூட்டும் ஓர் சூடம். போதத்து இருளில் எழுபானு என்பது, ஆன்ம போதத்தின் கண்ணதாகிய ஆணவ இருளைக் கிழித்து எழாநின்ற சூரியன். எனதொழிவி லின்பக் கருணை பொழிவா னெடுத்த

க்கை என்பது, எனது போதநாசத்தின் கண்ணே யருளானந்தத்தைப் பொழியா நின்ற பிள்ளையா ருயரவெடுத்துச் சுட்டொடு மெய்ப்பொருளைக் காட்டிய திருவத்தமான தென்றவாறு.

* * * *

End :

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளமலர்த் தாடலைமேல் வைத்துரைத்தான்—உள்ளத்
தழிவிலடுக் குந்தேனை யன்பரெல்லா முண்ண
ஒழிவி லொடுக்கநூ லோர்ந்து.

No. 1236. KALĀ-CŌTAṈAI—[PROSE]

கலா சோதனை—[உரைநடை]

[1211-B]

Size, $14\frac{3}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 6. Lines, 10 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Kalā Tattuvam belongs to the Metaphysics of Saiva Siddhānta Philosophy and this Mss. contains on exposition of this Tattuva. The Mss. is very much injured.

Complete.

குறிப்பு: இது சைவ சம்பந்தமானது. கலா தத்துவம் என்னும் பொருள் பற்றிக் கூறுகின்றது. உரை நடையிலுள்ளது. எழுதியவர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்று முள்ளது. ஏடுகள் ஒடிந்து சிதைந்துள்ளன. மிகவும் சிதிலம்.

பூர்த்தி.

Beginning :

நிவிற்(ர்)த்திகலைக்கு மந்திரம் (2). பதம்.........புவனம் (108) தத்துவம் பஞ்சபூதத்திலே கடினமாகிய பிருகிருதித்துவம் (1). அந்தக் கரணங்களிலே சித்தம் (1) ஆ......தத்துவம் (2) கிறி

(ரி) யாசத்தி நிறம் வெள்ளை வன்மை. நாடி யி(இ)டை பிராண வாயு நிறம் யி(இ)ந்திர நீலம்...........மூலாதாரம் சிவப்பு வன்னம் ... .

* * * *

End :

...........பிறு (று) மத்தைச் சாதித்தவன் மணிச்சோதி பிறு (று) மாந்திரத்தின் மேலே யிருக்கப்..........மச் சக்கரத்திலே கமலமத்தியத்தில் அமுற் (ர்) தவிந்து வினுக்குளே பிராண சு (சொ) ரூபமாயிருக்கப்பட்ட தீபாகாரமான மகா...........சோதனை முற்றும். சிவஞான தேசிகன் திருவடி வாழ்க. ஆறுமுகம்.

No. 1237. KALIPPA-TATTUVA-CITTI—[TEXT]

கலிப்பா தத்துவ சித்தி—[மூலம்]

[1207-H]

Size, $11\frac{3}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 5. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This work deels with Saiva Siddhānta philosophy and is in the form of a Stotra on a Guru by his disciple.

Complete.

குறிப்பு: இது சைவ சாஸ்திரத்தைச் சார்ந்தது. சிவப்பிரகாசர் என்னும் குரு மீது தோத்திரமாகத் தத்துவங்களைப் பற்றிக் கூறுகின்றது. இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இப்பிரதி பூர்த்தியா யுள்ளது.

விடுவித்தா னெல்லாம் விடாதபடி நின்று
கடுவித்தார்த் தினிமை காணீர்—முடிவித்தான்
செய்தது மொன்றில்லைச் சிவபெருமா னெங்ஙனே
மெய்கலந்து நின்ற விரகு.

திருவாரு மருண்மேகஞ் செழுங்கருணை முகந்தெழுந்தோ
ருருவாயென் சென்னியெனு மொருமலைமா முகடேறி
யிகபரம தறமுடி யானெனதங் கறமுழங்கி
யகமிகம ......மின்னி யமலமெனுந் தனுவிளங்கச்
சுருதிகளின் முடியெவையுந் தூயவரு ளாகமமு
மிருதிபுரா ணாதிகளும் விளம்பவினை மறிவரிய
ஒருவில் பரம்பொருள தெனும் பொறப்புடைய மெய்ஞ்ஞான.

* * * *

End:

முழுமுந்தலர்கிய வறிவாந் தன்னை
யையம தறவே கையுறு நெல்லிக்
கனியெனக் காட்டிச் செய்தவிப்
பெருநலந் திகழ்த்துத லரிதே
இருப்புக் கன்மன்னிய வென்னெஞ்சின் வஞ்சத்
திசைந்து நின்று கருப்பறுத் தென்னை யாண்டவனே
கமலத் தயன்மா றேறிப் புக்கரிய
சிவப்பிரகாசர் திருவருளா
லுருப்பெற் றலந்த நின்றெண்மலர்ப் பாதமென்னுச்சியதே.

கலிப்பா முற்றும்.

No. 1238. KURUVAI-Y-AṞINTAṞIYĀR-KŪṞAL

[TEXT]

குருவை யறிந் தறியார் கூறல்—[மூலம்]

[1250-D]

Size, 10″ × 1⅛″. Pages, 4. Lines, 7 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is an attempt to establish the greatness of a Guru. Its authorship is not known. It has 10 stanzas.

Complete.

குறிப்பு: இது சைவ சாத்திரத்தைச் சேர்ந்தது. இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. 10 பாடல்களோடு முடிகின்றது. இப்பிரதி நூல் முற்று முள்ளது. மூல மட்டும் உள்ளது. பாட்டுக்கள் எளிமையானவை; ஏடுகள் சிதிலம்.

பூர்த்தி.

Beginning:

குருவை யறிந்தறியார் கூறுமங்கை வாசி
அருமை யறிந்தறியா ரென்றறியேனே
பெருமை சிறுமை யறியான் பிதத்த(ற்ற)லுக்குக்
கருமையுமை யாளளித்த கற்பகமே காப்புக்காண்.

காணிக்குக் காணிஉள்ளக் கண்காணி சாதிகுல
மாணித்தரன் மலர்த்தாள் வைப்பே தறியேனே
ஆணிப் பொன்னன அடியேனது சென்னியின்மேல்
ஏணிப் பழுவதுபோ லீனமற வைத்தானே. 1

* * * *

End:

பெற்றாரே யென்றுயர் தீர்த்த பெரியமுத
லுற்றாரே யென்னை யுறவே தறியேனே
குற்றா லெழுத்துவிந்துக் கூறுங் கலையிறந்து
பெற்றா ரறிவாரோ பேரே தறியேனே. 10

குருவையறிந்தறியார் கூறலெழுதி வளர்ந்தது.

முற்றும் குருபாதந்துணை

No. 1239. CAKALĀKAMA-CĀRA-K-KATTAḶAI

[PROSE]

சகலாகம சாரக்கட்டளை—[உரைநடை]

[942]

Size, $17\frac{1}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 262. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a prose work on Saiva Siddhānta Philosophy under 117 headings with ample quotations from standard works. The author is one Sri-La-Sri Āreluttānanta Cvāmikal. The Mss. is injured.

Complete.

குறிப்பு : இது சைவசமய சித்தாந்தக் கருத்துடையது. காப்பு, அளவை, முதற் சூத்திரம், பதி நிலைமை, இவை முதலாக 117 விஷயங்கள் இந்நூலி லடங்கியுள்ளன. வசனமும் மேற்கோள் செய்யுளுமாக இருக்கின்றன. இயற்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறெழுத் தானந்த சுவாமிகள். இப்பிரதியில் நூல் முற்றுமுள்ளது. சுவடியின் முதலில் 10 ஏடுகள் முதற்பாகத்தில் ஒடிந்து போயுள்ளன.

பூர்த்தி.

Beginning :

............மகனே குற்றியோ என்பது. அகத்து ஆசானைச் சிவனே யிவ்வுலகத்து மானிடனே வென்பது. திரிவு— புறத்துக் குன்றியை மகனென்று காண்பது; அகத்துச் சிவனை மானிடனென்று மயங்குவது. விகற்பமாவது புறத்து ஒரு வடிவை நாம சாதி குணங்கிரியையினாலே விகற்பித்தறிவது. அத்தத்துவ ஞானத்துட் கொள்ளுமிடத்து மானிடப் பேரானுங் குலத்தின் வகையானுங் குணத்தின் பேதத்தானு தொழிலின் பேதத் தானும் பொருளின் பேதத்த தானுங் காண்பது.

* * * *

End :

............இப்படிக் குருலிங்க சங்க............க்கு வழிபட்டுக் சிவகெதியடையக் கடவன். இன்னா லென்பது கர்த்தா வான பரமேசுரன் என்பதுணர்வு நேர்பெற்ற காலையிலெழுகிற சிவ யோகந்தானே; போனது மனவாக்குக் காயங்களினாலே கண்டு வழி படும் படிக்கு நிட்கள் சகள வடிவுமாய் வேணுவனமாகிய சிந்து பூந்துறை கழும் திருநெல்வேலியில் வடிவுடை மங்கை பங்கார் யெ...க்குத் தெரிசனை கொடுத்தருளிய யரிபிரமாதி தேவர்க் கறிவ வரிய பராபரப் பிரமமே குரு சொரூபமாய் வந்துணர்த்தியது. திருச்சிற்றம்பலம்.

முற்றும்.

Colophon:

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக்
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

குருவே துணை.

தனந்தரும் கல்வி தருமொரு காலுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெல்லாந் தருமென்ப ரென்பவர்க்குத்
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே.

ஸ்ரீலஸ்ரீ ஆறெழுத்தானந்த சுவாமியருளிச் செய்த சகலாகம சாரக் கட்டளை முதிந்தது.

முற்றும்.

குரோதிஞு ஆடிமீ 6 திங்கள் கிழமையுந் துவாதசியு மிருகசிரீட நட்சத்திரமும் துருவ நாம யோகமும் பதகரணமும் பெற்ற புண்ணிய காலத்திலே தனுர் லக்கினத்தில் சூரிய ஓரையில் சூரிய கலைபல் சால சாத்பதிரத்தி லப்பாற்சில் வலத்துபதேச யோகங் குறிக்குங் காலே என்ற பாட்டின்படிக்கு(ச்) சகலாகம சாரக்கட்டளை எழுதி வளர்ந்தது.

முற்றும்.

....

ஆதி ஞ(நா)ராயணனெழுதின பொத்தகம்.

No. 1240. CATA-MAṆI-K-KŌVAI

[TEXT AND NOTES]

சதமணிக் கோவை—[மூலமும் குறிப்பும்]

[574-Q]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Page, 26. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This work deals about Saiva Siddhānta doctrines in 106 Veṇpās and the Mss. includes short notes under each stanza, showing its purport.

Complete.

குறிப்பு: இது, சைவசமயத்தைச் சார்ந்தது. மெய்கண்ட தேவருடைய சந்தானத்தின் வழிவந்த ஒருவரால் இந்நூல் இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதைத் தவிர ஆசிரியர் பெயர் முதலியன தெரியவில்லை. இந்நூல் 106 வெண்பாக்களையும், பொழிப்புரைகளையு முடையது. அச்சிடப் பெற்றுள்ளது. இந்தப் பிரதி பூர்த்தியா யுள்ளது.

பூர்த்தி.

Beginning:

> கண்ணை நுதலிற் கறையைக் களத்தின்மறைத்
> தெண்ணமிலா வென்போ லெழுந்தருளும்—[வெண்ணெய்நல்லூர்
> மெய்கண்ட தேவை விறுவெண்பா விற்குமுகங்
> கைகண்ட தேமிகவும் காப்பு.

நூலுண்மை

> விகாரியல வென்றுன்னை மேலோர் விளம்பல்
> தகாதுபுயற் சத்தம்போற் சம்பு—விகார
> மடாதென்ப தெங்ங னருளாக மங்களெல்லாங்
> கடாவிடைக ணீமொழிந்தக் கால். 2

என்பது: சர்வக்கினனுனபடியினுலே விகார தோடமில்லை யென்றது.

*　*　*　*

End:

> ஒன்றுபதி யொன்றுபசு வொன்று ருண்மாயை
> யொன்று ணவமென றுரைத்தனையே—யன்றெனுயி
> ரன்ஞய்மெய் கண்டாயிவ் வையகமலவரு
> ணின்னுமை மானபடி நீ.

என்பது: உயிர்களுக் குடலெடுத்த பின்பு பேருண்டானாற் போல வென்றது.

குரு தரிசன முற்றும்.

No. 1241. [VINA-VEṆPĀ-EṈNUM] CATAMANI-K-KŌVAI—[TEXT]

[வினா வெண்பா என்னும்] சதமணிக் கோவை—[மூலம்]

[1200-D]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{3}{8}''$. Pages, 54. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1240. This is also called Vinā Veṇpā in the Mss.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1240 பிரதி போன்றது. இதற்கு மற்றொரு பெயர் வினா வெண்பா என்பது.*

பூர்த்தி.

No. 1242. CATAMAṆI-K-KŌVAI [TEXT AND NOTES]

சதமணிக் கோவை—[மூலமும் குறிப்பும்]

[628-F (11)]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Pages, 28. Lines, 20 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1240 but with short notes.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1244 பிரதி போன்றது. சில குறிப்புக்கள் கொண்டது.*

பூர்த்தி.

End :

உண்மைநெறி விளக்கம்

கேட்டா ரபக்குவமோ கேட்டபொருள் சொல்லுதற்கு
மாட்டாம லோவாக்கின் வாராதோ—நாட்டரிய
ஞான மடந்தையுட னல்வார்க்குங் கேட்டுய்ய
மோனமுட னீயிருத்தன் முன்.

என்பது, கேட்டார்க்குச் சர்வ சந்தேகங்களுந் தீருகையா லிருந்த தென்றது. 19

சதமணிக்கோவை முற்றும்.

No. 1243. CATĀCIVA-RŪPAM—[TEXT]

சதாசிவ ரூபம்—[மூலம்]

[1211-A]

Size, 15″ × 1½″. Pages, 20. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work describes the different Mūrtams (forms) of Lord Civa. Its author is Cīkāḻi Cattanāta Vaḷḷalār.

Complete.

குறிப்பு: இது சைவ சாத்திர நூல்களைச் சார்ந்தது. சதா சிவனுடைய உருவங்களைப்பற்றிக் கூறுகின்றது. இயற்றியவர் சீகாழிச் சட்டநாத வள்ளலார் என்பவர். இப்பிரதி பூர்த்தியா யுள்ளது. அச்சாகி யுள்ளது.

பூர்த்தி.

Beginning :

உயர்மறை புகழ்சிவ னேங்கு சதாசிவ
னியலு மகேச னெனு மூன்றுமவை
....
ஒருதொகை முப்பத் தொன்று மும்மே.

End :

இப்படி யிடையற விதைய கமலத்
தற்புத முதல்வனை யருச்சனை புரிபவர்
....
தப்பற வடைகுவர் சாயுச் சியமே.

Colophon :

திருச்சிற்றம்பலம். சதாசிவ ரூபவகவல் எழுதி நிறைந்தது. முற்றும். ஸ்ரீ ஆறுமுகம் துணை. சிவஞான தேசிகன் திருவடி வாழ்க.

No. 1244. CAMPIRĀTAYA-TĪPAM

சம்பிரதாய தீபம்

[628-F (9)]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Pages, 32. Lines, 18 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This is a work on Saiva Siddhānta Cāttiram. Its author is stated to be Tarumai Kāci Civanantar. Last 2 leaves are missing.

Incomplete.

குறிப்பு : இது சைவ, சித்தாந்த சாஸ்திர சம்பந்தமானது. இதன் ஆசிரியர், (தருமை காசி சிவானந்தர் என்பவர்.) இந்தப் பிரதியில் நூல் முற்றுப் பெற்றதாகத் தெரியவில்லை. இறுதியில் இரு ஏடுகள் இல்லாமையால் நிச்சயிக்கக் கூடவில்லை. 10 உட்பிரிவுகளுடன் 210 செய்யுட்களே இதில் காரணப் படுகின்றன.

அபூர்த்தி.

Beginning :

ஓங்குமா னந்தவெள்ளத் தோரொளிமா மெய்யானைக்
காங்கே திருவிளையாட் டைந்தொழில்க—ளோங்கார
நாத முழக்குயிர்ப்பு ஞானதி மும்மதமென்
போதம் கவளப் பொசிப்பு.

விசுபதி சத்தியுமை மெய்க்கங்கை மைந்த
ரசபையிடத் தோங்காரத் தானே—நிசமுருக
னெண்ணி லடியா ரிவர்வடிவ மெல்லாமென்
கண்ணிரண்டாய்க் காணுது காண். 1

அரவாக மாயைபிடித் தார்த்த வினைசுட்டே
விரவு மலந்தாழ மிதித்துத்—திரோதான
மோதியுயி ரைத்தூக்கி முத்திரையால் முத்திதரு
நாத னிருந்த நடம். 2

* * * *

End :

மந்திரகலை

மந்திர கலைதான் வளர்யோக பாதமாம்
தந்திரகலை சொன்னபடி தான்செய்து—மந்திரகலை
செய்து வரும்வகையைச் செப்பக்கேண் மாணவகா
வைவகையா மாசை யறுத்து. 1

* * * *

நாலுவித மாவனகேள் நற்சரியை நற்கிரியை
சீலமார் யோகஞ் சிவஞான—நாலுவிதத்
தாலே சிவனடியி லன்பு செய்தோர் தாம்பெறுவர்
சாலோக மாதிய............ 3

உட்பிரிவுகளின் விவரம்

1. குருபரம்பரை ... 12
2. ஞானதீட்சை விளக்கம் ... 32
3. அளவை விளக்கம் பிரமாணத் தொகை ... 39
4. ஐவகைக் காட்சி ... 11
5. ஞானக் காட்சி ... 4
6. அனுமானக் காட்சி ... 30
7. உபமானம் ... 70
8. அனுமானத்திற் பிரமாணத்திரயம் ... 4

9. தந்திர கலை	...	5
10. மந்திர கலை	...	3
		210

No. 1245. CAMAVĀTA-KAṆṬAṆA-URAI

[PROSE]

சமவாத கண்டன உரை—[உரைநடை]

[594-D]

Size, $12\frac{1}{4}'' \times 2\frac{1}{4}''$. Pages, 102. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This prose work refutes the doctrines of other faiths and tries to establish the supremacy of Caiva religion.

Complete.

குறிப்பு: *இது சித்தாந்த சாஸ்திரங்களைச் சார்ந்தது. சித்தாந்தக் கருத்துக்களைத் தெளிவாகக் கூறும் நூல். இது புதிதாகக் கற்பித்துக்கொண்ட சில மதங்களைக் கண்டிக்கின்றது; உரை மட்டுமுள்ளது. இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக் கூடவில்லை. இப்பிரதி முற்றும் உள்ளது.*

பூர்த்தி.

Beginning:

சிவமுற நமக்கு முந்தித் தந்திவத் திரளைச் சிந்தித்
துவமையில் சிவனெப் பில்லா வுமை குரு குலங்கண் மற்றென்
னிவர்களை வணங்கிப் பின்பு சிவஞான சித்திக்கேற்ப
நவமுறு முரையு ரைப்பா முன்னுரை நலங்கொள் வார்க்கே.

இக்காலத்துச் சைவரிலொருசாரார் உருவ சிவ சமவாதிகளிற் சிறுபான்மை வேறுபடப் புதிதாக ஒரு மதங் கட்டிக் கொண்டு அதற்கேற்பச் சிவாகம வாக்கியங்களையுந் தமக்குத் தோன்றினபடியெல்லா மலக்கழித் திடர்படுத்தி வியாக்கியானம் பண்ணித் தங்க

ளிலே தாங்களே கொண்டாடிக் கொள்வார்கள் அதைக்கேட்ட பேதைகளும் அவர்கள் சொன்ன அர்த்தத்தையுஞ் சிவாகம வாக்கியங்களையும் முன்னொடு பின் மலைவறப் பார்த்து இது இணங்கும் இது இணங்காது என்பது தெரிந்துகொள்ளமாட்டாமற் பிறகே தானும் எதிர் நியாயத்தால் அவர்கள் மதத்திலே தானே விழுந்து தாங்களுங்கூடவே கொண்டாடுவார்கள். அவர்கள் சிவஞான சித்தி சிவாக மார்த்தங்களுக்கெல்லா முரையாணியாகச் செய்து வைத்திருக்கிறதென்று லோகப்பிரசித்தியானதினாலே யிதைத் தள்ளினாற் றங்கள் காரியம் வாய்க்கமாட்டா என்று இதற்குந் தெத்துக்குத்தாக உரை செய்து வைத்துக் கொண்டார்கள். இந்த வுரையிலே வுள்ள தோஷங்களை விசாரிக்கிறது மணற் சோற்றிலே கல்லாய்கிறது போல்வ ஆதலால் இதை லட்சியப்படுத்திக் கண்டிக்கிறது மகாப்பாணப் பிரயோகத்திக்கு முயலை லக்ஷியப் படுத்துகிறதுபோல. வடுச்சொல்லுக்கேதுவாமானாலும் சாத்திரப் பிரவேச மில்லாமற் சித்தாந்த வுபதேச மாத்திரங் கேட்டுச் சிந்தித்துக் கொண்டிருக்கிற மந்தபுத்தி யுடையவர்களுக்கு இதிலே புத்திப் பிரமசம் வாராமற் கொஞ்சமொரு வழி காட்டியென்று பெரியோர்களாக்கினாபித்தபடியா லாக்கினோம் உல்லங்கனம் பண்ணலாகா தென்று சம்மதித்துஞாயமாக அங்கேயங்கே கொஞ்சங் கொஞ்சம் தோஷங்களெடுத்துக் காட்டுகிறோம்.

* * * *

End :

ஒரு ஊருக்கிரண்டு குறுநில மன்னவர் உளர் என்னாரென்று அந்த வூரிலுள்ள ஊதியமெல்லா மெடுத்துப் பொசித்துக் கொண்டிருந்தார்கள் ; இப்படி யிருக்கிற காலத்திலே இவர்களைப் பார்க்கப் பெலமாக ஒரு ராசா வந்தவிடத் திரண்டுபேருஞ் சுதந்தரமில்லாததுபோலப் புண்ணிய பாவ மிரண்டு மாத்மாவைப் பொசித்துக்கொண் டிருக்கிறது ; காலத்திலே சிவஞானம் வெளிப்பட்டவிடத்து இரண்டுஞ் செயலற்றிருத்த லிருவினையொப்பு.

சிவமயம்.

No. 1246. CARVA-CĀRAM—[TEXT]

சர்வ சாரம்—[மூலம்]

[856]

Size, 6¼″ × 1⅜″. Pages, 40. Lines, 11 on a page. Condition, Very injured. Appearance, Very old.

Note: This work purports to summarise the teachings of Caiva-Ciddhānta philosophy. The author seems to be a disciple of one Civañana Tecikan alias Namassivāyan of Tiru-V-Arur. Though the work is complete, much of it cannot be made out as the Mss. is very much injured.

Complete.

குறிப்பு: இது சித்தாந்த சாஸ்திரத்தைச் சார்ந்தது. இதில் சித்தாந்தத்தின் உண்மைகள் சுருக்கிக் கூறப்பட்டுள்ளன; இயற்றியவர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இப்பிரதியில் நூல் முற்றும் உள்ளது. இந்நூல் அச்சாகவில்லை.

பூர்த்தி.

Beginning:

அரிய சஞ்சித மகலவும்
தரிவு டம்பிட ரொழியவும்
விரியு நம்பவ மிரியவும்
கரிமு கன்கழல் கருதுவாம்.

ஒரு முதலாய்ப் பலவாகி யுரையுணர்வுக் கெட்டாத
வுண்மை யாகி
யருவுருவாய்ப் பூரணமா யப்பாலுக் கப்பாலா
......ருள் போற்றி
பெருமைபெறு புவனமெல்லாம் பெற்றருள் ளெம்பிராட்டிபதம்
பெரிதும் போற்றி
திருமலிதென் கமலைவளர் சிவஞான தேசிகன்றன்
றிருத்தாள் போற்றி.

இவை கடவுள் வாழ்த்து.

சிவஞானத்தி ஞற்கிவன் ருஞகச்
சிந்தித்தல் போலுமருட் சிவஞானத்தாற்
பாவகமுற்றவ னிவஞ யதுவே யன்றிப்
பஞ்சகிருத் தியங்கள பண்ணவெண் ணல்போலுந்
தாவிலாச் சன்மார்க்க முத்தர்... .... சாற்றுஞ்
சங்கற்பா தீதமொழி தன்முன் யானு
மோவிலா மெ(ய்)ஞ்ஞான வுண்மை யான
வோங்குமனு போகததா லுரைத்த ருனே. 2

* * * *

End :

இத்தகைய ஞானிதனக் கிருநிலத்தோர் வாக்காலே யது மனக்கா யத்தாலே ம்ற்றா.......மெத்தகைய வழுதாடை பலாதி ... .விரும்பியளித்த....................மெய்ப்பொருள்............ சுத்தன் முடியடி கண்டு பூசித்தா லொக்குந் துகளைய முறப்புரிந்த தூயவரே பிறநதோர் சத்திய ஆட..........டனே தான்வேண்டு முத்திபடை வார்தகு போகம் வேண்டி யிடிற்(ச்) சார்த்........... ரிகோ.

Colophon :

கடவுள் வாழ்த்துப் பாயிர முள்பட. திருவிருத்தம் எம........ சருவ சாரமு........ ..வஞானதேசிகன் றிருவடி வாழ்க. பதிமுதற் றிரு ....றத்தப் பொருட் பயனுலகிற் ருேன்ற, மதியினை மயக்கு மூன்று மலவிரு ளகல ஞானக், கதிரி ஞரூரிற் சைவத் தவ கிறை கடலிற் சென் றித்துதி பெறுநமச்சி வாயன் றுணைக்கம லங்கள் போற்றி.

No. 1247. CITTANTA-CARAM—[TEXT]

சித்தாந்த சாரம்—[மூலம்]

[574-W]

Size, 9¾" × 2". Pages, 10. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

16

Note: This is another work on Saiva Siddhānta philosophy. The work is complete. Its author's name is not known.

Complete.

குறிப்பு: இது, சைவ சித்தாந்த சம்பந்தமானது. இந்தப் பிரதி பூர்த்தியாயுள்ளது. மற்ற விவரங்கள் அறியக் கூடவில்லை.

பூர்த்தி. பண்டாரசாத்திர நூல்களில் இதுவும் ஒன்று. அருணாசலம்.

Beginning:

கண்ணுதலோ னருள்புரிந்த வேதமா கமங்கள்
கருதரிய புராணங்க ளியாவையினுங் கருத்து
நண்ணரிய பதிபசுபா சந்தெரித்த லாகு
நலங்கொள்பதி யேனுலக வியல்பே யென்னிற்
றிண்ணமுறு மாய்கைதான் சடமாகி யருவாந்
திருந்துருவாய் வரமாட்டாச் சிவனுஞ் சேர்ந்தறியா
மண்ணதுதான் கடமாகா குலாலன் வேண்டு
மற்றதுபோ லிறைவனுள்ன் மாயைநடத் திடவே. 1

* * * *

End:

சொல்லியவிந் நிலைகலங்கி லஞ்செழுத்தை விதியாற்
சொரூபசுபாபந் தெரிந்து சாரணத்தின் வழியே
புல்லியஞானச் சுடரைத் தூண்டிநே யத்தாற்
பொருந்திபந்த ஞானப்பிர காசத்தின் முதிர்வா
லெல்லியொளி யாம்பரை நிறைவின் விகற்பறவேசிவமா
மிந்தநிட்டை யந்தநிட்டை யாமிதுவுங் காணுமற்
சொல்லுமெனக் குருலிங்க சங்கமத்தை பொருளாய்ச்
சிந்தையில்வைத் துருகவெல்லா சித்தி(களும்) வருமே.

மூவாத முத்திநெறி முப்பதவ தரமுந்
தேவா கமத்தின்வழி செப்பவே—மேவித்
தெரிவதனத் தான்றனக்குஞ் சித்தர்க்கு மெட்டாக்
கரிவதனத் தான்சரண் காப்பு.

Colophon:

இது காப்பு முன்னே எழுதவேண்டியது, பின்னே யெழுதி யிருக்கிறது.

No 1248. CITTANTA-CARAM—[TEXT]

சித்தாந்த சாரம்—[மூலம்]

[861]

Size, $6\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 26. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1247.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1247 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1249. CITTANTA-CARAM—[TEXT]

சித்தாந்த சாரம்—[மூலம்]

[662]

Size, $6\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 22. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1247.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1247 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1250. CITTANTA-CĀRĀVALI

[COMMENTARY]

சித்தாந்த சாராவலி—[வியாக்கியானம்]

[1139-A]

Size, $16\frac{3}{8}'' \times 1\frac{1}{8}''$. Page, 5. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This small Mss. which is in Grantha script seems to be a commentary on a work called Siddhānta Sāram. Other particulars are not known.

Incomplete.

குறிப்பு : *இது, சைவசித்தாந்தைச் சார்ந்தது. வடமொழி எழுத்துக்களா லாகியது.*

அபூர்த்தி.

Beginning :

ஹரி: ஓம். ஸித்தாந்த ஸாராவலி வ்யாக்யானம் நமசிவாய குரவே சிவாய.

......ஜகச்சாரசமிதம் ப்ரோதஞ்ச ஸர்வம ஸதாச்யோதந்தே பசவோபி பாச நிகராத்யஸ்ய ப்ரஸாதேநதத். ஓமித்யாதி மந்த்ர சரத்ய நிகஞ்ஜ்யோ ஜ்யோதிஷ்ட தாஞ்யோதகம் வ்யாமோ வ்யாமி வரப் சிவாக்யம் கல ஜ்யோதி ப்ரபத்யேயியா.

* * * *

End :

ஸப்தாதீநிஷ மங்களாம்ஸ்ச தரணி தக்கஞ சூத்ரை: பரா தைஸ் ஸ்யாந்தள...ஸங்க்யா ப்ரதி தளம் த்வாச்ச குர்பில்வை தளாம்குல்யு பரிஸ்த பக்வம்பி வாநரகாம்...தோ நாஸ்யோ வேதா யோக தளாங் வரஞ்ச நுசதம் பரோக்தம் மாதேசி கை.

No. 1251. CITTĀNTA-CĀTTIRA-PĀṬA-T-TIRATTU—[SELECTIONS]

சித்தாந்த சாத்திர பாடத் திரட்டு—[திரட்டு]

[574-T T]

Size, $9\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 2. Lines, 12 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This Mss. in 2 pages has 6 selections from the Siddhānta work of the same name.

Incomplete.

குறிப்பு: இது, சித்தாந்த சாஸ்திரத்தைச் சார்ந்தது. ஒழுவிலொடுக்கம் மகாபுராணம் முதலிய நூல்களிலிருந்து ஆறு பாடல்களைச் சேர்த்து எழுதப்பட்டுள்ளது. மற்ற விவரங்கள் ஒன்றும் தெரியவில்லை. அச்சில் இல்லை.

அபூர்த்தி.

Beginning:

அத்துவிக வுண்மை யறியச் சிவசீவ
சத்தி யிரண்டையுமோர் சத்தியென்று—நித்தசிவ
சீவ னிரண்டைச் சிவனென்றுஞ் சத்தியுடல்
அவிசிவ மென்றுமறைந் தார்.

* * * *

End:

சிவன்வந் ததுவே சீவ னறிந்தவாஞ்
சிவனறி யாததொன் றில்லை
யவனறிந் ததுவே யவனறிந் ததுவாம்
அவனறி யாததொன் றியார்...
புவனமும் தனியும் பூதமும் போக்கும்
வரவுமெல்லா மிந்தப் பொருளே
கவனவெம் பரியாய்க் கதிரொளி முடியாய்
கருதலாயக் கசனியே றனையாய்.

சாத்திர பாடத்திரட்டு முற்றும்.

சுப்பிரணிய சுவாமி திருவடி வாழ்க.

குமரன் துணை.

No. 1252. CITTANTA-CASTIRA-VILAKKAM

[PROSE]

சித்தாந்த சாஸ்திர விளக்கம்—[உரைநடை]

[1252]

Size, $1\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 170. Lines, 10 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This is a prose compendium on the subject matter of Saiva Siddhānta philosophy. First four pages are missing and the Mss. is very much injured.

Incomplete.

குறிப்பு : இது, சைவசித்தாந்த சாஸ்திரத்தை விளக்கும் உரைநடை நூல்; விரிவாகவுளது. இது பல நூல்களிலிருந்து மேற்கோள்காட்டி உதாரணங்களுடன் விளக்கப்பட்டிருக்கிறது. இதனை எழுதியவர் இன்னாரென்று தெரியவில்லை; நூலின் நேரான பெயரும் தெரியவில்லை. ஏடுகளெல்லாம் செல்லரிக்கப்பட்டுத் துளைகள் வீழ்ந்தும், ஓரங்களில் ஒடிந்தும், மிகவும் சிதிலமா யிருக்கின்றன. முதலில் 4 ஏடுகள் இல்லை இடையிலும் பல ஏடுகள் முறிந்து கிடக்கின்றன. நூல் பூர்த்தியா யுள்ளது.

அபூர்த்தி.

Beginning :

* * * *

End :

......ஆதித்தன் தோன்ற எல்லா வொளியும் அகன்றாற்போல அருளினாலே அவிழ்த்தலால்.................படும் நின்மலனென்றே நினைக நெஞ்சின் என்பது, இப்படி யெல்லா மவிழ்த்த வருட் குருவை நின்ம........வழிபடுமெனவும் நினைக்குந் தன்மை யாசங்கமாதலாலுங் குருலிங்க சங்கமம் வழிபடுக வெ......... .....மொரு பொருளா மென்றது முக்கியம். குருவே துணை. இந்தவுரை வடிவுடையமங்..... ...ற்றாபோகன் எழுத்து. உரை முற்றும். களந்தையாவிடைநாயகி பாதாரவிந்............... சிவசிதம்பரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுபர சுவாமியாரது துணையாக வேண்டியது.

ஸ்ரீ அகில ....நாயகி சரணாரவிந்தமே கதி. ஸ்ரீ செம்புமாமுனி ரட்சிக்க வேண்டியது.

No. 1253. CITTĀNTA-P-PIRAKĀCIKAI

[PROSE]

சித்தாந்தப் பிரகாசிகை—[உரைநடை]

[882]

Size, 9½″×1¼″. Pages, 79. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a prose treatise on the Saiva Siddhānta philosophy by Sri Mātava Civa-Ñana-Yōkikal. This is a translation of a sanskrit work.

Complete.

குறிப்பு: இது, சித்தாந்த சாஸ்திரத்தைச் சார்ந்த மொழி பெயர்ப்பு நூல். மாதவச் சிவஞான யோகிகள் செய்தது. உரை நடையில் உள்ளது. அச்சாகி யுள்ளது. நூல் முழுது முள்ளது.

பூர்த்தி.

Beginning :

ஈண்டுச் சாதி - குலம். பிறப்பு முதலியவற்றால் ..... அபிமானஞ் செய்தற்கு இடமாகிய இந்தத் தூ..... தேகம் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் இவ்வைந்துங்கூடிப் பரிணமித்து, இந்தத் தூலதேகத்தின் முன்செய்த புண்ணிய பாவங்களுக்கு ஈடாகிய வேதியர் முதலாகிய சாதியும், வடிவும், அழகும், இந்திரிய வலிமையுப் பெற்று வரையறைப்படும். ஆயுளும், வரையறைப் படும். போகமும் உடையவனாகி, உடம்பிற்கு வேறாய் உடம்பினாற் செய்யப்படும் புண்ணிய பாவங்களுக்கு இடமாய், நித்தனாய் அருவாய் வியாபகனாய் ஞானக்கிரியா சொரூபியாய் ஆணவம் காமியம் மாயேயம், வைந்தவம், திரோதசத்தி என்னும் ஐவகைப் பாசத் தாற் கட்டுண்டு போக்குவரவுடையனாய்ப் புருடன் என நிற்பவன் ஆன்மா.

*   *   *   *

End:

இவ்வாறு தீக்கைபெற்று விதித்தபடி அனுட்டித்து முத்தனாகிய ஆன்மாவுக்கு ஆணவம், காமியம், மாயேயம், வைந்தவம் திரோதனசத்தி என்னும் பாசங்களினின்று நீங்குதலும், பரமசிவன்போல முழுது முணர்தல், முழுதுஞ் செய்தல், சித்த மகிழ்ச்சி, அநாதியாகிய சுதந்தரத்தன்மை, கெடாத சத்தியுடைமை, அளவிறந்த சத்தியுடைமை என்னும் சாட்குண்ணியத்தின் சொரூபத்தைப் பெறுதலும் இலக்கணமாம். இந்தக் குணங்களைப் பெற்றவர்க்குப் பரமசிவனைப்போல பஞ்சகிருத்தியம் செய்தல் கூடாது. பரமசிவனே பஞ்சகிருத்தியத்தால் பிறருக்கு அனுக்கிரகம் செய்வர் என்று அறிக.

Colophon:

சர்வாத்ம சம்பு சிவாசாரியராற் செய்யப்பட்ட வடமொழி சித்தாந்தப் பிரகாசிபினைத் தென்மொழியாற் செய்யப்பட்டது.

முற்றிற்று.

வடநூற்கடலும் தென்றமிழ்க்கடலும் முழுதுணர்ந் தருளிய முனிவரன் றுறைசைவாழ் சிவஞான மாதவன் முன்னூற் சித்தார்த்தப் பிரகாசிகை சிறந்திட மொழிபெயர்த் தருளினன். மென்மொழியாக—மருளகன் றெம்மனோர் மதிபெறற் பொருட்டே.

திருச்சிற்றம்பலம்.

No. 1254. CITTIYĀR-PALA-TIRATTU

[SELECTIONS]

சித்தியார் பல திரட்டு—[திரட்டு]

[623-D]

Size, 7″ × $1\frac{1}{4}$″. Pages, 30. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a collection of several verses from different works on Saiva Siddhānta philosophy.

Complete.

குறிப்பு: இது, சித்தாந்த சாஸ்திரத்திலுள்ள பாடல்களும், அக் கருத்துக்களையுடைய பிறபாடல்களும் கலந்துள்ளன. இந்தப் பிரதியில் 92 பாடல்கள் உள்ளன.

பூர்த்தி.

Beginning:

* * * *

வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்க
ளாதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலாம்
நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிவா தர்க்கு
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள்வே தாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம் பிறநூ
றிகழ்பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்த மாமே. 19

* * * *

End:

கல்லாய்ந்த வேதப் பலவா கமங்களைக் ...யானங்களு
மல்லதீர் மனமிசைக் கெட்டாச் சுருதி மௌனமுதல்
எல்லா முணர்ந்து மறியாதுபோல விருப்ப ரென்றும்
பொல்லாங் ககற்றி யறிவாம தீத்திற் பொருந்துவதே. 92

No. 1255. CIVA-ÑAṈA-TĪPAM—[TEXT]

சிவஞான தீபம்—[மூலம்]

[574-Y]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 54. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: The author of this work on Saiva Siddhānta philosophy, is Pēraḷam Rēvaṇāattiriya Tēcikar. The work is printed; but the Mss. has more verses than in the printed edition.

Complete.

குறிப்பு : இது, சைவசமய சம்பந்தமானது. இதன் ஆசிரியர் பேராளம் இரேவணஸித்திரிய தேசிகர் என்பவராவர். அச்சிடப் பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் முன்னுள்ள சில பாடல்களேயுமன்றி பல பாடல்கள் அச்சுப் பிரதியைக்காட்டிலும் அதிகமாகக் காணப் படுகின்றன.

பூர்த்தி.

Beginning :

வெள்ளை வாரணப் பிள்ளையார் கழல்
உள்ளு வார்மனக் குள்ள மாறுமே.

மெய்கண் டார்நூ லுணர்ந்தார்போன்
மெய்மை யுணர்த்தும் பிறர்நூலைப்
பொய்யென் றுரைக்கு மடங்காத
புலையர் வாயிற் புழுத்தாலு
மைய மறப்பொல் லாச்செவியி
லருமைப் பொருளை யறைந்தாலும்
வையத் தொடுப்பா ரழுக்காற்றின
மாய்வா ரலதொன் றுயாரே. 1

மாயா வாத முதலாய மாசுகடிந் துண்மையை யுணர்த்துந்
தூயார் நூலி னுண்மைமிகத் தோன்றுந் தொடையைச்
[சிலதொகுத்தே
னுயா தாய்வா ராகிக் குருவு மாகி யுணர்ந்து
மாயா தார்போற் பெயர்பிதற்றும் பாதகர்க்குப் பித்தாஞ்
[சித்தம் பெரியோர்க்கே. 2

மக்காள் மக்க ளேபோல்வார் கயவரென்ற
வாறே யாகித்
தக்கார் போலுண் மையை யுணராசாற்று
முரைசற் குருவின்மன
மிக்கா ரறிந்து பிறிந்து செறிவித்த
தைந்தெழுத்தைந் தொகையினுக்கும்
புக்கா யிருநூல் விரிவினுக்கும் பொருந்தா
பொருந்திற் பொருளதுவாம். 3

* * * *

விரைமருவுங் கமலமலர் விரிஞ்சன் வாழ்வும்
விண்ணவர்கோ னரும்பதமு மிக்கோர் வாழ்வுந்
திரைமருவு நதிபதியிற் றிருவின் கேள்வன்
செல்வமுமா னாதபெருஞ் சித்தி யாவும்
பரையுதவுங் கரிமுகவன் செம்பொற் பாதம்
பற்றாக நம்போதப் பற்று நீங்கி
வரைவறுமன் பிணிற்றொழு மெய்யடியார் பாதம்
வணங்குமடி யாரடியார் மதித்தி டாரே. 1

* * * *

End:

கருமுகி னிலவிய குழன்மட வாலியர்
களபமென் நகிலிணைக் கலவாரே
மருமலர் அயனுடன் அரிமக பதிமிக
மகிழ்பத மனமுற மதியாரே
யுருவிதை யிருவினை விதிமதி விபரித
முறுபிற வியினெறி யுழலாரே
யருமறை முடிவினின் நடமுடை யவனிணை
யடிதொழு மடியவ ரடியாரே. 174

No. 1256. CIVA-ÑAṈA-TĪPAM—[TEXT]

சிவஞான தீபம்—[மூலம்]

[628-Q]

Size, 5¾″ × 2″. Pages, 44. Lines, 18 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1255.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1255 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1257. CIVA-ÑAṈA-TĪPAM—[TEXT]

சிவஞான தீபம்—[மூலம்]

[1250-K]

Size, 10″×1⅛″. Pages, 168. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Very old.

Note: Same as No. 1255. The Mss. is much injured.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1255 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1258. CIVA-ÑAṈA-PŌTAM-VḶḶALĀR-PĀṬAL—[TEXT]

சிவஞான போதம் வள்ளலார் பாடல்—[மூலம்]

[1250-J]

Size, 10″×1¼″. Pages, 10. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Very old.

Note: This is a work on the interpretation of Siva-Ñāna Potham of Mei-kaṇṭar, by one Vuḷḷalar(?). There are 12 stanzas based on 12 sūtra's in the original.

Complete.

குறிப்பு: *இது, சைவசித்தாந்த சாஸ்திரக் கருத்தைச் சுருக்கிப் பன்னிரண்டு சூத்திரங்களின் கருத்துக்களையும் பன்னிரண்டு பாடல்களாக எழுதப்பட்டுள்ளது. இயற்றியவரும் எழுதியவரும் இன்னாரென்று தெரியவில்லை. வள்ளலார் என்பவர் ஆசிரியராகலாம். ஏனைய விவரம் ஒன்றும் அறியக்கூடவில்லை. இஃது எமது திருவாசக வியாக்யானப் பகுப்பினுள் வெளியிடப்பெற்றுள்ளது.*

பூர்த்தி.

Beginning :

பதிபசு பாசமெனத் தெரித்த மூன்றிற்
பதியாவ தொருபடி பட்டுள்ள செகத்திறுக்கு
முதுமறை நூ லவனவ ளதுவென் றோதுமூவகையுஞ்
செய்யவொரு முதலுண்டாகு
மதுபதியாஞ் செகன்றனையு மழித்துப் பின்னு
மாக்குதலா லவனரனே யாவன் மற்றும்
விதிதனையும் மதிதனையும் காட்டி யெல்லாம்
விளைந்தழியக் கண்டுநிற்பன் விமலன் றானே. 1

* * * *

End :

மேவரிய மெய்ஞ்ஞானத் தலைவரான
விதித்தகரை யடைந்தவர்தம் வேடமுண்மைத்
தேவமருஞ் சிவலிங்கந் தெரிசிக்கின்ற
தேய்க்கவொண்ணு மும்மலத்தைத் தேய்க்கவிந்த
மூவகையா னம்பொருட்டால் வந்ததென்று
மூர்த்திகளால் வினைகுருவால் மாயைமூலப்
பாவனையாற் சிவபூசை யதனுற்பார்த்துப்
பரனருளாற் சிவானுபவம் பதியுந்தானே. 12

சிவஞான போதம் முற்றும்.

குருபாதந் துணை.

திருச்சிற்றம்பலம்.

No. 1259. CIVA-ÑAṈA-PŌTAM-VAḶḶALĀR-

[TEXT]

சிவஞான போதம் வள்ளலார்—[மூலம்]

[279]

Size, $1\frac{3}{4}'' \times 1''$. Pages, 4. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 1258.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1258 பிரதி போன்றது.*

அபூர்த்தி.

No. 1260. CIVA-ÑAṈA-PŌTAM-VAḶḶALĀR

[PROSE]

சிவஞான போதம் வள்ளலார்—[உரைநடை]

[86-A]

Size, $15\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Page, 1. Lines, 15 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a different work from the one described in No. 1258 though having the same name. This is in prose.

Incomplete.

குறிப்பு: *இது, சித்தாந்த சாஸ்திரத்தில் ஒன்றாகிய சிவஞான போதத்துக்கு விளக்கந் தருவதாகும். முன் 1258 சுவடியில் காணப்படுவது வேறு; இது வேறு. இதுபற்றிய மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை. அச்சாகவுமில்லை யெனத் தெரிகிறது.*

அபூர்த்தி.

Beginning:

தேவ இந்திரனுலும் நாரதனுலும் பூசிப்......................பது புணர்ந்த பாவந்திரப் பூசிப்ப மகிழ்தருளி யிருந்தனே; இவைக்கி பதினேராஞ் சூத்திரம். காணும் கண்ணுக்குக் காட்டுமுளம்...... ....பாற் காண்க; யாது பதமுமைந்தமா கல்வியும் மறை முதனுன்கும் மூன்று காலமும் தோன்ற நின்றனே யென்றது; அறுவகை உட்சமயிகட்கும் பஞ்சப்........ பொருட்குச் சத்தினி பாத நான்குபதேச.......................மூன்று காலமான எற்றைக்குந் திருவரு ளுருவாக யெழுந்தருளி அனுக்கிரகஞ் செய்யு நாதனே: இருமையி னொருமையின் இருமைதன் பெருமையின் மறுவிலா

மறையோர் கழுமல மென்றது, பெத்தம்போல வெழுத்தியென்ற யன்புருவ்மு மிவ்விரண்டி லுளதுரு சிவபோக சாட்குண்யப் பெரு மையிற் குற்றமற்ற ஞானமறையோர் பூசிககும்படி வாழுங் கழுமல மென்றது; கழுவாற் பூசிப்பதுமன்றி கழுமல முதுபதி யென்றது, ...

* * * *

End :

அவனே—சிவ—உன—உ—வி—யெய்தாத யகவது—கானு—ஞானி—அரனே—உ—வி—இசைய—யஉ வது—செம் மலர்—மும் —ஞானி—சிவ—வழி—று—வி—மேவரிய—யக—குருத்துதி — பகி —க—தத்து—உ—முன்னே—க—கருவி—ஏ—பொறி—வானகா ... .

No. 1261. [UṈMAI] CIVA-ÑAṈA-PŌTAM

[SELECTIONS]

[உண்மை] சிவஞான போதம்—[திரட்டு]

[574-K K]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 2. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This seems to be a different work from the one described in previous No. 1258. It contains eight stanzas selected from other works and is called Unmai Civa-Ñaṉa Potam.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1258 பிரதியினின்றும் வேறு பட்டது. பல நூல்களிலிருந்து திரட்டிய 8 பாடல்களைக் கொண்டது. சைவசித்தாந்த சம்பந்தமானது.

பூர்த்தி.

Beginning:

சாக்கிர வதீத நாதந் தான்வைத்து மறந்தி ருத்தல்
சாக்கிரம் துரியம் விந்துத் தான்பெரு மூச்சுக் கொள்ளல்
சாக்கிரஞ் சுழுத்தி சாதாக் கியம்வைத்த நினைவு தோற்றஞ்
சாக்கிர சொற்பன் மீசன்றன் வைத்தது காணுந் தானே. 1

* * * *

End:

பந்துமுறு மிக்கருவி தொண்ணூற் றுறு
படிகடந் தரனைகாண்ட னின்மலசாக் கிரமாங்
கொந்துபரை தனைக்காண்ட னின்மலசொற் பனமாங்
குலவுபரை தனிலழுந்த னின்மலமாஞ் சுழுத்தி
யெந்தைபரை தனைக்காண்ட னின்மலமாந் துரிய
மிலங்குசிவந் தனிலழுந்த னின்மலவ தீதம்
வந்தவிவை பஞ்சசத்தி சிவநோக்கிக் கண்டான்
மன்னுபர மானந்தஞ் சிவயோக மாமே. 8

No. 1262. CIVA-TATTUVA-CĀTTIRAM

[PROSE]

சிவ தத்துவ சாத்திரம்—[உரைநடை]

[965]

Size, 15″ × 1¼″. Pages, 156. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This prose work deals about Siva-Tattuvās according to the Siddhānta Cāttiram. The author's name is not known.

Incomplete.

குறிப்பு: இது, சைவசித்தாந்த சாஸ்திரத்தைச் சார்ந்தது. சிவதத்துவங்களை விளக்கிக் கூறுவது. இயற்றியவர் யார் என்பதும், ஏனைய விவரங்களும் தெரியவில்லை. நூல் முழுதும் இல்லை.

அபூர்த்தி.

Beginning :

பஞ்சபூதங்களாவன :—பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம். இவையிற்றுக்கு மகாபூதங்கள் என்றும் பெயர். மகாபூதங்களென்றும் பேரா ....னது. மற்றுமுள்ள தத்துவங்களைப் போலன்றி இவை யொன்றுக் கொன்று பரிணம முடைத்தாகையாலுமெனக் கொள்க. இவை இடமாக நின்று சீவிக்............ .. திராதிகளைந்தாவன :—சோத்திரம் சட்சு...........கிங்குவை ஆக்கிராணம். இவையிற்றுக்கு ஞான விந்திரிய மென்றும் பெயர்......

* * * *

End :

பரசிவ நெற்றியில் உருத்திரன் பஞ்ச சடையும், பவுத்திரம் தெர்ப்பையும், கையிலேந்திய கனலும், காயமேவிய திருநீறும், கனங்குழை மேவிய கொன்றைத்தாரும். தண்டு கமண்டலமும், முப்புரி நூலும், சிகையுமாக வந்து வாமத்திகில செனித்தான். பிரா .... னனவிட்டுணு வென்றும் ஸ்ரீ க்ஷத்திரியன வலது புறத்திலே வந்து செனித்தான். பிரமா வென்னும் வசியன் செங்கையிலே வந்து செனித்தான். ஆதிருத்திர னென்னும் பிராமணன் ; விட்டுணு க்ஷத்திரியன். பிரமாவும்.................

No. 1263. CIVA-TARUMŌTTARAM—[TEXT]

சிவ தருமோத்தரம்—[மூலம்]

[110]

Size, 14″ × 1½″. Pages, 224. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This ia an Āgama on Saiva Dharma translated from Sanskrit into Tamil verse by Maṟaiñāṉa-Campantar. The Mss. is incomplete.

Incomplete.

குறிப்பு : இது, சிவதருமங்கள் எவை என்று அகத்தியர் முருகக் கடவுளைக் கேட்க, அவர் கூறியதாகக் கூறுவர். இதில்

பாபத்தின் கூறுபாடுகளும், சுவர்க்க நரக சனன மரணங்களின் இயல்புகளும், அவற்றினின்றும் நீங்குதற்குரிய வழிகளும், பதிபசு பாச இலக்கணங்களும் கூறப்பெற்றுள்ளன. இவ் வுலகவாழ்வில் வெறுப்புற்றுத் தமது கண்ணைத் துணியால் மறைத்துக்கொண் டிருந்த காரணத்தாற் கண்கட்டி மறைஞான சம்பந்தர் என வழங்கப் பெறுபவரும், சிதம்பரம் குகைமடாலயத் தலைவருமாகிய மறைஞான சம்பந்தர் இந்நூலை இயற்றி யுள்ளார் என்ப. இந்தப் பிரதியில் 9-ஆவது இயலில் 13-ஆவது பாடல்கள்வரை யுள்ளன.

அபூர்த்தி.

Beginning :

மலைக்குமகள் பெற்ற மகனைக்கய முகத்தனைம
னத்தெழுதியான்
அலற்பிணிபி றப்பறவ னுக்களைய கத்தியமு னிக்கருளினன்
உலப்பில்கரு ணைக்கடலு ருத்திரனு ருத்தனிலு தித்தகுமரன்
இலக்குமிய லைக்கலியி னைக்கவு முரைப்பனுல கிட்டமுறவே.

* * * *

End :

கருவினு ளழிவன் முற்றிக் கழிந்துட னழிவன் காளைப்
பருவமுற் றழிவ னிகை பகர்ந்துபி னுதவாப் பாவி
பெருவலைக் கண்ணி யாலும் பிடித்துயிர் வதைத்த பேதை
கருதிய பொருளைத் தக்கோர்க் குதவிடான் றினைத்த கையன்.

No. 1264. CIVA-TARUMŌTTARAM—[TEXT]

சிவ தருமோத்தரம்—[மூலம்]

[564-D]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 12. Lines, 13 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note : Same as No. 1263 and incomplete.

Incomplete.

குறிப்பு: இது, எண் போன்றது. 8-வது சனன மரண வியலில் 42 பாடல்களும், 10-வது சிவஞான வியலில் 39 பாடல்களும் உள்ளன. சிவதருமோத்திரம தெரிவு என்ற பெயர் சுவடியில் காண்கிறது.

அபூர்த்தி.

No. 1265. CIVA-P-PIRAKĀCA-K-KAṬṬAḶAI

[PROSE]

சிவப்பிரகாசக் கட்டளை—[உரைநடை]

[1023]

Size, $8\frac{1}{2}'' \times 1''$. Pages, 40. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a treatise in prose which present within a small compass the fundamental principals of Caiva-Philosophy and Religion, The author's name is not known.

Complete.

குறிப்பு: இந்நூல் சைவ சமயத்தைச் சார்ந்தது. உள்நிலைக் கருவிகள், புறநிலைக் கருவிகள், தத்துவங்களின் தோற்ற ஒடுக்க வரலாறுகள், தத்துவகுணம், அவத்தா திரிசனம், தசகாரியம் முதலியவற்றின் தன்மைகள் இன்னவென விளக்குவது. வசன நடையாலாயது. இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

பூர்த்தி.

Beginning:

பூதங்களாவன:—பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆக 5.

ஞானேந்திரியங்களாவன:—சுரோத்திரியம், தொக்கு, சட்சு, சிங்ஙுவை, ஆக்கிராணம், ஆக 5.

தன்மாத்திரைகளாவன:—சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கெந்தம், ஆக 5.

கன்மேந்திரியமாவன :—வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம், ஆக 5.

அந்தக்கரணமாவன :—மனம், புத்தி, ஆங்காரம், சித்தம், ஆக 4.

ஆக ஆன்மதத்துவம், 24.

* * * *

End :

சிவபோகமாவது :—பராசத்தியினிடமாக நின்று அனுபோகத்துடனே கலந்து, கலந்த பேரின்ப மாகிய சிவனென்னைத்தானென்ன(வி)ரண்டற்று சிவானு போகம் பிறக்கச் சிவனுடனே அக்கினிக்கு வெம்மை போலவும் நீருக்குத் தட்பம் போலவும் சிவத்திலே யழுந்தும் அது சிவபோகம.

சிவப்பிரகாசக் கட்டளை முற்றும்.

Colophon :

ரவுத்திரிஸு வைகாசிமீ 15உ ஆதிரை நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் பொய்கை பாகை பரசுராம வாத்தியாயர் சிவப்பிரகாசக் கட்டளை முகிந்தது.

No. 1266. CIVA-P-PIRAKĀCA-K-KAṬṬAḶAI

[PROSE]

சிவப்பிரகாசக் கட்டளை—[உரைநடை]

[613-B]

Size, $8\frac{5}{8}'' \times 1\frac{5}{8}''$. Pages, 16. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : Same as No. 1265.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1265 பிரதி போன்றது.

பூர்த்தி.

Colophon :

சிவயோகம் முற்றும். துணை. சுக்லஹூ......சித்திரைமீ 21உ ஸோமவாரமும் ஸதய நக்ஷத்திரமுமான சுபதினத்தில் எழுதி முகித்தது.

No. 1267. CIVA-P-PIRAKĀCA-T-TIRU-MANTIRAM—[TEXT]

சிவப்பிரகாசத் திருமந்திரம்—[மூலம்]

[574-Z]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 40. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a selection of Tirumantiram verscs interspersed with similar verses from other work.

Complete.

குறிப்பு : இது,சைவ சம்பந்தமாக திருமூலர் திருமந்திரத்தி லுள்ள பாடல்களைத் தொகுத்து இடையிடையே சிற்சில புதிய பாடல்களையும் சேர்ந்து 280 பாடல்களில் இந்நூல் முற்றுப் பெற்றுள்ளது. இந்தப் பிரதி பூர்த்தியாக வுள்ளது.

பூர்த்தி.

Beginning :

செந்தமிழ்ச் சிவப்பிர காசஞ் செப்பிய
வந்தரப் பொருளறி வார்க்கு மூலர்தம்
மந்திரத் தினைக்குரு வசன மாகவே
தந்திபொற் ருளிணை வணங்கிச் சாற்றுவாம். 1

சாற்றிய மந்திரந் தாவி லுண்மையி
ஞற்றலை யுதவுமென் றறைவர் கண்ணுளோர்
தேற்றிய மந்திரந் திரட்டி னேனெனுங்
கூற்றமே கூற்றமாங் குருடர் கேட்கிலே. 2

குருடருங் குருடருங் குழியில் வீழ்வரென்
றருடரு மூலரால் அறையு மந்தகர்க்
கிருடரு மீங்கெடுத் தியம்பு மந்திரம்
பொருடருந் தெருடரும் புலமை யோர்கட்கே. 3

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
யிந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே. 1

* * * *

வேதமோ டாகமம் மெய்யா மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாத னுரையவை நாடி லிரண்டுந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே. 2

மெய்யான வேதத்தி னந்தமே வேதாந்தங்
கையாகு நெல்லியிற் காண்டலே சித்தாந்த
மெய்யா திவ்வண்ண மிறைநூ லிசைத்த
தையாவிம் முத்தி யழகிய வாறே. 3

ஆணவ சத்தியி லாகின்ற வைவருங்
காண வருங்கா ரணர்காண் கடைமுறை
பேணிய வைந்தொழி லால்விந்து விற்பிறந்
தாணவ நீங்காதா ரைவரு மாமே. 4

* * * *

End :

தன்மனை சாலை குளம்புன லாற்றிடை
நன்மலர்ச் சோலையன் னகரிநற் பூமி
யுன்னருங் கான முயர்ந்த மலைச்சார
லின்னிலந் தான்குகைக் கெய்து மிடமாமே. 271

ஆதன மீதி லரசு சிவலிங்க
மேது மிரண்டினி லொன்றினைத் தாபித்து
மேதகு சந்நிதி யுத்தரம் பூருவங்
காதலிற் சோடசங் காணுப சாரமே. 275

No. 1268. CIVA-PUṆṆIYA-T-TEḶIVU—[TEXT]

சிவபுண்ணியத் தெளிவு—[மூலம்]

[636]

Size, 4″×1¼″. Page, 62. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This work deals about the meritorions deeds which every Saivaite has to do in his every day life. The work is printed.

Complete.

குறிப்பு: இது, அசிந்திய விசுவ சாதாக்கியம் என்னும் ஆகமத்துள் கூறப்பட்ட சிவபுண்ணியங்களை விளக்குவது. சைவர்கள் யாவரும் தெரிந்துகொள்ள வேண்டிய பல விஷயங்கள் தெளிவாக இதில் சொல்லப்பட்டுள்ளன. இயற்றியருளியவர் பெயர் விளங்கவில்லை. இந்நூல் அச்சிடப் பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் முழுவது முள்ளன,

பூர்த்தி.

Beginning:

பழகிய பதித்துவப் பான்மை யெய்தவு
முழுகிய பசுத்துவ முற்று நீங்கவு
மொழுகிய மும்மதத் தொளிகொண் ஞானமா
ரழகிய பிள்ளையா ரடிகள் போற்றுவாம். 1

உலகினுக் கிதம தாயு முயிர்க்குறுஞ் சித்தி யாயும்
பலமுறக் கொடுப்ப தாயும் பகருமுத் தமமதாயுங்
குலவு புண்ணியத்தை யீசன் கூறிட நந்தி கேட்டே
புலமுற விதற்கு நாமம் புண்ணியத் தெளிவென் றுரைல். 28

*   *   *   *

End:

ஆகமத்தி லிருபத்தை யாயிரநற் சுலோகம்
அறிந்ததே சிகன்கனிட்ட னைம்பதினு யிரந்தான்
மோகமற வாராய்ந்த தேசிகன்மத் திமனே
முறைமையினு லோரிலக்க முயன்றவனுத் தமனே

ஏகனம லேசனருள் காமிகமுன் னுக
இயம்பியிடு மிருபத்தெட் டாகமத்து மிஃதே
பாகமிது சாராற்சா ரம்மெனவோ ரியலைப்
படித்துணர்ந்தோ னியல்களெல்லாம் படித்துணர்
பண்டிதனே. 144

No. 1269. CIVA-PUṆṆIYA-T-TEḶIVU—[TEXT]

சிவபுண்ணியத் தெளிவு—[மூலம்]

[636]

Size, 4″×1⅜″. Pages, 62. Lines, 11 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 1268.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1268 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1270. CIVA-PŪCĀ-VITI—[PROSE]

சிவ பூசாவிதி—[உரைநடை]

[600-A]

Size, 10″×1¼″. Pages, 30. Lines, 16 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note: This prose work details the mode in which worship of Civa-Linga is to be performed.

Complete.

குறிப்பு: இது, சைவ சமயத்தைச் சார்ந்தது. சிவபூசை செய்யு முறைமை கூறுகின்றது. இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. இப்பிரதியில் நூல் முற்று முள்ளது. இதனைத் தொடர்ந்து பஞ்ச கவ்விய விதியும் கூறப்பட்டுள்ளது.

பூர்த்தி.

Beginning:

சிவலிங்க..........வாதி.........ருவ டிவர் எழுதிய சிவலிங்க பூசாவிதி.

ஓம் ஸ்ரீ குருவை தேனம் (தியானம்) பண்ணி(ச்) சிவலிங்கத்தை அர்ச்சிக்கும் பொழுது குருவைத் தியானம் பண்ணிப் பிரணவ பஞ்சாக்கர முச்சரித்து விபூதி தரித்துக்கொண்டு சிரசு செவி வேஷ்டியின் மறையச் சாத்தி பகற்காலம் ஆதித்தன் வலது பாரிச மாகவும் இராத்திரி காலம் தெற்கு முகமாகவும் இருக்கும் போது கையைத் தட்டி சலமலாதிகளை மவுனமா யிருந்து எழுந் திருக்கும் பொழுது திரணமாவது பச்சிலையாவது கிள்ளி(ப்) போட்டு முக்காலுங் கால் மண்ணிட்டு சுற்றித் தேய்ப்பது காமுப்படியே.

* * * *

End:

வெற்றிலை தாம்பூல உபசாரங் கொடுத்து எழுந்தருளப் பண்ணி வைக்கவும். பஞ்ச கவ்விய விதி முற்றும் ப. யீசானத் திற்கு குசோதகம்(?) எண் 2. அக்கினி கோட்டத்தில்மாவு நிருதி கோட்டத்தில் மஞ்சள், வாயு கோட்டத்தில் நெல்லி குசோத்திற் சிறிது பஞ்ச கௌவியத்திற் பூரித்து எழுந்தருளப்பண்ணி வைத்துக் கொள்ளவும் பஞ்சகௌவிய முற்றும்.

No. 1271. CIVA-PŪCĀ-VITI—[PROSE]

சிவபூசா விதி—[உரைநடை]

[889]

Size, 8¼″×1⅛″. Pages, 30. Lines, 7 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is a different work from the one described in No. 1270 though on the same subject.

Incomplete.

குறிப்பு : இது, சைவசாஸ்திரம் ; பூஜாவிதியைச் சார்ந்தது. முன் 1270 சுவடியில் கூறப்படும் பூஜாவிதி வேறு ; இது வேறு. எழுதியது யார் என்று தெரியவில்லை. இப்பிரதி முற்று மில்லை. ஏடுகள் ஓரங்களெல்லாம் ஒடிந்துபோயுள்ளன.

அபூர்த்தி.

Beginning :

...............கவசாய நமா வென்றமொழிக்கு அத்திராய நமா வென்ற............த்தி கரு(கி)லேயும் பத்திரம் வைக்கவும். வட்ட கையில் திரு...........சன்(ண்)டமாருதத்துக்கு நேராகப் பிடித்து அழுத்த வந்த பாவனையாக யனுதயாய் வவுஷ்டு என்று செ(ச)லம் பூரித்து சாஹணம். அறுகு அட்சதை புட்பம் சாதி பத்திரம் எடுத்து அமயிறு...........யாய நமா ;..................யி(இ)று(ரு)த யாய நம...............

* * * *

End :

சிவாய யி(இ)று(ரு)தயாய நமாவென்று குட்டிச்சா(த்)தி சிவாய நமா. மநோன்மணியை ஒடுக்கி, துவாரபூசை ஒடுக்கி யி(இ)று(ரு)த யத்தில் பராமுகாக்கியம் கு(கொ)டுக்கவும். சண்டேசுர பூசை செய்யவும்.

No. 1272. CIVA-PŪCAI-MAKIMAI—[PROSE]

சிவபூசை மகிமை—[உரைநடை]

[68-II B]

Size, 16″×1″. Pages, 4. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note : This Mss. contains, incompletely, the story of a stephard lad obtaining the grace of God as a result of his Civa-Pūja.

Incomplete.

குறிப்பு: இது, சந்திரசேகரனின் இராச்சியத்தில் இடைப்பையன் சிவலிங்கத்தைப் பூசித்து, 'ஸ்ரீதரன்' என்று பெயர் பெற்ற கதையைக் கூறுகின்றது. எழுதியவர் பெயர் தெரியவில்லை. இப்பிரதி பூர்த்தியா யில்லை. ஏடுகள் ஓரங்களில் ஒடிந்துள்ளன. மிகவும் சிதிலம்.

அபூர்த்தி.

Beginning :

...............பட்டணத்துக் கதிபதியா யிருக்கிற சந்திரசேனனென்கிற ராசாவான வ......வலுமை பெற்ற புயபல பராக்கிரமங்களோடே சதுரங்க சேனை...............கிட எச்சத்திறலே இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண் டிருக்கிற நாளையிலே யந்தப் பட்டணத்திலே யிருக்கிற மாகாளீசர னெனகிற சுவாமிக்குச்.........குறையாமல் நடத்தித் தாமுஞ் சிவபூசை பண்ணிக் கொண்டிருக்கிறவர்...... . ...

* * * *

End :

...........சகல வெகுமான உபசாரமும் பண்ணி அவரவர் தேசத்துக்கு அனுப்பிப்போட்டுத் தாமும் இடைப்பிள்ளை......யே இருந்து சிவபூசையும் பண்ணிக்கொண்டு வெகு நாளிருந்து இரண்டுபேருங் கயிலாசஞ் சேர்ந்தார்க ளென்று சூத மாமுனிவர் ரிஷீசுரர்களுக்குச் சொல்லக்கேட் டதிசயித்தார்கள். அஞ்சா...... ....

No. 1273. CIVA-PŌKA-CĀRAM—[TEXT]

சிவபோக சாரம்—[மூலம்]

[1250-E]

Size, 7″×1⅛″. Pages, 35. Lines, 7 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: This is a work on the essence of Saiva Siddhānta philosophy by Sri Guru Ñaṉa Campanta Cwāmikal.

Complete.

குறிப்பு : இது, சைவசமயத்தைச் சார்ந்தது. சிவானுபவச் செல்வங்களைத் தெளிவாக இனிய வெண்பாக்களால் எடுத்துக் கூறுகின்றது. இயற்றியவர் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள். மூலம் மட்டும் உள்ளது. இப்பிரதி பூர்த்தியா யுள்ளது. ஏடுகள் மிகச் சிதிலம்.

பூர்த்தி.

Beginning :

அடிகள் வணக்கம்

சித்திதரு நாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்திதரு நாதன் பரநாதன்—முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாச னுண்மை
தருநாத னங்குருநா தன்.

* * * *

End :

தில்லைவனங் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனங் கூடல் முதுகுன்றம்—நெல்லைகளர்
காஞ்சி கழுக்குன்றமறைக் காடருணைக் காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்.

முற்றும்.

ஸ்ரீ அருணாசல குருப்பியோ நம:

குருபாதந் துணை.

No. 1274. CIVA-PŌKA-CĀRAM—[TEXT]

சிவபோக சாரம்—[மூலம்]

[1200-B]

Size, $10\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 24. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 1273 with one extra stanza.

Incomplete.

குறிப்பு : இது, முன் எண் 1275 பிரதி போன்றது. இதனுள் 1277 சுவடிபோன்று இடையில் பல பாடல்கள் விடுபட்டுள்ளன. இறுதியில் பின்வரும் ஒரு பாட்டு அதிகமாகக் காணப்படுகிறது.

அபூர்த்தி.

Beginning :

இன்பதுன்பம் வந்திடத்தி லெந்தைசெய லெண்ணு து
நம்பியொரு முன்னிலையை நாடுவதென்—வெம்பிக்
கொடுவானைக் கும்பிடுமோ கோழைமட நெஞ்சே
யிடுவானை நாடி யிரு. 100

Colophon :

சிவபோக சாரம் முற்றும்.

பரிபூரண சின்மய குருவே நமா.

No. 1275. CIVA-PŌKA-CĀRAM—[TEXT]

சிவபோக சாரம்—[மூலம்]

[628-P]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Pages, 16. Lines, 20 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 1273 but with a few stanzas left out. Incomplete.

குறிப்பு : இது, முன் எண் 1275 பிரதி போன்றது. ஆயினும் பாடல்கள் வரிசை முறைபிறழ்ந்தும், இடையில் பல பாடல்கள் விடுபட்டும் இருக்கின்றன.

அபூர்த்தி.

No. 1276. CIVA-PŌKA-CĀRAM—[TEXT]

சிவபோக சாரம்—[மூலம்]

[628-P]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Pages, 14. Lines, 20 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1273.

Incomplete.

குறிப்பு : *இது, முன் எண் 1273 பிரதி போன்றது.*

அபூர்த்தி.

No. 1277. CIVĀTTUVITA-P-PIRAKĀCAM [PROSE]

சிவாத்துவிதப் பிரகாசம்—[உரைநடை]

[599-D]

Size, $11\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 44. Lines, 10 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: This Mss. in prose, deals with the doctrines of Atvaita according to Caiva cult. The Mss. is very much injured and cannot be deciphered properly.

Incomplete.

குறிப்பு : *இது, சைவ சமயத்தைச் சார்ந்த நூல் இயற்றியவர் பெயர் முதலிய அறியக்கூட வில்லை. ஏடுகள் எல்லாம் ஒடிந்து பொடிப்பொடியாகிக் கிடத்தலால் சுவடி முற்று முள்ளதும் இல்லாததுந் தெரியவில்லை.*

அபூர்த்தி.

Beginning :

தற்பரமே......ச்சியதேங்க......தேர்மப .....தெந்தே மீரி தம நயோரைக் கியபாவேர் மநல்லது தொ மகீ......தற்பத மேலிங்கம்... ம...ரந்தோம் பதமே யங்கம் தாமற்புத......ரம நல்ல வசி பதமே பொற்புடைய சங்கமமா மென்றே புகழ் சுருதி வாக்கியத்திற் றங்கும் பொருள் தறைபூண் இங்ஙன மீசுர வாக்கியமுங் குரு வாக்கியமு மிருக்கையாலிம் மகா வாக்கிய ஞானம் வந்தாலல்ல தறியப் போகாத் தத்துவஞான மெதனுல் வருமென்னிலுத் தேச விலக்கண பரீட்சையினுல் வரு மெவ்வளவு த தேச விலக் கணம் பரீக்ஷை பண்ணப்படாத வளவும் எதாற்(ர்)த்த ஞானம் வாராது.

* * * *

End :

...நித்திய மாகையினுல் சூரியப் பிரகாசமல்லாத போதந்திக் காரியங்கட்படா திகளையாவரி...........

No. 1278. CIVĀṈANTA-PŌTAM—[TEXT]

சிவானந்த போதம்—[மூலம்]

[628-J]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Pages, 2. Lines, 18 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a Saiva Siddhānta work sketching the progress of the soul towards its salvation. The author's name is not known.

Complete.

குறிப்பு: இது, சைவ சமய விஷயமானது. அருளவதாரம், கேவலநிலை முதல் சிவபோகம் ஈறுக உள்ள முத்தி நன்னெறிகளின் தன்மைகளை விளக்குவது; அகவற்பா வாலாகியது. இதை

இயற்றியவர் பெயர் காலம் முதலியன விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

பூர்த்தி.

Beginning :

சிட்டர்கள் போற்றுஞ் சிவானந்த போதப்
கட்டுரைத் திடவருட் கணபதி காப்பு.

முபபது வகைப்படு முத்திநன் னெறியினைச்
செப்புவன் அமைத்துத் தெசகா ரியத்தில் 1

பொறையிலம் பூதமும் பொய்யென வருளான்
முறையுற நீங்கிடு முத்திச் சகலமும். 2

* * * *

End :

அருந்து மானந்த வவசரமே வீடு
பொருந்திய நிலைசிவ போகம தாமே. 24

மெய்யுறு சமாதியை விடுத்துமவ் வருளின்
வையகங் காண்பது மறித்துக் காட்சியே. 25

No. 1279. CIVĀṈANTA-PŌTAM—[TEXT]

சிவானந்த போதம்—[மூலம்]

[628-N]

Size, 5¾″×2″. Pages, 3. Lines, 20 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : Same as No. 1278.

Complete.

குறிப்பு : *இது, முன் 1278 எண் பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1280. CIVĀNANTA-MALAI—[SELECTIONS]

சிவானந்த மாலை—[திரட்டு]

[574-G G]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 18. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a work on Saiva Siddhānta philosophy and this Mss. contains a seletion of 102 stanzas. The compiler's name is not known.

Incomplete.

குறிப்பு: இது, சிறந்த சைவ சித்தாந்த சாஸ்திரங்களுள் ஒன்று. பல அரிய விஷயங்களை உவமை முகத்தால் எளிதில் விளக்குவது. 410 செய்யுட்களை யுடையது. திரட்டு ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்தப் பிரதியில் 102 பாடல்கள் எழுதப் பெற்றுள்ளது.

அபூர்த்தி.

Beginning:

பாயிரம்

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர் தேசிகனு—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூ லெங்கே
யெந்தைபிரா னஞ்செழுத்தெங் கே. 1

வேறுபடாப் பேரின்ப வெள்ளத் தழுந்தியருட்
பேறுபெற நான்முயன்ற பித்தந்தோ—வேறற்றோ
ரண்மைப் பயனுய வத்துவி தானந்தவென்
னுண்மைப் பயனே யுரை. 2

* * * *

End:

நீடுந் தலைகீழ்கான் மேலாகி நின்றாலுங்
கூடும்படி யொழியக் கூடாதா—லோடி
வருந்தாம லுள்ளபடி வந்திடக்கண் டாறி
யிருந்தாலோ நெஞ்சே யினி. 101

ஆர்வமொடு செற்றத்தை யாரிடத்துங் கொள்ளாதே
சாரமுள தெவ்விடத்துந் தான்கொண்டு...தீரவுணர்
நல்லோர்தஞ் சொல்லை நழுவாதே நன்னெஞ்சே
நில்லா யிதுவே நிலை. 102

No. 1281. CIṞṞAMPALA-NĀṬIKAL-AṈUPŪTI-VIḶAKKAM—[TEXT]

சிற்றம்பலநாடிகள் அநுபூதி விளக்கம்—[மூலம்]

[574-T]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 6. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a work on Saiva Siddhānta philosophy by Ciṟṟampala Nāṭikal of Sīkāḻi.

Complete.

குறிப்பு: இது, சைவ சமய சம்பந்தமானது. சீகாழிச் சிற்றம் பல நாடிகளால் இயற்றப்பெற்றது. நூல் அச்சிடப் பெற்றுள்ளது.

பூர்த்தி.

Colophon:

தேவரு மின்பச் சிவானுபவ முரைக்க
வானை முகவ னடிபணிந்து போற்றுவாம். 1

சீராரும் கங்கைநகர்த் தேசிகர்கோன் மெய்கண்டான்
வாராதே வந்துரைத்த வார்த்தைவளம் கூறுவாம். 2

* * * *

End:

கங்கைநகர் மெய்கண்டான் கரற்கமலம் சென்னியின்மேல்
தங்கவிருள் நீங்கித் தானும் தபோதனரே. 104

வாழி திருநீறு வாழிதிரு வஞ்செழுத்து
வாழி சிவாலயங்கள் வாழிதிரு வேடமுமே. 105

No. 1282. CIṞṞAMPALA-NĀṬIKAL-KALITTUṞAI

சிற்றம்பலநாடிகள் கலித்துறை

[574-S]

Size, 9⅜″ × 1½″. Pages, 14. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is another work on Ciṟṟampala Nāṭikal and is on the application of Saiva Siddhānta doctrines, written in Kalittuṟai metre.

Complete.

குறிப்பு: *இது, சைவ சமய சம்பந்தமானது. சிகாழி சிற்றம்பலநாடிகளின் சீடரால் இயற்றப் பெற்றது. அச்சிடப் பெற்றுள்ளது. பாடல்கள் முன்பின்னாக மாறுபட்டுள்ளன.*

பூர்த்தி.

Beginning:

சீர்கொண்ட காழிச்சிற் றம்பல நாடிநற் றேசிகனைப்
பார்கொண்டு போற்றவோர் பாமாலை சொல்வனிப்
[*பாவினுக்கிங்*
கேர்கொண்ட சீர்தளை எல்லாம் நிறைந்திட் டிலங்கியிடப்
போர்கொண்ட மும்மதக் கற்பக யானையைப் போற்றுதுமே.

தாதவிழ் தாமரைப் பொற்றா ளிரண்டுமித் தாரணிமேற்
போதநன் மாதவம் ஏதுசெய் தேன்தென் புகலிநகர்ச்
சேதன னானசிற் றம்பல நாடிநற் தேசிகனே
யீதென தாவி யுடலாகி யேகினற தெத்தவமே. 1

* * * *

End:

செழுமலர் மென்குழல் மானார் உதரத்திற் சென்று சென்று
புழுமல ஆக்கை எடுக்கவொட் டேன்புனற் சேற்றுழவர்
உழுமலம் பட்டுவெண் சங்கம் சொரிமுத் தொதுங்கும் வயற்
கழுமல மன்னுசிற் றம்பல நாடியைக் கண்டபின்னே. 55

No. 1283. CIṞṞAMPALA-NĀṬIKAḶ-TIRI-KĀLA-T-TIRAṄKAL—[TEXT]

சிற்றம்பலநாடிகள் திரிகாலத் திரங்கல்—[மூலம்]

[574-V]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 14. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: In this work, the author, Ciṟṟampala Nāṭikal, eulogises the greatness of his Guru Meikaṇṭar and regrets his unfitness to receive his benediction. The work explains the three stages in which he found himself i.e. before, during and after his initiation. The whole work is set up in pathos.

Complete.

குறிப்பு: *இது, சீகாழி சிற்றம்பல நாடிகள் தமது கடமையை மறந்திருந்தும், கங்கைகொண்ட சோழபுரத்து மெய்கண்டாராகிய தம் ஆசிரியர் தம்மை ஆட்கொண்ட வகைகளை மூன்றுகாலமாகப் பிரித்துக் கூறுகின்றார். அந்நூல் அச்சிடப் பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் மூன்றுவகைகளும் பூர்த்தியாக வுள்ளன.*

பூர்த்தி.

Beginning:

செல்காலத் திரங்கல்

சீரார் திருநீறும் மீதிலருள் வேடமுமுன்
சேராமல் ஐயோ தெளியா திருந்தனமே. 1

வந்து பிறந்திந்த மானிடராய் மண்மிசையில்
எந்தைபணி செய்வதற்கென் றெண்ணா திருந்தனமே. 2

* * * *

மெய்யனைய வந்தருளும் மெய்கண்டான் மேனியன்றே
கையிணைகள் கூப்பிக் கசிந்துருகப் பெற்றிலமே. 53

நிலையாம் பொருளின் நிறுத்தும் குருவைத்
தலையால் வணங்காமல் தாழ்வுசெய்து விட்டனமே. 54

* * * *

நிகழ்காலத் திரங்கல்

உன்னரிய ஞானம் உருவாக வந்தருள
என்னதவம் செய்தோமுன் னியாமென் றறிந்திலமே. 1

ஆண்டருள வேணுமெனும் ஆசையோ நல்லறமோ
வேண்டி எமையாள மெய்கண்டார் வந்ததுவே. 2

* * * *

போக்குவர வற்றிருக்கும் பூரணர்தாம் மண்மிசையில்
யாக்கை யுடன்வந்த தறவும் அதிசயமே. 49

எங்கும் நிறைந்தவர்தாம் ஏக உருவாகிச்
செங்கமலத் தாள்வழங்கச் சேர்ந்த ததிசயமே. 50

* * * *

End :

எதிர்காலத் திரங்கல்

தோன்றி மறையுமிந்தத் தொல்லுலகு தோன்றுமல்
ஆன்ற அறிவுநாம் ஆய்விடுவ தெக்காலம். 1

ஆரணன்மால் காணா அறிவாய் அகண்டமுமாம்
பூரணத்துக் குள்ளே புகுவதினி யெக்காலம். 2

* * * *

அவயோகம் தன்னில் ஆசையற என்றும்
சிவயோகத் தானந்தம் தேசிகனே தந்தருளே. 49

சத்திய ஞானமனந் தானந்தம் தானாகி
நித்தமாய் நின்றுவிட நின்மலனே தந்தருளே. 50

எதிர்காலத் திரங்கல் முற்றும்.

திரிகாலத் திரங்கலு முற்றும்.

ஆக வகை 3-க்கு 154.

No. 1284. CIRRAMPALA-NĀṬIKAL-VEṆPĀ

சிற்றம்பலநாடிகள் வெண்பா

[574-R]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 10. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is yet another work on Saiva Siddhanta. The stanzas are in veṇpā metre. Variations are found in this Mss. from the printed version of the work.

Complete.

குறிப்பு: இது, சைவசமய சம்பந்தமானது. ஆசிரியர் சீகாழிச் சிற்றம்பலநாடிகளின் மாணவர். அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதி முற்று முள்ளது எனினும், அச்சுப் பிரதியிலுள்ள காப்புச் செய்யுளும், 36-ஆவது செய்யுளும் இதிற் காணப்படவில்லை. 65-ஆம் பாடல் ஒன்று இதில் மிகுதியாக உள்ளது. இந் நூலின் பெயர் சிற்றம்பலநாடி சாஸ்திரம் என்றும் சுவடியில் எழுதப் பெற்றிருக்கிறது.

பூர்த்தி.

Beginning:

என்னை வினையறியா யானு மதுவறியேன்
முன்னை வினைகூடல் மொழிந்தருள்வா—யென்னத்
திருவார் பொழிற்காழிச் சிற்றம் பலவன்
றருவானு நானென்றான் றான். 1

* * * *

End:

அதிரும் புலன்கரிக ளாயமங் திண்டேர்
கதியொன் றியகுணமாக் காலாள்—சதுரங்கம்
பூட்டினன் போலிருக்கப் புக்கடிநிற் கும்புதுமை
காட்டினு னம்பலவன் காண். 64

மாயைமல மெங்கே மடிந்ததோ மாயைதனி
லாயசெக மெங்கே யழிந்ததோ—காயமதிற்
றங்கு புருடனெங்கே சச்சிதா னந்தவெள்ள
மெங்குமா கக்கோர்த் ததே. 65

No. 1285. CUTTA-CIVA-P-PIRAKĀCA-K-KATTAḶAI—[PROSE]

சுத்த சிவப்பிரகாசக் கட்டளை—[உரைநடை]

[741]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Page, 17. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a treatise in prose summarising and tabulating the Tattuvās as detailed in the Saiva Siddhānta philosophy.

Complete.

குறிப்பு: இது, சைவ சாத்திரத்தைச் சார்ந்தது. ஆன்ம தத்துவம் முதலிய தத்துவங்களை வரையறுத்துக் கூறுவதாம். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இப் பிரதி முற்று முள்ளது. அச்சாகி யுள்ளது.

பூர்த்தி.

Beginning:

பூதங்களாவன: பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் 5. ஞானேந்திரியங்களாவன: சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்ஙுவை, ஆக்கிரணம்—5. தன்மாத்திரைகளாவன: சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்—5. கன்மேந்திரியங்களாவன: வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்—5. அந்தக்கரணங்களாவன: மனம், ஆங்காரம், புத்தி, குணம்—4. சித்தம் மனத்தின் அவத்தை விசேடமாகலா னொன்றாக வைத்து நாலென்றது, குணமே அவ் வியத்தமாகிய பிரகிருதியு மொன்றாதலால் ஆத்ம தத்துவம் 24

இதற்கு ஆத்ம தத்வமென்றும், போக்கிய காண்ட மென்றும், அசுத்ததத்துவ மென்றும் பெயர்,

*   *   *   *

End :

இனிச் சகலத்தில் சுத்தம் ஐந்தாவன : இருதய முதல் துவாத சாந்த மீருகிய தானங்களிற் புறக்கரண முட்கரணங்களைப் பற்றியும், பற்றுதும் பிரத்தியாகார முதற் றுவாத சாந்தமீரு தியை வகைப்பட்டு நிகழு மவதரம். சகலத்திற் சுத்தமாகிய யோகாவத்தை யென்பதாம். இனிச் சுத்தமுஞ் சுத்தத்திற் கேவலமுஞ் சுத்தத்திற் சகலமுஞ் சுத்தத்திற் சுத்தமுமென மூவகைப்பட்டு, ஐயைந்து பதினைந்து வகையாய் விரியும். அவை துகளறு போதத்தினும் அம்பலவாணசுவாமி தெட்சிணமூர்த்தி சுவாமி சுவாமிநாத சுவாமிகள் செய்த நூல்களினும் விரித்தறிக. ஆகமாதி ஞான போத மாதியினும் விரித்தறிக.

சுத்த சிவப்பிரகாசக் கட்டளை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

No. 1286. CUTTA-VATTAIYAI-K-KURIKKUM-TITTANTAM—[PROSE]

சுத்தாவத்தையைக் குறிக்குந் திட்டாந்தம்—[உரைநடை]

[741-A]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 2. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Cuttavattai is a condition of the soul in which it is purified and freed from births. It is of five kinds. Here, in this small work. an example is given for one of the kinds of Cuttavattai. The author's name is not known.

Complete.

குறிப்பு: இது, சைவ சாஸ்திரத்தைச் சார்ந்தது. இதில் கண்ணாகிய இந்திரியத்தின் தத்துவத்தை விவரித்துக் கூறியிருக்கிறது. ஆசிரியர் இன்னார் என்று தெரியவில்லை. பிரதி பூர்த்தியாயுள்ளது.

பூர்த்தி.

Beginning:

கண்ணானது இராக்காலத்திருளினாலே மறைபட்டிருளாய் நிற்பது கேவலம். கண்ணானது விளக்கு வந்த விடத்து இருட்டுச் சிறிது நீங்க விளக்காய் நின்று பதார்த்தங்களைக் கண்டு நிற்பது சகலம். கண்ணானது விளக்குத் தகளி நெய் திரியக்கினி யொளி கூடித் தொழிற்படுஞ் செய்தி யறிதல் 1 தகளி, 2 நெய், 3 திரி, 4 அக்கினி, 5 ஒளி யிவ்வைந்துந் தனித்தனி தொழிற்படாது. ஒருவன் தனித் தனித் தொழிற்படுத்திக் கூட்டுவித்தலுங் கண்ணுக்கு விளக்கினிடமாய்க் காணுஞ் செய்தி யொழிந்து விளக்குக் காணும் செய்தியில்லை யென்று நிற்பது.

* * * *

End:

கண்ணொளியானது கிரணத்திலே யடங்கி நிற்பதுவே யல்லது மேலே சூரியனில்லை யென்று சொல்லக் கிரணம் வந்து கண்ணையும் பதார்த்தத்தையுங் காட்டினது போல, சூரியனையுங் காட்டும்படிக் கிரணத்தினாலே சூரியனைக் கண்டார் கண்ணுக்குப் பிரயோசன மென்று மறுக்கச் சம்மதித்து இருளிலே கண்ணொளி யடங்கி யிருப்பதுபோல, கிரணத்திலே கண்ணொளி யொன்றாய் நிற்கக் கண்ணொளியுஞ் சீவியாது கண்ணுக்குள்ள குற்றமும் நீங்கும் 9. கண்ணொளியானது கிரணத்திலே யடங்கி நிற்கவே சூரியன் தோன்றுமதை நீங்காமற் கண்டு நிற்பதுவே கண்ணுக்கு உள் தீபம்.

முற்றும்.

No. 1287. SAIVA-CĀTTIRAM

[TEXT VERSE AND PROSE]

சைவ சாத்திரம்—[மூலமும், செய்யுளும், உரையும்]

[383]

Size, 14″×1¼″. Pages, 18. Lines, 8 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This is a compendium from several texts on Saiva Siddhānta philosophy. The Mss. Is very much injured.

Incomplete.

குறிப்பு: இது, சைவ சித்தாந்தத்தைச் சார்ந்தது. சில்லறைப் பாடல்களை யுடையது. மதுரையாதீனத்தது. இதன் நூலாசிரியர் பெயர் முதலிய விவரம் அறியக்கூடவில்லை. ஏடுகள் பழமையானவை. செல்லரிக்கப்பட்டும் ஓரங்கள் உடைந்தும் உள்ளன. நூல் முற்றுமுளது. முதற் கண் 42 ஏடுகளே இல்லை. இறுதியில் பாட்டின் முதற் குறிப்பு அட்டவணை எழுதப்பட்டுள்ளது;

அபூர்த்தி.

Beginning:

* * * *

End:

அயிக்கிய வாதி முதற் சிவாத்துவிதி யீருகிய சன்மிகள் முத்தியை மறுத்துச் சித்தாந்தங் கூறினது.

No. 1288. CAIVA-CITTĀNTAM—[PROSE]

சைவ சித்தாந்தம்—[உரைநடை]

[628-C (1)]

Size, 5¾″×2″. Pages, 22. Lines, 19 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as previous No. 1287 though bearing the name as Caiva-Siddhāntam-Viḷakkum Nūl.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1289 போன்றது. சைவ சித்தாந்தம் விளக்கும் நூல் என்று பெயரிடப் பெற்றது.

அபூர்த்தி.

No. 1289. CAIVA-CITTĀNTAM—[PROSE]

சைவ சித்தாந்தம்—[உரைநடை]

[628-H]

Size, 5¾" × 3". Pages, 30. Lines, 18 on a page. Condition, Slightly iujured. Appearance, Old.

Note: This is a prose work on Saiva Siddhānta Cāstra. Other particulars are not known. This work seems to be complete.

Complete.

குறிப்பு: இது, சைவ சித்தாந்த சம்பந்தமானது. உரைநடையில் இது எழுதப் பெற்றுள்ளது. மற்ற விவரங்கள் அறியக் கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

மறதியைத் தருவ தாணவமல மிந்த வாணமவல மிருவினையொப்பு வந்த சத்தினி பாதம் வந்து ஞானசாரிய னருட் பார்வையுண்டானால் நீங்கும். நீங்கினுற் பகலிருட்டுப் போல வழியாமனிற்கு மாகையாற் பஞ்சாக்கரத்தி னணவ மலத்திற்கு மகாரம் வைத்தது.

* * * *

End :

அதனுரை சிவஞான போதமிரண் டதனி லறைகுவர்
தத்துவ ரூபகமு மஞ்சில்
வித்தமாந் தத்துவதெரி சனமு மாறில்
விளம்பிய தத்துவ சத்தி யுமேழி
லித்தகமை யான்மரூபகமு மெட்டி லியம்பாறம்
தெரிசினமுஞ் சிவரூப மொன்பான்
பத்தாறம் சுத்திசிவ தெரிசனம் பின்பகர் சிவயோகஞ்
சிவபோகம் பதினென்றே.

No. 1290. CAIVA-CITTĀNTAM—[PROSE]

சைவ சித்தாந்தம்—[உரைநடை]

[908]

Size, 7″×1⅛″. Pages, 94. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a different work from the one described in No. 1289. Particulars regarding the name of the author etc. are not known.

Incomplete.

குறிப்பு : இது, முன் எண் 1291 இனின்று வேருனது. வசனத்திலுள்ளது. ஆசிரியர் முதலிய குறிப்புக்கள் விளங்கவில்லை. நூலும் முற்றுப் பெறவில்லை. முதலிலும் இறுதியிலும் ஏடுகள் சிதைந்து போயின.

அபூர்த்தி.

Beginning :

சிவன் வியாபகன், அவனுட் சிவசத்தி வியாப்பியம், அதனுளாணவ மலம் வியாத்தி, அதனுளாணவ மலசத்தி வியாப்பியம், அதனுள் மான் வியாப்பியம், அதனுள் மாயா கருவிகள் வியாப்பியம் அதனுள் சிருமம் வியாப்பியம் அப்படியே சிவன்முத......

வைந்து பொருளு மொன்றிலே யொன்றடங்கி யிருக்கிற முறைமை யென் றறிக............

*　　*　　*　　*

End :

ஒரு வசனமாகவே முடிந்த பொரு ளுணர்ந்த......யொன்றுத
காண்பதுவே காட்சி யின்னுந் திரும்ப யெருவச்......கி......
கெட்டாலும் பின்னு மொரு சென்மத்து வதுமி............
....

No. 1291. CAIVA-CITTĀNTAM—[TEXT]

சைவ சித்தாந்தம்—[மூலம்]

[628-F (13)]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Page, 1. Lines, 20 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This single leafed Mss. contains 6 verses on Saiva Siddhānta philosophy. Other particulars are not available.

Incomplete.

குறிப்பு : இது, சைவ சித்தாந்த சம்பந்தமானது. இந்தப் பிரதியில் ஆறு பாடல்கள் உள்ளன. மற்றைய விவரங்கள் அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning :

ஏகமல மென் றுமிரண் டன்றி ரண்டாற்
போகமலப் பூரணமாம் போதமலத்...தேகாதி
போகமே பொய்யாய்ப் பொருண்மேற் பரிபாகத்
தாகமே சைவசித்தாந் தம். 1

*　　*　　*　　*

End :

துன்னுமல பொய்ப்போதந் துரிசறவே யத்துவித
வுன்முதலுன் பாலுடனே யுற்பவிக்கும்—தன்மைசொலிற்
காட்டமறை செந்தீ கண்டக்கால் வெம்மையைப்பின்
கூட்டியெழல் போலே குறி. 9

No. 1292. CAIVA-CITTANTA NUL—[TEXT]

சைவசித்தாந்த நூல்—[மூலம்]

[574-N N]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 6. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This work which deals about some doctrines of Saiva Siddhānta philosophy has no name given to it or any indication regarding other particulars are available. It contains 25 stanzas.

Incomplete.

குறிப்பு: இது, சித்தாந்தக் கருத்துக்களை யுடையது. இந்தப் பிரதியில் 25 செய்யுட்களுள்ளன. பிற குறிப்புக்கள் கிடைக்க வில்லை. நூலின் பெயரும் தெரியவில்லை.

அபூர்த்தி.

Beginning :

மத்த மாம்புல மாறிய விடத்தே
மன்னுமுயிர் வெளிப்படு மொருபாழ்
பெத்த மாமுயிர் மாறிய விடத்தே
பெரும்பரை வெளிப்படு மொருபாழ்
முத்த மாம்பரை மாறிய விடத்தே
மூலநற்சிவம் வெளிப்படு மொருபாழ்
சுத்த மாஞ்சிவம் மாறிய விடத்தே
தோன்றிடுஞ் சிவப்பிரகாசம். 1

* * * *

End:

தனக்கினிய னும்வகையே சராசரங்க ளனைத்தினையு
நினைத்திகழ்வார் புகழ்வார்பால் ஒத்திருக்கு நீர்மையனை
மனத்துடைய னாவ னுமுரைத்த வாசார
மனத்துடைய னகவறி வெறிமரு வைம்பாலாய். 25

No. 1293. CAIVA-T-TIRUKKURAL—[TEXT]

சைவத் திருக்குறள்—[மூலம்]

[628-I]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Pages, 16. Lines, 18 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a Siddhāntic work in Kuṟaḷ veṇpā metre. Other particulars are not known.

Complete.

குறிப்பு: *இது, சைவ சமய சம்பந்தமானது. இந்தப் பிரதியில் 206 குறள் வெண்பாக்களுள்ளன. இது சம்பந்தமாக வேறெதுவும் அறியக்கூடவில்லை.*

பூர்த்தி.

Beginning:

உளத்தையந் தீர்த்தொளிரு முள்ளொளியைக்......
களிற்றுமுகத் தானிதற்குக் காப்பு. 1

கருதாம னின்று கருதுமடி யாருண்
மருதா வென்னுள்ளத்துள் வா. 2

* * * *

End:

கதைசொன்ன வருங் கேட்டவருங் காணகிலமென்
றிதமாய்ச் சிரித்தா னிருந்து. 205

பிராரத்த மாதும்மைப் பின்றொடர்ந்தே னென்று
ணிருதிற்ற நீயிருந்தா லென. 206

No. 1294. ÑĀṈA-CĀKARA-VEṆPĀ—[TEXT]

ஞானசாகர வெண்பா—[மூலம்]

[820-F]

Size, 8½″×1¼″. Pages, 34. Lines, 7 on a page. Condition, Good. Appearance, New.

Note: This a Saiva Siddhānta work. Its author seems to have been a disciple of Parañjoti Munivar. There are 101 veṇpās in this work.

Complete.

குறிப்பு: *இது, சைவசித்தாந்த நூல். இதன் ஆசிரியர் பரஞ்சோதி முனிவரின் சீடர் ஒருவர் என்று தோன்றுகிறது. இந்தப் பிரதியில் 101 செய்யுட்கள் உள்ளன, மற்ற விவரங்கள் அறியக் கூடவில்லை.*

பூர்த்தி.

Beginning:

திருஞான சாகரமாஞ் சித்தா சத்திபசு
தருஞான சித்தர் நூல் சாத்திப்—பெருஞானச்
சொற்பலவுங் கற்போன் றுதிக்குந் துதிக்கையாய்
நற்பதுமப் பொற்பதடு மீதற்கு. 1

ஆதியா யந்தமா யப்பாலைக் கப்பாலாஞ்
சோதியாய் ஞானச் சுடராகிக்—கோதிலருட்
பண்பிலெனை யாண்ட பரஞ்சோதி மாமுனிபொற்
றண்பதுமத் தாளே சரண். 2

* * * *

End:

பந்த மறுத்தாண்ட பரஞ்சோதி மாமுனிவன்
றந்தபர மானந்த சாகரத்தி—னந்தமறச்
சந்ததமு மின்பசுகந் தானு யிருந்தேனை
யெந்த நெறிசொல்வேன் யான். 101

Colophon:

கரஹு தைமீ 6வ.

No. 1295. ÑAṈA-CĀKARA-VEṆPĀ—[TEXT]

ஞானசாகர வெண்பா—[மூலம்]

[1200-E]

Size, $10\frac{5}{8}'' \times 1\frac{3}{8}''$. Pages, 30. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1294.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1294 போன்றது.*

பூர்த்தி.

Colophon:

ஸ்ரீ மகா குரு சுயம்பிரகாச சுவாமிகே நமா.

ஸ்ரீ குரு பாதமே கெதி.

சருவ பரிபூரண பாதபங்கயம் நமாமி.

No. 1296. ÑAṈA-CĀKARA-VEṆPĀ—[TEXT]

ஞானசாகர வெண்பா—[மூலம்]

[628-F (10)]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Pages, 12. Lines, 20 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1294.

Incomplete.

குறிப்பு: *இது, முன் 1294 எண் பிரதி போன்றது. இந்தப் பிரதியில் முன்னர் சில ஏடுகள் இல்லை.*

அபூர்த்தி.

No. 1297. ÑAṈA-CĀTAKA-P-PAṈUVAL

[PROSE]

ஞானசாதகப் பனுவல்—[உரைநடை]

[741-C]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 10. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This prose work seems to be by Sivañaṉa Yōgikal, author of Mahabhāshyam. This deals about the way to attain salvation.

Complete.

குறிப்பு: *இது, மோட்ச உபாயத்தைப்பற்றிக் கூறுவது; உரை நடையிலுள்ளது. இயற்றியவர் துறைசைப்பதி சிவஞான யோகியென்பவர் எனத் தோன்றுகிறது. இப்பிரதி பூர்த்தியாயுள்ளது.*

பூர்த்தி.

Beginning:

மூலமல மொன்று தானங்க ளிரண்டு; மூலமலத்தாணவ பெந்த காலத்தில் ஒன்றல்ல கன்மத்தி லொன்றல்ல. ஞாலத்தில் ஞானிக ளோதிடுவாரே.

* * * *

End:

ஆத்மாவுக்குப் பொசிப்பாவது சிவானந்தத்தை யனுபவித்தல். சிவனுக்குப் பொசிப்பாவது ஞானவான்களுடைய பிராரத்தம்.

Colophon:

சிற்றுரையும் பேருரையுஞ் சிவஞான போதமெனும்
[தெய்வ நூற்குக்
கற்றுணர்ந்தோர் களிசாரக் கருணையினாற் செய்தளித்தான்
[கலைகடேர்ந்து

முற்றுணர்வு முதலியவற்றால் சிவனேயென் றறிஞர்
[மொழிந்து போற்ற
நற்றுறைசைப் பதிமருவு சிவஞான யோகியெனு நாமத்தோனே.

திருச்சிற்றம்பலம்.

No. 1298. ÑĀNA-CUKĀTĪTA-VEṆPĀ—[TEXT]

ஞான சுகாதீத வெண்பா—[மூலம்]

[623-B]

Size, 7″ × 1¼″. Pages, 6. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This work in 16 stanzas deals about the path of wisdom. Its author's name is not known.

Complete.

குறிப்பு: இது, ஞானமார்க்கத்தை அறிவுறுத்துவது. 16 வெண்பாக்களாலாகியது. அச்சிடப் பெற்றிலது. இதன் ஆசிரியர் பெயரும் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

நாடறிய முத்திதரு ஞானசுகா தீதத்தைப்
பாடியிடு வெண்பாப் பதினாறும்—நீடுதரும்
அற்புதனே நிர்க்குணனே அத்திமுக வெற்றியுள்ள
கற்பகமே மெய்ப்பொருளே காப்பு.
நூறுகோடி யேயிருந்து நூல்கள்பல கற்றாலும்
ஆறுகோடி சித்தி யடைந்தாலும்—பேறில்லை
நித்தன் மலரடிக்கே நீக்கமற வேநின்று
அத்துவிதங் காணா தவர். 1

*   *   *   *

End:

எல்லா வியாகூலமு மற்றே மிடாற்றேரும்
பொல்லாப் புலன்வழியிற் போக்கற்றேரும்—நல்ல
குருவி னருள்கண்டு கும்பிடவும் பெற்றே
மொருபொருளும் வேண்டா மினி. 16

No. 1299. ÑAṆA-CUKATITA-VEṆPA—[TEXT]

ஞான சுகாதீத வெண்பா—[மூலம்]

[619-B]

Size, $6\frac{3}{4}'' \times 1''$. Pages, 6. Lines, 9 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1298. Order of stanzas are changed from the other Mss.

Complete.

குறிப்பு: இது முன் எண் *1298* பிரதி போன்றது. பாடல்கள் முன்பின்னு யுள்ளன. இறுதியில் ஒரு பிரதிக் குறிப்பு ஏடு மிருக்கிறது.

பூர்த்தி.

No. 1300. ÑAṆA-PŪCĀ-KĀRAṆA-URAI

[TEXT AND MEANINGS]

ஞானபூசா காரணவுரை—[மூலமும் உரையும்]

[624-C]

Size, $9\frac{1}{4}'' \times 2\frac{1}{4}''$. Pages, 18. Lines, 20 on a page. Condition, Injured. Appearance, Very old.

Note: This is a Saiva Siddhāntic work describing the ways in which a Ñani—a person who has realised the Truth—should conduct himself. Stanzas and their meanings are given.

Complete.

குறிப்பு : இது, சித்தாந்த சாத்திரத்தின் தொடர்பாயுள்ளது. ஞானி நடக்கும் விதங்களைக் குறிப்பது, அச்சிடப்பெற்ற விவரம் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

திகழ்சிவப் பிரகாசத்திற் றிருந்திய வகையா லுண்மை
நிகழ்பவ ருடற்செய் கன்ம நேரிடுமளவு முன்போற்
றகவினை புரிவார் துய்ப்புந் தவிர்த்தார் தனுவெடுத்த
வகமென மருவியாவு மாற்றுமா சாற்ற லுற்றும்.

இதன் பொருள் :—திகழ் சிவப்பிரகாசத்தில் என்பது, பதி பசு பாச லட்சணம் விளங்கச் சொல்லப்பட்ட சிவப்பிரகாசத்தி னர்த்தத்தை; திருந்தியவகையால் என்பது, அந்தலட்சணந் தப்பா மல் கேட்டுச்சிந்தித்துத்தெளிந்து கூறப்பட்டபடியினாலே; உண்மை நிகழ்பவர் என்பது, ஞானநிட்டை விளங்கினவர்களுக்குப் பிரா ரத்துவானுபவ முண்டோவெனில்; துய்ப்புந் தவிர்த்தார் என்பது, சிவானந்தத் தனுபவமேயன்றி பிராரத்தானு குணமான புசிப்பும் விட்டுப்போகாது; ஆயினுங் காமியமேறுதோ வெனில்; உடற்செய் செய் கன்ம நேரிடுமளவும் என்பது, சரீரத்தினிடமாக பிராரத்த கன்மம் புசித்து முடியுமளவும்; முன்போற் றகவினை புரியார் என்பது, பெத்த காலத்திலே தற்போதத்தால் முன்னிலை நாடிப் புசித்தாற்போல்வர் காமியமேறப் புசியார்கள; புசிக்குமதெனலோ வென்னில்; எடுத்த வகமென என்பது, புதுவீடு கட்டினவன் பழையவீட்டிற் பற்றின்றி நின்றதுபோல; தனுமருவி என்பது, இந்தப் பிராரத்த தேகத்திலும் பற்றின்றி நின்று; முன்னிலைச் சுட்டில்லாமற் புசிப்பார்கள்; யாவு மாற்று மாசாற்றலுற்றும் என்பது, அவர்கள எப்பகுதிபட்ட செயல்களையுஞ் செய்யு முறைமை சொல்லப் பொருந்திறே மென்றவாறு.

* * * *

End :

எண்டொகை யுரைப்பித் தோர்போ லியம்பினர்
[வைத்தெண்ணி யெண்ணி
மண்டிக முலகுவைத்த மற்றையத் தொகைவ ழாமற்
கண்டுளந் தெளிதல் போன்முற் கற்றசொற் பொருள்கருத்துட்
கொண்டுணர் பவர்க்கி யாவுங் குறிவழி நடத்த லாமே.

இதன் பொருள் :—எண் தொகை யுரைப்பித்தோர்போல் என்பது, கணிதத் தொகையைப் படிப்பித்த குரவரைப்போல ; இயம்பினர் என்பது, ஐயந் திரிபறப் படிப்பவர்கள் ; (அன்னுவயம்) இயம்பினர் வைத்தெண்ணி என்பது, விளங்குகின்ற பலகறை பூமியின்கண் வைத்துக் கெணித்துக் கெணித்து ; மற்றையத் தொகை வழாமல் என்பது, முன் குரவன் கூறிய தொகை தவறு மல் ; கண்டுளந் தெளிதல்போல என்பது, கண்டு அறிவு தெளி தல்போல ; முற்கற்ற சொற்பொருள் கருத்துட்கொண்டு என்பது, ஞானியனவ னிட்டை பொருந்து முன்பு குருமுகமாய் படித்தவர்கள் வாக்கியார்த்தங்களைச் சிந்தித்து ; உணர்பவர்க் கியாவும் குறிவழி நடத்தலாமே என்பது, அறிந்து தெளியவல்லவர்களுக் கெந்தச் செயல்களையுந் திருவருள் வழியாகச் செய்யலா மென்றவாறு.

No. 1301. ÑAṈA-PŪCAI-ATTAVAṆAI—[PROSE]

ஞானபூசை அட்டவணை—[உரைநடை]

[612-C]

Size, $7\frac{1}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 8. Lines, 15 on a page. Condition, Very injured. Appearance, Very old.

Note : This is another work having the same subject matter as in No. 1300.

Incomplete.

குறிப்பு : இது, சைவ சாத்திரங்களைச் சார்ந்தது. சிவபெருமானை ஞானமுறையிற் பூசிக்கும் முறை கூறுகின்றது. இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை. நூல் முற்றுமில்லை. முதல்

ஏடு ஒடிந்துவிட்டது. மற்ற ஏடுகளும் ஓரங்கள் ஒடிந்துபோயுள்ளன.

அபூர்த்தி.

Beginning :

..................திருமஞ்சனத்தைப் பாத்தியாசமன மொன்றிற் பூரித்து க ....மறுகு புஷ்பம்போட்டு ஒருதர மருச்சித்தபி மந்திரித்துத் திக்கு பெந்தனம் வரு..............ந்தெனு முத்திரை கொடுத்ததைப் பரையாகப் பாவித்து ரிஷிகளுக்கு வேதாகம...... ....யாக்கியான மருளிச்செய்க தெக்ஷிணைய முகமா யெழுந்தருளியிருந்து பக்குவ..............ஞானத்தை வழங்குந் தெற்குவாசலைப் புரோக்ஷித்துச் சந்தானவாசாரிய ரெழுவ....................ஞ்சாதகவாசாரியர் பதினொருவரையும் வடக்குமுகமாகப் பதினொருவரையும்.................

* * * *

End :

..................நிர்மாலியங்கழித்து மடிப்பிலர்ச் சித்தாற் புரோக்ஷித்துத் தன் குரு...........யண்மை நிலையாயாசனமூர்த்தி மூலத்தாலரிச்சித்துப் பாத்தியாசமன வரிக்கியங் கொடு.........திருவடி விளக்கிக் கெந்த புஷ்பங்களாற் பூசித்து நைவேத்திய மாசமனம் பண்ணிச் சிவஞானச் சம்பந்த குரு முதலாக வருச்சித்து...........

No. 1302. ÑĀNA-MAṆA-MĀLAI—[TEXT]

ஞான மணமாலை—[மூலம்]

[648-F (12)]

Size, 5-″ × $2\frac{1}{8}$″. Page, 6. Lines, 20 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This work is in the form of a teacher initiating his disciple in the matter of Mukti—Salvation. There are 40 stanzas. Other particulars are not known.

Complete.

குறிப்பு: இது, சைவ சம்பந்தமான நூல்; முத்தியின் நிலையை மாணுக்கனுக்கு ஆசிரியர் கூறுவதாக அமைந்துள்ளது. இயற்றியவர் பெயர் முதலிய விவரம் அறியக்கூடவில்லை. 40 பாடல்களையுடைய இப்பிரதி பூர்த்தியா யுள்ளது.

பூர்த்தி.

Beginning:

அத்தா கருணைமுகி லானந்த மால்தேடுஞ்
சித்தா சிவப்பேறு செப்பெனக்கு—முத்தாகேள்
தப்பாமல் முத்தியிலே தாக்காம னின்றநிலை
யப்பா சுகப்பே றது. 1

நூலைமெய் யென்று நுழையாதே மூலத்திற்
காலமெய் யென்று கழியாதே—பாலனே
தற்பரமா மானந்தச் சத்தியத்திற் சுட்டற்று
நிற்பதுவே முத்தி நிலை.

* * * *

End:

தானும்பொய் மந்திரம்பொய் சாத்திரம்பொய் யும்பருடை
வானும்பொய் யிந்திரன்பொய் மாலயன்பொய்—
[மேதனுந்துங்
காதலாங் காட்சிபல வாகியிடுங் கற்பனைக
ளீதெல்லா மெய்ஞ்ஞானிக் கே.

ஞான மணமாலை முற்றும்.

No. 1303. ÑAṈAM-UṆARTTUM-MUṞAIMAI

[PROSE]

ஞான முணர்த்து முறைமை—[உரைநடை]

[623-G]

Size, 7″ × 1¼″. Pages, 30. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a prose work in which the teacher initiates his disciple in the Ñana—Mārga (Paths of wisdom). Other particulars are not available.

Complete.

குறிப்பு: இது, குரு உபதேசம் போன்றது. அச்சிடப் பெற வில்லை. இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியா யுள்ளது. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

ஞானத்துக்குப் பக்குவமான வொருவன் தனக்கு இருவினை யொப்பு மலபரிபாக முண்டான காலத்திலே யெழுந்தருளின பரம சிவமான ஞானாசாரியனைத் தரிசனம்பண்ணிச் சீர்பாதங்களில் வணங்கி நின்று, அடியேனுக்கு ஞானபோதனை யருளிச்செய்ய வேணுமென்று கேட்க, அப்போ ஞானசிரியன் அவனைப் பார்த்து, வாராய் மாணவனே! ஞானபோதனை யறியுமிடத்து பதியென்றும், பசுவென்றும், பாசமென்றும் சொல்லப்பட்ட பொருள் மூன்று. இதில் பதியாவது சிவம், பசுவாவது ஆத்மா, பாசமாவது ஆணவம், மாயை, கர்ம மென்றும் பெயர் பெற் றிருக்கும்.

* * * *

End:

ஞானமானது கையகமாகாவிட்டால் வேறென்றாலு மாத்மாக் களுக்குச் செனன மரணமறுதலும் சிவனைக் கூடுதலும் கிடையா தென்றறிக. இதற்குப் பிரமாணம், "அவிழ விருக்கு மறிவுட னின்றவர்க் கவிழுமிவ் வல்லலென் றுந்தீபற, வன்றி யவிழாதென் றுந்தீபற" என்றும் வருவனவற்றா லுணர்க.

No. 1304. TACA-KĀRIYAM—[TEXT]

தசகாரியம்—[மூலம்]

[883]

Size, 5½″×1⅛″. Pages, 123. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, New.

Note: Taca-Kāriyam are the ten spiritual experiences of the soul in its path towards final deliverance viz. Tattuvarūpam, Tattuvataricaṉam, Tattuvacutti; Aṉmarūpam, Āṉmataricaṉam, Anmacutti; Civarūpam, Civataricaṉam, Civayōkam, Civapōkam. This belongs to the Paṇṭara-Cāttiram series.

Complete.

குறிப்பு: இது பண்டார சாத்திரங்களைச் சார்ந்தது. தசகாரியம் என்பன, தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவபோகம் என்ற 10 ஆன்மாநுபவ நிலைகள். இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. நூல் முற்றுமுள்ளது.

திருச்சிற்றம்பலம்

பூர்த்தி.

Beginning:

தசகாரிய......

உழிதர லியைந்த காமவேழங்கலிற் யாமமாதி
கழிபெருங் கதிரெறிப்பக் கனன்று எ(?)வருந்துவேளை
வழிமது வொழுகுதண்டா மரையடிநீழல் சேர்க்கும்
பொழி...கலுழி நால்வாய்ப் பொருப்பினை விருப்பஞ்செய்வாம்.

நன்றாக குரு வாழ்க குருவே துணை.

சீராரும் பேரண்ட மவுலியாகச்
    சிறந்தசுடரொருமூன்று நயனமாக
வோராருந் திசையெட்டுங் கரங்களாக
    வேழ்தலத்தின் மாசுணங்க டாள்களாகப்

பாரார்ரு முயிர்களுள மரங்கமாகப்
பரமுத்திக் கானதொழி னடனம்பண்ணிக்
காராரு மலமாதி யதிஞானநல்கக்
கண்டுகளி கூடரானைக் கருத்துள்வைப்பாம்.

* * * *

End :

புரையறு வேடமீசன் பொருந்துமா லயங்க ளெல்லா
முரையுணர் விறந்து மேலா மொருவன துருவமென்றே
தரையினிற் றொழுதுபோற்றித் தற்பர வடிவாய் வாழ்வர்
கரையிறந் தகன்ற ஞானிக் கடலமுதழுந்தி னரே.

சிவபோக முற்றும்.

No. 1305. TACA-KĀRIYAM—[TEXT]

தசகாரியம்—[மூலம்]

[1206-A]

Size, $17\frac{1}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 74. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, New.

Note : Same as previous No. 1304.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1304 பிரதி போன்றது. நூல் முற்று முளது. ஆரம்பமும் முடிவும் முன் பிரதி போன்றதே.

பூர்த்தி.

Colophon :

தசகாரியம் முற்றும். தசகாலபாத்திர விலக்கணம் 15, சீஷ லட்சணம் 8, சற்குரு லட்சணம் 13, அசற்குரு லட்சணம் 6, குரு பூசை 24, ஞான தீட்சை 41, ஆக வகை 6-க்கு செய்யுள் 107. இதுவும், தசகாரியம வருமாறு :—தத்துவ ரூபம் 54, தத்துவ தரிசனம 50, தத்துவ சுத்தி 10, ஆன்ம ரூபம் 15, ஆன்ம தரிசனம் 13, ஆன்ம சுத்தி 7, சிவரூபம் 10, சிவதரிசனம் 15, சிவயோகம் 10,

சிவபோகம் 10, ஆக தசகாரியம் 10-க்குச் செய்யுள் 94. ஆக வகை 16-க்கு செய்யுள் 201.

திருச்சிற்றம்பலம்.

ஆனவெள்ளி குருவய ளுகுமே, தானஇந்து புதனுந்தாமோ தரன், றேனுபானு செவ்வாயுஞ் சிவனதாம், வான அன்னிய தேவதை மந்தனே—இது திரிமூர்த்திகள சார்பு. கிரக நிலை அறிகிறது.

திருச்சிற்றம்பலம்.

செங்கமலப் பொற்பாத தேசிகன் திருவடி வாழ்க.

சிவஞான வடிவே துணை.

No. 1306. TACA-KĀRIYAM—[TEXT]

தசகாரியம்—[மூலம்]

[641]

Size, $7\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 150. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, New.

Note : Same as No. 1304.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1304 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1307. TACA-KĀRIYAM—[TEXT]

தச காரியம்—[மூலம்]

[628-E]

Size, $5\frac{3}{4}'' \times 2\frac{1}{8}''$. Pages, 6. Lines, 18 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a different work on Taca-kāriyam by a different author (On the Mss. 'Nālvar Nūlgaḷ' is written). Other particulars are not known.

Complete.

குறிப்பு: இது வேறொருவரால் செய்யப்பட்டது. செய்தவர் இன்னார் என்றும், மற்ற விவரங்களும் அறியக்கூடவில்லை. 'நால்வர் நூல்கள்' என்று சுவடியில் எழுதப்பெற்றுள்ளது.

பூர்த்தி.

Beginning:

எண்ணரி தத்துவ ரூபங்காட்சி மருவியவு
மிதரசுத்திக் கிரட்டிடும்,
பன்னிற மான்மரூபம் தன்னறிவிற் பசுக்காட்சி
சிவரூப மாருந்தக்க புகலரும் பொற்பிற் சதசத்தின்சுத்தி
நண்ணரிய சிவகாட்சி சிவயோகமாகு
நாதனரும் போகந்தீங்குறு மதனின்றாக
விண்ணவர்க டொழுங்கொற்றங் குடியான் மெய்யற்கே
விளம்புசிவப் பிரகாசம் விளங்கவுரைத் தனனே!

* * * *

End:

உயிராதி வாயு வுயிர்த்த லுறும்பாயுச்
செயிர்சீர்சேர் விக்கல் முதலா—முயிராதி
னோர்தும்மல் நவவதனம் நில்லாத சோம்பாதி
யோரிமைத்தல் வீங்க லுறும். 24

முற்றும்.

No. 1308. TACA-KĀRIYA-AṈUPŪTI-VIḶAKKAM—[TEXT]

தசகாரிய அநுபூதி விளக்கம்

[தட்சிணாமூர்த்தி தேசிகர் தசகாரியம்]—[மூலம்]

[594-F]

Size, $12\frac{1}{4}'' \times 1\frac{3}{4}''$. Pages, 9. Lines, 11 on a page. Condition, Injured. Appearance, New.

Note: This Taca-kāriyam work is by Takshiṇa Murti Tēcikar of Tiruvavatuturai Mutt. The Mss. is also called Takshiṇā Murthi Taca-kāriyam.

Complete.

குறிப்பு: *இது பண்டார சாஸ்திரத்தைச் சார்ந்தது. திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த தக்ஷிணாமூர்த்தி தேசிகர் என்பவரால் இயற்றப் பெற்றது. சுவடியில் தக்ஷிணாமூர்த்தி தேசிகர் தசகாரியம் என்ற பெயரும் காண்கிறது.*

பூர்த்தி.

Beginning:

திருந்துவட கயிலைதனிற் பரமசிவ னளித்த
சிவஞான போதமுணர் நந்திமுதற் சிறந்தே
வருங்குரவர் வெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவன்
வழங்கருட்சந் ததியி னமச்சிவாய தேசிகனை
மிருங்குரவ னளித்தசிவப் பிரகாச தேச
னிலங்குமறை வனத்தருகோர் வனக்குகையி லுறைநாட்
பொருந்தியவன் றிருவடிக்கீ ழவனருளே வலிஞற்
போந்தருளா வடுதுறைவாழ் நமச்சிவா யனைப்புகழ்வாம். 1

* * * *

End:

உண்மையாஞ் சிவானுபவ ருண்போக மருந்திடினு
முத்தமற்கே யாகுமவை தானென்போ லுலகிலுள்ளோர்
வண்மையாங் கனவுதனில் வல்லிதனைப் புல்கிடவே
வருவதெல்லா.........வுடற் கொல்லைதனி லானதுபோற்

திண்மையாஞ் சாதகரு முந்திடினுந் துணைமறவார்
செய்வினையாட் டினைமறந் .... தனையடித் தூட்டினுமிக
வெண்மையாங் குணக்கோமா னிலங்கிடுமா வடுதுறைவாழ்
வெனுநமச்சி வாயனெனக் களித்தநெறியிவை தேரே. 13

தெசகாரிய வனுபூதி விளக்க முற்றுப்பெற்றது.

No. 1309. TACA-KĀRIYA-AṈUPŪTI-VIḶAKKAM—[TEXT AND ANNOTATIONS]

[தட்சணாமூர்த்தி அய்யர்] அநுபூதி விளக்கம்

[மூலமும் உரையும்]

[114-B]

Size, 15″ × 1¼″. Pages, 22. Lines, 9 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as previous No. 1308 but with meanings by one Tiru-C-Ciṟṟampala Tēcikar.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1308 பிரதி போன்றது. இதற்குத் திருச்சிற்றம்பல தேசிகர் உரை செய்துள்ளார். இந்தப் பிரதியில் நூலும் உரையும் பூர்த்தியாயுள்ளன.

பூர்த்தி.

Beginning :

திருந்துவட கயிலைதனிற் பரமசிவ னளித்த
சிவஞான போதமுணர் நந்திமுதற் சிறந்தே
வருங்குரவர் வெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவன்
வழங்கருட்சந் ததியின்நமச் சிவாயதே சிகனு
மிருங்குரவன் சித்தசிவப் பிரகாச தேவன்
இலங்குமறை வனத்தருகோர் வனக்குகையி லுறைநாட்
பொருந்தியவன் திருவடிக்கீழ் அவனருளே வலிநுற்
போந்தருளா வடுதுறைவாழ் நமச்சிவா யனைப்புகழ்வாம்.

இதன் பொருள் - திருந்துவட கயிலைதனிற் பரமசிவனளித்த சிவஞான போதமுணர் நந்திமுதற் சிறந்தேவருங் குரவர் - எ-து - சிறப்புப் பொருந்தா நின்ற மகா கயிலாசத்திலே எழுந்தருளி யிருக்கும் பரமசிவ னருளிச் செய்த சிவஞான போதத்தை யுணர்ந்த நந்திகேசுர நாயனர் அவரடியைச் சேர்ந்த சனற்குமார பகவான், அவரடியைச் சேர்ந்த சத்திய ஞான தெரிசினிகள் அவரடியைச் சேர்ந்த பரஞ்சோதி மாமுனிக ளென்னும் பெயருடனே ஞான வொழுக்கஞ் சேர்ந்தே வருகிற குரவர் நால்வருள், வெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவன் வழுங்கருட் சந்ததியின் எ - து. பரஞ் சோதி மாமுனிகளடியைச் சேர்ந்து திருவெண்ணெய் நல்லூரிலே எழுந்தருளியிரா நின்ற, மெய்கண்ட தேவ நாயனரானவர் அவரருள் வழுங்கும் புதல்வராகிய அருணந்தி சிவாசாரியர் அவர் அருள் புதல்வராகிய மறைஞான சம்பந்தர் அவர் புதல்வராகிய உமாபதி சிவாசாரிய ரென்னும் பெயரினையுடைய மெய்கண்ட குரவர் சந்ததி யின்வழியாக வராநின்ற, நமச்சிவாய தேசிகனு மிருங்குரவனளித்து எ - து. அருள் நமச்சிவாய தேசிகனுகிய பெருமை பொருந்திய குரவரானவர் பெற்ற, சிவப்பிரகாச தேசன் எ - து. சிவப்பிரகாசச் சித்தரானவர், இலங்கு மறை வனத்தருகோர் வனக்குகைகயி லுறை நாள் எ - து. வளம் பொருந்திய வேதாரண்யத்திற் கருகாகிய வனத்திலே யொரு குகையின் கண்ணே யெழுந்தருளியிருக்கு நாளில் பொருந்தியவன் றிருவடிக் கீழ் எ - து. அவருடைய திருவடித் தாமரையிலே போய் வழிபட்டு, அவனருளே வலினுலே எ - து. அவர்ஞான உபதேசம் பண்ணித் திருவாவடுதுறையிலே போயிருப்பாயாகவென்று திருவுளம் பற்றியதனுலே, போந்தருளா வடுதுறை வாழ் நமச்சிவாயனைப் புகழ்வாம் எ - து. திருவருள் சிறந்த ஆவடுதுறையின்கண்ணே போயெழுந்தருளி யிருந்து வாழாநின்ற நமச்சிவாய குருவைத் தோத்திரம் பண்ணுகிற் போமென்றவாறு 1

*   *   *   *

End :

உண்மையாஞ் சிவானுபவ மூன்போக மருந்திடினு
முத்தமர்க்கே யாகுமவை தானென்போ லுலகிலுள்ளோர்
வண்மையாங் கனவுதனின் வல்லி தனைப் புல்கிடவே
வருவதெல்லாந் தூலவுடற் கொல்லைதனி லானதுபோற்

றிண்மையாஞ் சாதகரு முருந்திடினுந் துணைமறவார்
செய்வினையாட் டினைமறவா யனையடித்தாட் டினுமிக
வெண்மையாங் குணக்கோமா னிலங்கிடுமா வடுதுறைவாழ்
வென்னுநமச் சிவாயனெமக் களித்தநெறி யிவைதேரே.

*   *   *   *

இலங்கிடுமா வடுதுறைவாழ் வென்று நமச்சிவாய னெனக் களித்த நெறியிவை தேரே - என்பது. வளம் பொருந்திய திருவா வடுதுறைக்கு வாழ்வாகச் சொல்லும் நமச்சிவாய குரு எனக்கனுக் கிரகம் பண்ணின முறைமையிது வென்று தெளிவாயாக என்ற வாறு.

No. 1310. TACA-KĀRIYAM-TIRIPATĀRTA-TACA-KĀRIYAM—[TEXT]

தசகாரியம் திரிபதார்த்த தசகாரியம்—[மூலம்]

[628-L]

Size, $5\frac{3}{4}'' \times 2\frac{1}{8}''$. Pages, 4. Lines, 19 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is a Taca-karya work by Ñanaprakācar.

Complete.

குறிப்பு: இது, பதிபசு பாசமாகிய முப்பொருள்களின் நிலைமையைக் கூறுவது. இயற்றியவர் ஞானப்பிரகாசர்; ஏனைய விவரங்கள் அறியக்கூட வில்லை. நூல் முற்று முளது.

பூர்த்தி.

Beginning:

பதிபசு பாசத் தொகுதெச காரியம்
மதிபெற வுரைப்பன் விரும்பிக் கேண்மின்
பாச சுபாவம் பாசத்தின் குணம்
பாசவி சேடம் பாச ரூபகம்

பாச சொரூபம் பாச சொரூபம்
பாச தெரிசனம் பாச சுத்தி
...இலொரு பதின் வகைவரி யறிமின்
....

* * * *

End :

போக முன்னைப் புகன்ற விலாப
மாக வாகம மறைந்தது மிதுவெனத்
தேசிக சிகாமணி தென்கம லாபுரி
நாசமில் கீர்த்தி ஞானப்பிர காச
னருளிய வட்ட வணையி னடைவே
பெரிது பயனுறப் பேசின னெறியே

திரிபதார்த்த தசகாரியம் முற்றும்.

No. 1311. [TIRUVAṆṆĀMALAI AIYAR] TACA-KĀRIYAM—[TEXT]

[திருவண்ணாமலை ஐயர்] தசகாரியம்—[மூலம்]

[594-G]

Size, $12\frac{1}{4}'' \times 1\frac{3}{4}''$. Pages, 6. Lines, 11 on a page. Condition, Injured. Appearance, New.

Note: This is another Taca-kārya and is by Tiruvaṇṇamalai Aiyar.

Complete.

குறிப்பு: இது ஆன்ம அனுபவ நிலைகளைப்பற்றிக் கூறுவது. திருவண்ணமலை ஐயர் என்பாரால் இயற்றப்பட்டதென்று தெரிகிறது. நூல் முற்று முளது. ஏனைய விவரங்கள் தெரியவில்லை.

பூர்த்தி.

Beginning :

பக்குவந் தன்ம மூலம் பரிபாகம் பாத மொப்புச்
சற்குணக் குரவன் சாற்று சத்திய சத்த மெல்லா
மிக்கிர மத்தி னாலே யிடரிலா தறிந்த சீவ
னக்கணம் பிறவிநீத்தே யளவிலாச் சுகமாரும்மே. 1

அழிபொருளும் பொய்ப்பொருளு மளவில்லை யாதலினாற்
கழிபொருளாய்க் கைவிடுவா யொருகாலுங் கருதாதே
யழிபொருளி லடங்காத வைந்துபெரும் பொருள்களைவே
கழிபொருளாய்க் கருதாம லெப்பொழுதுங் கருதாயே. 2

* * * *

End :

அரனை மறவாம லன்பிருந்தால் அவ்வரனிடத்திலே அயி(ஐ)க்க(க்கி)மாய்ப் போவன்.

102 மும்மலங்களையுங்களை 1. சிவஞானிகளுடனே கூடு. சிவஞானிகளையுஞ் சிவலிங்கத்தையுஞ் சிவனெனவே தேறி வழிபடுக. வழிபடாமையை யொழிக 4. ஆக 102-க்கு 104.

முற்றுப் பெற்றது.

No. 1312. [TACA-KĀRIYAM]
TIRUVAṆṆĀMLAI-AIYAR-AṈUPŪTI-CINTAṈAI—[TEXT AND ANNOTATIONS]

[தசகாரியம்] திருவண்ணாமலை ஐயர் அநுபூதி சிந்தனை

[மூலமும் உரையும்]

[114-C]

Size, 15″ × 1¼″. Pages, 34. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This is another Taca-kāriyam work and is in the form of a commentary on Tiruvaṇṇamalai Tēcikar's work

described in previous number. The work is annoted by Tiru-C-Cirrampala Tēcikar. In the colophon it is stated that the Mss. is an exposition of 3 Taca-käryas.

Complete.

குறிப்பு: இதுவும், ஒரு தச காரிய நூலே யாகும். இதனை இயற்றியவர் சுவாமிநாத தேசிகர்; இதற்கு உரை வகுத்தவர் திருச்சிற்றம்பல தேசிகர். அவ்வுரை, மூவர் தசகாரியங்களின் கருத்துக்கள் இதனில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. இந்தப் பிரதியில் 23 பாடல்கள் பூர்த்தியா யுள்ளன. இறுதியில் வைத்திய சம்பந்தமான ஏடு ஒன்றும் காணப்படுகிறது.

பூர்த்தி.

Beginning :

அளவிலா வண்டமாயை யானகன்ம மாணவத்தோ
டளவிலாச் சீவனுற்ற வபக்குவ மறிந்த சீவ
னளவிலாப் பிறவி நீத்தே யளவிலா வருளைச் சார்ந்தே
யளவிலா வருளைப்பெற்றே யளவிலாச் சுகமாகும்மே.

எ - து. முன்னத்துவிதமான வபக்குவத்தை யறிந்த சீவனுண்மை ஞானப் பயனும் பின்னத்துவித மாகு முறைமையை யுணர்த்தியது.

இதன் பொருள் :—அளவிலா வண்ட மாயையான கன்ம மாணவத் தோடள விலாச் சீவனுற்ற அபக்குவ மறிந்த சீவன் - எ - து; எண்ணிறந்த கோடி சீவனுனது ஆணவ மசித்தோடு கூடி, எண்ணிறந்த கோடி யண்டங்களிலே மாயையினையுங் கர்த்தா வினையுங் கருமத்தினையும் பொருந்தின முன்னத்து விதமாம் அபக்குவத்தை யறிந்த சீவனுனது, அளவிலாப் பிறவி நீத்தே யளவிலா வருளைச் சார்ந்தே யளவிலா வருளைப்பெற்றே யளவிலாச் சுகமாகும்மே. எ - து. எண்பத்து நான்கு நூறுயிரம் யோனியிலுள்ள அளவுபடாத பிறப்பைப் போக்கியே தத்துவப் பட்டு மன வாக்குக் காயங்களினுல் அளவுபடாத சிவஞானத்தோடு கூடியே ஆத்ம சுத்திப்பட்டுப் பாச ஞானம் பசு ஞானங்களால் அளவு படாத வாத்ம லாபத்தைப் பெற்றே யளவு படாத பின்னத்துவிதமாம் பேரானந்தத்தைப் பொசித்து நிரம்பு மென்ற வாறு.

* * * *

End :

தேசிகர் மூவர்செய் தசகாரி யத்தின்
மாசறுஞ் சொற்பொருள் வழுவா வண்ணஞ்
திருச்சிற்றம்பல தேசிக சிகாமணி
யருட்சித் தம்மகிழ்ந் தன்பு கூர்ந்து
தம்மடி யாரடி புனைந்த தலைமை
மன்னிய புகழொடு வருமுணர் வுடைய
நன்னெறி சங்கர நமச்சி வாய
னுன்னருந் தவத்துதித் துயர்நெல் வேலி
வாழ்முத்துக் குமார சுவாமிமு துணர்ந்தோன்
சித்தத்திற் சென்னி யிற்றிரு வடிவைத்தே
எண்ணிய சகாத்த மாயிரத் தறுநூற்றுத்
தொண்ணூற் றஞ்சிற் கொல்லந்தொ ளாயிரத்து
நாற்பத் தொட்டாண்டு நந்தன வருஷம்
நந்தன வருடம் பாற்படு சிங்கம்
பரிவுறு மாச மருத்தியா னுயிர்க
ளாசகன் றிடவே தெரித்துரை செய்தனன்
திருவருள் விளங்க.

வியாக்கியான வரலாறு கூறியது.

தேசிகர் மூவர்செய் தசகாரியத்தின் எ-து. திருவாவடுதுறையே திருப்படை வீடாக எழுந்தருளி யிருந்தருள் வழங்கி வருங் குரவரில் அம்பலவாண தேசிகர், தெட்சணாமூர்த்தி தேசிகர், சுவாமிநாத தேசிகராமிவர்கள் மூவராற் செய்யப்பட்ட தசகாரிய மூன்றினுமுள்ள, மாசறு சொற்பொருள் வழுவா வண்ணம் எ-து. மாசற்ற சொற்களையும் பொருள்களையுங் கால வேறு பாட்டால் அபக்குவராயுள்ளவர்களும் ஞான நூல்களைக் கற்கவுங் கற்பிக்கவும் புகுந்து தத்தமுணர்வினுக் கேற்ப மாசுடைத்தாய் சொற்களையும் பொருள்களையும் புணர்த்து கெடுத்து.........டப் படுத்தி வழங்குவாராகலின் அது செய்யாமை காரணமாக திருச்சிற்றம்பல தேசிக சிகாமணி யருட்சித்த மகிழ்ந்தன்பு கூர்ந்தே தம்மடி யாரடி புனைந்த தலைமை மன்னிய புகழொடு வருமுணர் வுடைய நன்னெறிச் சங்கர நமச்சிவாய னுன்னருந் தவத்துதித் துயர் நெல்வேலி வாழ் முத்துக் குமாரசுவாமி முதுணர்ந்தோன்

சித்தத்திற் சென்னியிற் றிருவடி வைத்தே எ - து. தேசிகர் சிகாமணியாகிய திருச்சிற்றம்பலக் குரவரான காருண்ணியமாகிய சித்தமகிழ்ந் தன்பு மிகுத்தே தமதடியா ரடியைப் புனைந்த தலைமை நிலைபெற்ற புகழொடு கூடி வருகின்ற ஞான நன்னெறியினை யுடைய சங்கர நமச்சிவாயனது கருதுதற் கரிய தவத்திலுலே யுதித்துச் சிறப்பு மிகுந்த திருநெல்வேலியின்கண் வாழ்கின்ற மூதுணர்ந்தவனுன முத்துக் குமாரசுவாமியினது சித்தத்திலு மவன் சென்னியிலு முயிர்க்குயிராய் நின்றுந் திருமேனி கொண்டு வந்துந் தமது பாததாமரைகளை வைத்தே; எண்ணிய சகாத்த மாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற் றஞ்சிற் கொல்லந் தொளா யிரத்து நாற்பத்தெட்டாண்டு நந்தன வருடம் பாற்படு சிங்கம் பரிவுறு மாச மருத்தியாலுயிர்களாசகன்றிடவே தெரித்துரை செய்தனன் றிருவருள் விளங்க எ - து. எண்ணப்பட்ட சகாத்த மாயிரத்தறுநூற்றுத் தொண்ணூற்றஞ்சின் மேற் செல்லா நின்ற கொல்லந் தொளாயிரத்து நாற்பத்தெட்டாமாண்டு நந்தன வருடத்தில் யாவரு மங்களத்தைச் செய்ய விரும்பும் ஆவணி மாசத்தி லுயிர்கள் மாக்குற்றந் தீரவேணு மென்னும் விருப்ப மிகுதியாற் சிவஞானம் விளங்க தெரிவித்துரை செய்தன னென்றவாறு. 23

வியாக்கியின் பாயிரவுரை முற்று.

No. 1313. TACĀṄKAM, TATTUVA-PŌTAM

[TEXT]

தசாங்கம், தத்துவ போதம்—[மூலம்]

[1207-D]

Size, $11\frac{1}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 4. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Tacāṅkam are the ten constituents of a kingdom viz.; Nāmam, Nātu, Ūr, Aṟu, Malai, Ūrti, Paṭai, Muracu, Tār and Koti. This Mss. is an eulogy on Corūpāṉantar, under these heads, by one of his disciples and consists of much Siddhāntic matter.

Complete.

குறிப்பு : இது, தசாங்கம் என்பது பின்வரும் 10 வகை அரசியலுறுப்புக்கள் : நாமம், நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி தசாங்கம் அமையச் சொரூபானந்தர் மேல் அவருடைய மாணுக்கராற் பாடப்பட்டது என்று தெரிகிறது. 10 பாடல்களுள்ளன. சைவ தத்துவக் கருத்துக்கள் நிரம்பியுள்ளன. அசுவனத்

பூர்த்தி.

Beginning :

சாம மணிநிறத்துத் தந்தாய்தனைத் தருவான்
நாம மறிய நயந்துரையாய்—நாமஞ்
சொரூபா னந்தனென்று தூயமறை சொல்லும்
பெருமானுக் கிட்டதெல்லாம் பேர். 1

* * * *

End :

செங்கனிவாய்ப் பைங்கிளியே தேசிகன்று ஞதரஞ்செய்
கொங்கலர்தா யானறியக் கூறிக்கா—ணிங்கெனுட
லாமா லயனுக் ககமாலை மாற்றின்தம்
பாமாலை யென்றே பகர். 2

தசாங்க முற்றும்.

No. 1314. TATTUVA-K-KATTAḶAI—[PROSE]

தத்துவக் கட்டளை—[உரைநடை]

[1020-B]

Size, $7\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 4. Lines, 11 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This Mss. deals with the concepts of Saiva Siddhānta philosophy in an analysed and summarised form. The Mss. is incompletc.

Incomplete.

குறிப்பு: இது. சைவ சித்தாந்த சாஸ்திர விஷயங்களைத் தொகுத்து அறிவதற்குக் கருவியாக உள்ளது. இந்தப் பிரதியில் சில குறிப்புக்களே காணப்படுகின்றன. மற்ற விவரங்கள் அறியக் கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning:

பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம்; ஆக பூதம் 5.

சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம்; ஆக பொறி 5.

சத்தம், பரிசம், ரூபம், ரசம், கெந்தம்; ஆக புலன் 5.

* * * *

End:

பிராணவாயு அங்கென்று முட்டி, சங்கென்று இடை பிங் கலையி லெழுந்து, இரண்டு நாசியிலும் பன்னிரண்டங்குலம் புறப் பட்டு, நாலங்குலங் குரித்து எட்டங்குல முட்புகுதும்.

அபானன் குதத்தையும் குய்யத்தையும் பற்றி மல சலங் கழியும்.

No. 1315. TATTUVA-CĀRAM-KALITTUṞAI-ANTĀTI—[TEXT]

தத்துவசாரம் கலித்துறை அந்தாதி—[மூலம்]

[1207-B]

Size, $11\frac{1}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 36. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: The work is an eulogy on Sorupanantar by one of his disciples, in Kalitturai Antadi metre. Much Siddhāntic philosophy is introduced in this work.

Complete.

குறிப்பு: இது, சைவ நூல் சம்பந்தமான பிறவற்றைச் சார்ந்தது. சொரூபாநந்தர் மேல் அவர் சீடர் ஒருவரால் பாடப்பட்டதெனத் தெரிகின்றது. இப்பிரதியில் மூலம் முற்றுமுள்ளது.

பூர்த்தி.

Beginning :

சொல்லன சொல்லின பொருளன சொல்லு மனமுஞ்செல்ல
வில்லன வுள்ளன யாவையு மாவன வென்னுடைய
கல்லன நெஞ்சங் கரைப்ப வன்போ டுரைப்பவற்கு
நல்லன நற்சொரு பாநந்தர் பாத நளினங்களே. 1

நளினந் தனையொக்க நற்றவஞ் செய்ய நலன்மருவும்
புளினஞ் செறிதடம் புக்கதென் னேதன்னைப்போற......இன்
னளினந் தமக்களிக் குஞ்சொரூ பாநந்த னுண்டபிரான்
களினந்து சேவடி யப்படியே செயக்கண் டிருந்தே. 2

* * * *

End :

வைத்தாய் மலரடி வாங்கிக்கொண் டாயெனை யுன்னைத்தந்த
பித்தா பிறவிப் பிணிமருந்தே பெத்த முத்தியிலாச்
சித்தா சிவப்பிரகாசா வெனசிந் தையுளே செறிந்துஞ்
சுத்தா தொழுவதல் லால்தீ யேனென்று சொல்லுவதே 6

கலித்துறை யந்தாதி முற்றும்.

No. 1316. TATTUVA-TĪPAM-IRATTAI-MAṆI-MĀLAI—[TEXT]

தத்துவ தீபம் இரட்டைமணி மாலை—[மூலம்]

[1207-E]

Size, $11\frac{3}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 7. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work which is in 20 stanzas deals about the Tattuvas of Saiva Siddhānta Sāstras. The author's name is not known.

Complete.

குறிப்பு: *இது, வெண்பாவுங் கட்டளைக் கலித்துறையுமாக அந்தாதித் தொடையால் ஆகிய இருபது பாக்களாலாகியது. இதன்மூலம் தத்துவங்கள் விளக்கப்படுகின்றன. இயற்றியவர் பெயர் முதலியன தெரிந்துகொள்ள வியலவில்லை. நூல் முற்று முள்ளது.*

பூர்த்தி.

Beginning :

கருணை யிருந்தவா காணீர்தங் கண்ணு
ரருணிணைய வஞ்சுவர்த மண்டர்—வெருளாதே
யேத்துவதா நாயேனு மென்னை திருமேனி
சாத்துவதாந் தம்பிரான் றன்.

* * * *

End :

இருத்தே சிகனடி யைப்பிரி யாவெம் பிரானிங்ஙனே
யுருத்தே வருந்திரு மேனியைக் காணுடை யான்புகழே
துருத்தேது மின்றித் துதியவை கொடோ கொண்டதுசெய்
கருத்தே கருது கழல்சூழ வைத்த கருணையையே.

இரட்டை மணிமாலை முற்றும்.

No. 1317. TATTUVA-P-PIRAKĀCAM

[SELECTIONS]

தத்துவப் பிரகாசம்—[*திரட்டு*]

[574-J J]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 18. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a work refuting the theories of other cults and dealing with the doctrines of Saiva Siddhānta philosophy. The author's name is not known.

Complete.

குறிப்பு: இது சைவ சித்தாந்தத்தைச் சார்ந்த நூல். தத்துவங்களைக் குறித்துப் பிற சமயத்தார் கூறும் கொள்கைகளும் அவற்றை மறுத்தலும் முதலியவற்றை விளக்கிக் கூறுவது. இயற்றியவர் பெயர் முதலியவை அறியக் கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

திருந்துபரை வடிவாகி யிச்சா ஞானந்
    திகழ்கரண மாய்க்கிரியை செய்வ தாகிப்
பொருந்துபர திரோதான மானே யாகிப்
    போதுமிது ருக்கமாந் தூலம் போதாம்
வருந்துபர மந்திரமாம் பதம்வன்னஞ் ... .
    வரும்புவன முபாங்கந்தத்து வம்பொறிகள் கலைகள்
தெரிந்தபர கரணங்க ளாகி வையந்
    திருமேனி யாமரன்றன் றிருப்பாத முரைப்பாம். 1

* * * *

End:

கேட்டிடு செவியு மாசா ஞமமே கெடாது காணு
நாட்டமு மாசான் மேனி நாட்டமொன்றி வாக்கிற்
கூட்டிடு முரையு மாசான் றுதிகளே குணத்துண் மெய்யிற்
பூட்டுறு தொழிலு மாசான் வழிசெயப் புகழா மன்றே. 54

No. 1318. TATTUVĀNU-PAVAM-NĀN-MAṆI-MĀLAI—[TEXT]

தத்துவாநுபவம் நான்மணி மாலை—[மூலம்]

[1207-G]

Size, 11″×1⅜″. Pages, 28. Lines, 7 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This seems to be a record of the experiences of an Adept who followed Siddhantic modes and practices

The work is in Akaval. Why it is called Nanmani Mālai is not clear. Other particulars also are not known.

Complete.

குறிப்பு: இது ஒரு தத்துவ நூல். நான்மணி மாலை என்ற பெயர்க்காரணம் விளங்கவில்லை. ஆசிரியப்பாக்களா லாகியது. இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இப் பிரதியில் நூல் முற்று முள்ளது. அச்சானதாகத் தெரியவில்லை.

பூர்த்தி.

Beginning:

பூவை வண்ணனும் பொன்னொளி வண்ணனுந்
தீயுவண் ணனுமெனச் சிறந்த மூவரு
முண்ணிகழ் ஞானக் கண்ணாற் காணும்
வண்ண மில்லா வண்ணல் வண்ணங்
காணப் படான் காண்பவ னாகுங்
கேட்கப் படான் கேட்பவ னாகுஞ்
சொல்லப் படான் சொல்பவ னாகு
முயிர்க்கப் படா னுயிர்ப்பவ னாகு
மியக்கப் படா னியக்குவ னாகும்
புணரப் படான் புணர்ப்பவ னாகுஞ்
செய்யப் படான் செய்பவ னாகு
மையப் படா வறிவா மெய்யன்.

* * * *

End:

மலமிசை யோனுநா மறிய
விரகிலே னரிய
சொருபன தருமை யறிகில னாசையாற்
கொணரு கிலனின்ற யவனை யெனை
எதிர்கொடு செல்கில னொருதாயு மாயக்
கொடுகி.........ரகுலைய வலையிரு
கொடிய விவளெதிர் காணவே புணரும்
வகை யருளுருவு கொளுமிறை புகுது
கிலனென வோதியே புரளும் விழுமெழுமருவி
யிருவிழி பொழிய விவளொரு பூவையே. 43

நான்மணிமாலை முற்றும்.

No. 1319. TATTUVA-VIḶAKKAM-VEṆPĀ-ANTĀTI—[TEXT]

தத்துவ விளக்கம்—வெண்பா வந்தாதி—[மூலம்]

[1207-A]

Size, $11\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Page, 28. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a work on Sorūpāṉantar by his disciple Tattuvarōyar. This contains Saiva Siddhantic knowledge.

Complete.

குறிப்பு: இது, சொரூபானந்தர் என்னும் ஆசிரியர்மீது தத்துவராயர் பாடியது. இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாயுள்ளது.

பூர்த்தி.

Beginning:

போதலே யத்தே தானும் புள்ளார் கொடியோனும்
ஏதாதி யேதந்த மென்றறியார்—தாதா
சொரூபானந் தாகடையேன் றுண்டுகந்து செய்ய
விருபாதந் தந்தவா றென். 1

*   *   *   *

End:

ஆமே பிரமனுக்கு மாயனுக்கு நாயனூர்
தாமே புகுந்தென் றலமிசையே—யேமமுற
வேற்றுதற்கு நோற்றேற் கொழிய வெளிவந்து
போற்றுதற்குச் செம்பொனடிப் போது. 100

No. 1320. TATVA-RATNĀKARAM—[TEXT]

தத்வ ரத்னுகரம்—[மூலம்]

[46]

Size, $12\frac{5}{8}'' \times 1\frac{1}{2}''$. Pages, 160. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a very valuable Mss. containing selections from various standard works on Siddhanta under suitable heads. It contains much original matter also.

Complete.

குறிப்பு: இது, சைவசித்தாந்தைச் சார்ந்த பல நூல்களி லிருந்து மேற்கோள்களைக் காட்டிக்கூறும் ஒரு சாத்திர நூல். பதி பசு, பாச விலக்கணங்களைக் குறித்துக் கூறுவது. இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் தெரியவில்லை. இப் பிரதி முற்று முள்ளது.

பூர்த்தி.

Beginning:

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கு
மாதலால் வானோரு மானைமா முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

அருவுரு வுபயமாகி யவையல்லாவாகி வேறும்
பொருளென லாகிவேதா கமாந்தமெய்ப் போதமாகி
யிருளறு பரமானந்தத் திலகிய சிவப்பிரகாசத்
தொருதனி யுறவைமாயப் பிறப்பறவுணர்த்தல் செய்வாம். 1

கடவுள் வாழ்த்து.

ஐம்பொறி புலன்க ளோந்தோ டைக்கரணங்கள் நாலும்
வெம்பிடச் சகலத்திட்டு விரகமே விளைக்கு மாயைக்
கும்பரு மஞ்சவெஞ்சா வுடலுறு மவற்றை யொட்டி
நம்பர நல்குமூல நாதனற் றுள்கள் போற்றி. 2

அருளிறை வணக்கம்.

சந்தான பரம்பரை

அறுதியாம் பராபரம்பின் னதிற்பரம சிசானன்
றறுதியா மகேச னக்கன் மால்சதுமுக னிந்திராதி
யறுதியா லுணர்ந்தவந்த வடைவவ ருணர்ந்த வாற்றுன்
முறுதியா லுணர்ந்தவாக மத்தின்முறைமை முணர்ந்தோ
[னந்தி.

* * * *

End:

ஒழிவ்வே தாந்தந் தானு னுற்றசித் தாந்தந்தன்னு
லழிவிலாச் சித்தமுத்தி யானது கூட லாலே
விழியிலா விந்த நன்னூல் சுத்தசை வத்திலேய்ந்த
வழியினர் சித்திமுத்தி மறைமுறை வகுத்த தொன்றே. 1043

தத்துவ ரத்னகரம் எழுதி முடிந்தது.

குரு பாதம்.

No. 1321. TIRU-ÑĀNA-CĀKARA-VEṆPĀ

திருஞானசாகர வெண்பா

[820-F]

Size, $5\frac{5}{8}'' \times 1\frac{1}{8}''$. Pages, 34. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, New.

Note: This deals with divine wisdom. This is in the form of teaching.

Complete.

குறிப்பு: இது, ஞானத்தைப்பற்றிக் கூறும் வெண்பா. பரஞ்சோதி முனிவர் என்பார் மாணக்கர் ஒருவர்க்கு உரைத்ததாகக் கூறுவது. இதனை இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இந்தப் பிரதி பூர்த்தியா யுள்ளது. அச்சானதாகத் தெரியவில்லை.

பூர்த்தி.

Beginning:

திருஞான சாகரமாஞ் சித்தாசத் திப்பசு
தருஞான சித்தர்நூல் சாத்திப்—பெருஞானச்
சொற்பலவுங் கற்போ னதிக்குந் துதிக்கையாய்
நற்பதுமப் பொற்பதிரு மதற்கு. 1

ஆதியா யந்தமா யப்பாலைக் கப்பாலாஞ்
சோதியாய் ஞானச் சுடராகிக்—கோதிலருட்
பண்பிலெனை யாண்ட பரஞ்சோதி மாமுனிபோற்
றண்பதுமத் தாளே சரண். 2

பெத்தநிலை யொன்றும் பிறந்திறந்து சொல்லாமல்
முத்தநிலை கூடு முறைமையான்—மெய்த்தவர்கள்
கண்டநெறி சொல்லக் கவலையறக் கேண்மலங்கள்
விண்டகலு மாறு விரைந்து.

* * * *

End :

உள்ளும் புறம்பு மொருபொருளாய் நின்றவர்கள்
மெள்ள வ ..னையவுமே மெய்ஞ்ஞானக்—கள்ளருந்தித்
தூங்க மின்ப சுகமே வடிவாகிக்
கங்குல்பக லன்றறியார் காண். 100

பந்த மறுத்தாண்ட பரஞ்சோதி மாமுனிவன்
றந்தபர மானந்த சாகரத்தி—லந்தமற
சந்ததமு மின்ப சுகந்தா யிருந்தனை
யெந்தநெறி சொல்வே னியான். 101

ஏகநாத சுவாமி துணை.

Colophon :

கர௵ தைமீ 29உ. விநாயகம் எழுதினது. முகிந்தது.

முற்றும்.

No. 1322. TIRU-ÑĀṈA-CĀKARA-VEṆPĀ

திருஞானசாகர வெண்பா

[628-F (10)]

Size, $5\frac{3}{4}'' \times 2\frac{1}{8}''$. Pages, 9. Lines, 20 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 1321.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1321 பிரதி போன்றது. ஆயினும் முதற்கண் 2 ஏடுகள் இல்லை; 16-ஆவது பாடலிலிருந்து தொடங்கி, நூல் முற்று முள்ளது.

பூர்த்தி.

No. 1323. TIRU-MEIÑÑAṈA-P-PAYAN-URAI

[TEXT AND ANNOTATIONS]

திருமெய்ஞ்ஞானப்பயன் உரை—[மூலமும் உரையும்]

[624-B]

Size, 9¼″ × 2¼″. Pages, 20. Lines, 20 on a page. Condition, Injured. Appearance, Very old.

Note: This is a work on Saiva Siddhānta philosophy in verses and their annotations. Other particulars are not known.

Complete.

குறிப்பு: இது, சைவசித்தாந்தப் பொருளை விளக்குவது. அச்சிடப்பெற்ற விவரம் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

தற்போ தகத்தைத் தவிர்போ தகக்குருளை
தற்போ தகத்தைத் தரும்.

தற்போதகத்தைத் தவிர் என்பது, ஆத்ம போதத்தால் வந்தகத்தை யொழி; போதக் குருளை என்பது, ஞானவானைக் கன்று; தற்போதகத்தைத் தரும் என்பது, தனக்குப் போதமாக விருக்கிற சத்திய ஞானத்தைத் தரும் என்றவாறு.

* * * *

End:

ஆளான வன்பினிறை யானந்த பூரணத்தில்
மீளார் புகுதார் விதி.

ஆளான அன்பினிரை யானந்த பூரணத்தில் என்பது, அடிமை நிகழ்ந்த வழியில் குறைவற வாழப்பட்ட பேரின்ப நிறைவி னின்றும்; மீளார் புகுதார் விதி என்பது, அக்கினியும் உஷ்ணமும் பிரிக்கக்கூடாத தன்மைபோல போக்குவரவற்ற சத்தியவானந்த வனுபோகமா யிருப்பா னென்றவாறு.

No. 1324. TIRU-V-ATI-P-PATI-VIḶAKKAM

[TEXT]

திருவடிப்பதி விளக்கம்—[மூலம்]

[1250-C]

Size, 10″ × 1⅛″. Pages, 28. Lines, 7 on a page. Condition, Very injured. Appearance, Very old.

Note: This is a work on the attainment of salvation detailing the ways and results according to Siddhanta Sastras.

Complete.

குறிப்பு: இது சைவசம்பந்தமான பிற நூல்களைச் சார்ந்தது. வீடுபேறுபெற்ற ஆன்மா அமைந்துள்ள அனுபவத்தை ஆசிரியர் விளக்கிக்கூறுவதாக அமைந்துள்ளது. ஈண்டு 'திருவடி' என்பது வீடுபேறாகும். இயற்றியவர் பெயர் முதலிய விவரம் அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்றுமுள்ளது. 51 பாடல்களுள்ளன.

பூர்த்தி.

Beginning:

திருவடிப் பதிவிளக்கந் தெளிவுளக் கண்ணனொருசா
ருருவுளக் கண்ணிலேதா னொளித்திருந் துரைப்பதற்கு
உருவரு உமையாளோடே ஒப்பறக் கலந்தோனீன்ற
கருமதக் களிறேஞானக் கற்பகங்காப்ப தாமே.

கணபதியே நம:

குருபாதந் துணை.

திருவடி தானு மில்லாத் தெளிவுளக் கண்ணிலேதோ
திருவடி என்று சொல்லுஞ் செயலது தானங்கேதோ
திருவடி யென்பா ராரோ செகத்துளோ ரென்னலாகுந்
திருவடி தானுமில்லை தெளிவுள கண்ணு ளோர்க்கே. 1

* * * *

End :

எந்தாகந் திரவுரு வெடுத்தே வந்து
எண்ணுளக்கண் ணொளிவெளியா யிசைந்தாய் போற்றி
சந்தான சமயங்க ளெல்லாந் தானுய்ச்
சமையமிறந் தென்னுளக்கண் தரித்தாய் போற்றி
விந்தாகி நாதமாய்க் கலைய தாகி
விந்துநாதமுங் கடந்த வெளியே போற்றி
எந்தாகந் தீர்ந்துவுரு வருவு மில்லா
தென்னுளக்கண் ணொளிவெளியே போற்றி போற்றி. 51

Colophon :

குருபாதந் துணை. திருவடிப்பதி விளக்க மெழுதி வளர்ந்தது. முற்றும். குரு முன்னிற்க.

No. 1325. TIRU-VAḶḶUVAR-ÑAṈA-AKAVAL

[TEXT]

திருவள்ளுவர் ஞான அகவல்—[மூலம்]

[1253-A]

Size, $7\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 12. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : The first 7 leaves of this Mss. are missing. The name of the book or of its author is not known. It deals about Siddhānta philosophy. The name above given is from a note written on the Mss.

Incomplete.

குறிப்பு : இந் நூலில் பின் ஒருவரால் திருவள்ளுவர் ஞான அகவல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அகவற்பாக்கள் இல்லை. விருத்தங்களாக வுள்ளன. ஆராய்தற்குரியது. முதலில் ஏடுகள் இல்லாமல், ஏழாவது பாடலில் இறுதி அடியிலிருந்து 29 பாடல்கள் பூர்த்தியாக வுள்ளன. இந் நூலின் பெயர் இன்னதென்று யூகித்தறியக் கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning :

....வே சத்தியாகு
முன்னறிய குடிலையது வாகித் தானு
நிகரில்லா நாதவிந்து பகலி ராவாய்
நெறியுடை வஞ்செழுத்து பூத மாமே. 7

தற்பரமா மகாரமே அடியா நிற்குந்
தாணுவா முகார நடுவா நிற்கு
மொப்பரிய ஓங்கார முடியா நிற்கு
முண்மையா மஞ்செழுத்து முகமஞ் சாகு
முற்பனமாங் கருவிதொண் ணூற் ருறு காணு
முடலாகி யமர்ந்திருக்கு முலக மெல்லாம்
விற்பனமா யிந்தநிலை கண்ட பேர்க்கு
வீருன தற்பரத்தை மேவ லாமே. 8

* * * *

End :

செகவாழ்வு காமகலை மயக்க நூல்கள்
சிற்றின்ப மாய்கையிலே செல்ல வேண்டா
மகமான மனமாய்கை யனைத்து நீக்கி
யாசாரப் பிழையெல்லா மகலத் தள்ளிச்
செகச்சோதி பாதமதை பற்றி நின்ருற்
செப்பரிய நாதாந்தஞ் சேர லாமே. 29

Colophon :

திருவாரூர் மடம்.

No. 1326. TIRU-V-ĀLAVOI-K-KATTAḶAI

[PROSE]

திருவாலவாய்க் கட்டளை—[உரைநடை]

[613-A]

Size, $8\frac{3}{4}'' \times 1\frac{5}{8}''$. Pages, 25. Lines, 13 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a Kattalai work in prose—analysing and summarising the categories of Saiva Siddhānta philosophy.

Complete.

குறிப்பு : இது, சைவசாத்திரங்களில் ஒன்றாகும். பதி, பசு, பாச விலக்கணங்களைக் கூறுவது; உரைநடையி லுள்ளது. இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இப் பிரதி முற்று முள்ளது. சுவடிக்கு முன் விநாயகர் காப்புச் செய்யுளொன்று காணப்பகிறது.

பூர்த்தி.

Beginning :

திருச்சிற்றம்பலம்

கைக்குலவு ஞானக் களிறே முக்கடத்து
மெய்க்குலவுஞ் சித்தி விநாயகா—பொய்க்குலவா
மட்டளவி லாதசிவம் வாய்த்ததிரு வாலவாய்க்
கட்டளைக்குன் பாதமே காப்பு.

சிவஞானகுரு தேசிகன் திருவடிகளே சரணம்.

பதி, பசு, பாச மூன்றுமநாதி ; நித்தியம். இவைகளிற் பதி யாவது ஒன்றாய்ப் பரிபூரணமா யறிவுக்கறிவாய் நின்மலமா யுயிருக் குயிராய்க் குறியுங் குணமு மல்லாததாய் அருவுருவுமல்லாததா யருவுருவமாய்க் கண்டிதமா யானந்தமயமா யிருக்கிற பரமசிவமும் பராசத்தி. ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியா சத்தி எனப்பட்ட பஞ்ச சத்தியாகியவருள்ளும் பின்னமில்லாமற் சூரியனும் கிரணமும்போல ஒன்றாயிருக்கும். இப்படி யிருக்கிற பரமசிவ ஞன்மாக்களை ரட்சிக்கும் பொருட்டாகப் பஞ்சகிருத்தியங் களைப் பண்ணவேண்டி, அருவமாகிய சிவஞ், சத்தி, நாதம், விந்து ஆக நால்வரும் மருவுருவமாகிய சதாசிவ முருவமாகிய மகேச ருத்திரா உருத்திரரிருவரு மிவர்களதிகாரத்தைப்பற்றி நடக்கிற விட்டுணு பிரமா யிருவருமாக வொன்பது மூர்த்தியுமாய், பாதாளத் திரையங்களைக்கொண்டு சிருட்டித்துஞ் சங்கரித்துந் திரோபவித்து மனுக்கிரகித்தும் இப்படிப் பஞ்சகிருத்தியங்களைச் செய்யும். எப் படிச் செய்யுமென்னிற் றன்மை முன்னிலை படர்க்கையாக நின்று செய்யும்.................

* * * *

End :

...............அதுவுங் கூடுதற் கரிதாகில் ஞான நூலோதலாதி சிந்தித்து அந்தரியாகம் பண்ணவு மிப்படிச்செய்ய வுண்மை வந்து கூடு மிந்தப்படி நேயத்தழுந்தல் முதலாக எந்த நிலையிலே நின்றுலு மாசாரியனையுந் திருக்கோயிலையும் வேடத்தையு மிக வழிபட வென்றது.

திருவாலவாய்க் கட்டளை முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

No. 1327. TUKAḶARU-PŌTAM—[TEXT]

துகளறு போதம்—[மூலம்]

[820]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 24. Lines, 8 on a page. Condition, Good. Appearance, New.

Note: This is a subsidiary work on Saiva Siddhānta philosophy consisting of 101 veṇpās and the author is one Ciṟṟampala Nāṭikal.

Complete.

குறிப்பு : இது, மெய்கண்ட தேவர் சந்தான உபதேச பரம் பரையில் வந்த சிற்றம்பலநாடிகள் அருளிச்செய்த ஞான நூல். காப்புச் செய்யுளுடன் 101 வெண்பாக்களை யுடையது. இந்தப் பிரதி முற்று முள்ளதெனினும் முதற் செய்யுளுள் சில வரிகளும, இறுதிச் செய்யுள்களும் சரியாகப் பிரதி செய்யப்பெறவில்லை.

பூர்த்தி.

Beginning :

பதிபசு பாசந் தெரித்தந்த பாச
விதிவழியை வென்றதனி வேறுங்—கதிவழங்கு
மெய்கண்டான் சந்தான மேவிச் சிவானந்தங்
கைகண்டார் காணுர் கரு.

உற்ற சரியை யொழியாத நற்கிரியை
குற்றமிலா யோகக் குறிநெறியு—முத்திப்
பிறந்தார்க டாமறியப் பேசுகே னின்றிப்
பிறந்தா ரறியாத பேறு. 2

* * * *

End :

கொன்றையந்தார் வேணியற்குக் கோயில் பலசமைத்துப்
பொன்றியவை முற்றும் புது(க்கு)வித்து—நின்றூர்
அவலோகந் தன்னில் அடையார் அடைவர்
சிவலோகந் தன்னிற் சிறந்து. 100

101-ஆம் செய்யுள் பிரதி செய்யப் பெறவில்லை.

No. 1328. TUKAḶAṞU-PŌTAM—[TEXT]

துகளறு போதம்—[மூலம்]

[574-N]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 16. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : Same as previous No. 1327 but contains the text without the invocatory verse.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1327 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் காப்புச் செய்யுளின்றி 100 வெண்பாக்களுள்ளன.

பூர்த்தி.

No. 1329. TUKAḶAṞU-PŌTAM—[TEXT]

துகளறு போதம்—[மூலம்]

[628-O]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Pages, 16. Lines, 20 on a page. Condition, Slightly injured. Appearance, Very old.

Note; Same as No. 1327 but contains one additional verse at the end.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1327 பிரதி போன்றது. இதனில் பலசுருதியும் உள்ளன.*

பூர்த்தி.

No. 1330. TUKALARU-PŌTA-VITAYA-K-KURIPPU—[TEXT]

துகளறுபோத விடயக் குறிப்பு—[மூலம்]

[574-P]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 2. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This Mss. gives the subject headings of verses in the work described in No. 1327.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1327 பிரதியின் பாடல்களுக்குள்ள விஷயக்குறிப்புகள் இந்தப் பிரதியில் காணப்படுகின்றன.*

அபூர்த்தி.

Beginning:

பூதப்பழிப்பு, பொறியற வுணர்தல், அந்தக்கரண சுத்தி, கலாஞானா நிராகரணம், சுத்த தத்துவ தூடணம், தத்துவாதீதம்.

*　*　*　*

End:

சுகப்பேறு, பரமானந்த தரிசனம், பரமானந்த யோகம், பரமானந்தி யோகம், பரமானந்தமே வீடு, பரமானந்த கவசம்.

ஆக 30.

வெண்பா

சாக்கிரம் பத்தொன் பதுகனவு தாறென்று
தூக்கு சுழினையொன்று துரியமெட்டு—நீக்கித்
துரியாதீ தமொன்று சுத்தவத்தை முப்பான்
சரியித் துகளறுபோ தம்.

No. 1331. TUṞAICAI-K-KURUPARAMPARAI

[TEXT]

துறைசைக் குருபரம்பரை—[மூலம்]

[193]

Size, 18″×1¼″. Page, 108. Lines, 4 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is a work on the lineology of the Matatipatis of Tiruvāvatuturai's Mutt. The author's name etc. are not known. The work is incomplete.

Incomplete.

குறிப்பு: இது, சைவக் குருமார் பரம்பரையைக் கூறுகின்றது. 4-ஆவது பரம்பரை வரையுமுள்ளது. இப்பிரதி பூர்த்தியாயில்லை.

அபூர்த்தி.

Beginning:

திருச்சிற்றம்பலம்

சீர்பூத்த தாய் முலைப்பால் பகுத்துண்ணுங் கான்மூன்று
சேயா யுள்ளா [றுப்பாற்
ஞர்பூத்த மோதத்தல் வரு டுதல்கவர்தல் செய்தருஞ்சீர்
நா... . பி னென்ன
வேர்பூத்த வோருறுப்பாற் றனையுஞ் செய்தருந்தி
யான்முன் னென்றே
பார்பூத்த வருள்கொழிக்கும் யானைமுகப் பெருமானைப்
பரவி வாழ்வாம்.

* * * *

வேதமது முதலென்றும் பிரமனே முதலென்றும்
வேலை மேற்றுஞ்
சோதமது முதலென்றும் தம்மையே முதலென்று
முரைப்பார் தத்தம்
போதமது தடுமாற வவ்வவர்தஞ் சென்னிமிசை
புண்டரீக
பாதமது மலர்சூட்டி யாண்டருளுங் குரவர்பொற்றாள்
பணிந்து வாழ்வாம்.

* * * *

End :

பன்னுசிவ சமயநெறி வளர வேண்டிப்
பரஞ்சோதி யடிகளந்தப் பதியின் மேவி
மன்னுபுகழ்ச் சுவேதவனப் பெருமா னிங்கே
வருகவென விளம்புதலு மவுன நீங்கித்
தன்னிகரி லவனதருள் ....சைவ
சந்தான நெறிதழைக்கத் தமிழ்நூல் செய்தான்
அன்னையிலன் புடையவன்மெய் கண்டதேவ
னடியவருக் கடியவர்தாள் .... வைப்பாம்.

* * * *

...பதியே நம. சரசுபதியே நம.

* * * *

Colophon :

மாசிமீ 12. 45 ஆவது ஏடு முதல் 52 ஆவது ஏடுவரை செய்யுள் 32.

13 ஏடு சேர்க்கை. 14 ஷை ஏடு.

No. 1332. TĒVI-KĀ-LŌTTIRAM—[TEXT]

தேவிகாலோத்திரம்—[மூலம்]

[628-M]

Size, $5\frac{3}{4}'' \times 2''$. Pages, 10. Lines, 22 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This Tamil work in 69 stanzas is said to be a translation of a Sanskrit work which is an essence of the Saiva Āgamas. Other particulars are not known. The work is in the form of a dialogue between Dēvi and Siva.

Complete.

குறிப்பு: *இது, சிவாகமம் இருபத்தெட்டின் சாரமாயுள்ள ஞானசாரப் போதகப் படல 85-ஆம் சூத்திரத்தைத் தமிழில் 69 செய்யுட்களாக 'தேவிகாலோத்திரம்' என்ற பெயருடன் மொழி பெயர்த்ததாகும். இவ்வரிய நூலை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இந்தப் பிரதியில் முற்றும் இருக்கிறது.*

பூர்த்தி.

Beginning:

வானவர் தலைவ விந்த மன்னுயிர் முத்தி யெய்த
வானவர் சார ஞான மருளினா லருளென் றேத்தி
மானம ரயில்வே லொண்கண் மணமலி குமுதச் செவ்வாய்
தேனமர் குழலா டேவன் றிருந்தடி பணிந்து சொன்னாள். 1

*　　*　　*　　*

End:

முன்னை ஞானமுட னாசார முடிவெல்லா
மென்னாலே யிக்கால ஞானத்தை யியம்பினவால்
மின்னாரு நுண்ணிடையா யினியுனக்கு மீண்டதனைச்
சொன்னாலென் சொலத்தகுவ தனைத்தினையுஞ் சொன்னோமே.

No. 1333. TĒVI-KĀ-LŌTTIRAM—[TEXT]

தேவிகாலோத்திரம்—[மூலம்]

[963]

Size, $11\frac{1}{2}'' \times 1\frac{3}{8}''$. Pages, 8. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as previous No. 1332 but incomplete.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1332 பிரதி போன்றது. முதலில் சில ஏடுகளில்லை 33-ஆம் பாடலிருந்து தொடங்கி 46-ஆம் பாடலோடு முடிகின்றது.

அபூர்த்தி.

No. 1334. NANTI-VIḶAKKAM—[TEXT]

நந்தி விளக்கம்—[மூலம்]

[800-A]

Size, $10\frac{3}{8}'' \times 1\frac{1}{8}''$. Pages, 4. Lines, 6 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This work is an attempt to compose verses in the form of Tirumantiram. The Mss. is only in 4 pages.

Incomplete.

குறிப்பு: இது, சைவ சாஸ்திரத்தைச் சார்ந்தது. திருமந்திரத்தின் நடையைப் பின்பற்றியது. இதன் ஆசிரியர் முதலிய குறிப்புக்கள் அறியக்கூடவில்லை. இப்பிரதி நூல் பூர்த்தியாகவில்லை.

அபூர்த்தி.

Beginning:

சிகார வகார யகாரமுடன்
வகார யகார சிகார நடுவாய்
நகார மகார மிரண்டு மாவே
சிகார வகார சிவன ...ஞமே. 1

* * * *

வாசிவா வென்று வாசியை வைத்து
வாசியோ சொன்ன வகையறி வாரில்லை
வாசியோ சொன்ன வகையறி வாளற்கு
வாசியென் றீசன் வந்துநின் றானே.

* * * *

End :

எறிந்தோரா மிக்கா யத்தை அறிவுதனைக் கண்டு
அறிந்தே னென்னு ளென்னுள்ளே
ஆடுந் திருக்கூத்து ஆறித் தானறிந்த வறிவாலே
செறிந்தே யிருந்த சிவமென்ன லாமே. 1

அறிவு சிவமாய ஆடுந் திருக்கூத்து
அறிவு..................................
....

No. 1335. PAÑCA-PŪTATTIL-TACAKĀRI-Y-ATTIN-VAKAI—[PROSE]

பஞ்சபூதத்தில் தசகாரியத்தின் வகை—[உரைநடை]

[624-E]

Size, $9\frac{1}{4}'' \times 2\frac{1}{4}''$. Pages, 32. Lines, 18 on a page. Condition, Injured. Appearance, Very old.

Note: This is a treatise in prose on the inter relationship of Dacakariyas and Pañca pūthas (5 elements).

Complete.

குறிப்பு : இது, சித்தாந்த சாஸ்திர சம்பந்தமானது. இந்தப் பிரதி பூர்த்தியாயுள்ளது. மற்றைய விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

பூதங்களாவன ; பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆக 5. இதிற் பிருதிவியாவது காரண தத்துவமென்றும். காரியத் தத்துவமென்றும் 2. இதிற் காரணம் 1. கெந்தத்தை யுடைத்தா யழிந்துபோம். காரியம் 3. அஃதாவது புறம்பிற் பிருதுவி நூறுகோடி யோசனை விஸ்திரணமாய்க் கிடப்பது 1. உடம்பிற் பிருதிவி. மயிர், எலும்பு, தோல், நரம்பு தசை, ஆக அஞ்சாக நிற்பது 1, சீவனத்திற் 'பிருதிவி ஆக்கி

ராணம். கெந்தத்தைக் கிருகிக்கைக்கு இடமாய் நிற்பது 1. ஆக 3...............

* * * *

End :

..................சருவ வ்யாதியும் இவனை விட்டன்னியமாக ஆதித்தன் சன்னிதியில் விளக்குப் போல விளக்கினுடைய பிறமைமே(?) வீடற ஆதித்த ஒளியிலே யடங்கி நின்றாற்போலப் பெறுதி யெல்லாஞ் சிவமே, பெருமை யெல்லாந் தானுமாகச் சிவானுபவத்துடனே இரண்டறக் கலந்து அக்கினிக்கு வெம்மை யும் சலத்துக்குச் சயித்தியம் போலவுங் கண்ணு மாதித்தன் போலவும் கேவலப்பட்ட ஆ(த்)மாப் போலவும் பரசிவத்துடனே அனுபவம் பிறக்க அழுந்துமதே சிவபோகம் இப்படித் தெசகாரியந் தெரிசிப்பான். முத்துக் குமார தேசிகர் திருவடி யென் சிரசு நீங்காமல் வாழ்க.

No. 1336. PAÑCĀKKARA-CINTAṈAI]—[PROSE]

பஞ்சாக்கர சிந்தனை—[உரைநடை]

[624-A]

Size, $9\frac{1}{4}'' \times 2\frac{1}{4}''$. Page, 1. Lines, 19 on a page. Condition, Iujured. Appearance, Old.

Note : This is an exposition in prose of the sacred Saiva Mantra Pañcakkaram in one page.

Complete.

குறிப்பு : இது, பஞ்சாட்சரத்தின் பாகுபாட்டையும், அதன் மூலம் உயிர்கள் பக்குவ நிலை பெறும் வழியையும் விளக்குவது. அச்சிடப்பெற்ற விவரம் அறியக்கூட வில்லை. இந்தப் பிரதியில் நூல் முற்று முள்ளது.

பூர்த்தி.

Beginning :

பஞ்சாட்சர சிந்தனையென்று ஒரு சிந்தனை. பஞ்சாட்சரமாவ தென்ன? சிவாயநம வென்றிருப்பது. இதற்குப் பொருள் :

சிகாரம் - சிவம். வகாரம் - அருள். யகாரம் - ஆத்மா. நகாரம் - திரோதம், மகாரம் - மலம்.

* * * *

End :

மகார மாகிய மலம், சிகாரமாகிய சிவத்தி லொடுங்கிப்போம். நகாரமாகிய திரோதாயி, வகாரமாகிய அருளுடனே அடங்கிப் போம். யகாரமாகிய ஆத்மாவும் வகாரமாகிய அருளும் ஒன்ருய்ப் போம். என்னுச்சு ? வாசியாச்சு இதற்குத் திருட்டாந்தம் எப்படி யென்னில்; சூரிய கிரணம் - கண் - விளக்கு - இருள். இராக் காலத்தில் கண் இருளுடனே விளக்கினுடைய ஒளியினுலே பதார்த் தங்களைத் திரிவியாகக் கண்டு கொண்டிருக்கும். விடிந்தபோது வெளியிலே இருள் ழுழுந்திபோல்(?) விளக்குச் சத்தி கெட்டுப் போம். கண்ணு மொளியு மொன்ருய்ப் போம். சூரியனைப் போலே கர்த்தா. கிரணத்தைப் போலே அருள். கண்ணைப்போலே ஆத்மா. விளக்கைப் போலே திரோதாயி. இருளைப் போல மலம் இராக்காலத்தைப் போலே அபக்குவ கால மென்றறிக.

No. 1337. PAÑCĀKKARAM—[TEXT]

பஞ்சாக்கரம்—[மூலம்]

[574-M M]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Page, 2. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This is a collection of stanzas on the merits of the Mantra, Pañcikkaran and contains only 7 verses most of them taken from other works.

Incomplete.

குறிப்பு : இது, ஐந்தெழுத்தின் பெருமையைக் கூறுவது. அதன் மூலம் நாயன் மார்களின் சிறப்பும் விளக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதியில் ஏழுசெய்யுட்களே யுள்ளன. இவை பெரிய புராணம் முதலியவற்றி லுள்ளவை.

அபூர்த்தி.

Beginning:

முத்திதரு மஞ்செழுத்தை மூன்றெழுத்தாத் தான்காணில்
வைத்த நகாரம் வகரத்தா—மொத்துவரு
மவ்வதுவே சியதனி மன்னியிடு மாணவகா
பவ்வமற முத்தியிலே பார். 1

* * * *

End:

ஆவதிது கேண்மின் மறையோரென் னடியானிந்
நாவனக ரூரனிது நான்மொழிவ தென்றான்
தேவரையு மாலயன் முதற்றிருவின் மிக்கோரி
யாவரையும் வேறடிமை யாயுடைய வெம்மான். 7

No. 1338. PATI-PACU-PĀCA-P-PAṈUVAL

[TEXT AND COMMENTARY]

பதிபசு பாசப்பனுவல்—[காண்டிகையுரை]

[105]

Size, $14\frac{3}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 236. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This a subsidiary work on Saiva Siddhānta philosophy and it's author is Maṟai Ñana Campantar. The Mss. contains its annotations also.

Complete.

குறிப்பு: இது, சைவ சித்தாந்தத்தைச் சார்ந்த பதி பசு பாசம் என்னும் முப்பொருளைப்பற்றி விவரிப்பது. இயற்றியவர் மறைஞான சம்பந்ததேவ நாயனார். உரையுடன் கூடியது. உரையாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. இப்பிரதியில் நூல் முற்று முள்ளது.

பூர்த்தி.

Beginning :

ஹரி ஓம் நம:

பதி பசு பாசப் பனுவல் காண்டிகை பாயிரம்

காரூர் பொழிலுந் தேரூர் வீதியும்
வீதியின் மூவா யிரவர் விளக்கமு
மாதவர் கூட்டமு மீதுறை தில்லையிற்
கனக சபையிற் பனக முனி.........
..........த மிகுத்த புலிக்கால் முனிவனும்
மாதவ ஹிரணிய வருமனு மிறைஞ்சத்
திருமா லயனிந் திரனிமை யோரும்
மாமறை யாலடி பணிந்தேத் திப்பர
னுகம்பர பணிலமும் வாணனுன் குடமுள
வாதியு முழங்க மாண்டகு மதுரவாய்
....
....

* * * *

மோகமில் சாத்திர முழுது முணர்ந்தோ
னண்ணிய தவமறை ஞானசம் பந்த
னெண்ணிய முன்னூ லியல்வழு வாம
லதிக சைவ வளவைமுன் காணப்
பதிபசு பாசப் பனுவல்செய் தனனே.

என்பது பாயிரம். "ஆயிர முகத்தானகன்ற தாயினும் பாயிர மில்லது பனுவலன்றே". என்பதனாற் பாயிர முரைத்து நூலுரைத்தன் மரபா மெனக் கொள்க. "ஆக்கியோன் பெயரே வழியே எல்லை நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே கேட்போர் பயனோ டாயெண் பொருளும் வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே" என்பதனுலின்னா(ந்நா)லுரைத்தார் மறைஞான சம்பந்த தேவ நாயனு ரென்னு மாசாரியர். வழி :—சிவாகமஞ் சிவஞானபோத முதலிய சாத்திரங்கள். எல்லை :—தமிழ் வழங்குமிடம். நூற் பெயர் :—பதி பசு பாசப் பனுவல். யாப்பு :—குறள் வெண்பா. நுதலிய பொருள :—பதி பசு பாச விலக்கணம். கேட்போர்:—அவர் மாணுக்கருள் பேரம்பலத்துறைவார் முதலாயினோர். பயன் :—வீடு பேறு. ஆதலாலிதனைச் சிறப்புப் பாயிர மென வறிக.

* * * *

End :

பயில்வித்தார் பக்குவர்க்கிந் நூலைப்படித் தாய்ந்தா(ரும்)
பயில்வரே தம்முணர்வின் பம்.

என்பது இந்த ஞான நூலாகிய பதிபசு பாசப் பக்குவரான மாணுக்கருக்குச் சிவபரனை(ப்) பண்ணிப் போதித்த வாசிரியரும் அம்முறையே கேட்ட மாணுக்கருந் தங்களிடத்துண்டாகிய சுவானுபூதியை யனுபவித்துக் கொண்டிருப்பார்க ளென்றவாறு.

Colophon :

ஆருவது போதகவியல் முற்று. ஆகவியல் ஆறும் வாழ்த்தும் வணக்கமு முள்படக் குறள் 332.

மன்னுபுலியூர் மறைஞான மாமுனிவன்
றன்னுடைய பேர்பரித்த தன்மையோ—னின்னி(ங்கி)லத்தில்
வாய்ந்த பதிபசுபா சப்பனுவல் மாமதியா ...
லந்துரையை ......ங்கு. ... .

925-ம்ஸ்ரீ ஆனிமீ 27௳ வெள்ளிக்கிழமை நாள் முகிந்தது.

முற்றும்.

No. 1339. PATI-PACU-PĀCA-VIḶAKKAM

பதி பசு பாச விளக்கம்

[820-A (1)]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 44. Lines, 7 on a page. Condition, Good. Appearance, New.

Note : This is a treatise which deals with the 3 categories of Saiva Siddhānta philosophy i.e. Pati, Pacu, Pācam in 104 stanzas. Other particulars are not known.

Complete.

குறிப்பு : இது, பதி, பசு, பாசத்தின் விளக்கத்தைக்கூறுவது. குரு சீடனுக்குக் கூறுவதுபோன்றுள்ளது. மற்றைய விவரங்கள்

அறியக்கூடவில்லை. இந்தப் பிரதியில் 104 செய்யுட்கள் பூர்த்தியா யுள்ளன.

பூர்த்தி.

Beginning:

மிக்கவி நாயக ஞாயன் மாலவன் மீறிய ருத்திரனு
முக்கண் ணுடைய மயேசுவர சதாசிவன் மூவிரண்
[டானவர்தம்
பக்க மியங்கிய வல்லபை நாமகள் பாமக ளுருத்திரியாள்
திக்கிம் மயேசுவரி யாளு மனோன்மணி சீர்பாதம்
[யான்மறவேன்.

* * * *

End:

களித்தமனத் துடையாசான் மொழிந்த சோதி
காசினிய லனுபூதி விளைவி னாலே
யளித்ததமிழ் ஞானமொழி நூல றிந்து
ஆகமத்தோ டேபடித்து அவிடத் தாருக்குத்
தெளிக்கவல்லான் சொல்லொருவன் மிக்க மாடான்
செகத்தி .... ஞானம்பேசி ....
அழித்திடுவான் றிரும்பவதைப் படைக்க வல்லான்
அனுபூதி செயலுடையா ரறியும் நூலே. 104

Colophon:

விரோதிஞ வையாசிமீ 8உ.

No. 1340. PARAMĀṈANTA-CĀKARAM

[SELECTIONS]

✓ பரமானந்த சாகரம்—[திரட்டு]

[574-I I]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 5. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a work in 31 stanzas emphasising the truth that bliss is to be attained by renunciation. Tirattu suggests that the work is not original but contains only selections of verses from other sources.

Complete.

குறிப்பு: *இது, சுகம், பற்று நீங்கியவிடத்தில் உண்டாம், என்னும் உண்மையைப் பல உதாரணங்களில் விளக்கும் நூல் ஆகும். 'திரட்டு' என்ற சொல்லால் இஃது பிற நூல்களிலிருந்து திரட்டி யெடுத்ததாகும் எனத்தோன்றுகிறது. திரட்டியவர் பெயர் முதலியன தெரியவில்லை.*

பூர்த்தி.

Beginning:

மன்னுநகர் மன்றுமனை வாவிகூட பங்கழனி
யென்னிதென் வந்தவர்க ளெல்லையிலை—யின்னமது
சொல்ல வருவாருந் தொலைவரியா ரென்றறிந்து
நில்லதனை வேறாகி நீ.

*　　*　　*　　*

End:

உண்டுறங்கிப் பூசி யுடுத்துமுடித் துப்பூண்டு
கண்டுரைத்துக் கேட்டுக் கல்விநலங்—கொண்டுசெயல்
வேண்டாத தொன்றுமிலை வேண்டியதொன் றில்லையெனை
யாண்டா னடிசேர்ந் தவர்க்கு. 31

No. 1341. PIRACĀTA-VITI

[TEXT AND ANNOTATIONS]

பிரசாத விதி—[மூலமும் உரையும்]

[883]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 22. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: 16 Mysterious centres in the body are mentioned in Saiva Siddhānta work and they are called Shodasa Kāla Prasadams. This is a work which deals with them and contains the Text and Meanings.

Complete.

குறிப்பு: இது, சைவ சாத்திரத்தைச் சார்ந்தது. ஷோடச கலைப்பிரசாதம் என்னும் பகுதியை விளக்குவது. மூலமும் உரையும் உள்ளன. இதில் 12 பாடல்களிருக்கின்றன; அவற்றிற்குப் பின் பிரமத அட்டவணை என்னும் தலைப்பின்கீழ் விவரங்களும் இருக்கின்றன. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. சுவடி பூர்த்தியா யுள்ளது.

பூர்த்தி.

Beginning:

அருள்வளர் தில்லை மூதா ரழகிய மன்று ளாடன்
மருவிய பெருமா னீன்ற மழவிளங் களிறு காப்ப
விரவிய சிவாக மத்தின் விதிவழிக் கலையீ ரெட்டுந்
திருமலி தமிழி னாலே தெரிந்துரை செப்ப லுற்றும். 1

மேதையருக் கிசம்விட கலைமேல் விந்து
விரவுமந்த சந்திரன் மேனி
ரோதியனு(நா) தாந்தமொடு சத்திவியா பினியே
யுயர்சமனை யுன்மனைபன் னிருகலையா யோங்கு
மீதிலஞ்ச மனைக்கும்வியர் பினிக்குநடு வேவியோம
ரூபினியநதை யனுகையி னுகிருதையே தாவே
பொருந்திக்கலை பதினொரு மீசனீ யம்பலத்தா
னிணையடிக் கீழிவை யே. 2

* * * *

End:

சிவதத்துவம், நிறம் அனந்த சூரியப்பிரகாசம் சூனியம்; அதற்குமேல் சருவ கரிசு.........ரவாய் நிட்களமாய் சருவ வியாபகமாய் ஞானனந்தமயமா யிருக்கிறதாகப் பாவிக்கவும்.

Colophon:

அக்ஷயவூ தைமீ 26வ புதன்கிழமை எழுதி முகித.........

No. 1342. PIRACĀTA-VITI

[TEXT AND ANNOTATIONS]

பிரசாத விதி—[மூலமும் உரையும்]

[641-A]

Size, 7¼″×1¼″. Pages, 26. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as previous No. 1341.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1341 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1343. PIRĀYA-C-CITTA-PATTATI—[PROSE]

பிராயச்சித்த பத்ததி—[உரைநடை]

[1166-A]

Size, 12⅛″×1¼″. Pages, 2. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work in prose detailing ceremonial ablutions for errors committed in daily spiritual practices. Other particulars are not available.

Incomplete.

குறிப்பு: *இது, நித்தியகருமங்கள் தடைப்படுதல் விரதாதிகள் தவறுதல் முதலாகிய தவறுகட்கு இதில் பிராயச்சித்தங்கள் கூறப்படுகின்றன. எழுதியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இப் பிரதி பூர்த்தியாயுமில்லை.*

அபூர்த்தி.

Beginning:

.................கமத்திலே சொன்ன விதிப்பிரகாரம் பரிகாரம் பண்ண ஆசாரியரு மந்தப்படியேபண்ண புத்திரகன் மூன்றி

லொன்றுபோக்கி யிருமடங்குபண்ணவும்...........புத்திரகனுக்குச் சொன்னதிலே பாதிபண்ணவும், பேயினுலே பாம்பினுலே யறிவழிந்து வருகிறது. மோகத்தாலே; மோகமாவது அறிந்திருந்து மாசையினுலே அறிவுகெட்டுப் பண்ணுகிறதும், உலோகாயுதனைப்போல பரலோக மார்கண்டாரென்று துர்ப்புத்தியினுலே பண்ணுகிறதும், தைவிதத்தாலே.

* * * *

End:

நல்லகால தேசம், சத்தி, வயது, தொழில், சாதி யிதுகளறிந்து காற்கூறு தள்ளிப்பண்ண அத்தியந்த வியாதியினுலே ராசாக்களாற் கள்ளரால் நெருப்பினு லிதுகளுடைய பயத்தினுல் வெள்ளத்தினுல் இரண்டு சூதகஞ் சென்ன சூதகத்தினுல் குருவுக்கினி தெய்வ காரியத்தால் நித்யகர்மந் தப்பினுற் றேஷமில்லை. இந்தப் பிராயச்சித்தந் தான்பண்ண அசத்தனுனுல் பிதா மாதா பந்து சனங்களிவர்களாலே பண்ணுவிக்கவும். அவர்களு மில்லாவிட்டால் அன்னியரா லிருமடங்கு பண்ணுவிக்கவும். வியாதிக்காரனுக்கு உபவாசந் தேவையில்லை; விட்டுவிடவும். சமயிசுத்தியின் பொருட்டும் புத்திரன் ரெட்சையின் பொருட்டும் சாதகன் சித்தியின் பொருட்டும் ஆசாரியா...........

No. 1344. PIRĀYA-C-CITTA-VITI or ĀCAUCA TĪPIKAI—[PROSE]

பிராயச்சித்த விதி அல்லது ஆசௌச தீபிகை—[உரைநடை]

[600]

Size, 10″ × 1⅛″. Pages, 130. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This prose work enumerates different kinds of pollution and presentes ablutions for them. This is intended for Saivites.

Complete.

குறிப்பு: இது, சைவசமய தரும சாத்திரமாகும். கடவுள் வழிபாடு உபாசனைகள் முதலியவைகளில் ஏதேனும் ஆசௌசம் (தீட்டு) நேருமானல் அதற்குப் பரிகாரங்கள் கூறுகின்றது. இயற்றியவர் பெயர் முதலியவை அறியக்கூடவில்லை. இப் பிரதி பூர்த்தியாய் உள்ளதெனினும் முதலில் 5 ஏடுகள் உடைந்து அறை குறையாகக் காணப்படுகின்றன.

பூர்த்தி.

Beginning :

..............சுடலையிலே திருவிழா நடக்கிறதென்று வீதியிலே மலமூத்திரம் விட்டால் உபவாசமாயிருந்து ஈசானம் 500 செபித்துக் கவ்வியங் கொள்ளவும். ஊருக்குக் கிழக்கு வடக்கு 100 தெட்டு நடந்துபோகாமல் பசுமந்தைமேல் மூத்திரம் விட்டால் 100 ஜலபானம் பண்ணினலும் எட்டுத்தரம் வாய்க் கொப்பளிக்கவும்.

* * * *

End :

............சிசு சாந்திராயணம். இப்படி அன்னம் ஒவ்வொரு நாளுக்குப் பொசிக்கில் ஒரு மாதஞ்செய்வது அதிக சந்திராயணம். விரதம் மூன்றுநாள் காலத்தாலே அன்னங்கொண்டு சத்தியோசாதம் இப்படி மூன்றுநாள் சாயங்காலத்திலே புசித்து கவ......ம அவ்வளவும் செபித்து மூன்றுநாள் யாசகமாயிருந்து ஈசானம் அவ்வள்வுஞ் செபிக்க பின்னு மூன்றுநா ளுபவாசம் பண்ணுவது பி.........சாபத்தியனென்று சொல்லுவார்கள். இது பிராயச்சித்த சமுக.........

ஆசவுச தீபிகை அ......ணை,முற்றும்.

தேசிகன் திருவடியே துணை.

No. 1345. PŪCĀ-VITI—[PROSE]

பூசாவிதி—[உரைநடை]

[466]

Size, 13½″×1¼″. Pages, 108. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work details the steps to be followed during worship to Siva (at house). Its author's name is not known.

Complete.

குறிப்பு: *இது, சைவசாத்திரங்களைச் சார்ந்தது; சிவபெருமானைப் பூசிக்கும் முறை கூறப்படுகின்றது. இயற்றியவர் பெயர் முதலியவை தெரியவில்லை. இப் பிரதி பூர்த்தியா யுள்ளது.*

பூர்த்தி.

Beginning:

விடிய வஞ்சு நாழிகையிலே யெழுந்திருந்து பத்திப் பிரகார மவரவருக் கதிகார வனுகூலமாய்ச் சிவத்தியானம் பண்ணிப் பிறகு வெளிக்குப்போய் தந்தசுத்தி பண்ணிக்கொண்டு............... ....பண்ணும்படி சுத்தமா யிருக்கிற பூமியிலே யத்திரத்திஞலே யெட்டங்குலத்துக்குக் கீழ் வெட்டி யிருதயத்திஞலே மிருத்திகை யெடுத்து மறுபடி பள்ளந் தூர்த்து தண்ணீர்க்கரையிலே சிரோ மந்திரத்திஞலே வைத்துச் சிகையிஞலே மண்ணிலே யிருக்கிற கல்லுக்கள் புல்லுக்கள் முதலானவைகளை யெடுத்துப்போட்டு யத்திரத்திஞலே யப்பியக்கனம்பண்ணி கவசத்திஞலே மூன்று கூருக்கிப் பிறகு ஆசமனம்பண்ணிச் சகளீகரணம் பண்ணிக் கொண்டு அஞ்சுகை மண்ணெடுத்துக் கரையிலேபோட்டுப் பிறகு ஒரு கூ(ற்)றை நாபிக்குக் கீழ்ப் பூசிக் கழுவிப்போட்டு மல ஸ்நானம் பண்ணும்படி...............

* * * *

End:

இப்படித் தினந்தோறு மியாதொருத்தன் பண்ணுகிருனவனுடைய பாவமெல்லாஞ் சூரியனைக்கண்ட இருட்போலப்போய்ச் சிவசாயுச்சிய மோட்சத்தை யடைவனிது நிச்சயம்.

ஓம் ஆம் பிதிர் யோசுதா
ஓம் ஆம் பிதாமகேப்பியோசுதா
ஓம் ஆம் பிர பிதாமகேப்பியோசுதா
ஓம் ஆம் விருத்த பிர பிதாமகேப்பியேசுதா.

ஓம் ஆம் மாதிர்பியோசுதா
ஓம் ஆம் மாதா மகேப்பியோசுதா
ஓம் ஆம் பிரமாதா மகேப்பியோசுதா
ஓம் ஆம் விருத்தப் பிரமாதா மகாப்பியோசுதா.

No. 1346. PŪCAI-Y-ATTAVAṆAI—[PROSE]

பூசையட்டவணை—[உரைநடை]

[789]

Size, $8\frac{3}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 12. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, New.

Note: This work details the ways in which Siva-Pūja has to be done.

Complete.

குறிப்பு: இது, சிவபூசைக் கிரமத்தைக் கூறுகின்றது. இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை. இப் பிரதி முற்று முள்ளது.

பூர்த்தி.

Beginning:

பூசைத்தானம் அத்திரத்தால் புரோகித்துக் கவசத்தால் தடவிக் கோடிட்டு இருதயத்தால் கிழக்கு முதல் பத்திர மாவது பூசைக்குண்டானது ஆசாரங்கூட்டித் திருமஞ்சனத்துக்கு அஷ்டசங்காரம் சாமானிய அர்க்றியம் இதுதையாயப்வுசடு(?) ....ன்று சிவம் பூரித்து கெந்தபுட்பம் அறுகு அட்சதை......... எழு அர்ச்சித்து.....................யெஞ் சபித்து அஷ்ட சங்காரம் புரோட்சிக்கவும்.

* * * *

End :

அத்திரத்தால் எழுப்பி வேதையயத்தால் ஒடுக்கி வித்யாபீட முதல் சூரியன் வரையும் ஒடுக்கி சண்டேசுரன்பூசை ஆக மூர்த்தி அபஷே சலபுஷ்பம் அர்க்கியம் நெயிவேத்தியம்............வெத்து சாத்தி தோத்திரம் வேண்டு அர்க்கியம் ஒடுக(?).

No. 1347. PŪTA-CUTTI-Y-ATTAVAṆAI

[PROSE]

பூதசுத்தி யட்டவணை—[உரைநடை]

[613-C]

Size, $8\frac{5}{8}'' \times 1\frac{5}{8}''$. Pages, 10. Lines, 12 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This work prescribes the method by which meditation is to be performed. At the end, a few lines on Antari-Yāgam (internal sacrifice) is to be performed are written.

Complete.

குறிப்பு : இது, சைவ சாஸ்திரங்களைச் சார்ந்தது. கட்டளை நூல். இயற்றியவர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்றும் உள்ளது. இதன்பின் பூதசுத்தி யந்தரியாகம் என்று 6 வரிகளில் எழுதப்பட்டுள்ளது.

பூர்த்தி.

Beginning :

இரண்டுகாற் பெருவிரலிலே நின்றுந் தொடங்கி மூலா தார மளவாக இரண்டு......க்கவு மூலாதார முதற் பிரமரந்திரம் வரை யேகரூபமாகவுந் தியானித்து சு...... மூனை நாடியைத் தியானித்து இருதையங் கண்டம் தாலு புருவமத்தி பிரமாந்திரமிந்த அஞ்சு தானங்களிலும் இடை பிங்கலை யொடும் பின்னலுற்று, அதோ முகமாயிருக்கிற தாமரைக் குளங்களைக் கொடிக......முத்திரையினாலே தெறித்து மேனோக்கி யலர்ந்ததாகப் பாவித்து வியோம ரூபிணி யென்கிற சத்தியினின்று மமுததாரை யுள்ளும் புறம்பும்

நனை ந்ததாகப் பாவித்து ஊங்காரஞ் சொலிக்கிறதாகப் பாவித்து ஊங்காரத்துச்சியிலே சித்தத்தை வைத்து வாயுவை மேலே யெழுப்பி சங்கார முத்திரையினுலே பிரமாதி காரணத்தியாகக் கிறத்தினுலே ஆத்மனே..................என்று கொண்டு சென்று போக்கிய கர்மத்தை மீளவும் பொசிப்பா ருகவும்.

* * * *

End:

சிருட்டிக் கிரமமாகக் கொண்டு வந்து சோதி ரூபனுயிருக்கிற வனுகப் பாவித்துத் தாபனம் பண்ணிவவுச டந்த மானச் சத்தி மந்திரத்தினுலே விந்துத் தானத்தினின்றும் பெருகா நிற்கிற அமுதத்திலே யபிடேகம் பண்ணி(ப்)பின்பு முன்பு போலவே யங்க நியாசம் பண்ணுவான்.

பூதசுத்தி முற்றும்.

அந்தரியாகம் பண்ணும்படி இருதையத்திலே தாமரை யாசனத்திலே சோதிமயமாயிருக்கிற ஞானலிங்கத்தில்(த்) துவாத சாந்தத்திலே யிருந்து சிவனைக் கொண்டுவந்து ஆவாகனம் பண்ணி யினிமேற் சொல்லுகிற பூசாக்கிரமத்திலுள்ள சகல திரவியங் களினுலே யபிடேகம்பண்ணிப் பூசாவிதிப்படி மனதினுலே பூசித்து இந்தப்படி வெளியிலே பூசை பண்ணுகிறே னென்று இருத்திக் கொள்ளவும்.

பூத சுத்தி யந்திரியாக முற்றும்.

No. 1348. PERIYA-KAṬṬAḶAI—[PROSE]

பெரிய கட்டளை—[உரைநடை]

[136]

Size, $14\frac{1}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 178. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This is a Kaṭṭaḷai work analysing and arranging the several Tattuvas of the Siddhāntic philosophy.

Incomplete.

குறிப்பு: இது, சைவ சித்தாந்தத்தைச் சார்ந்தது. தத்துவங்களைக் கூறும் கட்டளை நூல். மற்ற கட்டளைகளை விட இது, விரிவாயிருக்கும் போல் தெரிகிறது. இயற்றியவர் பெயர் முதலியவை தெரிய வில்லை. இப்பிரதி பூர்த்தியானதாகத் தெரியவில்லை; பிழைகள் மிகுதியாக உண்டு.

அபூர்த்தி.

Beginning:

பஞ்ச பூதங்களாவன—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம். இவை யிற்றுக்கும் பூதங்களென்றும் பெயர். மகா பூதங்க ளென்றும் பேராகவேண்டினது. மற்றுள்ள தத்துவங்களைப்போல வன்றில் இவை யொன்றுக்கொன்று பரிணாமமுடைத் தாகையாலுமெனச் சொல்க. இவை யிடமாக நின்று சீவிக்கிற சோத்திராதிகளைக் கூறின், சோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம். இவையிற்றுக்கு ஞான விந்திரியமென்று பெயர். ஞானவிந்திரிய மென்று பெயராக வேண்டினது ஆத்மாவுக்குக் கருவி யாகையாலெனக் கொள்க. இவையிற்றுக்குப் பொறிகளென்றும் பெயர்.

* * * *

End:

நீ உண்டெனப் பொருந்துதலு(ம்) ரூபகமாம். உண்டென்றனுமானித்துப்.................தொழிந்து, தெரிசனமாகாதோ; ஆம். அதெப்படி(?)—ஆத்மா வொரு விஷயங்களை யிந்திரியங்களாலே கண்டு மனாதிகளாலே பற்றிக் கலையாதிகளாலே யறிகிற வறிவுக்குக் கிரியை மிகுத்ததோர் வாத முண்டோ? உண்டு. கிரியை மிகுக்கவே ஞானங் குறையுமே.

No. 1349. MARAPU—[PROSE]

மரபு—[உரைநடை]

[594]

Size, $12\frac{1}{4}'' \times 1\frac{3}{4}''$. Pages, 24. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, New.

Note; This deals about Civa and Jīvātma. This seems he an annotation of a work in metre on the subject. Other particulars are not known.

Complete.

குறிப்பு: இதில் சிவபெருமானைப்பற்றிய குணமுதலிய விலக்கணங்களும், ஆத்மாவி னியல்பும் கூறப்படுகின்றன. செய்யுளிலுள்ள அடிகளை எடுத்துப் பொருள் வசனமாக எழுதப்பட்டுள்ளது. செய்யுள் முழுதும் கூறப்படவில்லை. இயற்றியவர் பெயர் முதலியவை அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்று முள்ளது. அச்சானதாகத் தெரியவில்லை.

பூர்த்தி.

Beginning :

மரபு

திருச்சிற்றம்பலம்

ஏக னனேக னிருள்கருமமாயை யிரண்டாக விவையாறு தியில்; ஏகனென்பது சிவன் அனேக னென்பது ஆன்மா இருளென்பதாணவமல கருமமென்பது. கருமமலமாயை யிரண்டென்பது சுத்த மாயையு மசுத்த மாயையுமாம். இவ்வாறு பொருளு மொரு காலத்திலே யுள்ளவல்ல அநாதியிலே யுள்ளவாம்............

* * * *

End :

............இடத்திரிவாவது முட்டையிலே யிருந்த புள்ளானது முட்டையைவிட்டு நீங்கிக் கொம்பிலே யிருத்தல்போல ஆத்மா தூலதேகத்தைவிட்டுச் சூக்கும தேகத்தொடு பூதசரீரத்தைப் பொருந்தி நரகத்திலே செல்லுதலும், பூதசரீரத்தைப் பொருந்திச் சுவர்க்கத்திலே செல்லுதலும், பூதபரிணம சரீரத்தைப் பொருந்தி மீளவுந் தரையினிடத்திலே செல்லுதலுமாம். அறிவுத் திரிபாவது :—நனவிலே யறிந்த செய்தியெல்லாங் கனவிலே மறந்தாற்போல ஆத்மா தூலதேகத்திலே யறிந்த செய்தியெல்லாந் தூலதேகத்தைவிட்டு நீங்கில், பூதசரீரத்தையும் பொருந்தி நரக சுவர்க்கங்களை யடைந்தபோது மறந்தொன்றுந் தெரியாதிருத்தல் (59). ஆத்மாவுக் கெல்லாவற்றினுக்கு முந்தினது பக்குவம்; அதற்குப் பிந்தினது சிவபுண்ணியம்; அதற்குப்பின் மலபரிபாகம்

சத்திநிபாதம் இருவினையொப்பு. ஆசாரியர் திருமேனிகொண்டெழுந்தருளி வருதல் அவர் திருவுளம் பற்றுகின்ற ஞானசாத்திரம் இவை மோட்சமடைதற் கேதுவாகிய முறைமை யெனவறிக. (60). சத்தம் பிறந்திடத்தே சகல கலையும் பிறக்கு மத்த னுரைத்தறியாயோ வென்றுரைத்தது—சத்தமே சத்தமதி சஞ்சலமென்றெண்ணாதே சித்தமே சுத்தசிவம். 'காரண கேவலத்துங் காரிய கேவலத்துந் தாரமாய்த் தந்த சகலத்தும்—வாரமிக வைத்தெனை யாட்கொண்ட குருமாமணியே சுத்தமரு ளத்தனே அம்பலவாணா'.

திருச்சிற்றம்பலம்.

சுப்பிரமணிய குருசுவாமி பாதாரவிந்தமே கெதி.

குருநாதன் திருவடி வாழ்க.

No. 1350. MARAPU—[PROSE]

மரபு—[உரைநடை]

[861-A]

Size, $6\frac{3}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 42. Lines, 11 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is the same as No. 1349 but with variations in meanings.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1349 பிரதி போன்றது. உரையில் பல மாறுபாடுகள் உள்ளன.

பூர்த்தி.

Beginning:

ஏகனனேக னிருள் கரும மாயை யிரண்டாக இவை யாறு யதில். எ - து. ஏகன் எ - து. சிவன்; அநேகன், எ - து. ஆத்மா; இருள், எ - து. ஆணவ மலம், கருமம், எ - து. புண்ணிய பாவங்களாகிய கன்மம் மலமாயை யிரண்டென்பது, சுத்த மாயை யசுத்த மாயையுமாம். இவ்வாறு பொருளுமொரு காலத்திலே யுண்டா

காம லனுதியிலே நித்தியமாய் அழியாததாயிரு.........ஆறு பொருளாயும் திரிபதார்த்தத்தி லடக்கித் திரிபதார்த்த மென்றலுமொன்று. நித்தமா யழியாதிருக்கு சிவனுக் கெண்ணிறந்த தன்னியல்புக் குணங்களுண்டு; அதிலே இரண்டு குணஞ்சொல்லுகிறோம். அதேதென்னில் ஒருவரு மறிவிக்காமற் றுனேயறிகிற குணமொன்று. ஆத்மாக்களுக் கறிவிக்கிற குணமொன்று ஆக 2.....................

* * * *

End:

அதெப்படி யென்னில் காட்டத்திலே............ற அக்கினியை யாணியினாலுங் கயிற்றினாலுஞ் சுற்றிக்கடைந்து வெளிப்படுத்தல் போலுந் தயிரிலே யிருக்கிற நெய்யை மத்தை.........ரட்டிக் கயிற்றைச் சுற்றிக் கடைந்து வெளிப்படுத்தல் போலும் 67. ஆத்மாவுக்கு எல்லாவற்றிற்கு முந்தினது பக்குவமதற்குப் பிந்தி............ண்ணி............அதற்குப் பிந்தினது மலபரிபாகம். அதற்குப் பிந்தினது சத்தி............இருவினை யொப்பு, அதற்குப் பிந்தினது ஞானசாரியார் திருமேனி கொண்டு திருவுளம் பற்றுகின்ற ஞான சாத்திரம். இது ஆத்மாக்களுக்கு மோட்சமடையு முறைமை யென வறிக.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க.

No. 1351. MARAPATTAVAṆAI

[PROSE]

மரபட்டவணை—[உரைநடை]

[594-B]

Size, $12\frac{1}{4}'' \times 1\frac{3}{4}''$. Pages, 31. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, New.

Note: Same as No. 1349 with some deviations.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1349 பிரதி போன்றது. பல மாறுதல்கள் காண்கின்றன. ஏகன், அனேகன், இருள், தருமம்,

மாயை யிவற்றி னிலக்கணங் கூறுகின்றது. மற்றைய விவரங்கள் அறியக் கூடவில்லை. இப்பிரதி முற்று முள்ளது.

பூர்த்தி.

Beginning:

ஏகனனேக னிருள்கரும மாயை யிரண்டாக வினவ ...ருதியில் என்பது; ஏகன் கர்த்தா; அனேகன் ஆத்மா; இருள் ஆணவமலம்; கருமம் புண்ணிய பாவங்களாகிய கரும மலம். மாயை யிரண்டாவன சுத்தமாயை அசுத்தமாயை; ஆக ஆறுபொரு ளுக்குங் காரணமில்லை. அனாதியிலே யுள்ளது; நித்தமாய் அழி யாததாயிருக்கும். ஏகனாகிய கர்த்தாவுக்குத் தன்னியல்புக் குண மெண்ணிறந்த குணங்களுண்டு; அதிலே யிரண்டு குணஞ் சொல்லுகிறோம்.

* * * *

End:

அதெப்படி தாயானவள் குழந்தை கிணற்றிலே விழுந்த வுடனே தானுங் கூடவே விழுந்து எடுத்துப் பிதாவினிடத்திற் செலுத்துதல் போலும், வியாதிபிடித்தவனுக்கு வியாதியை வயித் தியன் நாளிலே நாளிலே மருந்து கொடுத்துத் தீர்ப்பது போலும், பயித்தியம் பிடித்தவனுக்கு மாதாபிதாக்களதற்குத் தக்க மருந் தைச் செலுத்திப் பயித்தியத்தை கிரமத்திலே தீர்ப்பது போலும். அசபை லயம் சாங்கியம் அடயோகம் ஆக . இந் நிலைதா னில்லையேல் மின்னிடிவீழும் வெளி சொன்ன போர்க்குத் தன்னை......தன்னைத் தனக்குச் சரியாங் கண்ணொடு கண்ணைக் காத்திருந் தேர்கட்கு(ப்) பொன்னடி மூலம் பொருள் சொல்ல லாமே.

மரபட்டவணை முற்றியது.

No. 1352. MARAPU-KAṆṬAṈA-KAṆṬAṈAM

மரபு கண்டன கண்டனம்

[594-A]

Size, $12\frac{1}{4}'' \times 1\frac{3}{4}''$. Pages, 52. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a refutation of a work called Marapu Kaṇṭaṉam, which is itself a criticsm of the work described in 1349. Other particulars are not known.

Complete.

குறிப்பு: இது, ஒருவர் ஆன்ம வியல்களைக்கூறி யவற்றை மற்றொருவர் கண்டனம்செய்து கூறுவதாகும்; எண் 1349-இல் குறித்த ஒரு நூலுக்கு கண்டனம் ஒருவர் எழுத, அதைக் கண்டித்து இந்நூல் எழுந்ததுபோலும். இதில் அறுபது கண்டனங்கள் கூறப்படுகின்றன. இயற்றியவர் பெயர் முதலியவை அறியக் கூடவில்லை. இப்பிரதி முற்று முள்ளது. அ ந் த ரனக

பூர்த்தி.

Beginning:

மரபு கண்டன கண்டனம்

ஆத்மாவுக்குத் தன்னியல்பு எண்ணிறந்த குணஞ் சொல்லியதி லிரண்டு குணம் விசேடஞ் சொன்னதிற் பிறருக் கறிவிக்க மாட்டாதென்றார். பின்னொரு விடத்தில் மலந்தீர்ந்த வுயிராற்(த்) மாக்களுக்கு அறியும் பகுதியும் அறிவிக்குமென்றார். சிவன் சீவனென்ற சுருதிக்கு விரோதிக்குமாகையா லிவர் சொன்னது மாறுபாடென வறிக. மல(த்து)க்குத் தன்னியல்பு சொன்னதிலாத்மாவுக்கு வேண்டுங் காரியத்தை மறைத்து வேண்டாத காரியத்தை விளக்கு மென்றார். மறைக்குங் குணமும் விளக்குங் குணமும் மலத்துக் குண்டென்பதற்குச் சுருதி சொல்லவேணும். அன்னியமானவை யுணர்த்தியென் றிருக்குதேயெனில் அதற்குத் தாற்பரியம் வேறே. சைவசித்தாந்திகளை வழிபட்டுக் கேட்டால் மலை வறச் சொல்லுவார்கள்..............

* * * *

End:

ஆத்மாவுக் கெல்லாவற்றுக்கு முந்தினது பக்குவமென்றார்; பின் மலபரிபாக மென்றார். ஆத்மாவுக்குப் பக்குவ பரிபாக மாவதென்ன; மலஞ் சடமானபடியினாலே யது பரிபாகப்படுகிற

வ...........மென்ன மும்மலஞ் சடமனு மூப்பிளமையில் என்று சுருதி யிருக்கையாலது அர்த்தமல்ல வென்றறிக. இனி........... கனகம் ஆத்மாவுக்குப் பக்குவ பரிபாகமாவ தென்னவென்று மலஞ் சடமாகையினுலே யது பரிபாகப்படுற வயணமென்ன வென்றும் வினுயினீர்; வழிபடு முறையில் வழிபட்டுக் கேட்டாலவை யெல்லா மினிது விளங்கும். 60

திருச்சிற்றம்பலம்.

No 1353. MĀYĀ-P-PIRALĀPAM—[TEXT]

மாயாப் பிரலாபம்—[மூலம்]

[1258-C]

Size, 10″ × $1\frac{3}{8}$″. Pages, 39. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, New.

Note: The work is in the form of lamentation by Māya or Illusion—which every aspirant to salvation has to overcome.

Complete.

குறிப்பு: இது, மாயையின் புலம்பலைக் கூறுவது. காழிக் கண்ணுடை வள்ளலாரால் அருள் செய்யப்பட்டது. 83 பாடல்களை யுடையது. இப்பிரதி பூர்த்தியா யுள்ளது. நூல் முற்றும் அச்சாகியுள்ளது.

பூர்த்தி.

Beginning:

கணபதி சிவமயம்.

காப்பு

மாதங்க வானனனே மாயையா மாதங்கே
போதன் றனையிழந்து போய்ப்புலம்ப—லோதுங்காற்
கூர்த்த பொருட் குற்றமொழிக் குற்றமிவை வாராமற்
காத்தருள்கை யுன்றன் கடன்.

* * * *

சீராட்டி யென்பேர்முன் செப்பாத போதனெனைப்
பாராட்டி யென்பேர் பகர்ந்ததற்பி—னேராநான்
றுஞ்சினு லன்றேருவிச் சொல்லுரைப்பா னென்றுள்ள
மஞ்சினா னின்றே றனற.

* * * *

End:

மெய்யே மனிதரைப்போன் மேதினியில் வந்தொருவன்
செய்யாது செய்தானென் செப்புகேன்—வையக்
கருவழிய நானழியக் கற்பழியப் போத
னுருவழியப் பார்த்தானே யுற்று. 83

மாயாப்பிரலாபம் முற்றிற்று.

No. 1354. MUNI-MOḶIYIṞ-ṞIRAṬṬU—[TEXT]

முனிமொழியிற் றிரட்டு—[மூலம்]

[574-N N N]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 2. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a selection of 4 stanzas from a bigger work of the same name and deals about penance and its value.

Incomplete.

குறிப்பு: இது, தவத்தின் மேன்மையைக் குறிப்பிடுவது. இந்தப் பிரதியில் கீழ்க்கண்ட நான்கு பாடல்களே காணப்படு கின்றன.

அபூர்த்தி.

Beginning:

உந்தியின் மேலே யவ்வு முவ்வுமா யொளி சிறந்து
விந்துவாய் நாத மாகி விளங்கிய சோதி தன்னைச்
சிந்தையுள் ளுறவை நோக்கிச் செயலழிந் திருப்பீ ராகில்
வந்ததோ சிவமு முள்ளாம் வாசியின் வடிவு கொண்டே. 1

காண்பதுந் தானே தன்னைக் காட்டிடும் பொருளுந் தானே
யாண்பெண்ணோ டலியு மாகி யனைத்துள பொருளுந் தானே
தேன்பயி லொளிய தாகித் தெளிவது மூலத் துள்ளே
யூன்பயில் சோதி தன்னை யுணருவார் நெஞ்சு ளாரோ. 2

நெஞ்சிலே நினைவு தோன்று நினைவிலே யறிவு தோன்று
மிஞ்சிய வறிவு தானே மெய்ப்பொரு டானாய் நிற்கும்
பஞ்சிலே படும்பொ றிப்போற் பாத்துன்னே துரிய மாகு
மஞ்சிலே யதீத மானா லதனுளே யாதி யாமே. 3

அருளுயிர் அடைவே தென்னி லாவி னைய் திரியு மற்றாற்
றெருளொளி வெளிய டங்குஞ் செய்துயர் மாறுபோல
மருளுறு தோன்ற லற்றான் மன்னுயிர் பாத்தி லொன்றிப்
பொருளுற வைத்த டிக்குட் போற்றுமாந் தவத்தி னாலே. 4

No. 1355. MEIKAṆTA-CĀTTIRATTIN-PĀṬALKAḶ—[TEXT]

மெய்கண்ட சாத்திரத்தின் பாடல்கள்—[மூலம்]

[623-C (2)]

Size, 7″ × 1¼″. Pages, 10. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This contains a selection of 37 stanzas from various works on Saiva Siddhānta philosophy.

Complete.

குறிப்பு: ஞானசாத்திரங்களின் கருத்துக்கள் வெளிப்படச் சிற்சில நூல்களிலிருந்து 37 பாடல்கள் இந்தப் பிரதியில் குறித்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சில அச்சிடப்பெற்றவையும், சில பெறாதவையுமாய் இருக்கின்றன.

பூர்த்தி.

Beginning :

அன்றிவரு மைம்புலனும் நீயு மசையாமல்
நின்றபடி யேநிற்க முன்னிற்குஞ்—சென்று
கருதுவது முன்னே கருத்தழியப் பாயு
மொருமகடன் கேள்வ னுனக்கு. 1

பட்டணத்தார்

மாத்தா னவத்தையு மாயாப் புவியின் மயக்கமெல்லாம்
நீத்தா ரவற்கொரு நிஷ்டையுண் டோவெறு நீறணிந்து
வேர்த்தால் குளித்துப் பசித்தால் புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர்பற் றற்றவரே. 2

கொத்தங்குடி

பாசமா ஞானத்தாலும் படர்பசு ஞானத் தாலும்
ஈசனை யறிய வொண்ணு திறையருள் ஞானநண்ணித்
தேசுறு மதனு லுன்னைச் சிற்றறி வொழிந்து சேர்ந்து
நேசமோ டுயர்ப ரத்து நிற்பது ஞான நிட்டை. 3

* * * *

End :

மெய்க்குரு வைத்தேடி வெறித்த வெளிகாட்டி
பொய்க்குருவைத் தேடிநீ போகாதே—நெக்குருகி
நாணுமல் தானும் நடுவழிய ....க்குங்
கோணுமல் கோணுங் குறி. 36

கண்ணொளி யொன்றுண்டு கருத்தொளியொன் றுண்டு
விண்ணே டிரண்டுண்டு வெளியொளியொன் றுண்டு
பண்ணொளி யான பராபரங் கண்டபின்
எண்ணூழி கால மிருந்துகொண் டோமோ. 37

No. 1356. YŌKA-MĀLAI—[TEXT]

யோக மாலை—[மூலம்]

[623-I]

Size, $7'' \times 1\frac{1}{8}''$. Pages, 54. Lines, 8 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: This is a treatise on Yoga one of 4 four ways to be followed at attain the Lord's Feet. The Mss. is very much injured.

Incomplete.

குறிப்பு: இது, சைவசமயத்தைச் சார்ந்தது. யோகத்தைப் பற்றிக் கூறுவது. இயற்றியவர் பெயர் முதலியன அறிதற்கூட வில்லை. இப் பிரதி முற்றுமில்லை. முதலிலும், இறுதியிலும் பல ஏடுகள் முறிந்தும் சிதைந்தும் ஒடிந்துபோயு முள்ளன. எழுத்துக்கள் படிக்கமுடியாத அளவில் இருக்கின்றன.

அபூர்த்தி.

Beginning:

மாலையில் வந்தங் கடைந்த தோரிருளை
யகற்றிடச் சி......ல...... வான்மீன்
காலையில் வந்த கதிரவ னுதையங்
கண்டிடக் காக்குமாப் போல
மேலைவல் வினையால் வந்தபல் பிறப்பை
விடுவிக்க மெய்ப்பொரு டிறத்து
நூலையிங் குரைக்கத் தோன்றுமோ மறைநூல்
நுண்பொரு ளுணர்ந்தவர் தமக்கு.

* * * *

End:

சகந்தனில் வசள .... முலகந்தா ....ன்றி
தனிப்பட வேயது வொடுங்கி
.... பல்லூழி கற்பங்களை ....ங்கு
குரைக்கின்ற யாவையு மன்றி
பகர்ந்திடு ....தா னன்றியே எங்கும்
பரமாத்ம ரூபமே யாகி
யகம்புற மன்றியங்கு ....ரை வப்பொரு......னது
வதுதான் ....

No. 1357. CAṆMUKA-MŪRTI-POOCAI-VITI

[PROSE]

சண்முகமூர்த்தி பூசைவிதி—[உரைநடை]

[805-D]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{3}{4}''$. Pages, 2. Lines, 13 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This work deals with the methods of worship of Sri Saṇmuka. The author's name is not known.

Complete.

குறிப்பு: *இது, முருகப்பெருமானைப் பூசிக்கும் முறையைப் பற்றிக் கூறுவது. இயற்றியவர்பெயர் தெரியவில்லை. இப் பிரதி பூர்த்தியா யுள்ளதெனினும், ஏடுகள் சிதிலம்.*

பூர்த்தி.

Beginning:

தான விதிப்படி குகதீட்சை யனுட்டானஞ் சாங்கமாய் முடித்த பின்பு சங்கற்பம் பண்ணும்படி அசி..............சிரீ சுப்பிரமணிய பஞ்சதேசாட்சரி மஹாமந்திரமாகிய அமிர்தா க்ருஷ்ண தெட்ச ஞம............இகா............த்திரி அனுட்டிப்புக் கந்த ஆரா சன்ன ஸமுந்தோ தெய்வதாஞ் சௌம்பிசம் இறீம............ததிஇ கிலீம் கீலக..............லம்மம இட்டகாமி மஸகீத பிரசாத சித்தி யர்த்தே செபேவினியோ.

சங்கற்ப முற்றும்.

* * * *

End:

............ஷண்முகாய சிகாய வவுஷடு..............ஐவண பவ சாஸ்ஷ உரஷ்ஞய உவ்வுவவை சௌங்காவன பவதேவ............ கந்தாய............த்திராயயபடு பூர்புவ சுவரோவதிக்கு பெந்தன வகவசாய நவ அங்குண்டனவ ....த்தாலமதா முத்திரை கொடுக்கவும்.

அங்கநியாசம் முற்றும்.

MANTIRA CATTIRAN

மந்திர சாத்திரம்

No. 1358. CATTURU-CAMHĀRAM [MANTIRA-CĀTTIRAM]—[PROSE]

சத்துரு சம்ஹாரம் [மந்திர சாத்திரம்]—[உரைநடை]

[652]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{5}{8}''$. Pages, 10. Lines, 9 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is a Mantra for destroying enemies with the help of Cakti. At the end there is a Viruttam and a Yantra for worship.

Complete.

குறிப்பு: இது, மந்திரத்தைப் பற்றிக் கூறுகின்றது. சத்தியைப் பற்றிய மந்திரமாகும். முதலில் சூர்ணிகையாகவும் ஈற்றில் விருத்தம் போலும் வருகின்றது இறுதியில் முருகக்கடவுளைப் பற்றித் துதி கூறுகின்றது. இதைப்பற்றிய ஏனைய விவரங்கள் அறிய முடியவில்லை. இறுதியில் ஒரு சக்கரம் அமைத்திருப்பது குறித்து இது முற்றும் உளது என்று தெரிகின்றது.

பூர்த்தி.

Beginning:

ஓம் அரகர நமசிவாய ஆநந்தரூபனுய ஆதிகேசரத்னுய அட்சரப் பிரதேசனுய அகில புவனுதனுய அதிரச மகேசனுய அமராய க்ஷமராய சமோ சிடமடம். திரிசூலிட மாரநந்தி ஆனந்த பைரவி .....டந்தை பைரவி, கால பைரவி காலகண்ட பைரவி. அண்ட பைரவி அண்டரண்ட பயிரண்ட பைரவி, கண்ட .....ண்ட மயிட சங்காரி. அரே ஆயிஅரே ஆயி அரே ஆயி அரேபாயி அரே மாயி......அ......ரமாயி...........

*   *   *   *

End :

...........ஆதிபுவனேசனே சிவசிவ மகேசனே சிவாநந்தனே-நித்தனே கர்த்தனே நீலமயிலேசனே. சுத்தனே அத்தனே சூரசம் மாரனே அகில புவனந் தொழும் ஆதியே சோதியே ஆறுமுகப் பெருமானே.

விருத்தம்

ஓராறு முகத்தோ ருவா சரணம்
நீராய் நிலனாய் எரிகால் வெளியாய்
நினைவார் நினைவின் பொருளே சரணம்
ஓராய் நடுவாய் முடியாய் நிறைவேலாயுதனே சரணம்.

No. 1359. CITAMPARA-CAKKARATTIL-PAÑCĀKKARA-VAKUPPU—[PROSE]

சிதம்பர சக்கரத்தில் பஞ்சாக்கர வகுப்பு—[உரைநடை]

[622-F (1)]

Size, $7\frac{1}{4}'' \times 1\frac{5}{8}''$. Pages, 10. Lines, 11 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note : This is an exposition in prose on the Pancākkara portion in Citampara Cakkarm.

Incomplete.

குறிப்பு : இது, சைவ சம்பந்தமானது, பஞ்சாக்ஷரத்தைப் பற்றிய விவரங்களைக் கூறுவது. எழுதியவர் முதலிய விவரம் தெரிதற்கூடவில்லை. உரை நடையில் உள்ளது. பஞ்சாக்ஷரத்தை மந்திரமாகக் கொண்டுள்ளது. இப்பிரதி முற்று மில்லை. எல்லா ஏடுகளும் இறுதி பாகம் ஒடைந்துபோ யுள்ளன.

அபூர்த்தி.

Beginning:

நடுவில் ஒற்றை யறையில் ஓங்காரம் யி(இ)தின் மேற்ப(மேற்) பிறந்தது. ஹரிரஊ. விரிர ஓங்............ரம் யி(இ)தன் மேற் பிறந்தது. முதல் மந்திரம் ஒரு ஆ......சிவாய்ந்து யி(இ)னிச் சக்கரம் எழுத்தி.........யிருபத்தஞ் சறைக்குள் சிகார வகாரமாய் நிற்கும். யி(இ)ந்தச் சக்கரத்தில்................சுவாமிகளுக்குக் கூத்து.

* * * *

End:

ஓம் ஸ்ரீம் ஸ்ரீம் அறும ஆயநமசிவாய தலை தலை யரங்......... யிலை சுவிரம் மூடணும்.........சப அனம் ஓம் உமக்கு ஓம் ஔம் சிம் விம் மாட்டு.........சிவன் மாயே சுவாமடாப்ப நமப்பரம எரி நற சீர் பெறுமனுதி சவாக.........டியேடுபரி நித்திய மகித்தியம் புரி வோர் கதிரவ னெழுமுன்...கண்ணும் சிவ.........

No. 1360. PUVANAI-MANTIRAM—[TEXT]

புவனை மந்திரம்—[மூலம்]

[1258-A]

Size, $7\frac{1}{8}'' \times 1\frac{3}{8}''$. Page, 42. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, New.

Note: This is a Mantra pertaining to Canti. The effect of this Mantra is said to remove diseases.

Incomplete.

குறிப்பு: இது, சத்தியைக் குறித்த மந்திரங்களைக் கூறுகின்றது. இயற்றியவர் பெயர் முதலியவை அறியக்கூடவில்லை. முதல் ஏடு இல்லை. இப் பிரதி நூல் முற்று முள்ளது. இறுதி இரண்டு ஏடுகளில் மந்திர சக்கரங்கள் வரையப்பட்டுள்ளன. பிழைகளுள்ளன.

அபூர்த்தி.

Beginning :

குரநின்றும் வன்னியென்ற வக்கினி தான்
சோதி மூலம்
மகத்தான மூலமடா நெற்றிக் கண்ணில்
....

புண்ணியனே யென்ன சொல்வேன் கமலம்போல
பூரணசந்தி ரோதயம்போல் சோதி காணும்
கண்ணிறைந்த சோதியிலே மலர்க்கண் வந்து
கருணையுடன் ஷாட்டங்கம் தன்னைப் பாரே. 3

* * * *

End :

துலங்கவே சிங்கமுதல் தேளு மீனம்
துரியமாய் நின்றதொரு ரிஷபத்தினகீழ்
கலங்கவே கலந்துநின்ற ரிஷபந் தன்னில்
கணக்காக நீசேர்த்துக் கும்பத்திட்டு
இலங்கவே விருச்சிகத்தின மேலே தானும்
இதமாகக் கன்னியிலேபோட்டு மைந்தா
குலுங்கவே அவுஷத்தைக் குருவா யிட்டு
குருவாக நீயிருந்து தியானமுற்றே.

புவனை புஷ்தக முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

Colophon :

புவனை வியாதி உச்சாடனம்

இந்த புவனைச் சக்கரத்தில் மாரி(றி) யிறு(ரு)க்கு(கி)ற அடியை ....ஓம் றீ(ரீ)ங் அங் உங் கென்று உறு(ரு) 1008 செபித்துச் சக்கற(ர)த்துக்கு மஞ்சள் சாத்தி யெ(எ)ந்திரத்தை நூல்கட்டிக் கணபதிக்கி(கு) பூசைபண்ணி............டற்(ர்)க்கு சிற்சில கட்டக பால வலி கபாலத்துக்கு பீனிசம். சிற(ர)சிலுள்ள வியாதி யெல் லாம் நிவிற்(ர்)த்தியாகும். இந்தப்படி புவனை தியானத்தால் தீறு(ரு)ம். தேனில் 1008 உரு செபித்து ஸ்ரீகளுக்கு வீடு புறம்பான தினமே சாப்பிடச் சொல்லவும்; மூணு நாளும் தேனில் தியானித்து கொடுக்க மலடாயிருந்தாலும் கெர்ப முண்டாம். இதுவே சந்தான வித்தை.

இந்த யோக சூ...த்தில் பஞ்சாக்ஷரம் அஷ்டாக்ஷரம் சடாக்ஷரம் வாலை புவனை திருபுரை வயிரவன் கணபதி குருத்தியானம் இவ்வளவும் இந்த யோக சூ..ம் பிரித்து பரத்தால் தேவையான அக்ஷரங் கொடுத்து பின்னும் ஏகமயமாய் இருக்கும். இந்த ஏக சூ...மான அக்ஷரம் கிரந்த வாக்கியத்துப் பிரகாரம் பார்க்கவும். இதுவே ஆருதாரத்துக்கு சண்முக யோக சூ...ம்.

No. 1361. PUVANAI-MANTIRAM—[TEXT]

புவனை மந்திரம்—[மூலம்]

[817]

Size, 9″×1″. Pages, 70. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1360. The Mss. calls the work Tirumantiram Puvanai.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1360 பிரதி போன்றது. திருமந்திர புவனை என்ற பெயர் சுவடியில் காண்கிறது.

அபூர்த்தி.

Beginning:

இருந்திட் டசக்கரத்தி னியல்பு கேளு
    இதமாக(வ்) விணை(வனை)யம்போல் கீறிக் கொண்டு
அருந்திட்ட நவரேகை பேரைக் கேளு
    ஆதித்தன் ரேகையொன்று திங்க ளொன்று
தெரிந்திட்ட செவ்வாயின் ரேகை யொன்று
    செயலான புதனுடைய ரேகை யொன்று
பரிந்திட்ட குருவினுடை ரேகை யொன்று
    பாங்கான சுக்கிரன்தன் ரேகை யொன்றுதானே. 2

* * * *

End :

தெற்கு அனங்க மதனு
மேற்கு அனங்க மதனு துள
வடக்கு அனங்க ரேகா
அ(க்)கினி அனங்க வேதினி
நிருதி அனங்காங் குசம்
வாக வாயு அனங்கமாலினின்.

ஈசானியம். இதுக்கு மூலம் :—ஹ்றீங் இரீங் கியையு......

No. 1362. MANTIRA-CĀTTIRAM—[PROSE]

மந்திர சாத்திரம்—[உரைநடை]

[800]

Size, $10\frac{1}{4}'' \times 1''$. Pages, 22. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Thls seems to be a work on the Six Ātāra's in the hūman body through which Kuṇṭalini passes with Mantras and Cakrās for worship of the Devatas in these Ātāras. The Mss. in injured. Other particulars are not known.

Incomplete.

மெட்டாகும் படையாட்சிமின் னேரேழாகும்
மருட்பெரு மச்சேசா வொன்பான் னாற்பத்தே
மூம்பதிக மகவலுடன் பாட்டறு நூற்றன்பத்தஞ்சே. 3

திருச்சிற்றம்பலம்.

Colophon:

யுவஹு மாசிமீ 2உ கொசையம்பதி தெய்வராய வாத்தியார் திருஅல்லிக்கேணியி லிருக்குஞ் சோலையப்ப முதலியார் குமாரன் அப்பாசாமிக்கு எழுதின திருவாசகம் முடிந்தன.

முற்றும்.

No. 1421. TIRU-VĀCAKAM—[TEXT]

திருவாசகம்—[மூலம்]

[635]

Size, $4\frac{1}{4}'' \times 1\frac{7}{8}''$. Pages, 254. Lines, 17 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1415.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1415 பிரதி போன்றது. ஆயினும் முதற்கண் நம்பியாண்டார் நம்பி அருளிய விநாயகர் இரட்டை மணிமாலையில் முதற்கண் வரும் செய்யுளை விநாயகர் காப்பாகக் கொண்டுள்ளது. நூல் முற்றும் உள்ளது.

பூர்த்தி.

No. 1422. TIRU-VĀCAKAM—[TEXT]

திருவாசகம்—[மூலம்]

[810-A]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 68. Lines, 20 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1415.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1415 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1423. TIRU-VĀCAKAM—[TEXT]

திருவாசகம்—[மூலம்]

[1163]

Size, $9\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 356. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1415.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1415 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1424. TIRU-VĀCAKAM—[TEXT]

திருவாசகம்—[மூலம்]

[1164]

Size, $5\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 300. Lines, 12 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note: Same as No. 1415.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1415 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1425. TIRU-VĀCAKAM—[TEXT]

திருவாசகம்—[மூலம்]

[1195-B]

Size, 1″ × $1\frac{7}{8}$″. Pages, 68. Lines, 22 on a page. Condition, Injured. Appearance, New.

Note: Same as No. 1415.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1415 பிரதி போன்றது.

பூர்த்தி.

Colophon:

...........வானந்த சிவகுருநாதன் திருவடி வாழ்க. இந்தத் திருவாசக மெழுதினேன் சிதம்பரமூர்த்தி.

காளத்தி விநாயகன் துணை.

No. 1426. TIRU-VĀCAKAM—[TEXT]

திருவாசகம்—[மூலம்]

[778]

Size, $6\frac{3}{4}$″ × 1″. Pages, 300. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, New.

Note: Same as No. 1415 but incomplete.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1415 பிரதியைப் போன்றது; ஆயினும் திருவம்மானையிலிருந்து தொடங்கியே இறுதி வரையுள்ளது. இடையிலும், குயிற்பத்து, திருப்பள்ளியெழுச்சி இவைகள் இல்லை.

அபூர்த்தி.

No. 1427. TIRU-VĀCAKAM—[TEXT]

திருவாசகம்—[மூலம்]

[1165]

Size, 8″ × 1¼″. Pages, 42. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1415.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1415 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் 'திருவெம்பாவை' வரையுள்ளது.*

அபூர்த்தி.

No. 1428. TIRU-VĀCAKAM—[TEXT]

திருவாசகம்—[மூலம்]

[1170-A]

Size, 7½″ × 1¾″. Pages, 148. Lines, 13 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1415.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1415 பிரதி போன்றது. முதலில் இரண்டு ஏடுகள் காணப்படவில்லை.*

அபூர்த்தி.

No. 1429. TIRUVĀCAKAM-TIRU-P-POR-C-CUṆṆAM—[TEXT]

திருவாசகம் திருப்பொற் சுண்ணம்—[மூலம்]

[880]

Size, 8″ × 1⅛″. Pages, 18. Lines, 22 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This Mss. contains one Pathikam from the work i.e. Tiru-Vā-Cakam.

Complete.

குறிப்பு: இது, திருவாசகத்திலிருந்து எடுத்தெழுதிய ஒரு பதிகம் கொண்டது. செய்யுட்களில் சில விடங்களில் தவருகச் சொற்கள் விடப்பட்டுள்ளன.

பூர்த்தி.

Beginning:

முத்துநற் ருமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூயநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி
ஆடப்பொற்சுண்ண மிடித்து நாமே.

* * * *

End:

வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்பமு மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
(காதியு மந்தமு ஆயினாருக்)
காடற்பொற் சுண்ண மிடித்துநாமே.

No. 1430. TIRU-VĀCAKAM-TIRU-P-POR-C-CUṆṆAM—[TEXT]

திருவாசகம் திருப்பொற் சுண்ணம்—[மூலம்]

[68-II (E)]

Size, 14″×1″. Pages, 8. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1429.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1429 போன்றது.*

பூர்த்தி.

No. 1431. TIRU-VĀCAKA-AṈUPŪTI-UṞAI [TEXT AND ANNOTATIONS]

திருவாசக அநுபூதியுரை—[மூலமும் உரையும்]

[86]

Size, $15\frac{1}{2}$″×$1\frac{5}{8}$″. Pages, 362. Lines, 17 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains the Text of Tiruvācakam and a learned commentary on it by one Tāṇtavarōyar of Cīkaḻi. The work is printed in the Library.

Complete.

குறிப்பு: *இது, சீகாழித் தாண்டவராயர் அவர்கள் எழுதிய வியாக்கியானத்துடன் கூடியது. இதற்கு அநுபூதியுரை என்று பெயர். நூல் முழுதும் இந்நிலையத்தில் அச்சாகியுள்ளது. (முதற்கண் ஒரு ஏடு இல்லை).*

பூர்த்தி.

Beginning:

......ரருளிய அந்தாதிப் பிரபந்தத்தில், என்னை நினைந்தடிமை கொண்டெனிடர் கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றான் என பதைக் காண்க.

சற்குரு வணக்கம்.

அறுதிகே வலத்தி லாழ்ந்திடு மல்ல
    லதுதனை யருட்கணால் நோக்கி
மறுதி கடந்து மறிவிலா துழலும்
    வகைகண்டு மன்னுமெய் கொண்டே
யெறுது பாசங்க ளெழுவித்த் தாலு
    மீடழித் தின்ப வாரிதியாந்
தறுது மெய்ப்பதங்க டருகுரு சுவாமி
    சரணடைந்து திருவாசகவுரை பகர்வாம்.

கருத்து

தேவர் பிரானுன மகாதேவர் வளர் கயிலைக்காவலான சிலாத முனி புத்திரர் நந்தி நாயனுர் அருள்வதான கருணைச் சம்பிரதாய சுத்த சைவ சித்தாந்த மெய்கண்ட சந்தானம் விளங்காநின்ற செல்வத் திருவாரூரில் திருத்தொண்டடிகள் மரபின்கண் என் பொருட்டுத் திருமேனி கொண்டு எழுந்தருளிய சிவகுருநாதனுன குருசுவாமி பொற்பாத கமல வணக்கம்.

*   *   *   *

End :

செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறிவித்து முதலாய முதல்வன்று
னம்மையுமோர் பொருளாக நாய்ச்சிவிகை யேற்றுவித்த
வம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

ரேடியார்களே யோராநந்தங் கேண்மோ; சிவஞான போத சித்தி பிரகாசிக்காத அறிவில்லாதாருடன் கூடிய பாவியை மும் மலங்களைய ஆதி முதல் எழுந்தருளி, நமமையொரு பொருளாகத திருவுளங்கொண்டு உபதேசஞ் செய்தருளி, அடிமை யாக்கி நாயைச் சிவிகை ஏற்றியதுபோலக் குஞ்சிபாதம் அபேதவத்துவித பரமுத்தி யருள்வதான கருணையை யாரறிவார்கள்? எனக் கருணையை யிரங்கி வியந்தருளிய தெனக் காண்க. இவை பரம குரு தரிசனம்.

அச்சோபத்து முற்றிற்று.

Colophon :

அகத்திய சூத்திர மன்பதத்தொன்று மருளிமேல் வருவதான ஆணிப் பொன்னுல் மிளிர்மணி மதிற்றில்லையுள், மாணிக்கவாசகன் மாசறு சொற்படி, அழகிய திருச்சிற்றம்பல முடையான் எழுதிய திருவாசகத் தனுபூதியை, மிகத்தரு ஞான விநோதன் குகனடி யகத்துணர் ஞான வகத்தியன் ஞெருகுத்தனன். செகத் தறிவுடையோர் தெளிதாற் பொருட்டே யென வருளியது......... யளவாக்கி, பொழிப்புரை, செல்வத்திருவாரூர் சிவகுருநாத தேசிக னருளியதா லந்த குருநாத னெமதுபதேச குருவனுக்கிரகஞ் செய்தபடி பதவுரை யனுபூதியவை சொல்லுவ தறியேன், வாழி தோராரிய தோற்றம் போலும் வல்லை யென்றருளி யென்னை வழித் தொண்டு கொண்டு எல்லையிலின்ப வெள்ளமெனக் கருள் செய்து தில்லையம்பலத்து ளாடுஞ் சேவடி போற்றிப் போற்றி யிவ்வுரை யடியாரனுக் கிரகப்படி 'பொதுப் பாயிரமானதிலே சொல்லிய பரம்பரைப்படி சீகாழி யிராசாத்துரைப் பிள்ளை யிடமாக வருளியது. மன்மத வருடம் மார்கழித் திங்களாக்கிப் பிறிதி ஞமமான தாண்டவராயன், ...ளாருந்தேதியிற் றில்லைச் சிற்றம்பலவாண நாதனுர் சன்னிதியிற் றிருவுள மிரங்கி திருச்சீட்டு அருளிற்றிவ் வுரை யடியார்களையோ வை (?) கொள்ளும்படியாகவனுக் கிரகம் பண்ணியதெனக் காண்க. திருச்சிற்றம்பலம். தஞ்சை நகரஞ் சீமையில் பட்டுக்கோட்டை தாலுக்காவைச் சேர்ந்த வெள்ளாம் பத்துச் சீர்மைக் கரத்துமுள்ள புனங்களுக்குங் காட்சி கொடுக் கும் பொருட்டாயும் பூலோக கயிலாசமாகியும திருவாத வூரர்க் கனுக்கிரகஞ் செய்யுங் குரு முகூர்த்தமாகியு மெழுந்தருளிய திருப் பெருந்துறை யமர்ந்த ஆத்தும நாதர் யோகாம்பிகை கிருபாக டாட்சம் பெற்ற ஷையூர் ராமசுவாமி பாரதியென்பவன் சீர்காழிச் சேத்திரத்தில் வசிக்குந் தாண்டவராயப் பிள்ளையிவர்கள் திருவாசகத் துக்கு உரையருளிச் செய்த சாம்பிரதாயத்தைக் கேட்டுத் துதி சொன்னது. குறுமுனி ஏழுகடலையும் பருகும் கொள்கைபோற் றில்லை யினடஞ் செய்துறுமவன் மகிழ்ந்து திருவுளச் சீட்டுங் குதவு முத்தரவினுற் சிறந்த, மறுவிலா விடையான் றிருவடிப் பெருமை வாத வூரையன் முன் வகுத்த, சறுவநற் கருத்துந் தாண்டவராயன் றகுமுரை செய்தனன் றமிழால். திருச்சிற்றம்பலம்.

சற்குரு துணை.

No. 1432. TIRU-VĀCAKA-AṈUPŪTI-UṞAI

[TEXT AND ANNOTATIONS]

திருவாசக அநுபூதியுரை—[மூலமும் உரையும்]

[998]

Size, 18″ × 1¼″. Pages, 664. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : Same as No. 1431.

Complete.

குறிப்பு : *இது, முன் எண் 1437 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1433. TIRU-VĀCAKA-T-TIRATTU—[TEXT]

திருவாசகத்திரட்டு—[மூலம்]

[805-B]

Size, 9¾″ × 1¾″. Pages, 8. Lines, 13 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This Mss. contains a few selections from the entire work Tiru-Vācakam.

Complete.

குறிப்பு : *இது, திருவாசகத்திலுள்ள சில பாக்களையுடையது. நூல் முற்று முள்ளது.*

பூர்த்தி.

Beginning :

கண்க ளிரண்டு மவன்கழல் கண்டு களிப்பன வாகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வு கடைப்படும்
[ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதமி ரண்டும் வணங்குது மாகாதே

பண்களி கூர்தரு பாடலொ டாடல் பயின்றிடு மாகாதே
 பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள் பாடுது
 [மாகாதே
விண்களி கூர்வதொர் வேதகம் வந்து வெளிப்படு மாகாதே
 மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாகிடிலே.

* * * *

End:

புரள்வார் தொழுவார் புகழ்வாராய்
 இன்றே வந்தா ளாகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார்
 மதியுட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீ ராகில் இதுசெய்மின்
 சிவலோ கக்கோன் திருப்புயங்கன்
அருளார் பெறுவார் அகலிடத்தே
 அந்தோ அந்தோ அந்தோவே. 10

திருச்சிற்றம்பலம்.

No. 1434. TIRU-VĀCAKA-T-TIRATTU—[TEXT]

திருவாசகத்திரட்டு—[மூலம்]

[40-A]

Size, $15\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 2. Lines, 9 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note: This is a different one from the one described in previous No. 1433. This is also called Akattiya-T-Tirattu and contains a list of stanzas from the work, Tiruvācakam. The Mss. is very much injured.

Complete.

குறிப்பு: இது, திருவாசகத்திலுள்ள பதிகங்கள் இன்னின்னவெனத் தொகுத்துப் பட்டாகப் பாடப்பட்டுள்ளது. இயற்றியவர் பெயர் முதலியவை அறியக்கூடவில்லை. முன்பக்கம் 'திருவாசகத் திரட்டு' என்றும், பின்பக்கம் 'அகத்தியர் திரட்டு' என்றும்

எழுதப்பட்டுள்ளது. சுவடி பூராவும் செல்லரிக்கப்பட்டிருப்பதனாலும், மக்கி உடைந்திருப்பதனாலும் படித்தறிய முடியவில்லை. நூல் முற்றுமுளது.

பூர்த்தி.

Beginning :

சிவபுராணங் கீர்த்தித் திருவகவல்..............போற்றித் திருவகவல் முதல்நான்..................

*   *   *   *

End :

திரும்............மூன்று............கங்குலாய............

No. 1435. TIRU-VĀCAKAM-AKATTIYAR-KURAḶ-MUTTIṞAI

திருவாசகத்திற்கு அகத்தியர் குறள்முத்திரை

[560-B]

Size, 7″×2¼″. Pages, 6. Lines, 15 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This work consists of short headings for each Patikam of Tiruvācakam to explain the purport of the subject-matter. These verses are printed along with the Text of Tiruvācaka Aṉuputi Urai published by the Library.

Complete.

குறிப்பு: இது, திருவாசகத்திற்கு அகத்தியர் அருளிய குறள் முத்திரை. இது திருவாசக அனுபூதி யுரையுடன சேர்த்து அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் அவை முற்று முள்ளன.

பூர்த்தி.

Beginning :

1-ஆவது, சிவபுராணம். திருவளர் பெருந்துறை
சிவவுன்மத்தன் அருளிய திருவாசகச் சிவபுராணம்

அநாதியுடனு நின்மல சிவனுடை
யநாதி முறைமை யான பழமை.

2-ஆவது, மூர்த்தமான சீர்த்தி யருளகவல்
சிவனுடைய வருளின் முறைமை.

* * * *

End :

மின்னே ரனைய வானந்த மாலை
மன்னுநீ செயல் வழக்கழி வென்றது. 50

நிச்சய முணர்த்து மச்சோப் பத்து
அனுபவம் வந்த வழி யறியாமை. 51

ஆணிப் பொன்னால் மிளிர் அணிமதில் தில்லையுள்
மாணிக்கவாசகர் மாசறு சொற்படி யழகிய
சிற்றம்பலமுடையா ரெழுதிய திருவாசகத் தனுபூதியை
மிகத்தரு ஞான விநோத குகனடி
அகத்துணர் ஞான வகத்தியன் ஒருத்தனன்
செகத்தறி வுடையோர் தெளிதரற் பொருட்டே.

No. 1436. TIRU-VĀCAKAM-AṬIVARAVU

[INDEX]

திருவாசக அடிவரவு—[அட்டவணை]

[636-P]

Size, 4″ × 1¼″. Pages, 5. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This work is an index in verse of the stanzas in Tiruvācakam.

Complete.

குறிப்பு: இது, மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகத்தின் செய்யுள் விவரமும் சிறப்பும் கூறுவது. இந்தப் பிரதி முற்றுமுளது.

பூர்த்தி.

Beginning:

வாதவூ ராடியெனு மாணிக்க வாசகராங்
கோதுதமிழ் மாலையாய்க் கூறியிடுங்—நீதிலாச்
சீரான செல்வச் சிவபுரா ணத்தகவ
லாரா ....காணு மாதியாய்—நேரான

*   *   *   *

End:

அடியார்க ளிட்ட மவையெலாந் தந்து
குடியா யவரிறையும் கொள்வோன்—படிமீதில்
போதமலர் கொண்டுதின மச்சிக்கு மன்பர்க்குப்
பாதமலர்ந் தருளெலாம் பாலிப்போன்—காதல்
பெருகு மடியா ருளம்பெயரா மல்நின்று
மருவி யருள் புரியும் வள்ளல்.

No. 1437. TIRU-VĀCAKAM-PATIKA-T-TOKAI

திருவாசகப் பதிகத்தொகை

[587-G]

Size, $26\frac{1}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 2. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is another Index of the Pathikams of Tiruvācakam.

Complete.

குறிப்பு: இது, திருவாசகப் பதிகத்தின் தொகையைக் கூறுவது. நூல் முற்றுமுளது.

பூர்த்தி.

Beginning :

சிவபுராணங் கீர்த்தித் திருவண்டப்பகுதி
போற்றித் திருவகவல் நான்காஞ்சதகம்
நூறு மிவர்நீத்தல் விண்ணப்பம்
மன்பதாகு மெம்பாவையும் மானே.

* * * *

End :

ஆக அதிகாரப்பதிகம் 47-உம், பாட்டு 654. ஆகத்தொகை 658.

No. 1438. ONPATĀM-TIRUMURAI

ஒன்பதாம் திருமுறை—[மூலம்]

[1171]

Size, $12\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 54. Lines, 10 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : The Ninth Tirumuṟai consists of Tiru-V-Icai-P-Pas by Tirumaḷikai-T-Tēvar, Cēntaṉār, Karuvūr-T-Tēvar, Nampi-Kāṭa-Nampi, Kaṇṭaratittar, Vēṇa-T-Aṭigal, Tiru-V-Āli-Amutaṉār, Puruṭōttama Nampi and Cēti-Rōyar and a Tiru-P-Pallāṇṭu by Cēntaṉār.

Complete.

குறிப்பு : இது, திருமாளிகைத் தேவர் முதலிய 9 ஆசிரியர்கள் பாடிய திருவிசைப்பாக்களும், சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டும் கொண்டது.

பூர்த்தி.

Beginning :

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே

யறிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

* * * *

End :

எந்தையே யெந்தாய் சுற்றமு முற்று
மெமக்கமு தாமெம்பிரா னென்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன் சீரடி
யாரடி நாய் செப்புறை
யந்தமி லானந்தச் செந்தேனைப்
புகுந்தாண்டு கொண்டா ருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவனே யென்று
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.

No. 1439. ONPATĀM-TIRUMURAI—[TEXT]

ஒன்பதாம் திருமுறை—[மூலம்]

[564-B]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 38. Lines, 13 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note : Same as No. 1438. The title is given as Tiru-V-Icaippa.

Complete.

குறிப்பு : *இது, முன் எண் 1438 பிரதி போன்றது. சுவடியில் 'திருவிசைப்பா' என்று பெயர் எழுதப்பெற்றுள்ளது.*

பூர்த்தி.

No. 1440. ONPATĀM-TIRUMUṞAI—[TEXT]

ஒன்பதாம் திருமுறை—[மூலம்]

~~[1395-C]~~ 1195-C

Size, 1″×1⅞″. Pages, 31. Lines, 19 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1438. The title given on the Mss. is Tiruvicaippā and Tiru-P-Pallāṇṭu.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1438 பிரதி போன்றது. சுவடியில் திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.*

பூர்த்தி.

Colophon:

ஆகச் செய்யுள் 301. சிவகுருநாத சுவாமி பாதமே கெதி. உ. நமச்சிவாய தேசிகன் பாததாமரையே கதி. உ. பெருங் கருணை நாயன்மார் பாதமே நம்பினேன். நாயன்மார் இருபையா லெழுதினேன். சிதம்பரமூர்த்தி. உ.

காருகுறிச்சி சாளத்திவினையகன் துணை.

No 1441. ONPATĀM-TIRUMUṞAI—[TEXT]

ஒன்பதாம் திருமுறை—[மூலம்]

[1170-B]

Size, 7½″×1¾″. Pages, 70. Lines, 13 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1438.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1438 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1442. [OṈPATĀM-TIRUMURAI] TIRU-V-ICAIPPĀ

[ஒன்பதாம் திருமுறை] திருவிசைப்பா

[830]

Size, $17\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 56. Lines, 9 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1438. This contains all the Tiru-V-Icaippas of the Ninth Tirumurai except Tiru-P-Pallāṇṭu.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1438 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் கண்டராதித்தர் திருவிசைப்பா முதல் சேதிராயர் திருவிசைப்பாவரை யுள்ளன.*

பூர்த்தி.

No. 1443. [OṈPATĀM-TIRUMRAI] TIRU-V-ICAIPPĀ—[TEXT]

[ஒன்பதாம் திருமுறை] திருவிசைப்பா—[மூலம்]

[684]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 64. Lines, 12 on a page. Condition, Good. Appearance, Old.

Note: Same as No. 1438.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1438 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1444. [OṈPATĀM-TIRUMUṞAI] TIRU-V-ICAIPPĀ—[TEXT]

[ஒன்பதாம் திருமுறை] திருவிசைப்பா—[மூலம்]

[637-B]

Size, $6\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 22. Lines, 10 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1438 but it contains the Tiru-V-Icaippas of Tiru-Māḷikai-T-Tēvar and Karuvur-T-Tēvar of the Ninth Tirumurai works only.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1438 பிரதி போன்றது. ஆனால் திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர் ஆகிய இருவர் அருளிச் செய்த திருவிசைப்பாக்களே உள்ளன.

அபூர்த்தி.

No. 1445. TIRU-V-IṬAI-K-KAḺI-TIRU-V-ICAIPPĀ—[TEXT]

திருவிடைக்கழி திருவிசைப்பா—[மூலம்]

[612]

Size, $7\frac{1}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 4. Lines, 13 on a page. Condition, Very injured. Appearance, Very old.

Note: This work is by Cēṇtaṉar and is among the Ninth Tirumurai works.

Complete.

குறிப்பு: இது, ஒன்பதாந் திருமுறை நூல்களுள் ஒன்று; சேந்தனார் அருளியது. நூல் முற்று முளது. அச்சாகி யுள்ளது. இப்பிரதியில் முதல் ஏடு உடைந்து பிற்பாதி பாகமே யுள்ளது.

பூர்த்தி.

Beginning :

......லாமனந் தென்கையிற் சங்கம் வவ்விளேன்
மலைமகண் மதலை
மேலுலாம் ......குலமுழு தாளுங் குமரவேள்
வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியிற்
றிருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்த
னென்றுமென் மெல்லிய லிவளே.

* * * *

End :

கொழுந்திரள் வயார் தா......மொழி யாகத்
தூய்மொழி யமரர்கோ மகனைச்
செழுந்திரள் சோதி செம்புனீர் சேந்தன்
வாய்ந்தசொல் லிவைசுவா மியையே

No. 1446. TIRU-P-PALLĀṆṬU—[TEXT]

திருப்பல்லாண்டு—[மூலம்]

[637-C]

Size, $5\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 8. Lines, 9 on a page. Condition. Fair. Appearance, Old.

Note: This contains only the Tiru-P-Pallāṇṭu—a song from the 9th Tirumurai.

Complete.

குறிப்பு : இது, சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டு மட்டும் கொண்டது.

பூர்த்தி.

Beginning :

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
வன்ன நடைமட வாளுமை கோனடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்கநெறி தந்தபித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே. 1

* * * *

End :

எந்தை யெந்தாய் சுற்றுமுற்று மெமக்கமுதா
மெம்பிரா னென்றென்று
சிந்தை செயுஞ்சிவன் சீரடி யாரடி
நாய்செப் புறை
யந்தமி லானந்தச் சேந்த னெனைப்புகுந்
தாண்டுகொண் டாருயிர்மேற்
பந்தம் பிரியப் பரிந்தவ னேயென்று
பல்லாண்டு கூறுதுமே. 13

No. 1447. TIRU-V-ICAIPPĀ-AṬIVARAVU

[INDEX]

திருவிசைப்பா அடிவரவு—[அட்டவணை]

[636-O]

Size, 4″×1¼″. Pages, 4. Lines, 11 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This is an index of 1st lines in the 9th Tirumurai.

Complete.

குறிப்பு : இது, திருவிசைப்பா பாடியருளியவர்களின் பெயரும், பாடலின் தொகையும் குறிக்கப்பெற்றுள்ள ஒரு நூல்.

பூர்த்தி.

Beginning :

செம்பொன்மணி யம்பலத்துப் நிருத்த ஞர்க்குத்
திருவிசைப்பா வுரைத்தவர்தம் திருப்பெயர் சொல்லிற்
பம்புபுகல் செறிதிருமா ளிகைத்தேவர் பரிவுடைய
சேந்தனர் கருவூர் தேவர்.

* * * *

End :

புருடோத்தமநம்பி யருளிச்செய்த பதிகம் 2க்கு பாட்டு 20. சேதிராயதேவ ரருளிச்செய்த பதிகம் 1க்கு பாட்டு 10. ஆகப் பதிகம் 2க்கு பாட்டு 30.

திருவிசைப்பாவின் பதிகந்திருமுறை.

TENTH TIRUMURAI

பத்தாம் திருமுறை

TIRU-MANTIRAM

திருமந்திரம்

No. 1448. TIRU-MANTIRAM—[TEXT]

திருமந்திரம்—[மூலம்]

[814]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 234. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note : Tirumantiram by Tiru-Mūlar is placed as the Tenth Tirumuṟai. It contains 3000 stanzas and the works is

said to contain Agamic matter. This Mss. contains only 1050 stanzas.

Incomplete.

குறிப்பு: இது, திருமந்திரம் 3000 பாடல்களைக் கொண்டது; இதன் ஆசிரியர் திருமூலர். இதனைச் சைவ ஆகமங்களைத் தெளிவுறத் தமிழில் கூறும் நூல் என்பர். இச்சுவடியில் 1059 செய்யுட்களே உள்ளன.

அபூர்த்தி.

Beginning:

ஹரி ஓம் நன்றாக.

திருமந்திரம்

கடவுள் வாழ்த்து

ஒன்றவன் றானே இரண்டவ னின்னருள்
நின்றன னூன்றி னு ணன்குணர்ந் தானைந்து
வென்றன னாறு விரிந்தன னேழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே. 1

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக்கு நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் றிசைக்கொரு வேந்தனுங்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. 2

* * * *

End:

பன்மணிச் சந்திர கோடி திருமுடி
சொன்மணி குண்டலக் காதி யுழைக்கண்ணி
நன்மணி சூரிய சோம நயனத்தன்
பொன்மணி வன்னியும் பூரிக்கின் றானே.

No. 1449. TIRU-MANTIRAM

[TEXT AND ANNOTATIONS]

திருமந்திரம்—[மூலமும் உரையும்]

[109]

Size, $10\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 150. Lines, 9 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: Same as No. 1448. This purports to have the text and meanings of Tirumantiram. The Mss. is so much injured that the meanings are not easy to be read.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1448 பிரதி போன்றது; ஆயின், உரையுடன் கூடியது. சுவடி மிகச் சிதிலமா யிருப்பதால் உரை படிக்கக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning:

பேரயரன் றன்னைப் புகழ்வார் பெறுவது
நாயக மாகிய ஞாயமுஞ் ....
மாயவை ....
....

* * * *

End:

உணர்வும் அவனே உயிரும் அவனே
புணர்வும் அவனே புலவி யவனே
இணரும் அவன்றன்னை எள்ளலு மாகான்
துணரின் மலர்க்கந்தந் துன்னிநின் றானே.

No. 1450. TIRU-MANTIRAM-UṬAṞ-C-CAKKARA-T-TIRU-MANTIRAM—[TEXT]

திருமந்திரம் உடற்சக்கரத் திருமந்திரம்—[மூலம்]

[1250]

Size, 10″ × 1⅛″. Pages, 6. Lines, 6 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: This Mss. contains 30 stanzas. The stanzas that can be read are not easily traceable in printed Tirumantiram.

Complete.

குறிப்பு: இது, குரு சீடனுக்கு அனுக்கிரகம் செய்ததைத் திருமந்திரச் செய்யுளின் மூலம் கூறுகின்றது. இப்பிரதியில் 30 செய்யுட்களே உள்ளன. அவை அச்சிட்ட பதிப்புக்களில் காணக் கூடவில்லை. ஏடுகள் சிதிலம். கடைசி ஏடு தொளை மிகுதியாகக் கொண்டிருத்தலால் படிக்க முடியவில்லை.

அபூர்த்தி.

Beginning:

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
யி............ பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தனை
......ந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

ஈரா றெழுத்துமிசை சீரொன் ருகப்
பாரசமல் நாற்சீர்க்கும் நாற்பத்தெட் டாய்ப்பெய்து
ஆராய்ந்துப தேச மாண்டொன்றி லாதி
தேராமல் நந்தி தொகுததுரைத் தானே.

குருபாதம்.

குருவென்று வந்து குணமாய் வணங்கித்
திருநீறு .... செவியருள் செப்பி
எருவுடன் றகுமென் கையில் நீரா
லுருவுடன் கொண்டா னுடல்பொரு ளாவியையே. 1

* * * *

End:

..........மாணவ மகற்றிமே வாக்கிலி..........புவி..........
மாய்கை..........ற்..........நொது..........கலைவிட..........
தாமி......ம......க்கும் பொருளெனச் சாற்றினன் குருவே..........
உடல்சக்கரத் திருமந்திர மெழுதி வளர்ந்தது.

முற்றும்.

குருபாதந் துணை.

No. 1451. TIRU-MANTIRA-UPATECAM

[TEXT]

திருமந்திர உபதேசம்—[மூலம்]

[612-D (1)]

Size, $7\frac{1}{8}'' \times 1\frac{5}{8}''$. Pages, 5. Lines, 12 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is supposed to be a selection of 10 stanzas from Tiru-Mantiram. The Mss. is very much injured. The stanzas in this Mss. too are not found in the printed edition. This seems to be the same as No. 1450.

Complete.

குறிப்பு: இது, குரு சீடனுக்குத் திருமந்திரத்தை உபதேசித்த முறையை கூறுவது. செய்யுட்களாலாகியது. இயற்றியவர் முதலிய குறிப்புக்கள் அறியக்கூடவில்லை. ஏடுகள் ஓரங்களில் முறிந்து சிதிலமாயுள்ளது. நூல் பூர்த்தியா யுள்ளது. எண் 1450 போன்றது.

பூர்த்தி.

Beginning:

குருவே வந்து குணமாய் வணக்கித்
திருநீறு சாத்திச் செவியரு ளொழுப்பி
எருவுட னறுகு மென்கையில் நீரா
ஒருவுடன் கொண்டா னுடல்பொரு ளாவியே. 1

* * * *

End:

ஆக்குஞ் சுழி திரிந் தாணவ ஆணவமன்னிடும்
நோக்கி லிடையிட .... காமியமாறும்
வாக்கி லிடைவிடா மாய்கையு மற்றிமூந்
தாக்கும் பொரு ளென்று......ஞ னந்தியே.

திருமந்திர உபதேசம் முற்றும்.

ஞானசம்பந்தன் நீடுவாழி.

No. 1452. TIRU-MANTIRATTIN-CEIDI-ARIYA

[TEXT]

திருமந்திரத்தின் செய்தியறிய—[மூலம்]

[596-B]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 8. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains stanzas, which though agreeing a little with the verses in the printed edition varies widely in wors.

Complete.

குறிப்பு: *இது, திருமந்திரப் பாடல்கள் சிலவற்றை அடியொற்றிப் பாடிய சில பாடல்களைக்கொண்டதாகத் தெரிகிறது.*

பூர்த்தி.

Beginning:

மாமலர் நாலையும் வட்டத்தில் மேலிடு
மாமலர் நாலிலவ் வாது சவ்விடு
மாமலர் நாலில் வயிற்று னுள்ளே
ஓமென வினாயக .... நின்றானே.

* * * *

End :

மரத்தை மறைத்தது மாமத யானை
அத்தை மறைத்தது அறுதலைப் பூதம்
பொன்னை மறைத்தது பொன்மணி பூஷணம்
என்னை மறைத்தது என்கர ணங்களே.

No. 1453. TIRU-MANTIRA-T-TIRAṬṬU

[TEXT]

திருமந்திரத் திரட்டு—[மூலம்]

[560]

Size, 7″ × 2¼″. Pages, 120. Lines, 15 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This Mss. consists of only 760 stanzas selected from the bigger work, Tiru-Mantiram.

Incomplete.

குறிப்பு: இது, திருமந்திர நூலிலிருந்து திரட்டியெடுத்த 760 பாடல்களைக் கொண்டுள்ளது.

அபூர்த்தி.

Beginning :

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குட்டென் றிசைக்கொரு வேந்தனுங்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே.

ஒன்றவன் றானே யிரண்டவ னின்னருள்
நின்றனன் மூன்றினு ணான்குணர்ந் தானைந்து
வென்றனை றாறு விரித்தனே ழும்பர்ச்
சென்றனன் றானிருந் தானுணர்ந் தெட்டே. 1

சிவனோடொக் குந்தெய்வந் தேடினு மில்லை
அவனோடொப் பாரிங் கியாவரு மில்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடி தாமரை யானே. 2

* * * *

End:

ஏயுஞ் சிவபோக மீதன்றி யேரொளி
யாயு மறிவையு மாயா வுபாதியா
லேய பரிய புரிந்தன தெய்து
சாயுந் தனது வியாபகத் தானே. 1

உணர்வு மவனே வுயிரு மவனே
புணர்வு மவனே புலனு மவனே
யிணரு மவன்றன்னை யெண்ணலு மாகான்
றுணரின மலர்க்கந்தந் துன்னிநின் றானே. 2

ஆகப் பாட்டு 760.

Colophon:

திருமந்திரம் மூவாயிரத்தி லெடுத் தெழுதினது. துன்முகி வருஷம் ஆவணிமீ 22உ ஆதித்தவாரம் நவமி 40க்கு மிருசீரிஷம் 31க்கு ஸத்திரி 23க்கு ... தியாச்சியம் இந்த சுபதினத்தில் உதயாதி 15 நாழிகை யளவில் காவால்குடியில் முத்துக்குமாரன் எழுதி நின்று வேறினது. சித்தயோகம்.

No. 1454. TIRU-MANTIRAM-TERINTA-MUPPATU—[TEXT]

திருமந்திரம் தெரிந்த முப்பது—[மூலம்].

[திர12-E]

Size, $7\frac{1}{8}'' \times 1\frac{5}{8}''$. Pages, 5. Lines, 12 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This Mss. contains 30 stanzas under the heading Upatēcam, in Tiru-Mantiram.

Complete.

குறிப்பு: இது, திருமந்திரத்தில் முதல் தந்திரத்தில் உபதேசம் என்னும் அதிகாரத்திற் கூறப்படும் முப்பது பாக்களுடையது. இதனுள் இறைவன் உயிர்களின் பாசங்களைக் களைந்து அவ்வுயிர்கள் சார்ந்ததன் வண்ணமாகத் தன்னை யடையும்படி செய்தலாகியவற்றைக் கூறப்படுகின்றது.

பூர்த்தி.

Beginning:

விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தன்னின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே. 1

* * * *

End:

போதந் தருமெங்கள் புண்ணிய நந்தியைப்
பாதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினர்
நாதன் நடந்தால் நயனங் களிகூர
வேதந் துதித்திடப் போயடைந் தார்விண்ணே. 30

முற்றும்.

No. 1455. TIRU-MANTIRA-T-TERIVU-PĀTTUKKAḶ—[TEXT]

திருமந்திரத் தெரிவு பாட்டுக்கள்—[மூலம்]

[366]

Size, $13\frac{7}{8}'' \times 1\frac{5}{8}''$. Pages, 89. Lines, 12 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This also seems to be a selection of verses from the work Tiru-Mantiram. The Mss. contains 181 verses.

Incomplete.

குறிப்பு: இது, திருமந்திரத்தினின்றும் தேர்ந்தெடுத்த 181 பாடல்களை யுடையது.

அபூர்த்தி.

No. 1456. TIRU-MANTIRAM-NATU-V-AṆAI

[TEXT]

திருமந்திரம் நடுவணை—[மூலம்]

[612-F]

Size, $7\frac{1}{8}'' \times 1\frac{5}{8}''$. Pages, 6. Lines, 11 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This small work takes a stanza from Tirumantiram and explains the meaning of one word in it in several stanzas. The Mss. contains 30 stanzas and yet is incomplete.

Incomplete.

குறிப்பு: இது, திருமந்திரத்தில் நாலாந் தந்திரத்திலுள்ள சிகாரவகாரமென்னும் ஐந்தெழுத்தைப் பற்றிக் கூறும் பாடலை முதலாகக் கொண்டு அதே யாப்பில் முதல்வன் நின்றுள்ள நிலை இவ்வாறு என விளக்குகின்றது. முதற் பாடலோடு 31 பாடல்களுள்ளன. இப்பிரதி முற்றுமில்லை. ஆசிரியர் முதலிய குறிப்புக்கள் அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning:

சிகார வகார யகார முடனே
வகார யகார நடுவாய் நகார
மிகார மிரண்டு மறுத்துச் சிகார
வகாரஞ் சி.........வ ஞமே.

* * * *

End :

தந்தைக்கு முன்னே பிறந்த தனிமுதல்
சிந்தைக்கு ....ன்று சிவசிவ வென்றது
அந்த வெழுத்தே ஆதியு மந்தமு
நந்தி நமக்கு நயந்துரைத் ....

No. 1457. TIRU-MANTIRA-MĀLAI

[SELECTIONS]

திருமந்திர மாலை—[திரட்டு]

[622-D]

Size, $7\frac{1}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 32. Lines, 12 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is also a selection of 195 important verses from Tiru-Mantiram.

Incomplete.

குறிப்பு: இது, திருமந்திரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 195 பாடல்களை யுடையது.

அபூர்த்தி.

Beginning :

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்து விளம்பிறை போலு மெயிற்றனை
... . ஞானக்கொ ழுந்தனை
புந்தியில் வைத்துப் போற்றுகின் றேனே. 1

*   *   *   *

End :

உடல்பொரு ளாவி உலகத்தாற் கொண்டு
படர்வினை பற்றறப் பார்த்துக்கை வைத்து
நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாக்கிக்
கடிய பிறப்பறக் காட்டினன் நந்தியே. 195

திருச்சிற்றம்பலம்.

திருமந்திரமாலை முற்றும்.

No. 1458. KURU-MOḶI-T-TIRUMANTIRAM

[TEXT]

குருமொழித் திருமந்திரம்—[மூலம்]

[574-A A]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 4. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a work on the methods of Preceptor's teachings—with verses from Tirumantiram interpersed. There are 30 stanzas in the work.

Complete.

குறிப்பு: இது, குரு உபதேசமுறைபற்றித் திருமூலம் திருமந்திரத்திலுள்ள பாடல்களோடு சிற்சில பாடல்களை இடையிடையிற் சேர்த்து எழுதப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் 30 பாடல்கள் உள்ளன.

பூர்த்தி.

Beginning :

குருவென வந்து குணமாய் வணக்கித்
திருநீறு சாத்திச் செவியருள் செப்பி
யெருவுட னறுகு மென்கையி னீரா
லுருவுடன் கொண்டா னுடல்பொரு ளாவியே. 1

உடல்பொரு ளாவி யுதகத்தால் வாங்கி
படர்வினை பற்றறப் பாத்துக்கை வைத்து
நொடியி லடிவைத்து நுண்ணுணர் வாக்கிக்
கடிய பிறப்பறக் காட்டின னந்தியே. 2

* * * *

End :

ஆக்குஞ் சுழிதிறந் தாணவ மற்றிடு
நோக்குங் கலைவிட நுண்கா மியமறும்
வாக்கி லிடைவிட மாயையு மற்றிடும்
தாக்கும் படியெனச் சாற்றினன் குருவே. 30

No. 1459. TIRUMŪLAR-ŪPATECAM

திருமூலர் உபதேசம்

[623-E (2)]

Size, 7″ × 1¼″. Pages, 8. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Though called Tirumūlar Upatēcam, the work does not contain stanzas from Tirumantiram. This seems to be a new work on the sage's teachings. Some stanzas found in No. 1458 are also found here.

Complete.

குறிப்பு: *இது, திருமூலர் உபதேசம் என்று சொல்லப்படுகிறது. திருமூலர் திருமந்திரத்தில் இப் பாடல்கள் இல்லை; எனவே, இவை புதிதாக வுள்ளன. இந்தப் பிரதியில் 30 பாடல்கள் உள்ளன. 1458 எண் சுவடியிலுள்ள சில பாடல்கள் இதனினும் காணப்படுகின்றன.*

பூர்த்தி.

Beginning:

நீடுஞ் சிவலை பன்னிரண் டங்குல
மோடி யுயிரெழுந் தோங்கி யுதித்திடம்
நாடுமி னுதாந்தம் நம்பெரு மானுகந்
தாடு மிடந்திரு வம்பலந் தானே. 1

* * * *

End:

ஆக்குஞ் சுழிதிறந் தாணவ மற்றிடும்
வாக்கி லிடைவிட மாய்கையு மற்றிடும்
நோக்குங் கலைவிடா நுண்கா மியமறு
தாக்கும் பொருளெனச் சாற்றினன் குருவே. 30

No. 1460. TIRUMŪLAR-CATTINIPĀTA-VIVĒKAM—[TEXT AND ANNOTATIONS]

திருமூலர் சத்திநிபாத விவேகம்—[மூலமும் உரையும்]

[1252-A]

Size, 11″×1⅜″. Pages, 18. Lines, 12 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: This Mss. has 30 stanzas selected from Tirumantiram, (they have different readings from printed editions) and brought under one head. Annotations are also written.

Complete.

குறிப்பு: இது, திருமந்திரத்திலிருந்து 30 செய்யுட்களைத் தேர்ந்தெடுத்து (பாடபேதங்கள் பல) ஒரு தலைப்பின்கீழ் எழுதப் பெற்றுள்ளது. உரையுடன் கூடியது.

பூர்த்தி.

Beginning:

மனத்தி லிருந்தகோர் மதிவா ளுருவி
யினத்தினை நீக்கி யிரண்டற வீசி
நினைத்த விடத்தே நிலைபெறு மாகி
லனைத்துயிர்க் கெல்லா மதிபதி யாமே. 1

எ - து. பாலின்கண் நெய் யிருந்தாற்போலவே சத்திநிபாத விவேகம்............மோசன காலத்துக்குத்தான் முன்னிலை யாகையி னாலே மனத்..............ததததுக்கு விபரம். சத்திநிபாத முன்னிலையாக அனுதிக்காரணம்...........ய யாகையினாலே இனத்தினை நீக்கி யென்றுஞ் சத்தத்துக்கு வ... .. .. ஞ் சத்ததுக்கு விபரம் சுவாத்மாகரண ....குருவை காட்டும் ப ....

* * * *

End:

மண்டலத் துள்ளே மலர்ந்தெழு மாதித்தன்
பிண்டத்தி னுள்ளே பேரொளி யாயிடுஞ்
சென்றிடத் தெட்டுத் திசைதொறும் போய்வரு
நின்றிடத் தேநிலை நேரறி யாரே. 30

எ-து. அகண்ட பரிபூரணம் எல்லா வண்டத்தையு மூட் கொ..............க்கு மண்டலமென்று நாமமுண்டாவது ஆகை ....மாகிய சித்தாதித்த னுதைய மாகையினலே மண்.........
.........ச்கு விவரம் சத்திநிபாத விவேகமாகிய சித்தா...............

No. 1461. TIRUMŪLAR-TATTUVA-K-KATTAḶAI—[PROSE]

திருமூலர் தத்துவக் கட்டளை—[உரைநடை]

[815-A (2)]

Size, $10\frac{1}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 40. Lines, 7 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is a prose analysis of the Tattuvās explained in Tirumantiram.

Complete.

குறிப்பு: இந்நூல் நந்திதேவரால் திருமூல நாயனருக்கு உபதேசிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இதில் அம் மதக் கொள்கையின்படி தத்துவங்கள் தொண்ணூற்ருறும், அவற்றின் தன்மைகளும், உண்டாகும் முறைகள் முதலியவைகளும் விவரமாகக் கூறப்பட்டுள்ளன. இப் பிரதியில் நூல் முற்று முள்ளது. ஆசிரியர் பெயர் முதலியவை அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

பூதம் 5, பொறி 5, புலன் 5, கன்ம இந்திரியம் 5, ஞான இந்திரியம் 5, கரணம் 4, அறிவு 1, நாடி 10, வாயுவு 10, சயம .. 1, கோசம் 5, ஆக ... ஆதாரம் 6, மண்டலம் 3, மலம், கோசம் 3, குணம் 3, ராகம் 8, வினை 2, அவத்தை 5, ஆக ...

ஆகத் தத்துவம் 96.

*   *   *   *

End :

ஞானுக்கினி அழியாதிருந்ததைத் தெரிவுற எழுபொழுது மகிழவும்மே பூசித்துச் சி............சுகினையென்றும் குருவென்னும் ஒட்டியானகச்சைகட்டி ஆனந்த மென்றும் ஞான முத்திரையை அருந்த மோகமென்றும் வாழி வாழியே. ஞானவீடு தேடுவார்க்கு முத்திரையாம் தோ..........

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

No. 1462. TIRUMŪLAR-TATTUVAM—[PROSE]

திருமூலர் தத்துவம்—[உரைநடை]

[640-C]

Size, $8\frac{7}{8}'' \times 1''$. Pages, 45. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, New.

Note: This is a prose summary of the teaching of Tirumantiram.

Incomplete.

குறிப்பு: இதனுள் திருமூலர் செய்த திருமந்திரத்திலுள்ள உண்மைகள் வசனமாக எழுதப்பட்டுள்ளன. எழுதியவர் பெயர் முதலிய விவரங்கள் இல்லை. நூல் முற்றுமில்லை.

அபூர்த்தி.

Beginning :

திருமூலர் திருமந்திரத்தை ஒரு மூலமாக உணரவல்லாரில்லை. ஏக மூலமாக உணர வல்லாருக்குக் கருமாளவே நந்தி கருணை செய்தாரே.

சந்திரன் பூமிக்குச் சாத்திய கன்னிகள்
கந்த மலரிற் கலக்கின்ற நந்தியை
சிந்தை யறவே தெளிந்து பிறப்பற
முந்திப் பிறக்க மூலவிந் தாமே.

... .ருதாரத்துக்குண - மூலாதாரம் சுவாதிட்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி ஆக்கினை; அப்பால் குருமண்டபம்; அப்பால் பராசக்தி; அதன்விரிவு: மூலாதாரம் முதல் தலம்; மெய்ப் பொருள்; இதற்குச் சுவாசம் 600. இதற்கு ஆசனம் முக்கோணம் வட்டமாய் நாலிதழ்; நாலிதழிலும் நாலக்ஷரம் நிற்கும். வபீஷஸ நாலக்ஷரம் நிற்கும்; தேவதை கணபதி; நிறம், மாணிக்கம்; மாலை செம்பகந்தம் பூ; விருக்ஷம், அத்தி; வாகனம், பெருச்சாளி; ரிஷி அஷத்திகா; சத்தி - வல்லபை; கிரகம். ஆதித்தன்; நட்சத்திரம். ....

* * * *

End:

இதன் விரிவும் மனம் ஒன்றை நினைக்கும் புத்தியை விசாரிக்கும். ஆங்காரம் அதைக் கொண்டெழுப்பும், சித்தம் இந்த மூன்றையும் ஒன்றுபடுத்தும்; ஆக கறுதி 4; அறிவு 1 ஆவது சிவமென்றறியவும். திச நாடி பத்தாவன இடை பிங்கலை சுழி முனை காந்தி அத்தி சிங்குவை .... புருடன்குரு சங்கு ஒளி வயிரவன் ஆக ....க்கு விரிவு: இடை:பிங்கலையாவது - சுழு முனையில் தோன்றி ஆதாரம் ஆறுறையும் மருவிக் கபாலத்தை முட்டிக் கீழ் நோக்கி நாசி யளவில் நிற்கும் சுழு முனையும் கமல மட்டும்; ஆக மண்டலம் மூணு; மலம் 3 ஆவது, ஆணவம் மாய்கை காமியம். இதின் விரிவு ஆணவமாவது தானென்றறிவதே; மாய்கை யாவது தனக்குவருங்காரியம் தெரியாமல் ஆங்காரங் கொள்ளுதல். காமியமாவது, கண்டத்துக்கு ஆசைப்படுதல். ஆகமலம் 3. தோஷம் - 3; ஆவது வாதம், பித்தம் சிலேட்டுமம். இதன் விரிவு வாதமாமதுவாயு, பித்தமாவது வாயு; மிகுசி அக்கினி யெழும்புதல்; சிலேட்டுமமாவது அக்கினி மிகுத்துச் சலமெழுப்பிக் கடு கடுக்குதல், குத்துதல் செய்வித்தல்; ஆக தோஷம 3. ஏடணை மூணாவது-அர்த்த மேடணை, புத்திர ஏடணை லோக ஏடணை - ஆக 3; இதன் விரிவு: அர்த்த ஏடணை அர்த்தம் தேட ஆசைப்படுதல்; புத்திர ஏடணை...............

ELEVENTH TIRUMURAI

பதினோராம் திருமுறை

No. 1463. PATINŌRĀM-TIRU-MURAI—[TEXT]

பதினோராம் திருமுறை—[மூலம்]

[1245-A]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 74. Lines, 14 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This is the 11th book in the series of Saiva-T-Tirumurais and consists of 40 Prapantās sung by 12 authors. This Mss. has a few changes in the order of the works.

Incomplete.

குறிப்பு : இது, சைவத்திருமுறைகளுள் பதினொன்றாவது ஆம். இது திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள், காடவர்கோனாயனார், சேரமான் பெருமான் நாயனார், நக்கீரதேவ நாயனார், கல்லாட தேவ நாயனார், பரணதேவ நாயனார், இளம் பெருமானடிகள், அதிராவடிகள், பட்டணத்துப் பிள்ளையார். நம்பியாண்டார் நம்பி இவர்கள் அருளிய பாடல்கள் கொண்டது. பதிக வைப்பு முறை அச்சுப் புத்தகத்திற்கும் இதற்கும் வேறாயுள்ளது. நூல் முற்றுப் பெறவில்லை; "கொங்கு தேர் வாழ்க்கை" என்னும் இறையனார் பாசுரமும் இதனுடன சேர்க்கப்பட்டுள்ளது. இச் சுவடியில் சில நூல்கள் 'ஆர்' விகுதிபெற்று வருகின்றன. இத்திரு முறையில் உள்ள நூல்கள் 40.

அபூர்த்தி.

Beginning :

திருவால வாயுடையார் சேரமான் பெருமானுக்கு அருளிச் செய்த திருமுகப் பாசுரம்.

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிறை
யன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்

பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
கொருமையி னுரிமையின் உதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

திருச்சிற்றம்பலம்

* * * *

End :

பாம்பு மதியும் மடமானும் பாய்புலியுந்
தாம் பயின்று தாளருவி தாங்குதலா—லாம்பொன்
உருவடிவில் ஓங்கொளிசேர் கண்ணுதலான் கோலத்
திருவடியின் மேய சிலம்பு.

—(அற்புதத் திருவந்தாதி 67)

No. 1464. PATINŌRĀM-TIRU MUṞAI—[TEXT]

பதினோராம் திருமுறை—[மூலம்]

[1169]

Size, $8\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 174. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1463.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1463 பிரதி போன்றது. நூல் பூர்த்தியாயில்லை. பாடல் முறை அச்சுப் பிரதிக்கும் இதற்கும் வேறுபடுகின்றது.

அபூர்த்தி.

Colophon :

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு—முருவாக்கு
மாதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

திருவாரூர்ச் செப்பேடுபடித் திருமுறை பதினோராந் திருமுறையார்

திருச்சிற்றம்பலம்

No. 1465. PATINŌRAM-TIRU-MUṞAI—[TEXT]

பதினோராம் திருமுறை—[மூலம்]

[1171-A]

Size, $12\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 66. Lines, 10 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : Same as No. 1463.

Incomplete.

குறிப்பு : *இது, முன் எண் 1463 பிரதி போன்றது.*

அபூர்த்தி.

No. 1466. PATINŌRAM TIRU MUṞAI—[TEXT]

பதினோராம் திருமுறை—[மூலம்]

[1172]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 102. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 1463.

Incomplete.

குறிப்பு : *இது முன் 1463 எண் சுவடிப் பிரதியைப் போன்றது முதற்கண் விநாயர் தோத்திரச் செய்யுள் ஒன்று வந்துளது.*

ஏடுகள் ஒடிந்தும் தொலைக்கப்பட்டும் உள்ளன. பதிக அட்டவணை முதற்கண் கூறப்பட்டுள்ளது.

அபூர்த்தி.

Colophon:

அட்டவணையின் இறுதியில் கூறப்படுவது

திருமுறை எழுதி முடிந்தது முற்றும்.

மதுரையாதீனம் திருஞான சம்பந்தமூர்த்தி யடிமையான் அடங்கன் முறை. மருத நாயக மூர்த்தி.

திருமந்திர மாலை யென்று ஒரு ப.........த முண்டு. அது திருவையாற்றிலிருக்கும் மருதநாயக மூர்த்தி எழுதினது திருத் தோணி புரநாதர் துணை. திருச்சிற்றம்பலம் திருவாரூர் செப்பேட் டுப்படிக்கு எழுதின போத............சீகாழித் திருஞான சம்பந்த மூர்த்தி அடிமையான மருத நாயகமூர்த்தி; நாகூர் கந்தசாமி முதலியாருக்கு எழுதினது.

/ திருவாரூர்ச் செப்பேட்டுப்படிக்கு உலோகநாத பண்டாரத்துத் திருவுளத்தினாலே பதினோராந் திருமுறையார் எழுதி முடிந்தது./ ஆளுடைய பிள்ளையார் துணை. திருச்சிற்றம்பலம். மருதவாண சுவாமி துணை.

No. 1467. PATIṈŌRĀM-TIRU-MUṞAI—[TEXT]

பதினோராம் திருமுறை—[மூலம்]

[1167]

Size, $13\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 330. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1463.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1463 பிரதி போன்றது. இதில் காரைக்காலம்மையார் பதிகத்திலிருந்து கல்லாடர் அருளிய திருக்கண்ணப்பதேவர் மறம்வரை யுள்ளது.

அபூர்த்தி.

No. 1468. PATINŌRĀM-TIRU-MUṞAI—[TEXT]

பதினோராம் திருமுறை—[மூலம்]

[1168]

Size, 13″×1½″. Pages, 140. Lines, 8 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note: Same as No. 1463.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1463 பிரதி போன்றது. இதில் அதிராவடிகள் மும்மணிக்கோவை 19-ஆம் பாடலிலிருந்து நம்பி யாண்டார் நம்பி திருவந்தாதிவரை யுள்ளது.*

அபூர்த்தி.

No. 1469. [ARPUTA-T]-TIRU-V-ANTĀTI

[SELECTIONS]

[அற்புதத்] திருவந்தாதி—[திரட்டு]

[73-D]

Size, 16¾″×1½″. Pages, 6. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a selection of a few stanzas from the [Arputa] Tiru-Antāti by Karaikkāl-Ammaiyar included in the 11th Tirumuṟai.

Incomplete.

குறிப்பு: *காரைக்காலம்மையார் சிவபெருமான் துதியாக இயற்றிய அற்புதத் திருவந்தாதி; 101 வெண்பாக்களை யுடையது. இந்நூலிலிருந்து இந்தப் பிரதியில் சில செய்யுட்கள் மட்டில் தேர்ந்தெடுத்துத் திரட்டி வரையப்பெற்றுள்ளன.*

அபூர்த்தி.

Beginning :

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர். 1

* * * *

End :

உரையினு லிம்மாலை யந்தாதி வெண்பாக்
கரைவினுற் காரைக்காற் பேய்சொற்—பரவுவா
ராராத வன்பினே டண்ணலைச்சென் றேத்துவார்
பேராத காதல் பிறந்து.

No. 1470. KALUMALA-MUMMAṈI-K-KŌVAI
[TEXT]
[கழுமல சீகாழி] மும்மணிக் கோவை—[மூலம்]
[584-V]

Size, $7\frac{1}{2}'' \times 1''$. Pages, 10. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: The name of the work on Mss. is written as Cīkāḻi Mummaṉi-K-Kōvai.

Complete.

குறிப்பு: இது, பதினோராம் திருமுறையைச் சார்ந்தது. சீகாழி மும்மணிக்கோவை என்று சுவடியில் பெயர் எழுதப்பெற்றிருக்கிறது.

பூர்த்தி

Beginning :

திருவளர் பவளப் பெருவரை மணந்த
மரகத வல்லி போல வொருகூ
றிமயச் செல்வி பிரியாது விளங்கப்
பாய்திரைப் பரவை மீமிசை முகிழ்த்த.

* * * *

தோடுடைய செவிய னென்றும்
பீடுடைய பெம்மா னென்றும்
கையிற் சுட்டிக் காட்ட
வய்யநீ வெளிப்பட்டருளினை யாங்கே. 1

* * * *

End:

போதும் பெருவிடிற் பச்சிலை யுண்டு புனலுண்டெங்கும்
ஏதும் பெருவிடின் நெஞ்சுண்டின் றேயினை யாகச்செய்யும்
சூதும் பெருமுலை பங்கர்தென் தோணி புரேசர் வண்டின்
தாதும் பெருத அடித்தா மரைசென்று சார்வதற்கே. 12

No. 1471. CETTIRA-T-TIRU-VEṆPĀ

alias

KĀṬAVAR-KŌN-VEṆPĀ—[TEXT]

க்ஷேத்திரத் திருவெண்பா

என்னும்

காடவர்கோன் வெண்பா—[மூலம்]

[584-P]

Size, $7\frac{1}{2}'' \times 1\frac{1}{8}''$. Pages, 5. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work by Aiyaṭikal Kāṭavar Kō-Nayanar extolling the merits of Abodes of Lord Siva. The Mss. contains 25 stanzas while the printed books have only 24.

Complete.

குறிப்பு: இது, பதினோராந் திருமுறையைச் சார்ந்தது. சிவ பெருமான் எழுந்தருளியுள்ள க்ஷேத்திரங்களைக் கூறி அவற்றைத் தொழு என்று நெஞ்சிற்கு அறிவுறுத்துவதாகக் கூறும் 25 வெண் பாக்களையுடைய நூல். இதற்கு க்ஷேத்திர திருவெண்பா என்றும்

பெயர். அச்சுப்பிரதிகளில் 24 வெண்பாக்களே யுள்ளன. ஐயடிகள்காடவர்கோ னயனாரால் அருளிச்செய்யப்பட்டது. நூல் முற்று முள்ளது.

பூர்த்தி.

Beginning:

ஓடுகின்ற நீர்மை யொழிதலுமே யுற்றாருங்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமு னன்னெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர். 1

* * * *

End:

குடங்கொண்டு வாய்க்கரிசி கொண்டுதன் சுற்ற
மடங்கலுஞ் சென்றே யழுது—கடங்கொண்டு
கட்டையூர் மூடிக் கவிழ்த்திக் கிடக்காமுன்
கொட்டையூ ரீசனையே கூறு. 25

திருச்சிற்றம்பலம்.

No. 1472. KĀṬAVAR-KŌN-VEṆPĀ—[TEXT]

காடவர்கோன் வெண்பா—[மூலம்]

[584-F]

Size, $7\frac{1}{2}'' \times 1''$. Pages, 6. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1471.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1471 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1473. KĀṬAVAR-KŌN-VEṆPĀ—[TEXT]

காடவர்கோன் வெண்பா—[மூலம்]

[1258-B]

Size, 10″×1¼″. Pages, 24. Lines, 4 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1471.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1471 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1474. KĀṬAVAR-KŌN-VEṆPĀ

[SELECTIONS]

காடவர்கோன் வெண்பா—[திரட்டு]

[73-F]

Size, 16¾″×1½″. Pages, 2. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a selection from the work described in Na. 1471 and contains only 10 stanzas. The name Kṣētra-T-Tiru-Veṇpā is given on the Mss.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1471 பிரதி போன்றது. 10 செய்யுட்களைக் கொண்டது.*

அபூர்த்தி.

No. 1475. KAYILAI-PĀTI-KĀLATTI-PĀTI-ANTĀTI—[TEXT]

கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி—[மூலம்]

[73-E]

Size, 17″ × $1\frac{3}{8}$″. Pages, 4. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is an incomplete Mss. of the work sung by Poet Nakkīrer on the Siva shrine at Kālatti (Chittoor Dt.)

Incomplete.

குறிப்பு: *இது, பதினோராந் திருமுறைக்குரிய நூல்களுள் ஒன்று. நக்கீரரால் செய்யப்பட்டது. 100 பாடல்களை யுடையது. மூலம் மட்டும் உள்ளது. இப் பிரதியில் இடையில் பல பாடல்கள் இல்லாமையால் முற்றுப் பெறவில்லை, நூல் முழுதும் அச்சாகி யுள்ளது.*

அபூர்த்தி.

Beginning:

நக்கீரர் சொல்லிய

கயிலை காளத்திகளி னந்தாதி

சொல்லும் பொருளுமே தூத்திரியு நெய்யுமா
நல்லிடிஞ்சி லென்னுடைய நாவாகச்—சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகற் கேற்றினேன் பெற்று.

* * * *

End:

மற்றும் பலபிதற்ற வேண்டா மடநெஞ்சே
கற்றைச் சடையண்ணல் காளத்தி—நெற்றிக்கண்
ணாரமுதின் றிருநாம மஞ்செழுத்தின்
சோரா மெப்பொழுதுஞ் சொல். **100**

No. 1476. KŌYIL-NĀṈMAṈI-MĀLAI—[TEXT]

கோயில் நான்மணி மாலை—[மூலம்]

[636-K]

Size, 4″ × 1¼″. Pages, 16. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Kōyil is another name for Citamparam: This work in 4 different kinds of metres and in Antāti Totai, is by Pattiṉattār. The work consists of 40 verses.

Complete.

குறிப்பு: இது, பட்டினத்தடிகள் இயற்றிய கோயில் நான்மணி மாலை, அச்சிடப் பெற்றுள்ளது.

பூர்த்தி.

Beginning:

பூமே லயனறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம்—பாமேவும்
ஏத்துகந்தான் தில்லை யிடத்துகந்தான் அம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை.

* * * *

End:

சதுர்முகன் றந்தைக்குக் கதிர்விடு கடவுள்
ஆழி ஆழி கொடுத்த பேரருள் போற்றி

* * * *

ஆடு நாடகம் போற்றி என்றால்
...ன்றும் போற்றினு மென்றனக் கிறைவ
ஆற்ற லில்லை யாயினும்
போற்றி போற்றிநின் பொலம்பூ வடிக்கே.

No. 1477. KŌYIL-NAṈMAṆI-MĀLAI—[TEXT]

கோயில் நான்மணி மாலை—[மூலம்]

[584-W]

Size, $7\frac{1}{2}'' \times 1\frac{1}{8}''$. Pages, 35. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1476. The Mss. is called Citampara Naṉmaṇi Mālai.

Complete

குறிப்பு: *இது, முன் எண் 1476 சுவடிப் பிரதியைப் போன்றது. நூல் முற்று முளது. சிதம்பர நான்மணி மாலை என்று இதன் பெயர் சுவடியில் எழுதப் பெற்றுள்ளது.*

பூர்த்தி.

No. 1478. CIVA-PERUMĀM-MUMMAṆI-K-KŌVAI—[TEXT]

சிவபெருமான் மும்மணிக்கோவை—[மூலம்]

[636-N]

Size, $4'' \times 1\frac{3}{4}''$. Pages, 10. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a work in 30 stanzas in Mummaṇi-K-Kōvai compostion by Iḷamperumāṉatikal on Lord Siva.

Complete.

குறிப்பு: *இது 11-ஆம் திருமுறைகளைச் சார்ந்தது. சிவ பெருமான் மேல் ஆசிரியப்பா, வெண்பா கட்டளைக் கலித்துறைகளை முறையே கொண்டு அந்தாதித் தொடையமையப் பாடப் பெற்ற 30 பாடல்களை யுடையது. இயற்றியவர்,* இளம்பெருமானடிகள். *நூல் முற்றுமுளது.*

பூர்த்தி.

Beginning :

முதல்வன் வருத்த மதலை மாடத்
திடவரை யூன்றிய கட்வுட் பாண்டிற்
பள்ளிச் செம்புய லுள்விழு துறீஇப்
புத்தே ணிவந்த முத்த மாச்சுட
ரெறிவளி யெடுப்பினுஞ் சிறுநடுக் குருஅநின்
னடிநிழ லளியவோ வைத்த முடிமிசை
யிலங்குவளைத் தனிப்போது விரித்த
வலங்குகதி ரொலியனீ யணிந்ததென் மாறே.

* * * *

End :

பொய்ந்நீ ருரைசெய்தீர் பொய்யோம் பலியெனப் போனபின்னை
யிந்நீள் கடைக்கென்று வந்தறியீ ரினிச் செய்வதென்னே
செந்நீர் வளர்சடைத் திங்கள் பிளவொடு கங்கை வைத்த
முந்நீர்ப் பவளத் திரட்செக்க ரொக்கு முதலவனே. 30

மும்மணிக் கோவை முற்றும்.

No. 1479. [TIRU] IRATTAI-MAṈI-MĀLAI

[TEXT]

[திரு] இரட்டைமணி மாலை—[மூலம்]

[636-I]

Size, 4″ × $1\frac{3}{8}$″. Pages, 7. Lines, 12 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is also by Karaikkāl Ammaiyār and consists of 20 stanzas.

Complete.

குறிப்பு : *இது, பதினோராந் திருமுறையைச் சார்ந்த நூல்களுள் ஒன்றாகும். காரைக்காலம்மையாரா லியற்றப்பட்டது. 20 செய்யுட்கள் கொண்டது. நூல் முழுதும் உள்ளது.*

பூர்த்தி.

Beginning:

கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி நெஞ்ச மென்பாய்
தளர்ந்திங் கிருத்தல் தவிர்திகண் டாய்தள ராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத் திடைவளர் கோட்டு வெள்ளை
இளந்திங் களுமெருக் குமிருக் குஞ்சென்னி ஈசனுக்கே.

* * * *

End:

உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்
செத்த மரமடுக்கித் தீயாமு—னுத்தமனாய்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து.

திருச்சிற்றம்பலம்.

No. 1480. TIRU-PIRAMAPURAM-VALIMOLI

[TEXT]

திருபிரமபுரம் வழிமொழி—[மூலம்]

[584-S]

Size, $7\frac{3}{8}'' \times 1''$. Pages, 4. Lines, 11 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Tēvaram song by saint Ñāṉa Campantar describes the holy city of Piramapuram (Cīkaḻi) Tanjore Dt.

Complete.

குறிப்பு: இது, திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளைச் சார்ந்தது. பிரமபுரம் என்னும சீர்காழியைச் சிறப்பித்துக் கூறும் பதிகமாகும். வழிமொழிப் பதிகம் என்று பெயர் பெறும். இதனை யருளியவர் திருஞான சம்பந்த சுவாமிகள். இப்பிரதியில் பதிகம் முற்று முள்ளது. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் சில விடங்களில் பாட பேத முண்டு.

பூர்த்தி.

Beginning :

திருச்சிற்றம்பலம்.

திருவழிமொழி.

திருவிராகம். பண் - சாதாரி.

சிவமயம்.

சுரருலகு நரசர்கள்பயில் தரணிதல முழுதழிய அரணமதில்முப்
புரமெரிய விரவுவகை சரவிசைகொள் கரமுடைய பரமனிடமாம்.
வரமருள வரன்முறையி னிரைநிறைகொள் வருசுருதி
[சிரவுரையினுற்
பிரமனுயர் அரனெழில்கொள் சரணவிணை பரவவளர்
பிரமபுரமே. 1

* * * *

End :

ஒழுகலரி தழிகலியி லுழிபுலகு பழிபெருகு வழியை நினையா
முழுதுடலி லெழுமயிர்க டழுவுமுனி குழுவினொடு
[கெழுவுசிவனைத்
தொழுதுலகி லிழுகுமல மழியும்வகை கழுவுமுரை கழுமலநகர்ப்
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகள்
[மொழிதகையவே 102

திருச்சிற்றம்பலம்.

சீராருந் திருமுறைகள் கண்டதிறற் பார்த்திபனு
மேராரு மிறைவனையு மெழிலாரு நம்பியையு
மாராத வன்பினுட னடி பணிந்தங் கருள்விரவச்
சோராத காதன்மிகுந் திருத்தொண்டர் பதந்துதிப்பாம்.

திருமுறைகண்ட புராண முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

No. 1481. TIRU-K-KAILĀYA-ÑĀṈA-ULĀ

[TEXT]

திருக்கயிலாய ஞானவுலா—[மூலம்]

[409]

Size, 14″ × 1½″. Pages, 10. Lines, 14 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This work is also by Ceramān Perumāl Nayanar on the Lord at Kaliaca Hills. The work is also called Āti Ula.

Complete.

குறிப்பு: இது, சேரமான் பெருமாணுயனுர் அவர்களால் இயற்றப்பெற்றது. இதனை ஆதியுலா வென்றுங் கூறுவர்.

பூர்த்தி.

Beginning:

முக்கட் டிரு.........ட்டு நால்வாய்த் துரகதத்து
செக்கர் தடித்திடித்த செஞ்சடைத்து—பக்கத்து
பூதத் தருணடத்துப் பொற்பினுற்றே னுள்ளத்து
ஞதத்து ணின்ற நலம்.

திருமாலு நான்முகனுந் தேர்ந்துணரா தன்றங்
கருமா லுறவழலாய் நின்ற—பெருமான்
பிறவாதே தோன்றினன் காணுதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான—முறைமையா
யாழாதே யாழ்ந்தா னகலாத கலியா
னூழா லுயராதே யோங்கினன்—சூழொளிநூ
லோதா துணர்ந்தா னுணுகாது நுண்ணியான்
யாது மணுகா தணுகியா—னுதி

* * * *

End:

பணைனுரு மின்சொற் பணைப்பெருந்தோட் செந்துவர்வாய்ப்
பெண்ணூர வாரம் பெரிதன்றே—விண்ணேனுங்கி
மஞ்சடையு நீள்குடுமி வாணிலா வீற்றிருந்த
செஞ்சடையான் போந்த தெரு.

பெண்ணீர்மை காமின் பெருந்தோ ளிணைகாமி
னுண்ணீர்மை மேகலையு முள்படுமின்—றெண்ணீரக்
காரேறு கொன்றையந்தார் காவாலி கட்டங்க
னாரேறு போந்த துலா.

No. 1482. TIRU-K-KAILĀYA-ÑĀṈA-ULĀ

[TEXT]

திருக்கயிலாய ஞானவுலா—[மூலம்]

[780-B]

Note: This is a work in 10 stanzas on Lord Civa, invoking Him to take ablution, by Civaprakāca Cwāmikal.

Complete.

குறிப்பு: இது, சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய இஷ்ட லிங்க வபிடேகமாலை. இந்தப் பிரதியில் பத்துச் செய்யுட்களு முள்ளன. சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டு என்னும் பெயருடன் அச்சிடப்பெற்றுள்ளது.

பூர்த்தி.

Beginning:

பந்தமறு மரர்மிருடர் பலருருத் திரர்களொரு
பதினொருவர் மிளிர்பீடமேற்
படியிலை யைவகைப் படுமீசர் தாநிதம்
பத்திலெண் வித்தையிறைவர்
சந்தமுறு கோமுகத் தைங்கலைகள் சத்திசா
தாக்கியம் மூர்த்திவதனஞ்
சட்டற்ற வட்டத்தி லொட்டற்ற சிற்சத்தி
தானுற்ற நாளத்திலே
நந்தலற வருகோள கந்திகழ் சிதம்பர
நற்சிகையி னிற்சூடிய
நட்டமற வமைகின்ற விட்டவடி வொடுநின்ற
ஞானமய மோனநடுவோ
டந்தமற முந்துபர மானந்த நீநந்த
வபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை
யபிடேக மாடியருளே. 1

* * * *

End:

நரகடமி னரசரவர் தமினினிய திவவியாழ்
நண்ணுநர கந்தருவர்தா
நவிலுமவர் தமினமர கந்தருவ ரவர்தம்மி
னுடரிய தேவரவரில்

சுராதிப னவனினுயர் சுரர்குரவ னவனினயன்
சொன்முறையி னாறுமடிமேற்
றுன்னுசுக மொருதிவலை யளவுமின் றுகமிகு
சுகவேலை புகலீகுவாய்
தரைமுதற் பூதங்கள் புத்திகுண தத்துவந்
தகுதிபெறு பகுதிபுருட
தத்துவம் வித்தைமுத லளவெனுமி வற்றிலறு
சமயரென வெமைவிடாமல்
அருளினினை யடைதலு மரியபத மருளும்வ
னபிடேக மாடியருளே
அறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை
யபிடேக மாடியருளே.

No. 1548. APITĒKA-MĀLAI

[TEXT AND ANNOTATIONS]

அபிடேக மாலை—[மூலமும் உரையும்]

[759]

Size, 17″×1¼″. Pages, 74. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This is the same work described in No. 1547 but with meanings.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1547 பிரதி போன்றது. இதில் ஒவ்வொரு செய்யுளுக்கும் விசேடவுரை செய்யப்பெற்றுள்ளது. இந்தப் பிரதி முழுவது முள்ளது.

பூர்த்தி.

Beginning:

பந்தமறு மரமிருடர்...........யபிடேக மாடி யருளே.

என்பது: பந்தமறு - பாசபந்த மில்லாத, அரர் - உருத்திர மூர்த்தியினுடைய விதையத்திலிருந்து லயத்தைச் செய்விப்ப ராகிய வரனென்னுந் திருப்பெயர் பெற்றவரும், மிருடர் - விண்டுவி னுடைய விதையத்திலிருந்து முரக்கைத் தொழிலைச் செய்விக்கும் மிருடர் என்னுந் திருநாமம் படைத்தவரும், பவர் - பிரமனுடைய விதையத்திருந்து சிருட்டித் தொழிலைச் செய்விப்பவரும் மூவர்க ளுடனே, உருத்திரர்கள் பதினொருவர் - பதினொரு கோடி யுருத்திர கணங்களுக்குத் தலைவராகிய மகாதேவ ருத்திரர், சிவருத்திரர், உக்கிர ருத்திரர், சங்கார ருத்திரர், கிலோகித ருத்திரர், ஈசான ருத்திரர், விசைய ருத்திரர், பீம ருத்திரர், தேவதேவ ருத்திரர், பவோற்பவ ருத்திரர், கபாலீச ருத்திரர் என்னுந் திருநாமங்களை யுடைய வேகாதச ருத்திரரும்,

*　　　*　　　*　　　*

No. 1549. APITĒKA-MĀLAI

]TEXT AND ANNOTATIONS]

அபிடேக மாலை—[மூலமும் உரையும்]

[1201]

Size, 12″ × 1¼″. Pages, 102. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1547.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1547 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1550. APITĒKA-MĀLAI

[TEXT AND ANNOTATIONS]

அபிடேக மாலை—[மூலமும் உரையும்]

[1202]

Size, $5\frac{1}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 86. Lines, 12 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1547.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1547 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1551. ARUṆĀCALA-P-PATTU—[TEXT]

அருணாசலப் பத்து—[மூலம்]

[677-A]

Size, $10\frac{1}{2}'' \times 1''$. Pages, 3. Lines, 4 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a fragment of a work on Lord Aruṇacalēswara at Tiruvaṇṇāmalai.

Incomplete.

குறிப்பு: *இது, திருவருணைச் சிவபெருமான் சம்பந்தமானது. அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் கீழ்க்கண்ட மூன்று செய்யுட்கள்மட்டில் காணப்படுகின்றன.*

அபூர்த்தி.

Beginning:

நினைவாகிமூல நிலைப்பாகி நேச நிசரூபமான வடிவோ
மனமாய்கை மூடியதிலே விழுந்து மனமுங் கலங்கிவெருவா
யெனமோ டிருந்து வய.........ள மெனதாகி யேகிவிடுமுன்
மனவேக மாகஅருணை சலேசர் வரவேணு மென்றனருகே. 1

கயிலாச மேரு வதிலாறு வீடு கரைகண்ட தில்லை யொருவர்
வெயிலான சோதி விளையாடும் வீடு வெளிமான மாகி யறியேன்
பயிரான கொம்பில் பசுங்காயு மாகி பழமா யுதிர்ந்து விடுமுன்
மயிலாடு சோலை யருணச லேசர் வரவேணு மென்ற னருகே. 2

நதியோடு தும்பை முடிமேலி ருந்து
    நலமாக வெள்ளை விடைமேல்
பதியாயி ருந்து உமைபாதி கொண்ட
    பரனேயுன் னுமம் மறவேன்
விதிநாதனேவ யெமதூதர் வந்து
    யெமபாச மாகி விசையில்
மதிசூடு சென்னி அருணச லேசர்
    வரவேணு மென்ற னருகே. 3

* * * *

No. 1552. ARUṆĀCALĒCAR-PATIKAM—[TEXT]

அருணசலேசர் பதிகம்—[மூலம்]

[962-C]

Size, $9\frac{1}{2}'' \times 1''$. Pages, 6. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is another work on the Lord at Tiruvaṇṇāmalai, in 10 stanzas. The author's name is not known.

Complete.

குறிப்பு : இது, திருவண்ணாமலை சிவபெருமான் விஷயமானது. செய்யுட்கள்நடை சிறந்ததன்று. இந்தப் பிரதியில் பத்துச் செய்யுட்களுள்ளன.

பூர்த்தி.

Beginning :

முடியார் செனனம் எடுத்தென்ன பெற்றென்ன முத்திபெற
விடியராப் பொழுதும் .... புரியே
அடியார்க் கெளியான் திருவடியான வென்துயரத்தை
[ஆற்றவல்லா னொரு
படியாய்ச் சமைந்தனில்லை திருவண் ணாமலைப் பாதையிலே. 1

*   *   *   *

தடமே பிரிந்த குருடனைப்போலத் தயங்கி நித்தம்
மடமாத ராசை வலையி லகப்பட்டு மயங்குநீவனே
திடமான பாலுடன் தேனுஞ்செவ் விளநீருஞ்செல
[மெடுக்குமொரு
குடமாய்ப் பிறந்தேனில்லை திருவண் ணாமலைக் கோயிலுக்கே. 5

*   *   *   *

End :

அண்ணா மலையரையும் ஆரூர்த் தியாகரையும்
கண்ணான காளத்தி நாதரையும்—கண்ணுகச்
சிற்றம் பலவரையும் தென்மதுரைச் சொக்கரையும்
நித்தம் பலகால் நினை.

No. 1553. AVINĀCI-MĀLAI—[TEXT]

அவிநாசி மாலை—[மூலம்]

[68-II (I)]

Size, 10″×1″. Pages, 6. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work in 12 stanzas on the Lord Civa at Avinad (Coimbatore Dt.) The stanzas begin in alphalatical order of Tamil Vowels. Last 2 stanzas cannot be read as the leaves are broken.

Incomplete.

குறிப்பு: இது, அவிநாசி தலத்தில் எழுந்தருளியுள்ள சிவ பெருமான் விஷயமானது. அகர முதலிய எழுத்துக்களை முறையே முதலெழுத்தாகக் கொண்டு பாடப்பெற்றுள்ளது. பன்னிரு உயிரெழுத்துக்களையும் முதலாகவுடைய பன்னிரு செய்யுட்கள் இந்தப் பிரதியில் உள்ளன. இறுதியேடு ஒடிந்திருப்பதால் பின் இரு செய்யுட்களை அறியமுடியவில்லை.

அபூர்த்தி.

Beginning:

அருமேவு பூவி லுறைவோனு மாலு மறியாத வேத வடிவே
கருமேனி கொண்டு பொருகாலதூதர் கடிதாக வோடி வருமுன்
திருமேனி மீது திருநீறணிந்து சிவகாம வல்லி யுடனே
மருமேவு சோலை யவினாசி நாதர் வரவேணு மென்றனருகே. 1

* * * *

End:

ஒன்றாகி யிரண்டு ருவாகி யுலகம் பரந்த ஒளியாய்
நின்றாய கண்ட பரிபூர ணங்கள் நிறைவான சுத்த நிமலா
குன்றாத வேலை மடவார் வசங் ..... களைந்து விடுமுன்
மன்றாடு சோலை யவினாசி நாதர் வரவேணு மென்றனருகே. 10

No. 1554. ITTA-LIṄKA-PATIKAM—[TEXT]

இட்டலிங்க பதிகம்—[மூலம்]

[962-A]

Size, 9″×1″. Pages, 12 Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work on Lord Mācillāmony. Its author is supposed to be Civa-P-Prakācar. The Mss. has only 8 stanzas.

Incomplete.

குறிப்பு: இது, சிவலிங்கத் துதி. அச்சிடப்பெற்றுள்ளது. ஆசிரியர் சிவப்பிரகாசர் என்கின்றனர். உண்மை யறிவதற்கில்லை. இந்தப் பிரதியில் 8 செய்யுட்களே யுள்ளன.

அபூர்த்தி.

Beginning:

மூவர்கள் முதலே மூர்த்தியே
முக்கண் ணுன வனே
முதுமறைப் பொருளே பரமரா சியனே
முயல்வனத் தாடிய சிவனே
தேவரு மயன்மால் தேடியுங் காணு
சென்னியிற் கங்கையைத் தரித்துத்
திருச்சடை மீதில் கதிர்மதி தரித்த
செம்பொன்னம் பலவனே சிவனே
பாருல கதனி லடியவர் தமக்குப்
பரகதி கொடுத்திடும் பரனே
பாதபங் கயனே ......யங் கொளியே
பரந்தெழு கதிரொளி விளக்கே
ஏவருனை யறிந்து பூசையே புரிவா
ரிஷபரூ டகனுமாய் வருவாய்
இஷ்டலிங் கேசா என்கரத் திருக்கும்
ஈசனே மாசிலா மணியே.

* * *

End:

அத்தனே அரனே ஆலங்காட் டினிலே
அண்ணலே காளியோ டாடும்
அருமறைப் பொருளே ஆனந்த மயனே
ஐயனே அருந்தழ லொளியே

சித்தனே சிவனே சிவக்குலக் கொழுந்தே
சிறுபுலித் தோலுமே தரித்து
சிறுபிள்ளைக் கறியுந் தலையரிந் துண்டு
சிறுவனுக் காட்சியே யளித்த
முத்தனே முதல்வா முக்கணா முனியே
மோட்சகந் தன்னையே யளித்து
மூர்த்தியே யெனது பாவமே யகற்றி
முன்னைவந் தென்னையாண் டருள்வாய்
எத்தனை தேவர் சூழநீ யமையும்
ரிஷபரூ டனுமாய் வருவாய்
இஷ்டலிங் கேசா என்கரத் திருக்கும்
ஈசனே மாசிலா மணியே. 8

No. 1555. ITTA-LIṄKA-MĀLAI-NETUṆKALI-NETIL—[TEXT]

இட்டலிங்க மாலை நெடுங்கழி நெடில்—[மூலம்]

[819-E]

Size, 13″×1¼″. Pages, 8. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a work by Civa-Prakaca Cwāmikal on God Māsilāmaṇi in Neṭuṇkaḷi Neṭil metre. The work is printed.

Complete.

குறிப்பு: இது, சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய நூல்களில் ஒன்று. அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் பத்துச் செய்யுட்களும் உள்ளன.

பூர்த்தி.

Beginning:

பெருகுறு மன்பாற் பூசனைபுரிந்த பிணங்குநூற்
சிலம்பிவெவ் வரவம்
பிறைமருப் புரற்கால் யானையென் றிவற்றின்
பிறவியோ விதழ்முறுக் கவிழ்த்து

எரிபுரை யிதழ்ச்செங் கமலநான் முகனு
மெய்தரும் பதத்தில்வைத் தருள்வோ
யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு
மீசனே மாசிலா மணியே.

* * * *

End :

வங்கையர் முத்த சங்கையர் சென்ன
வசவண ரசகணர் வீர
மாச்சையர் பிப்ப பாச்சையர் வள்ள
மல்லையர் கல்லைய ரெங்கள்
எங்கணும் விளங்க நம்பி யாரூர
னேவல னெனப்படு மிறையே
யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு
மீசனே மாசிலா மணியே.

No. 1556. ITTA-LIṄKA-MĀLAI-KURUṄKALI-NETIL—[TEXT]

இட்டலிங்க மாலை குறுங்கழி நெடில்—[மூலம்]

[819-E (1)]

Size, 13″×1¼″. Pages, 5. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This work is by Civa-Prakāca Cwāmikal on Lord Māsilāmaṇi Deity as described in No. 1555 but in a different metre.

Complete.

குறிப்பு : *இது, சிவப்பிரகாச சுவாமிகளில் இயற்றிய பிரபந்தங் களில் ஒன்று. இந்நூல் அச்சிடப் பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் பத்துச் செய்யுட்களுமுள்ளன.*

பூர்த்தி.

Beginning :

பொன்செய்வா ணிகர்போ லெவ்வழி யானும்
புண்ணிய மீட்டினு மறிஞர்
கொன்செய்பா தகமே புரிந்தன னின்றுள்
குறுகுவ தென்றென விரங்க
முன்செய்தீ வினையோ கனவிலு மறமே
மொழிகிலேன் களித்திருக் கின்றேன்
என்செய்கோ மறலிக் கென்கரத் திருக்கு
மீசனே மாசிலா மணியே.

* * * *

End :

சரிப்பினு மொருபா லிருப்பினு முறக்கச்
சார்வினும் விழிப்பினு மொருசொல்
உரைப்பினும் போக நுகர்வினு மாவி
யொழியினு நின்னையான் மறவேன்
விருப்புறு மலரும் விரையுமே போல
விம்மியெங் கணுமுறு பொருளாய்
இருப்பினு மரியோ யென்கரத் திருக்கு
மீசனே மாசிலா மணியே.

No. 1557. IṞAIVAṈ-TUTI—[TEXT]

இறைவன் துதி—[மூலம்]

[869-A]

Size, 8″ × 1¼″. Pages, 2. Lines, 8 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note : This is a work on Lord Civa in general. The Mss. contains only 5 stanzas. Other particulars are not available.

Incomplete.

குறிப்பு: இது, இறைவன் சம்பந்த முடையது. இந்தப் பிரதியில் 5 செய்யுள்கள் உள்ளன. மற்ற விவரங்கள் அறியக்கூட வில்லை.

அபூர்த்தி.

Beginning:

நல்லகுலத் திற்பிறந்து நாதனடிக் கன்புசெய்யாப்
பொல்லா முகடியரைப் போலவிந்த—நல்லுலகின்
வீணாகிய திருக்குச் சொல்லே மிகப்பேசில்
மாணாப் பிறவி வரும். 1

* * * *

End:

அஞ்சக் கரமளித்த வய்யனே வய்யமறப்
பஞ்சக் கரத்துண்மை பார்த்தறியே—னெஞ்சத்
திருளகற்று மின்பருளத் தென்றும் பிரியாய்
மருளகற்றும் வண்ண மருள். 5

No. 1558. AIYAPPAN-TŌTTIRAM—[TEXT]

ஐயப்பன் தோத்திரம்—[மூலம்]

[667-B]

Size, $9\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 8. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a Stotra on Lord Aiyappan at Attampuli Hills in Kērala. It contains 11 stanzas. The author is supposed to be one Amuta Kavi.

Complete.

குறிப்பு: இது, ஐயப்பன் மீது பாடப்பெற்ற பதிகம். இந்தப் பிரதியில் பதினொரு பாடல்கள் உள்ளன. இறுதி ஏட்டில் அமிர்த கவி என்னும் பெயர் காணப்படுவதால் அத்தகைய பெயருடைய

ஒருவரால் பாடப்பட்டிருக்கக்கூடுமோ என யூகிக்க வேண்டியிருக்கின்றது.

பூர்த்தி.

Beginning:

நீதி யறியேன் நெறியறியேன் நினது பஞ்சாட் சரத்தை
[நித்தம்
ஓதி யறியேன் சிறியேனை யுவந்தே காப்ப தெந்நாளோ
சோதிப் பொருளே சுடரொளியே துரியாதீதத் துட்பொருளே
ஆதி முதலே அரியானேஐ யப்பா யென்னை யாள்வாயே. 1

* * * *

End:

நித்த முன்றன் பாதமதை நினைவிற் கனவில் மறவாமல்
பத்தும் பதிகம் யான்பாடப் பவுசு பாக்கியந் தந்தருள்வாய்
முத்தே பவள மரகதமே மூலாதார (முழுமுதலே)
அத்தம் புலிக்கோட் டினில் வளரும் ஐயப்பா வென்னை
[யாள்வாயே. 11

முற்றும்

* * * *

Colophon:

அடியேனு னமுதகவி

No. 1559. KACCAPĒCURAR-PĒRIL-ĀCIRIYA-VIRUTTAM—[TEXT]

கச்சபேசுரர் பேரில் ஆசிரிய விருத்தம்—[மூலம்]

[668]

Size, $13\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 8. Lines, 8 on a page. Condition. Injured. Appearance, Old.

Note: This is a prayer to Lord Kaccapeca at Conjeepuram. The author is supposed to be one Nallatampi Mudaliar.

Complete.

குறிப்பு : இது, காஞ்சிச் சிவபெருமான் மீது இயற்றிய பதிகம். ஆசிரியர், நல்லதம்பி பிள்ளை என்று, சுவடியில் உள்ள ஒரு குறிப்பால் தெரிகிறது. அச்சிடப்பெற்றதாகத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் முழுதுமுள்ளது.

பூர்த்தி.

Beginning :

பூவிலுறை வானவனும் நாவிலுறை வாளுடன்
புகழ்ந்துனைப் பூசனைசெயப்
புரிந்தனை யவைகளைப் பரிந்துட னளிக்கவும்
புணரி யிற்றுயிலு பவனும்
மேவிகட லைக்கடைந் தோய்விம லர்க்குதவு
மென்மையி லாமை யுருவாய்
விரிதிரைக் கடலையது பொருதிடக் கயமுகனை
விடமழித் துயிர்போக்கினாய்
தாவில்மா தவனுனை மேவியா ராதிக்கத்
தரையுயிர்ப் புரக்க வளித்தாய்
தண்டமிடு சண்டனுயி ருண்டசெம் முண்டகத்
தண்டிருப் பதுமேற் ....
காவிசெந் தாமரை மேவுகய வாவிசூழ்
கச்சிநகர் வீற்றி ருக்குங்
கனகமணி யணியுமுலை யழகம்மை வலமதுறை
கச்சபாலைய தேவனே.

* * * *

End :

தொட்டியறு மீ... ..... விட்டவுடனே வினைகள்
துவளுமே கவலை யதனில்
தொன்மையா முன்னதியில் மன்ன........... தலும்மாறைத
சொற்காம மோக்ஷ முறுவார்

மட்டுலா வும்மலர் கொட்டு முருக் கடியினில்
மலையரையன் தனையை யுடனே
வானவ ரியக்கர்கண நாதர்புடை சூழவே
மகிழ் வுடனமர்ந்திருந்து
எட்டக் கரத்தா னிடர்ப்பட்டு விழச்செய்தநீ
யென்னிடரை யுந்தவிர்ப்பா
யென்றுநான் சென்றுனை யண்டினேன் கண்டிலை
யேகாந்த யோகாந்தனே
கட்டுமல ரைச்சுட்டு மட்டுகுழலி யர்வாழுங்
கச்சிநகர் வீற்றிருக்கும்
கனமணி யணியுமுலை யழகம்மை வலமதுறை
கச்சபா லையதேவனே.

Colophon:

கல்லத்தம்பி முதலியார் தோத்திரம் பண்ணது.

No. 1560. KACCI-ĀṈANTA-RUTTIRĒCAR-TŌTTIRAM—[TEXT]

கச்சி ஆனந்த ருத்திரேசர் தோத்திரம்—[மூலம்]

[336-B]

Size, 13″×1¼″. Pages, 3. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a hymn on Sri Āṉanta Rutrēcar at Kāncipuram.

Complete.

குறிப்பு: இது, காஞ்சியிலுள் ஆனந்த ருத்திரேசர் என்ற சிவபெருமான் சம்பந்தமானது. ஆசிரியர், சிவஞான சுவாமிகள் என்பர். அச்சிட்டதாகத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் முழுவதுமுள்ளது.

பூர்த்தி.

Beginning :

பானந்தம் கையி லேந்தும் பைந்துழாய் மார்பன் முன்னும்
வானந்தங் கமரர் யாரும் வணங்கவாழ்ந் திருக்க லாமால்
கானந்தண் பொழிலி லாறு கால்செயுங் கச்சி மூதா
ரானந்த ருத்தி ரேச னடித்துணை யிறைஞ்சி னோர்க்கே. 1

* * * *

End :

ஆனந்த மலைபோ லோங்கு மம்பலத் துமையா ணங்கை
யானந்த மகிழ்ச்சி பூப்ப வானந்த வமுத மூறி
யானந்த நிருத்தஞ் செய்யு மங்கணன் கச்சி மூதா
ரானந்த ருத்தி ரேச னடியிணைக் கன்பு செய்வாம்.

No. 1561. [KACC[I]-ĀṈANTA-RUTTIRĒCAR-TUTI—[TEXT]

[கச்சி] ஆனந்த ருத்திரேசர் துதி—[மூலம்]

[229-D (1)]

Size, 8½″×1″. Pages, 8. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a prayer to Kacci Aṉanta Rutrēcar. There are 10 stanzas in this work. It is presumed that Sri Civañāṉa Munivar song this prayer. This is different from No. 1560.

Complete.

குறிப்பு: *இது, கச்சி ஆனந்த ருத்திரேசர் மீது இயற்றப் பெற்றுள்ள பதிகம். இந்தப் பிரதியில் பத்து விருத்தங்கள் உள்ளன. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை. இது எண் 1560-இன் வேறானது.*

பூர்ந்தி.

Beginning:

கடியிதழிப் பொலஞ்சடையும் விழிமூன்றுங்
கறைமிடறுங் கரங்க ணன்கும்
வடிமழுமா ......தொடையும் புரிநாலு
மணிச்சிலம்பு வயங்கிச் சிர்க்கும்
படியரிய மலர்ப்பதமு மனத்துருவு
மடியருளப் பதித்து மைதீ
ரடியருளத் திறைகொள்ளு மானந்த
ருத்திரனை யகத்துள் வைப்பாம்.

* * * *

End:

மங்கைக் கிடநல் கிறைவா சரணம்
மறையோர் பணியும் பனவா சரணம்
துங்கச் சுரர்நா டரியாய் சரணம்
துறவோர் கள்தொழுந் துறவோய் சரணம்
கங்கைக் கதிவே ணியனே சரணம்
கச்சிப் பதிவாழ் அமலா சரணம்
அங்கைத் தழலேந் தழகா சரணம்
ஆனந்தவுருத் திரனே சரணம்.

திருச்சிற்றம்பலம்.

No. 1562. KACCI-ĀṈANTA-RUTTIRECAR-PATIKAM

கச்சி ஆனந்த ருத்திரேசர் பதிகம்

[336-A]

Size, 13″ × $1\frac{1}{4}$″. Pages, 3. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1561.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1561 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1563. KACCI-MĀLAI—[TEXT]

கச்சி மாலை—[மூலம்]

[1145]

Size, 13″ × 1¼″. Pages, 62. Lines, 4 on a page. Condition, Good. Appearance, Old.

Note: This is a work in 11 stanzas on Sri Ēkamparēswara at Kāñcipuram, by Sri Civañana Cwāmikal.

Complete.

குறிப்பு: இது, சிவஞான வள்ளலார் அருளிச் செய்தது. அச்சிடப் பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியா யுள்ளது.

பூர்த்தி.

Beginning:

திருமா லயனொடு தேவரும் நாகருஞ் சித்தர்களு
மருமா முநிவரு மண்டத் துயிர்களு மன்பு செய்ய
வொருமா துமையொடு மொண்குக னொடுகம் பாநதிக்க
ணிருமா மரநிழல் வீற்றிருந் தாய்கச்சி யேகம்பனே. 1

* * * *

End:

வெய்யிற் படுபுழுப் போலும் பவத்தின் மெலிந்துவிம்மி
யுய்யு நெறியறி விப்பவ ருண்டுகொல் லோவென் றுள்ளி
னையு முளத்தின னன்றேவிம் மாலை நயமறிவார்
கையி லுழைமழு வேந்துங் கலிக்கச்சி யேகம்பனே. 101

No. 1564. KAPALĪCAR-VIRUTTAM—[TEXT]

கபாலீசர் விருத்தம்—[மூலம்]

[962-F]

Size, 9″×1″. Pages, 8. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Sri Kapālīcar is the presiding deity at the Mylapore (Madras) Civa temple. This is a hymn in 5 Viruttams on Him, by Aruṇacala Mudaliar.

Complete.

குறிப்பு: இது, திருமயிலை அருணசல முதலியாரியற்றியது. மயிலைக் கபாலீசர்மீது உள்ளது. அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் ஐந்து விருத்தங்கள் காணப்படுகின்றன.

பூர்த்தி.

Beginning:

சீர்கொண்ட கங்கையுந் திங்களுங் கொன்றையணி
திகழ்சடைக் கற்றை யழகும்
சிலை மதனை வென்றவிழி வளருமிரு நுதலினிற்
றிருபுண்ட ரத்தி னழகும்
பார்கொண்ட திருவயிற் றரசிகற் பகவல்லி
பாகத்தி ருக்குமழகும்
பாதவிரு போதழகும் ஏழையேன் கண்டுமுற்
பழவினை யொழிப்ப தென்றோ
கார்கொண்ட விடமுண்ட கண்டநீ லாவிரு
கரத்துறு கபால சூலா
கனமூலா கமநாலா மறைமேலா கியசீலா
காளியுட னடு காலா
ஆர்கொண்ட கொள்கைக்கு முரிகோலா சச்சி
தானந்த மான லீலா
அருமையடி யார்நேச திருமயிலை பூர்வாச
அருள்புரிக பாலீசனே. 1

* * * *

End :

மடியாத சனனப் பெருங்காட்டி லேதுட்ட
மனமெனும் வல்லிருளிலே
வாதாடு காமாதி யெனுமழையி லேயுலக
மாயையெனு மூளைவழியிலே
முடியாத வைம்புலக் கள்ளர்கையிலே சிக்கி
மூதறிவெ னுந்தனமெலாம்
முழுவதும் பறிகொடுத் துழலுமெனை வாவென்று
முத்திநிலை தந்தருளுவாய்
கடியார் மலர்ப்புன்னை வனவுலா சாபுலிக்
கான்முனி தொழுஞ்ச பேசா
கயிலாசா வகிலேசா விசுவாசா பசுபாசா
கல்லாலி னிழல்வி லாசா
அடிமாறி நடமிடு சுயம்பிர காசாவிழிக்
கானந்த மான தேசா
அருமையடி யார்நேச திருமயிலை யூர்வாச
அருள்புரிக பாலீசனே. 5

No. 1565. KAPĀLĪCAR-VIRUTTAM—[TEXT]

கபாலீசர் விருத்தம்—[மூலம்]

[915]

Size, $8\frac{1}{2}'' \times 1''$. Pages, 10. Lines, 4 on a page. Condition, Good. Appearance, Old.

Note : Same as No. 1564.

Complete.

குறிப்பு : *இது, முன் எண் 1564 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1566. KALLĀṬAM—[TEXT]

கல்லாடம்—[மூலம்]

[705]

Size, 12″ × 1⅝″. Pages, 104. Lines, 11 on a page. Condition, Injured. Appearance, New.

Note: Kallātam, by Kallatanār is a famous book of hymns in Tamil. It consists of 100 stanzas, in each of which a sentiment taken from Tirukkōvaiyar by Sri Māṇikka Vācakar is expanded and the entire work made into a devotional treatise on Lord Civa.

Complete.

குறிப்பு: இது, ஸ்ரீ மாணிக்கவாசகர் இயற்றிய திருக்கோவையாரினின்று தேர்ந்தெடுத்த 100 செய்யுட் கருத்துக்களை விளக்கி அமைத்த 100 செய்யுட்களைக்கொண்ட சைவப்புகழ் நூல். இதனை இயற்றியவர் கல்லாடனார்.

பூர்த்தி

Beginning:

வாய்ந்தபொருட் கொருபொருளாய்க் கலைவாணிக்
கருள்கொழிக்கும் மனமாய்ப்பாரின்
ஆய்ந்தமுது தமிழ்வடித்துக் கல்லாட
மெனஒருநூ லருளி யிட்டார்
தேய்ந்தமதிச் சடைப்பரமர் கருணைபெறச்
சங்கமுது செல்வர் வாழ்த்த
காய்ந்தபுல னடக்கியுயர் பெருஞானம்
பழுத்தருள்கல் லாட னரே.

* * * *

End:

வெறிக்குறுங் கதுப்பின் வெள்ளெயிற் றெயிற்றியர்
செம்மணி கழற்றித் தேனிலக் கெறிதரப்
பெருக்கெடுத் திழிதரும் வெள்ளப் பிரசக்
கான்யா றுந்துங் கல்வரை காட

....

....

....

நின் னுயிர்க் கின்னல் நேர்தரத் திருவின்
றன் னுயி ர்க்கின்ன றவ றில வாவா
விரண்டுயிர் தணப்பென வெனதுகண் புலர
விக்கோட்டு வட்டை யிலிவ் வரவென் றும்
விடுவது நெடும்புக முடுவே லோயே. 102

கல்லாடம் முற்றும்.

Colophon:

திருசிரபுரஞ் சிவராம காசியாபிள்ளை யவர்களுக்கு நெல்லை நாயகம் எழுதி முகிந்தது. பிங்களஞு ஆடிமீ 32உ.

No. 1567. KALLAṬAM—[TEXT]

கல்லாடம்—[மூலம்]

[123]

Size, $16\frac{3}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 256. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1566. A few leaves are missing.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1566 பிரதி போன்றது. நூல் முற்று முளது. முதலாவது ஏடும், 3-இலிருந்து 8-ஆவது ஏடு வரை 6 ஏடுகளும் இச்சுவடியில் இல்லை.

அபூர்த்தி.

No. 1568. KALLĀṬAM—[TEXT]

கல்லாடம்—[மூலம்]

[1245]

Size, $10\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 84. Lines, 10 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 1566 but containing 1—52 stanzas alone.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1566 பிரதி போன்றது. ஆயினும் 52 பாடல்வரையுமே யுள்ளது. மூலம்மட்டும் உள்ளது. ஏடுகள் தொளைக்கப்பட்டும், ஓரங்கள் ஒடிந்தும் உள்ளன.*

அபூர்த்தி.

No. 1569. KALLĀṬAM—[TEXT]

கல்லாடம்—[மூலம்]

[589-E]

Size, $14\frac{3}{8}'' \times 2''$. Pages, 36. Lines, 14 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1566 but it has only 56 stanzas.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1566 பிரதி போன்றது, ஆனால் 1 முதல் 56 செய்யுட்களே உள்ளன.*

அபூர்த்தி.

No. 1570. KALLĀṬAM—[TEXT]

கல்லாடம்—[மூலம்]

[123-A]

Size, $15\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 59. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: Same as No. 1566 having stanzas from 57 to end.

Incomplete.

குறிப்பு : *இது, முன் எண் 1566 பிரதி போன்றது. ஆயினும் 58-ஆவது பாடலிலிருந்து தொடங்கி 102-ஆவது பாடல்வரையு முள்ளது.*

அபூர்த்தி.

No. 1571. KALLĀṬAM—[TEXT]

கல்லாடம்—[மூலம்]

[406]

Size, $14\frac{1}{4}'' \times 1\frac{3}{4}''$. Pages, 36. Lines, 15 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: Same as No. 1566 but containing only 1—40 stanzas.

Incomplete.

குறிப்பு : *இது, முன் எண் 1566 பிரதி போன்றது. இதில் 40 பாடல்வரையுமே உள்ளன. சுவடியின் ஏடுகள் ஓரத்தில் ஒடிந்துபோயுள்ளன.*

அபூர்த்தி.

No. 1572. KALLĀṬAM—[TEXT]

கல்லாடம்—[மூலம்]

[407]

Size, $15\frac{1}{2}'' \times 1\frac{3}{8}''$. Pages, 18. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: Same as No. 1567 but contains only 1—13 stanzas.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1567 பிரதி போன்றது. ஆயினும் 13-ஆவது பாடல்வரையுமே யுள்ளது.*

அபூர்த்தி.

No. 1573. KALLĀṬAM—[TEXT AND ANNOTATIONS]

கல்லாடம்—[மூலமும் உரையும்]

[828]

Size, $18\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 170. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, New.

Note: This Mss. though incomplete, has the original Tirukkovaiyar stanza and its Koḷu before each stanza. It has also annotations.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1566 பிரதி போன்றது. ஆயினும் நூல் முற்றும் இல்லை. உரையுடன் கூடியது. முதலில் 4 ஏடுகள் இல்லை. 38-ஆவது பாடல்வரையுமே யுள்ளது.*

அபூர்த்தி.

பூமணியானை ....திருநுந்தற் கொடியே.

இ-ள். வரைவு முடுக்கம் - துறை தொழு திறநது கூறவும் வேட்கை மிகவாற் பின்னுங் குறியிடைச் சென்று நிற்பவக் குறி யறிந்து தோழி தலைமகளுக்குக் கூறுவாள்போன்று சிறைப்புற மாகத் தலைமகற்கு வரைவு தோன்றத் தாயறிவு கூறல். பூமணி நாயகன் என்பது, அற முதலிய வாற்ற னிறைதலை யுடைய கல்வி யாற் பெற்ற வறிவினையுடைய பெரியோர் மங்கல மொழியாய்ப் பூவேன் மணியென யானை யென்ப. பொன்னென வெடுத்துச் சொல்லிய கவிபோலப் பூவு மணியும் யானையும் பொன்னு மெடுக் கப்பட்டுத் திங்களும் புயலும் பருதியுமக் கவிபோலப் பெற்ற மலையினின்றுந் தோன்றி மிகவும் பரந்துவருங் காட்சிக்குரிய தாதலா னெடுந்தூரம் பாரிடத்தி லின்ப முண்டாக்கும் பெருக்கினை யுடைய புனல்வையை வளர்ந்த நீர்மையையுடைய மதுரை யுடலாகத் தானுயிரெனப் பொருந்து நாயக னென்க.................. நெஞ்சம் புழுங்கின ளாதலா னிவ்வொழுக்கத்தினை யறிந்தாள் போலு மென்க.

*   *   *   *

End :

வடமீன் கற்பின் பீடுகெழு மடந்தை
பெருங்கடன் முகந்த வயிறுநிறை நெடுங்கார்
....
.... பெருமையு மிலனே.

No. 1574. KALLĀṬAM—[ANNOTATIONS]

கல்லாடம்—[உரை]

[257]

Size, $15\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 148. Lines, 10 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This Mss. contains only Annotations on stanzas No. 1—38 of Kallāṭam.

Incomplete.

குறிப்பு : இது, உரைமட்டும் கொண்டது. 1—38-ஆம் பாடல் வரை உரை எழுதப்பட்டுள்ளது. முதலில் தேவாரப்பா ஒன்று தோத்திரமாகக் கொண்டுள்ளது. நூல் பூர்த்தியாயில்லை. உரை எழுதியவர் இன்னாரென்று தெரியவில்லை. ஏடுகள் சிதிலம். முதற்கண்ணும் இடையிலும் சில ஏடுகள் ஓரம் முறிந்துபோயுள்ளன.

அபூர்த்தி.

Beginning :

திங்கள் முடி பொறுத்த..............முடிப்பையின்றெனவே. எ-து, கடவுள் வாழ்த்து. திங்கள் முகத்த என்பது, பிறையை முடியின் கட்டரித்த வெ..............லையினின்றும் வீழா நின்ற வருவியானது கரிய கணியை கொழிக்கப்பட்ட தோற்றத்தைப் போல விரண்டு கவுளுஞ் சிந்தப் பட்ட மதமாகிய.........பெருக்கில் வண்டினம் புரளப்படுமதற்கிடமாய் விளங்காநின்ற புகரினை யுடைய முகத்தினையுடையாயெனத்திங்கண் முடிபொறுத்த என்னுமுவமை யடையை பெ...ருட்குங் கொள்க..............................

* * * *

End :

............................முள்ளுடை போல எ-து, முள்ளினை யுடைய பெரிய வாயினையுஞ் சிவந்த கண்ணினையு முடைய வரா லினமானவை வளைந்த வாயினையுடைய தூண்டிலிலிட்ட பெரிய கயிற்றினை யறுத்துக் குவளையினது பசிய விலையினையுந் தாமரை யையு முழக்கி நெடிய வாய்க்கால்களிற் குதித்து நீர்பாய வுண் டாக்கிய தொழிலினையுடைய சாந்துப் படைகளின் வழியே நீர் பாயாது மரித்தற்கிடமாகிய மிகுந்த சிறப்பினையுடைய மருத நிலஞ் சூழ, ...துறைக்கிறைவனுவனிருதாளிற் பற்றுவிட்ட தனால் வந்த கீழ்மைக் குணஞ் செய்யும் பொய்கைக்குப் பெருமை யில்லாதது போல வென்க. பெருமையு மிலனென்ற பெருமையு மில னுயினனெந்தப் பெருமையும் பழியும் பாவமும் மஞ்சுதவ......

No. 1575 KALLĀṬAM—[ANNOTATIONS]

கல்லாடம்—[உரை]

[1221]

Size, $12\frac{1}{4}'' \times 1\frac{3}{8}''$. Pages, 172. Lines, 12 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1574. Showing annotations to 1—38 stanzas of Kallātam only.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1574-ஆம் சுவடிப் பிரதியைப் போன்றது. 38-ஆவது பாடல் வரையுள்ளது; உரைப் பிரதி. முதற்கண் துண்டு ஏட்டில் கல்லாடம் உரை ஆழ்வார் திருநகரி லட்சுமண கவிராயரவர்களுடையது என்று எழுதப்பட்டுள்ளது.*

அபூர்த்தி.

Colophon:

மேல் பிரதியில் அடிவரைப் பாட்டு முப்பத்து மூன்று பாட்டுக்கு உரையெழுதுவித்து முப்பத்துநாலாம் பாட்டுக்கு முழுதும் உரையில்லாமல் இடைவிட்டு மேலவற்றில் நாம்பு என்னும் பாட்டு முதல் மூன்று பாட்டுக்குரை எழுதி மூன்று பாட்டென்று தொகை யெழுதினதிலிதுக்கு முன்னிரண்டு பாட்டு உரையுமில்லை யிதன்பின் அருடருங் கேள்வி யென்னும் பாட்டு முதலிலிருக்கிற பாட்டுக்கு முழுது முரையில்லை. இதன் பிறகு இடையிட்டெழுதி யிருப்பதெல்லாம் மூல பாடம் பார்த்து அந் தந்தப்பாட்டு அறிந்து அதற்குரை யெழுதி விச்சிருபபது மறிய.

No. 1576. KALLĀṬAM—[ANNOTATIONS]

கல்லாடம்—[உரை]

[1214]

Size, $11\frac{1}{8}'' \times 1\frac{3}{4}''$. Pages, 162. Lines, 12 on a page. Condition, Injured. Appearance, New.

Note: Same as No. 1574.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1574-ஆம் சுவடிப் பிரதியைப் போன்றது. 38-ஆவது பாடல் வரையும் உரைப் பகுதி மட்டுமே யுள்ளது.

அபூர்த்தி.

No. 1577. KALLĀṬAM—[ANNOTATIONS]

கல்லாடம்—[உரை]

~~[125]~~ (1215).

Size, 18½″ × 1½″. Pages, 166. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, New.

Note: Same as No. 1574.

Incomplete.

குறிப்பு: இது, முன் 1574-ஆம் சுவடிப் பிரதியைப் போன்றது. 38-ஆவது பாடல் வரையுமுள்ளது. உரைமட்டு முள்ள பிரதி.

அபூர்த்தி.

No. 1578. KALACAI-MĀLAI

கலைசை மாலை

[168-A]

Size, 14½″ × 1¼″. Pages, 28. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work by Mahavidwan Minatci-Cuntaram Pillai, is a poem in 100 stanzas on Lord Civa at Kalacai [Totti-K-Kalai] near Madras.

Complete.

குறிப்பு: இது, தொண்டை மண்டலத்திலுள்ள தொட்டிக்கலை என்னும் தலத்திலுள்ள சிவபெருமான் மீது இயற்றியது. இதன் ஆசிரியர் மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள். அவர் பெயர் தேசிகர் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. மற்ற விவரம் அறியக்கூடவில்லை. இந்தப் பிரதியில் நூல் முழுவதுமுள்ளது.

பூர்த்தி.

Beginning :

விநாயகர் துதி

பூமேவு மதுவொழுகி யுவட்டெடுத்துப்
புலவகலப் புணரி பாயும்
மாமேவு பொழிற்கலைசை யெழிற்சிதம்ப
ரேச்சுரற்கோர் மாலை சாத்த
நாமேவு புகழ்மலிநீ ராவிதொறு
நனிவிளங்கி நாளும் வாழுந்
தேமேவு செங்கழுநீ ராம்பலடித்
தாமரைநார் சிறப்பக் கொள்வாம்.

* * * *

End :

நூல்

செக்கரஞ் சடையும் வெண்பிறைக் கொழுந்துந்
திகழ்முக் கண்ணுநாற் றோளு
மைக்கரு மிடறு மொருபுறப் பசப்பு
மலரடித் துணையுநான் மறவேன்
மிக்கநற் றவத்து முனிவரும் பணிவான்
மேயபல் லோர்களு மடையக்
கைக்கரு முவகை யளித்துவீற் றிருக்குங்
கலைசைவாழ் சிதம்பரேச் சுரனே. 10

Colophon :

திருக்கலைசை மாலை. மீனாட்சி சுந்தர தேசிகர் பாடியது.

No. 1579. KALACAI-MĀLAI—[TEXT]

கலசை மாலை—[மூலம்]

[758]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Page, 28. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1578.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1578 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1580. KALACAI-MĀLAI—[TEXT]

கலசை மாலை—[மூலம்]

[415]

Size, $12'' \times 1\frac{1}{2}''$. Pages, 6. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1578.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1578 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் 12 செய்யுட்கள்மட்டு முள்ளன.*

அபூர்த்தி.

No. 1581. KALUKKUNRA-MĀLAI—[TEXT]

கழுக்குன்ற மாலை—[மூலம்]

[410]

Size, $16'' \times 1''$. Pages, 38. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work contains 102 stanzas on the deity at Tiru-K-Kaḻukkunram, Chingleput Dt. Other particulars are not available.

Complete.

குறிப்பு: இது, திருக்கழுக்குன்றத்தி லெழுந்தருளியுள்ள சிவபெருமானைப் பற்றியது. இந்தப் பிரதி சிதலமாயிருப்பினும், நூல் முற்று முள்ளது. மற்ற விவரங்கள் அறியக்கூட வில்லை.

பூர்த்தி.

Beginning:

அறநெறி யன்பு மாலை யாகம விதியி னாலே
துறவறந் தன்னில் நின்ற தூயவ னருளி னாலே
விறலரி முருகன் தொப்பை விநாயக னருளி னாலே
இறைவ னருளைக் கொண்டே யியம்புவனி துவு மென்றான்.

* * * *

End:

விண்கொண்ட பங்கய வேதாவுமா............தண்ணு
(எண்) கொண்ட முப்பத்து முக்கோடி தேவரு மிந்திரனும்
மண்கொண்ட தொண்டரு மெப்பாலுலகு மனமகிழ
கண்கொண்ட...............த்தோற்று கழுக்குன்றமே. 102

No. 1582. KAḶAKKĀTTU-C-CATTIYA-VĀCAKAR-IRATTAI-MAṆI-MĀLAI—[TEXT]

களக்காட்டுச் சத்திய வாசகர் இரட்டை மணிமாலை

[மூலம்]

[584-A A]

Size, $7\frac{1}{2}'' \times 1''$. Pages, 4. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work on Lord Catya-Vākīca at Kaḷak-kātu, (Tirunelveli Dt.) in 20 stanzas, in 2 metres. The name of the author is not known.

Complete.

குறிப்பு: இது, திருநெல்வேலி ஜில்லா களக்காடு என்னும் க்ஷேத்திரத்திலுள்ள சத்தியவாசகர் என்னும் சிவபெருமான் விஷயமானது. அச்சிடப் பெறவில்லை. மற்ற விவரமும் அறியக்கூடவில்லை. இந்தப் பிரதி பூர்த்தியாகவுள்ளது.

பூர்த்தி. டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களால் பதிப்பிக்கப் பெற்றது

Beginning:

பூப்பார் கரந்தைப் புரசுரே சன்னிதில்
வாய்ப்பா யிரட்டைமணி மாலைக்குக்—காப்பாவார்
பொன்கருத்த ரென்கருத்த ரென்னவரு போரானை
யென்கருத்த ரென்கருத்த ரே. 1

அணிகொண்ட தென்களந்தை யாகிலறி யேனிப்
பிணிகொண்ட சென்மம் பெறுக—பணிப்பாய்
மருமாலை யேசத்திய வாசகன்றுட் கிட்டுத்
திருமாலை யேசத் தினம். 1

* * * *

End:

கூற்றும் பயந்து களந்தைக்கு ளந்தைக்கு மேமுகமல்
சாற்றும் படிவென்ற தாளொரு மாவுடைத் தாயகமே
மாற்றும் பிறவிப் பிணிகட்கெல் லாமலை மென்மருந்தாய்
ஆற்றும் பிடக்கு மாயிருப் பார்களா .... வந்தே. 20

No. 1583. KARKṬUI-MĀLAI—[TEXT]

கற்குடி மாலை—[மூலம்]

[533]

Size, $15\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 94. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work is on Lord Civa at Kaṟkuṭi (near Tiruchi) and the Mss. contains only 88 stanzas. Other particulars are not known.

Incomplete.

குறிப்பு: இது,கற்குடியிலுள்ள சிவபெருமான் சம்பந்தமானது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ~~அச்சிடப்பெறவில்லை.~~ இந்தப் பிரதியில் 88 பாடல்கள்வரை காணப்படுகின்றன.

அபூர்த்தி.

Beginning:

பூசுரர் வணங்கும் புகலிகா வலனூர்
புண்ணியப் பாதமு முலகம்
பேசுசீர் நாவுக் கரசர்பொற் றாளும்
பெருகுமா நதிவழி தருமா
மாசுதீர் பதிகம் பாடுநா வலர்தா
மரைமல ரடியும்வண் கதிர்போற்
றேசுசெய் வாத வூரர்பொற் கழலுஞ்
சிறியனேன் சிந்தைவிட் டகலா.

* * * *

End:

மிடைத்தம ருடற்றும் பலகுண மறுத்து
மிகுளவா னந்தமுற் றெடுப்பக்
கிடைத்துணைக் கரண வாணவ வெழினி
கிழியான் பெறுவதெந் நாளோ
உடைப்பினை மக்கள டக்குமுன் வாராலய
வுடைப்படபுட மடையின்
கடைத்தலை வெடிபோய் விழும் பணையுடுத்த
கற்குடி மாமலை பரனே.

No. 1584. KUṞṞĀLA-C-CILEṬAI-VEṆPĀ

[TEXT]

குற்றாலச் சிலேடை வெண்பா—[மூலம்]

[191]

Size, $12\frac{3}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 54. Lines, 4 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: This work is on the Lord at Tirukkuṟṟālam (Tirunelveli Dt.) in Cilētai composition. The author is Tiru-Kūta-Rācappa-K-Kaviroyar. The book has been edited and published by Mahāmahopādhyaya Dr. Aiyar.

Complete.

குறிப்பு: *இது, திருக்குற்றாலத் தலத்தைப்பற்றிச் சிறப்பித்துள்ள சிலேடை வெண்பாக்களை யுடையது. காப்புச் செய்யுட்கள் உட்பட 102 வெண்பாக்களை யுடையது. இயற்றியவர் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் என்று அச்சுப்பிரதியால் தெரிகின்றது. டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களால் அச்சிடப்பெற்றுள்ளது. அச்சுப் பிரதியில் காப்புச் செய்யுட்களுள்பட 105 வெண்பாக்கள் காணப்படுகின்றன. அச்சுப் பிரதியிற் குற்றாலச் சிலேடை வெண்பா என்று குறிப்பிட்டுள்ளது. நூல் முற்று முள்ளது.*

பூர்த்தி.

Beginning :

சொன்னத்தா லத்துதிக்கைத் தும்பிமுகத் தாற்றுதிக்கை
கன்னத்தா லத்துதிக்கை காட்டுமே—முன்னயனைப்
பொற்றால மாமலைப் போலிருந்தா ராலிருந்தார்
குற்றால மாமாலைக் கு.

* * * *

பூமேவு தென்சாரற் புல்லைந்துங் கல்லைந்தும்
கோமே தகமேயுங் குற்றாலம்—மாமேருச்
சிங்கா சநத்தினன் செய்யகுழைத் துய்யமதிச்
சங்கா சநத்தினன் சார்பு.

*   *   *   *

End:

வாழிக்கோ னீதியரு மன்னுமெழிற் காளையரும்
கோழிக்கோ னைப்பொருவுங் குற்றாலம்—காழித்
திருத்தனையன் பாடலார் சீராலங் காட்டிற்
கருத்தனையன் பாடலார் காப்பு. 102

குற்றால வெண்பா முற்றும்.

குருபாதமே கெதி.

தவப்பெற்ற நாயகி துணை.

மீனாக்ஷி துணை.

No. 1585. KUṞṞĀLA-MĀLAI—[TEXT]

குற்றால மாலை—[மூலம்]

[761]

Size, 17″×1″. Pages, 52. Lines, 4 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is another work on the same deity by the same author as in the Mss. described in No. 1584.

Complete.

குறிப்பு: இது, திரிகூடராசப்பக் கவிராயர் இயற்றியது. அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாக உள்ளது.

பூர்த்தி.

Beginning :

பூமண் டலம்பரவும் புங்கவர்குற் றாலலிங்கர்
நாமஞ்சேர் பாமாலை நாட்டவே—தாமஞ்சேர்
தந்தமதத் தந்திமுகத் தந்தைதுணைச் செந்தினகர்க்
கந்தனிணைச் செஞ்சரணங் காப்பு.

* * * *

End :

சித்தர்கள் போற்றுநின் றாவணிமூலத்தி னெல்லைவந்து
முத்தமிழ் பாடக் கருணைசெய் தாண்டானை முற்றுமினிக்
கொத்தடி யேனுக்குன் பொற்பதந் தாகுழல் வாய்மொழியா
ளுத்தமி பாகமுவந்தாய் குற்றாலத் துறைபவனே. 100

No. 1586. KURRĀLA-LIṄKAR-PERIL-IRATNĀKARA-VILĀCAM-PERUM-PUKAḶ

[TEXT]

குற்றால லிங்கர் பேரில் இரத்னாகர விலாசம் பெரும்புகழ்—[மூலம்]

[969-G]

Size, $14\frac{1}{2}'' \times 1''$. Pages, 36. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, New.

Note : This is a hymn on Sri Tiru-K-Kurrala Linkar at Tiru-K-Kurralam. There are only 44 stanzas in the Mss. Other particulars are not known.

Incomplete.

குறிப்பு : இது, திருக்குற்றால லிங்கர்மேல் பாடிய ஒரு தோத்திரம். இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. நூல் முற்றுமில்லை.

அபூர்த்தி.

Beginning :

அரும்பிமிர்செண் பகவனக்குற் ருலலிங்கர் மீதி
லமுதசஞ் சீவினியாத் ஞகர விலாசப்
பெரும்புகழ்ப்பி ரபந்தமாகக் கரும்பு நுனி யூரும்
பேரமுத மெனப்பெரியோர் பேசவவர்க் கருள்வான்
குரும்பைமுலைக் குறத்திமனங் கூட்டிவைப்பித் திலஞ்சிக்
குமரனுளங் களித்திறைஞ்சக் கோட்டுவா ரணமாய்த்
திரும்பிப் புகுமுகமுங் கருணைபொழிந் திலங்கத்
திரிகூடத் தினிதுறைசெண் பகவிநா யகனே.

* * * *

End :

....
கரையே செந்துகளே திசையே வந்துகளே
உப்பளவரே பாத்தியரே யுதவுமக வேந்த......ளே
யுயர்குற்ருல காதர்வரை யுத்தியே சந்துரையாயே. 44

No. 1587. KAITTALA-MĀLAI—[TEXT]

கைத்தல மாலை—[மூலம்]

[819-D]

Size, $13'' \times 1\frac{1}{4}''$. Pages, 4. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a praise on the hand which bears Civa-Liṅka on it. The author is Civaprakāca Cwamikal.

Complete.

குறிப்பு : *இது, சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பெற்று, அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் நூல் முழுமையும் உள்ளது.*

பூர்த்தி.

Beginning :

முன்ன மாலயன் இந்திர னமரர்கண் முனிவர்
பன்னு மாரணம் போற்றுதற் கரியநம் பரமன்.
மின்னு லாவிய சடாடவிக் கடவுள்வீற் றிருப்ப
என்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. 1

* * * *

End :

தன்னை யோர்பொழு திறைஞ்சுவான் கருதியித் தரைமேல்
மன்னு மாலயம் யாண்டுள தெனவல மராமல்
பொன்ன வாமலர்ச் சடையுடைப் புனிதன்வீற் றிருப்ப
என்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. 10

No. 1588. CITTIRA-CAPAI-VIRUTTAM—[TEXT]

சித்திர சபை விருத்தம்—[மூலம்]

[293-E]

Size, 16″ × 1¼″. Pages, 8. Lines, 6 on a page. Condition, Good. Appearance, New.

Note: This work by Totti-K-Kalai Cupramania Munivar is on the Chitra Saba at Tiru-K-Kuṟṟālam, At the end there are some stanzas from the work, Naṉneṟi.

Complete.

குறிப்பு: இது, திருக்குற்றலம் சித்திரசபையில் நடம்புரியும் பெருமான்மீது இயற்றியுள்ள பதிகம். இதன் ஆசிரியர், தொட்டிக் கலைச் சுப்பிரமணிய முனிவர். அச்சிடப்பெற்ற விவரம் அறியக்கூட வில்லை. இந்தப் பிரதியில் செய்யுட்கள் முற்றும் தெளிவாக வுள்ளன. இறுதிப் பக்கத்தில் நன்னெறிப் பாடல்கள் சில பிரதி செய்யப்பெற்றுள்ளன. அச்சானது.

பூர்த்தி.

Beginning :

புத்தமு தருந்திடும் புத்தேளி ருலகிற்
பொருந்துதிரி கூட வரையிற்
புதுமதி யுடைந்தமுத மொழுகிவழி கின்றெனப்
பொங்குசிவ மதுகங் கையின்
றத்துமரு வித்திரள் கொழித்துவரு நித்திலத்
தண்சித்திர நதிய ருகெலாந்
தவளச் சுடர்ப்படலை யிருளகல நிலவிடத்
தண்குமுதம் வாய்தி றக்கும்
நத்துலவும் வாவிசூழ் நன்னர்க் குற்றால
நற்குறும் பலவி லுறைவோன்
நாதங்க டந்துபர வேதங்க டந்தவொரு
நடுவெளியின் மறைமு றையிடச்
சித்திரப் பொற்றொடிச் சிற்றிடைச் சத்திநற்
சிவகாம வல்லி மகிழச்
சித்திர சபைதன்னிற் றிருச்சிலம் பொலிதரக்
திருநடம் புரிவ ரதனே. 1

* * * *

End :

ஆயிர முகக்கங்கை யலையெறிந் தாடமல
ராடகக் கொன்றை யாட
வரவாட வால்வெண் பிறையாட வெண்டலைக
ளாடவெள் ளறுகு மாட
ஞாயிறுதை யம்பொரு சடாமகுட மாடவளர்
நகைமுகக் கருணை யாட
நாககுண் டலமாட வதளாட வொருகையி
னுதவெண் டுடியு மாட
மேயவொரு கையிலெரி யாடிட வமைத்தொருகை
வீசியொரு கையா டவோர்
வீரவொண் கழலாட வுயிர்வர்க்க மானந்த
வெள்ளந்தி ளைத்தா டவே
சேயிதழ்ச் சீறடிச் சிவகாமி யம்மையிரு
திருநயன வண்டு மாடச்
சித்திர சபைதன்னிற் றிருச்சிலம் பொலிதரத்
திருநடம் புரிவ ரதனே. 10

No. 1589. CITTICURAM-TAKKAṆAMŪRTI-TOTTIRAM

சித்திசுரம் தக்கணாமூர்த்தி தோத்திரம்

[871-B]

Size, $6\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 8. Lines, 11 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note: This hymn, containing 10 stanzas is on God Dakkiṇāmurti at Tiruvarur.

Complete.

குறிப்பு: இது, திருவாரூர் தட்சணாமூர்த்தி துதி. இந்தப் பிரதியில் 10 பதிகங்களு முள்ளன.

பூர்த்தி.

Beginning:

அண்டமுதல் நால்யோனி யதில்விரியு
மெண்ணூற்று நான்குநூ றுயிரவரி
லாடுறு கறங்குபோல் வாடியா னுழலாமை
யரியவுரு வேயளித்து
முண்டுசம யத்திலொன் றுதபடி நல்ல
வுட்சமய சைவ நல்கி
யோவாத சரித்ராதி மூன்றையு முணர்த்தியது
மோவுசிவ ஞான மருள்க
கண்டவறி வொன்றலாற் கமலன்பால் வாழ்வையுங்
கருதா தொருத்த ராலுங்
காணொணு வுண்மையைக் கல்விநுண் ணறிவினுற்
கண்ட மட்டிற் படியுமே
திண்டிற லளித்த மணி கண்டன்
தென்கமலை நகரில் வாழும்
சித்திச் சரத்திலுறை தெட்சணா மூர்த்தியே
சிற்சொரூப மான முதலே. 1

* * * *

End :

அன்றுகே வலமதி லாணவ மயத்தனு
யான்மனா னமுமில் லேனை
ஐயநீ கிருபைசெய் தாளவந்தருளு மா
யைந்து கிர்த்திய தெய்வமாய்
நின்றுகன் மாதியா லெழுவகைத் தோற்றிக
ணிலவயோ னிகளி டத்து
நேராக வேயனை யாரா தளித்துமே
நித்த சாக்கிர கேவலத்
தின்றுகர ணங்கருவி யெல்லா மொடுக்கியு
மிளைப்பாற வைத்த வதனுக்
கேதுமென இல்லையே யானுமென தல்லவே
யீதலென் போத மறவே
சென்றுசன காதிதொழ வடவால நீழலிற்
றென்கமலை நகரில் வாழுஞ்
சித்தீச் சரத்திலுறை தெட்சணா மூர்த்தியே
சிற்சொரூப மான முதலே. 10

No. 1590. CITAMPARA-NĀTAR-PATIKAM

[TEXT]

சிதம்பரநாதர் பதிகம்—[மூலம்]

[887-A]

Size, $8\frac{3}{4}'' \times 1''$. Pages, 6. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This Mss. contains a Vinayaka invocation and a Viruttam on Lord Nataraja at Citamparam. (At the end a song from Nanṭam Caritram is copied).

Incomplete.

குறிப்பு: இது, சிதம்பரம் நடராசர்மீதுள்ள பதிகம்; அச்சிடப் பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் காப்பும், ஒரு பாடலும் உள்ளன. பின்னர் நந்தனார் சரிதப் பாடலொன்றும் காணப்படுகிறது.

அபூர்த்தி.

Beginning :

சீர்மருவு தில்லைச் சிதம்பராநா தன்மீது
பேர்மருவு நற்பதிகம் பேசுதற்கு—ஏர்மருவு
கற்பகவேல் விட்டமலர்க் கையன்முன்னோன் யானைமுகக்
கற்பகவி நாயகன்றாள் காப்பு.

விரித்தசெஞ் சடையாட வதனசந் திரனாட
விரிகமல நயன மாட
வெண்முறுவ லிலவாட நண்ணுதம ருகமாட
வீசுமொரு செங்கை யாடத்
தரித்தபுலி யதளாட அபயகர மாட......
தங்குதோ டூச லாட
தாங்குநூ லாடமே லோங்குநீ ராடவொளிர்
தண்பவள மேனி யாட
உரித்தகரி யுரியாட உரககங் கணமாட
உபயபரி புரமு மாட
ஒருபத மெடுத்தாட ஒருபத மிதித்தாட
உள்ளே மகிழ்ந்து சற்றே
சிரித்துமலை மங்கைகொண் டாடநின் றுடுமுன்
திருநடன மின்று கண்டேன்
செகம்பணி திகம்பர சிதம்பரந டேசனே
சிற்சொரு பானந்த னே. 1

* * * *

End :

பித்தந் தெளிய மருந்தொன் றிருக்குது
பேரின்ப மன்றுள்ளே
மத்த மருந்துகள் தின்றுழுமுள்ளுக்கு வல்லேவல்லேல்
ஐயோ அடிமை.........

* * * *

No. 1591. CITAMPARA-MUMMAṆI-K-KŌVAI

[TEXT]

சிதம்பர மும்மணிக் கோவை—[மூலம்]

[584-U (1)]

Size, $7\frac{1}{2}'' \times 1\frac{7}{8}''$. Pages, 26. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This work on Sri Nataraja at Citamparam contains 30 stanzas composed in 3 metres. The author is Sri Kumarakuruparar.

Complete.

குறிப்பு: இது, சிதம்பரம் நடராசப் பெருமான்மீது பாடப்பட்ட பிரபந்தம். ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை இவைகளை முறையே கொண்டு மண்டலித்து 30 பாடல்களாற் பாடப்படுவது. குமரகுருபர சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டது.

பூர்த்தி.

Beginning:

செம்மணிக்கோ வைக்கதிர்சூழ் தில்லைச்சிற் றம்பலவன்
மும்மணிக்கோ வைக்குவந்து முன்னிற்கு—மெம்மணிக்கோ
வஞ்சக் கரக்கற்ப தத்தா ரிறைஞ்சுமஞ்சு
கஞ்சக் கரக்கற்ப கம். 1

பூமலி கற்பகப் புத்தேள் வைப்பு
நாமநீர் வரைப்பி னிலவு வளாகமு
மேனைப் புவனமு மெண்ணீங் குயிரும்
தானே வருத்தத்துன் றமருகக் கரமே.

....
நொதுமலும் பகையும் போக்கி யொருபொருள்
விழுத்தகு கேண்மையோர்க் குதவல்
வழக்குமன் றைய மன்றுடை யோர்க்கே. 2

* * * *

End :

நடிக்கச் சிவந்தது மன்றெம் பிராட்டி நறுந்தளிர்க்கை
பிடிக்கச் சிவந்தது மன்றுகொ லாமெம் பிரானென்றும்பர்
முடிக்கச் சிவந்தன போலுங்கெட் டேன்புர மூன்றுமன்று
பொடிக்கச் சிவந்த நகைத்தில்லை யான்மலர்ப் பூங்கழலே. 30

சிதம்பர மும்மணிக்கோவை முற்றும்.

No. 1592. CIVA-KAVACAM—[TEXT]

சிவகவசம்—[மூலம்]

[1215-C]

Size, $18\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 4. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is on Lord Civa and it is supposed that a repetition of this will give the devotee protection.

Complete.

குறிப்பு: *இது, சிவபெருமான்மீது தோத்திரம். தோத்திரிப்போருக்கு இது கவசம் போன்று கஷ்டங்களுக்கு இடங்கொடாமல் பாதுகாத்தலின் அப்பெயர் பெற்றது. இயற்றியவர் பெயர் அறிய முடியவில்லை. இப்பிரதி பூர்த்தியாயுள்ளது.*

பூர்த்தி.

Beginning :

பங்கயத் தவிசின்மேவி யிருந்துடற் பற்றுநீக்கி
யங்குநற் பூதசுத்தி யடைவுடன் செய்தபின்னர்
கங்கையைத் தரித்தசென்னிக் கற்பகத் திருவைச்செம்பொற்
கொங்கை வெற்பனைய பச்சைக்கொடியொடு முளத்தில்
[வைத்தே. 1

அகிலநா யகனுய் ஞான வானந்த ரூபி யாகித்
துகடரு மணுவாய் வெற்பின் ரேற்றமா யுயிரையெல்லாந்
தகவுட னவனி யாகித் தரிப்பவ னெம்மை யிந்த
மகிதல மத்னிற் றீமை மருவிடா தருளிக் காக்க. 2

* * * *

End :

கடவுணீ றவனுடல் கவினச் சாத்தியே
யடுகரி பன்னிரண் டாயி ரத்துடை
நெடுவலி யளித்துநீ நீடு வாழ்கென
வடுவற வாழ்த்தியே வழிகொண் டானரோ. 23

திருச்சிற்றம்பலம்.

குளந்தை விநாயகர் துணை.

Colophon :

லோகப்பிரகாச பண்டாரமாகிய சிதம்பர பண்டாரம்.

No. 1593. CIVA-KAVACAM—[TEXT]

சிவகவசம்—[மூலம்]

[805-C]

Size, $9\frac{3}{4}'' \times 1\frac{3}{4}''$. Pages, 4. Lines, 14 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: Same as No. 1592.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1592 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1594. CIVA-KAVACAM—[TEXT]

சிவகவசம்—[மூலம்]

[1169-A]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{3}{8}''$. Page, 1. Lines, 10 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note : Same as No. 1592.

குறிப்பு : *இது, முன் எண் 1592 பிரதி போன்றது.*

Incomplete.

அபூர்த்தி.

No. 1595. CIVACAṄKARA-CARAṆAM

சிவசங்கர சரணம்

[161-N]

Size, $16\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 6. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a Stotra with the word Caraṇam often repeated, on Lord Civa. The author's name is not known.

Complete.

குறிப்பு : *இது, சிவபெருமான் துதியாக அமைந்துள்ளது. இந்தப் பிரதியில் 10 பதிகங்கள் உள்ளன. மற்றைய விவரங்கள் அறியக்கூடவில்லை.*

பூர்த்தி.

Beginning :

அங்கப் புயனே சரணஞ் சரண
மரனே பரனே சரணஞ் சரணம்
மங்கைக் கரசே சரணஞ் சரண
மதுரா புரியாய் சரணஞ் சரணங்

.... குயிரே சரணஞ் சரண
மிறைவா புனிதா சரணஞ் சரணந்
திங்கட் சடையாய் சரணஞ் சரணம்
சிவசங் கரனே சரணஞ் சரணம். 1

* * * *

End :

சிகர முலையும் திருமுகமும் தேய்ந்த வுடையுஞ் சிவப்பழகும்
.... பிறைநடையும் பார்த்துத் தினமும் பரிதவித்து
நகரப் பதியில் மலரெடுத்து நாளேயுனையும் போற்றியென
யகரப் பதியிற் சங்கரனே .....ண்ண மருள்வாயே. 10

No. 1596. CIVA-PARĀKKIRAMA-MĀḶAI

[TEXT]

சிவபராக்கிரமமாலை—[மூலம்]

[680]

Size, $12\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 8. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a work in Kali-Veṇpā metre on Lord Civa explaining his several heroic deeds. The author's name is not known.

Complete.

குறிப்பு : இது, சிவபெருமானைத் தம்மைக் காக்கவென்று கேட்குமுகமாக அவர் பெருமைகளைக் கூறுவது. அச்சிடப் பெற்றுள்ளது. ஆசிரியர் பெயர் விளங்கவில்லை.

பூர்த்தி.

Beginning:

பார்பதி பாகன் பரமன் பராக்கிரமத்
தேருங் கலிவெண்பா செப்பவே—மேரு
விநாயகனே தந்தருளும் வேழமுகச் சித்தி
விநாயகனே காக்க விரைந்து.

திருப்பாற் கடல்கடைந்த தெள்ளமுத முண்ண
விருப்பாகித் தேவரெலா மேவி—யொருப்பாகு
மந்தரமே மத்தாக வாசுகியே நாணகச்
சந்திரனை யேயடையாய்த் தானமைத்து—வந்திழுக்கு
மாலயனு மிந்திரனும் வானவருந் தானவரும்
வேலைவிடங் கண்டு வெகுண்டோடி—யோலமிட்
டெங்கள் பிரானே யிதுசமய மென்றிரக்க
வங்கவரைக் காக்க வருள்சுரந்து—செங்கையினு
லாலத்தை வாங்கியதை யாரோ சனமாக்கி
ஞாலத்தைக் காத்த நலம்போற்றி—பாலகற்கா.

* * * *

End:

ஆலவாய் தன்னின்மா ருதுசெய்யு மாறுபத்து
நாலு விளையாட்டி னலம்போற்றி—மூலமறை
போற்றுங் கயிலைமலை போற்றி மதுரைநகர்
போற்றிசிவன் செஞ்சரணப் போது.

No. 1597. CIṈṈA-AIYĀ-TUTI

சின்ன ஐயா துதி

[780-D]

Size, $9\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 18. Lines, 14 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a portion of a work in praise of Lord Civa by one Ciṉṉa Aiya. Other particulars are not available.

Incomplete.

குறிப்பு: இது, சின்னய்யா வாக்கு என்று காணப்படுகிறது. 74 கண்ணிகள் இந்தப் பிரதியில் உள்ளன. மற்றைய விவரங்கள் அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning:

பெரியபிதா வாணைமுகப் பிள்ளையார் தாமு
முரியபிதா வாறு முகத்தோனும்—வரிசைத்
துரைமா ரிருக்கத் துளங்குவதேன் னெஞ்சே
யுரையென் பிறர்பாற்சென் றுற்று. 1

* * * *

End:

வேறே யொருசாதி வேறுலகம் வேறுதொழில்
வேறே பொசிப்பும் விளையுமென்று சொன்னாரர் 73

இரவும் பகலு மிடைவிடா துன்னை
பரவு மடி.... பரை பரம். 74

சின்னய்யா திருவடி துணை.

No. 1598. CIKALI-MUMMAṆI-K-KŌVAI

[TEXT]

சீகாழி மும்மணிக்கோவை—[மூலம்]

[584-V]

Size, 7½″×1″. Pages, 9. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is an incomplete work of praise on the presiding Deity at Cīkaḷi (Tanjore Dt.) in 3 metres. It contains only 12 stanzas. Other particulars are not known.

Incomplete.

குறிப்பு: இது, சீகாழியிலுள்ள சிவபெருமான்மீது பாடப்பட்டது. பாடியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை.

இந்தச் சுவடியில் நூல் பூர்த்தியாயில்லை. 12-ஆவது பாட்டோடு முடிவடைகிறது.

அபூர்த்தி.

Beginning :

திருவளர் பவளப் பெருவரை மணந்த
மரகத வல்லி போல ஒருகூ
றிமையச் செல்வி பிரியாது விளங்கப்
பாய்திரைப் பரவை மீமிசை முகிழ்த்த
வலர்கதிர்ப் பருதி யாயிரந் தொகுத்த
வரன்முறை திரியா தலமிசை யிருந்தே
....
தோடுடைய செவிய னென்றும் பீடுடைய்
பெம்மா னென்று கையிற் சுட்டிக்காட்ட
வையநீ வெளிப்பட் டருளினை யாங்கே. 1

* * * *

End :

போதும் பெருவிடிற் பச்சிலை யுண்டு புலனுண்டெங்கு
மேதும் பெருவிடி னெஞ்சுண் டன்றே யிணையாகச்செப்புஞ்
சூதும் பெருமுலை பங்காதென் குருணிபு ரேசர்வண்டின்
ருதும் பெருத வடித்தா மரைசென்று சார்வதற்கே. 12

திருச்சிற்றம்பலம்.

No. 1599. CIVAN-MUTTI-MĀLAI—[TEXT]

சீவன் முத்தி மாலை—[மூலம்]

[584-C]

Size, 7½″×1″. Pages, 4. Lines, 8 on apage. Condition, Injured. Appearance, Old.

Note: This is a prayer to Lord Cokkanata at Mathurai, in 11 stanzas praying for salvation. The author's name is not known.

Complete.

குறிப்பு: இது, மதுரைச் சொக்கநாதர் விஷயமானது. அச்சிடப்பெற்றுள்ளது.

பூர்த்தி.

Beginning:

முன்பு தவங்கள் புரிந்தபயன் மதுரை மூதூர்... ....வந்
துன்பொன் னடிகள் தொழுதிறைஞ்சப் பெற்றேன் பெற்ற
[துளதென்றே
யென்பு கிடந்து கரைந்துருக விழிநீர் சிந்த நின்னிடத்தெ
னன்பு கிடந்தார் சீவன்முத்தி யாவென் பிறவி மேவுவனே. 1

* * * *

End:

முத்தி விளக்கும் தமிழ்மதுரை மூதூர்புரந்த சொக்கேயென்
சித்தி விளைந்து தவபோகஞ் செய்துசிவபோ கம்பொருந்தும்
பத்தி யடைந்த நின்னடியார் பாதம் படவை கைக்கரைக்கென்
னத்திக் கிடந்தார் சீவன்முத்தி யாவென் பிறவி மேவுவனே.

No. 1600. CŌṆA-CAILA-MĀLAI—[TEXT]

சோண சைல மாலை—[மூலம்]

[542-O]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 25. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a work on the God at Tiruvaṇṇāmalai—called here as Cōṇa Cailam. The author is Civa-Prakācar.

Complete.

குறிப்பு: இது, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியது. அச்சிடப்பெற்றுள்ளது. இறுதியில் ஒரு சிறப்புப் பாயிர வெண்பாவும் காணப்படுகிறது.

பூர்த்தி.

Beginning:

சதுரனெழிற் சோண சயிலற் றுதிப்பன்
மதுர மொழியன்பர் மனமாங்—குதிரைதிறை
கொண்டவனென் றேத்துங் குரைகழற்கால் யானைதிறை
கொண்டவனை யென்னுளத்தே கொண்டு.

அண்ணன்மா புகழ்மூ வரும்புனை யரும்பா
வன்றியென் கவியுநின் றனக்காம்
பண்ணுலா மிருவ ரிசைகொணின் செவியிற்
பாணிமா ளொலியுமேற் றிலையோ
விண்ணுலா முடியின் மேருவின் வடபால்
வெயிலொரு புடையுற வொருபால்
தண்ணிலா வெறிப்ப வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கைலைநா யகனே.

* * * *

End:

சீரணி புகழுங் கல்வியுஞ் சிறந்த
செல்வமு மில்லில்வாழ் பவர்க்குப்
பேரணி கலமென் புதல்வருங் கதியும்
பெறத்துதிப் பவர்க்கருள் பவனீ
நேரணி கதியை மறந்தவர் கண்டு
நினைந்துற மிக்கபே ரருளால்
தாரணி முழுதுந் தோன்றிடுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. 100

சோண சயிலமாலை முற்றும்.

வெண்பா

ஏணுருஞ் சோண சயிலனுக் கெஞ்ஞான்றும்
பூணுர மாலை புனைந்தணிந்தான்—மாணுப்
பவப்புணரி நீந்திவிடப் பாரதி நூல் செய்த
சிவப்பிரகா சையன்றான் றேர்ந்து.

No. 1601. CŌṆA-CAILA-MĀLAI—[TEXT]

சோண சயில மாலை—[மூலம்]

[808]

Size, 15″×$1\frac{1}{4}$″. Pages, 50. Lines, 5 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1600.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1600 பிரதி போன்றது. இறுதியில் சிறப்பு வெண்பாவும் காணப்படுகின்றது. முதல் மூன்று ஏடுகள் மூலை முறிந்துள்ளன.*

பூர்த்தி.

No. 1602. TAKKIṆĀMŪRTI-TŌTTIRAM—[TEXT]

தக்கிணாமூர்த்தி தோத்திரம்—[மூலம்]

[678-A]

Size, $12\frac{7}{8}$″×$1\frac{1}{4}$″. Pages, 8. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work on Lord Takkiṇāmūrti in 10 stanzas. The Mss. states that the author is Sri Kumarakuruparar, Head of Kāci Mutt and the hymn was sung at Kāci.

Complete.

குறிப்பு: இது, தக்கிணாமூர்த்திக் கடவுளின்மீது உள்ள தோத்திரம். இயற்றியவர் (காசியில்) குமரகுருபர சுவாமிகள் என்று ஏட்டில் ஒரு குறிப்பு கூறுகிறது. 10 பாடல்களையுடையது.

பூர்த்தி.

Beginning :

பூங்கமல நயனமும் பொழிகருணை வதனமும்
புன்முறுவ நிலவெ றிப்பும்
பொலிசடா டவியுமதி லுறைநிலா மதியுமொளி
புனைகுழை யிலங்கு காதுந்
தேங்குலா மானந்த சின்மையா காசமாஞ்
சித்தியருள் முத்தி ரையுமேற்
சிவானுபவ நீங்கினோர் சேரவருள் செபமாலை
சிவஞான போத கமுமோர்
வேங்கையத ளுடையாற் சரற்கால மதிகோடி
வெள்ளமென நின்ற வடிவும்
மேலான தெய்வநா மன்றிவே றில்லையிது
மெய்யென வெடுத்த கனலு
மோங்குவட வாலடியி லுறைகின்ற தெய்வமே
யுனையன்றி வேறு நினையேன்
ஒன்றாகி யானந்த வெளியாகி யென்னுயிர்க்
குயிரான பரம சிவமே. 1

* * * *

End :

அண்டர்தொழு மிந்திராதி வாழ்வையும் விரும்பிடேன்
அஷ்டசித் தியும் விரும்பேன்
அகிலகலை ஞானமும் விரும்பிடே னுலகுபுக
ழரியகீர்த் தியும் விரும்பேன்
பண்டமலமெல்லா மொழித்து நின்னருள் பெற்ற
பழயவடி யார்க ளடியார்
பாததா மரைகளென் றலையின்மேல் வைத்தருட்
பார்வையா லிருள கற்றித்

தொண்டுசெய் கின்றபர மானந்த வெள்ளந்
துளைந்துவிளை யாடி யுலகந்
தோன்றும லிறுமாந் திருக்கின்ற பெருவாழ்வு
தொண்டனேன் வேண்டுவன... ....
.... கொன்றையணி யண்டராய்க் கையிலையி
லுறைகின்ற பரதெய் வமே
யொன்றாகி யானந்த ஒளியாகி யென்னுயிர்க்
குயிரான பரதெய் வமே. 10

Colophon:

காசியில் குமரகுருபர சுவாமிகள் வாக்கு. இவர் முதல் பட்டத்துச் சுவாமிகள்.

No. 1603. TANI-T-TŌTTIRAṄKAL—[TEXT]

தனித் தோத்திரங்கள்—[மூலம்]

[871-E]

Size, $6\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 38. Lines, 11 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note: This is a collection of hymns on various Saivite deities. The Mss. is so much injured that it is difficult to decipher it.

Complete.

குறிப்பு: இது, பல துதிகள் நிரம்பிய நூல்; மிகவும் சிதலமாயிருக்கிறது. இந்தப் பிரதியிலுள்ளவை அச்சிடப்பெற்றதாகத் தெரியவில்லை. ஆனந்தக்களிப்பு, சோபனம் முதலியன வுள்ளன. பல தெய்வங்கள் மீதும் துதிகளுள்ளன.

பூர்த்தி.

Beginning:

.... யெதிரிட் டுன்னி யெவ்விடத்து
முன்னை யல்லா தில்லை யெனவுனது கருணை யாலுணர்ந்து
மின்னை யனைய தேகாதி விரும்பா வண்ண மெய்யுணர்வு
தன்னை யருள்வாய் திருநாகைச் சரத்து வாழுந் தனிமுதலே.

* * * *

End :

நித்தியானந்த சோபனம்

சுந்தரஞ்சே ரனுபோகச் சோபனச்செந் தமிழ்பாட
சந்திரசே கரனளித்த தந்திமுகன் றுணையே.

அற்புதப் பெண்காள் சோபனமே
ஆனந்தப் பெண்காள் சோபனமே
தற்பதப் பெண்காள் சோபனமே
தத்துவப் பெண்காள் சோபனமே.

* * * *

நிருபாதி ஞானிகட்கு நேசமிகு பணிகள்செய்தார்
நிருபாதிப் பரசிவமாய் நின்றிடுவார் நேரிழையே.

No. 1604. TANI-T-TŌTTIRA-T-TIRATTU—[TEXT]

தனித் தோத்திரத் திரட்டு—[மூலம்]

[912]

Size, 11½″×1″. Pages, 32. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. contains many hymns on Lord Civa and allied deities. A few songs are taken from other books also. The name of the composer is not known.

Complete.

குறிப்பு : இது, சிவபிரான்மீதும், பிற தெய்வங்கள்மீதும் பாடிய பல துதிக்கவிகளைக் கொண்டுள்ளது. இந்தப் பிரதியில் பல நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற சிற்சில பாடல்களும் குறிக்கப் பெற்றுள்ளன.

பூர்த்தி.

Beginning :

சதிரறி யாமை தீரத் தரித்தரு ளுருவு கொண்டு
துதிதரு வெண்ணெய் மெய்யன் துலங்குசந் ததிக்கோர்
[ஞானக்
கதிரெனத் தோன்றி தென்று வடுதுறைக் கண்ணி ருந்து
மதிதரு நமச்சிவ........................ாற் கமலங்கள் போற்றி.

* * * *

End :

ஈவதறி தல்ல வெண்சாணு மொருசாணுய்த்
தாவென்று கேட்பதே தானரிது—மாவலிபால்
வாள்பெரிய மாயவனுர் மண்ணிரக்கப் போம்பொழுது
தாள்குறளாய்ச் சென்றுரே தான்.

No. 1605. TĀYUMĀṆAVAR-PĀṬAL—[TEXT]

தாயுமானவர் பாடல்—[மூலம்]

[560-F]

Size, 7″ × 2¼″. Pages, 276. Lines, 14 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Tāyumāṉavar, a great mystic and poet of the early 19th century has sung several hymns on God Civa and this Mss. purports to contain all his songs.

Complete.

குறிப்பு : *இது, சைவஸ்தோத்திரப் பகுதியைச் சார்ந்தது. தாயுமான சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டது ; மூலம்மட்டு முளது. நூல் முழுதும் அச்சாகியுள்ளது.*

பூர்த்தி.

Beginning :

அங்கிங் கெனாதபடி யெங்கும்பிர காசமா
யானந்த பூர்த்தி யாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாந்
....
....
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற்கி சைந்த ததுவே
கண்டனவெ லாமோன வுருவெளிய தாகவுங்
கருதி யஞ்சலி செய்குவாம்.

* * * *

End :

அன்றென்று மாமென்று முண்டோ—உனக்
கானந்தம் வேண்டி னறிவாகிச் சற்றே
நின்றால் தெரியும் எனவே—மறை
நீதியெம் மாதி நிகழ்த்தினன் தோழி—சங்கர

Colophon :

ஆனந்தக்களிப்பு முற்றும்.

ஆகக் கண்ணி 862.

தாயுமான சுவாமிகள் வாக்கியம் கண்ணிவுள்பட திருவிருத்தம் முற்றும். ....ஹு ஆவணிமீ 11வ சுக்கிரவார நாள் சத்தமி நாழிகை 2-க்கு கிருத்திகா நட்சத்திரம் நாழிகை 32க்கு இந்தச் சுபதினத்தில் எழுதி நிறைவேறினது. அஸ்தமிச்சு...... ....நாழிகை யளவில் முகிந்தது. முற்றும். சற்குருபாதம் துணை.

No. 1606. TAYUMANAVAR-PATAL—[TEXT]

தாயுமானவர் பாடல்—[மூலம்]

[540-A]

Size, 12″×1¼″. Pages, 244. Lines, 8 on a page. Condition, Good. Appearance, New.

Note: Same as No. 1605. It also contains the Biography of the author in prose at the beginning of the Mss.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1605 பிரதி போன்றது. இதில் நூல் முற்றுமுள்ளது. அன்றியும், தொடக்கத்தில் தாயுமானவர் சரிதச் சுருக்க முள்ளது.*

அபூர்த்தி.

No. 1607. TAYUMANAVAR-PATAL—[TEXT]

தாயுமானவர் பாடல்—[மூலம்]

[617]

Size, 6¾″×1½″. Pages, 246. Lines, 8 on a page. Condition, Good. Appearance, New.

Note: Same as No. 1605. The first stanza is missing.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1605 பிரதி போன்றது, இந்தப் பிரதியில் 2-ஆவது செய்யுளிலிருந்து நூல் பூர்த்தியாக வுள்ளது.*

பூர்த்தி.

No. 1608. TAYUMANAVAR-PAṬAL—[TEXT]

தாயுமானவர் பாடல்—[மூலம்]

[877]

Size, $7\frac{1}{4}'' \times 1\frac{3}{4}''$. Pages, 54. Lines, 12 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note: Same as No. 1605. The Mss. has a few extra songs.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1605 பிரதி போன்றது. இதன் தொடக்கத்தில் மூலகுரு எனச் சில பாடல்கள் காணப்படுகின்றன அவை அச்சுப்புத்தகத்தில் காணப்படவில்லை. 8-ஆவது ஆனந்த மானபரம் என்ற தலைப்பின் கீழுள்ள பாடல்கள்வரை யுள்ளன.*

அபூர்த்தி.

No. 1609. TAYUMANAVAR-PAṬAL—[TEXT]

தாயுமானவர் பாடல்—[மூலம்]

[278]

Size, $14\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 28. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1605.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1605 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் பரசிவ வணக்கம், பரிபூரணானந்தம், சின்மயானந்தகுரு ஆகிய தலைப்புக்களையுடைய செய்யுட்கள்மட்டும் உள்ளன.*

அபூர்த்தி.

No. 1610. TĀYUMĀNAVAR-PĀṬAL—[TEXT]

தாயுமானவர் பாடல்—[மூலம்]

[640]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 8. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1605 but containing only 9 stanzas from the 17th hymn in the book.

Incomplete.

குறிப்பு: *இது முன் எண் 1605 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் 17-ஆவது 'நினைவொன்று' என்னுந் தலைப்பின்கீழ் உள்ள 9 பாடல்கள் மட்டும் உள்ளன.*

அபூர்த்தி.

No. 1611. TĀYUMĀNAVAR-PĀṬAL—[TEXT]

தாயுமானவர் பாடல்—[மூலம்]

[650]

Size, $5\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 18. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1605.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1605 பிரதி போன்றது. இதில் 'சின்மயானந்த குரு' என்ற தலைப்பில் உள்ள செய்யுட்கள்மட்டும் உள்ளன.*

அபூர்த்தி.

No. 1612. TAYUMAṈAVAR-PAṬAL—[TEXT]

தாயுமானவர் பாடல்—[மூலம்]

[123-E & G]

Size, 8⅝" × 1¼". Pages, 14. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1605. This Mss. has only Parāpara-K-Kaṇṇi and Aṉanta-K-Kaḷippu.

Incomplete.

குறிப்பு: *இச்சுவடியில் தாயுமான சுவாமி பாடல்களில் பராபரக்கண்ணி, ஆனந்தக் களிப்பு இப்பகுதிகள் மட்டுமே யுள்ளன.*

அபூர்த்தி.

Colophon:

தாயுமான சுவாமிகள் அருளிச்செய்த ஆனந்தக் களிப்பு. பரிபூரணானந்தக் களிப்பு இவை முனிசாமி முதலியாரால் பார்வையிடப்பட்டு மிஞ்சூர் சுப்பராய முதலியாரவர்கள் அச்சுக் கூடத்திற் பதிக்கவானதைப் பார்த்து ஓலையில் எழுதிவச்சுது.

ஸ்ரீராமஜயம்.

நல்ல கணபதியை நான்கால மேதொழுதால்
அல்லவினை யெல்லா மகலுமே—சொல்லரிய
தும்பிக் கையான் பாதந் தொழுதால் வினைதீரும்
நம்பிக்கை யுண்டோ நமக்கு

ஸ்ரீராமசயம்

மீனாட்சி சகாயம்

தேவி சகாயம்

No. 1613. TĀYUMĀṈAVAR-PĀṬAL-[PARĀPARA-K-KAṆṆI]—[TEXT]

தாயுமானவர் பாடல் [பராபரக்கண்ணி]—[மூலம்]

[820-E]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 12. Lines, 7 on a page. Condition, Good. Appearance, New.

Note: Same as No. 1605. The Mss. contains only 70 Kaṇṇis under Parāpara-K-Kaṇṇi.

Incomplete.

குறிப்பு: *இது, தாயுமானவர் பாடலில் பராபரக்கண்ணியி லிருந்து 70 கண்ணிகள் இந்தப் பிரதியில் உள்ளன.*

அபூர்த்தி.

No. 1614. TĀYUMĀṈAVAR-PĀṬAL-[PARĀPARA-K-KAṆṆI]—[TEXT]

தாயுமானவர் பாடல் [பராபரக்கண்ணி]—[மூலம்]

[629-B]

Size, $4'' \times 2\frac{1}{4}''$. Pages, 2. Lines, 22 on a page. Condition, Injured. Appearance, Very old.

Note: Same as No. 1605 but containing only 35 stanzas in Parāpara-K-Kaṇṇi.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1605 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் பராபரக்கண்ணியில் 35 கண்ணிகள் மட்டும் உள்ளன.*

அபூர்த்தி.

No. 1615. TIYĀKĒCAR-PAÑCARATTINAM [TIRUVOṞṞIYŪR]—[TEXT]

தியாகேசர் பஞ்சரத்தினம் [திருவொற்றியூர்]—[மூலம்]

[310]

Size, 9″ × 1⅛″. Pages, 7. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old

Note: This Mss. contains 5 stanzas on Sri Thiagarāja at Tiruvoṟṟiyūr, near Madras.

Complete.

குறிப்பு: *இது திருவொற்றியூர் தியாகேசர் மீது பாடப்பட்ட ஐந்து பாடல்கள் கொண்டது. இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. இப்பிரதி பூர்த்தியாயுள்ளது.*

பூர்த்தி

Beginning:

திங்கணதி கொன்றையணி சடையழகுந் நுதலினிற்
றிரிபுண்ட ரத்தி னழகும்
திருவிழியி னழகுமுக மண்டலத் தழகுமணி
திகழ்குண்ட லத்தினழகும்
மங்கைவடி வுடையம்மை வாமபாகத் தழகு
மான்மழுச் செங்கை யழகும்
மலரடியி னழகும்யான் கண்டுதரிசிக்க நிதம்
மகிழடிச் சேவை தருவாய்
துங்கபை ரவபேத பூதநா தாவமரர்
தொழுதுபுகழ் சாம வேதா
சுகபோதா மமதாதா கவிதீர்தா நயகீதா
தொண்டருள மேவு நீதா
நங்கவிதை மாலைகொண் டருள்விநோதாமாலி
னயனார விந்தபாதா
நலமிக்க போநேச திருவொற்றியூர் வாச
நடனத்தி யாகேச னே. 1

* * * *

End :

அவனவ ளோடதுவெ னறவுயர் திணையு மஃறிணையு
மாக்குநான் முகனையீன்ற
வரிமார்புப லகையாவண்டமுகடே வி ....
நிலங் கயிறதா
உவரியலை மாதர்க ளுவந்தாட்ட நீயாடு
மூச லுலகத் தறிவோ
டுனதுசபை நடனத்தி னுயிர்களசை வென்பதை
யுணர்தரவோ யாடல் காண
தளவநீ றணியேக தசருத்திர சட்சமய
சங்கார வீரபத்திரா
தவமித்திரா ரவிபத்திரா விழிபத்திரா சுபசித்திரா
சதாசிவ பஞ்சவத்திரா
நவரூப மாகிய தயாசமுத் திராமந்திர
நாமங்க ளேசகத்திரா
நலமிக்க பேர்நேச திருவொற்றி யூர்வாச
நடனத்தி யாகேசனே.

திருவொற்றியூர் தியாகேசர் பஞ்சரத்தினம் முற்றிற்று.

No. 1616. TIRU-C-CEṄKUṈṞŪR-MĀLAI

[TEXT]

திருச்செங்குன்றூர் மாலை—[மூலம்]

[857]

Size, $7\frac{1}{4}'' \times 1''$. Pages, 26. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a hymn on Sri Kailaca Nātar at Tiru-C-Caṅkunṟūr.

Incomplete.

குறிப்பு: இது, திருச்செங்குன்றூர்ச் சிவபெருமான் மீது இயற்றப்பெற்றது. அச்சிடப் பெறவில்லை. 22 செய்யுள் வரை யுள்ளது பின்னர் ஏடுகள் இல்லாமையால் 79, 80, ஆகிய இரு பாடல்கள் மட்டில் காணப்படுகின்றன. மற்ற விவரங்கள் அறியக் கூடவில்லை.

அச்சானது.

அபூர்த்தி.

Beginning :

அம்புவி களுந்தெக்ஷண கயிலைக்கா
திபனுமை ....யிட மகிழும்
சம்புவா மர்த்தநா ரீசுபரர்மேறண்
டமிழ் மாலை சாற்றுதற்கு
அம்புயன்றேவி தன்னையும் வாழ்த்தி
அறுமுக னிணையடி பணிந்து
கம்பமும் மதவே ளாகிய காரிக்
கணபதி சரணமுந் துதிப்பாம்.

நீதியின் பொருளே மாசிலா மணியே
நித்தனே ஏழைபங் காளா
ஆதியாம் பரனே பராபரப் பொருளே
அகிலமும் பரவுநா யகனே
வேதமா றங்கத் துட்பொரு ளானே
மெய்யனே மெய்யர்கள் தேவே
ஓதிய மூவர்க் குகந்தருள் செங்குன்
றூரில்வாழ் கயிலைநா யகனே 1

* * * *

End :

பூச்சிய மேனி செப்பிடு வித்தை
போலும் நீர்க் குமிழியின் வாழ்வை
ஆச்சியாய் மனதில் நினைந்துழல் பாவிக்
கனுக்கிரஞ் செய்யும் நாளுளதோ
காச்சியே தருக வென்றுநின் புகழைக்
கருதிய அடியவர் பெறுசா
யூச்சிய பதவி யளித்திடு செங்குன்
றூரில்வாழ் கயிலைநா யகனே. 22

* * * *

நீரின்மேற் குமிழி யாமெனுங் காயம்
நிலையல வேழுசா ணுடம்பில்
பாரின்மே லொருசாண் வளர்ப்பதே தொழிலாய்ப்
பரிதவித் துழலுறேன் கண்டாய்
சீரிய மலர்கொண் டருச்சனை புரிந்துன்
சேவடிக் கடிமையாய் விளங்க
வோரனு வுமது கிருபைசெய் செங்குன்
றூரில்வாழ் கயிலைநா யகனே. 80

No. 1617. TIRUVĀRŪR-NĀNMAṆI-MALAI

திருவாரூர் நான்மணி மாலை

[584-C C]

Size, $7\frac{1}{2}'' \times 1''$. Pages, 22. Lines, 9 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a work composed in 4 metres on the God at Tiruvārur, by Sri Kumarakurupara Cwāmikal.

Complete.

குறிப்பு: இது, திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் தியாகராசப் பெருமான் விஷயமானது. இதனை இயற்றியவர் குமரகுருபர சுவாமிகள் என்னும் பேரறிஞராவார். இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாகவுள்ளது; அச்சிடப்பெற்றுள்ளது.

பூர்த்தி.

Beginning:

நாடுங் கமலேசர் நான்மணிமா லைக்குமிகப்
பாடுங் கவிதைநலம் பாலிக்கும்—வீடொன்றை
முப்போ தகத்தின் முயல்வோர்க்கு முன்னிற்குங்
கைப்போ தகத்தின் கழல்.

நீரூர்ந்த முன்னீர் நிலவலைய நீள்கொடிஞ்சித்
தேரூர்ந்த செல்வத் தியாகனே—ஆரூரா
வீதிவிடங் காவடங்கா வேலைவிடம் போலுமதிப்
பாதிவிடங் காகடைக்கண் பார்த்து. 1

*　　　*　　　*　　　*

வண்டுகூட் டுண்ணா நுண்டுளி பிலிற்றித்
தண்டே னுறைக்குந் தடமலர்ப் பொதும்பரின்
விழுக்குலை தெறிப்ப விட்புலத் தவர்க்கும்
பழுக்காய் தூக்கும் பச்சிளங் கமுகிற்

*　　　*　　　*　　　*

பொன்னுல கிழிந்து புடவியிற் றோன்றி
மன்னுயிர்க் கின்னருள் வழங்குதும் யாமென
மேவர வழங்குமான் மன்ற
யாவரு நமர்கா ளிறைஞ்சுமி னீரே. 41

No. 1618. TIRUVĀRŪR-NĀNMAṆI-MĀLAI

[TEXT]

திருவாரூர் நான்மணி மாலை—[மூலம்]

[636-A]

Size, 4″ × 1½″. Pages, 30. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1617.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1617 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1619. TIRUVIḶAIYĀTAL-KARUṆAI-T-TIRUVIRUTTAM—[TEXT]

திருவிளையாடல் கருணைத் திருவிருத்தம்—[மூலம்]

[584-J]

Size, 7½″×1″. Pages, 4. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. summarises the Tiru-Viḷayāṭals of Sri Suntarācwarar at Mathurai, in 11 Viruttams.

Complete.

குறிப்பு: *இது, சிவபெருமான் மதுரையில் புரிந்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் சுருக்கிக் கூறுவது. காப்புடன் 13 விருத்தங்கள் உள்ளன. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நிலையத்தில் அச்சாகியுள்ளது.*

பூர்த்தி.

Beginning:

காப்பு

திருவால வாயர் சவுந்தர நாத
ரங்கயற்கண் தேவிபாகர்
விரிவாகச் செய்த வெண்ணெண் விளையாட
றனைச்சுருக்கி விருத்தப் பாவாய்
பரிவாகச் செய்தற்குப் பொற்பதும
மலர்க்கரையிற் பண்பால் வைகும்
மருவார்ந்த பிறைமௌலிச் சித்திவிநா
யகன் மலர்த்தாள் வழுத்தல் செய்வாம்.

நூல்

பொன்னுலகத் திமையவர்கோன் பழிநீக்கி
வெள்ளானைச் சாபம் போக்கி
மன்னுகடம் பாடவியை மாமதுரா
புரமாக்கி மகம்பு ரிந்த

தென்னவற்கு மகளாகி மூன்றுமுலை
யுடன்றிக்கு விசயஞ் செய்த
கன்னிதனை மணம்புணர்ந்து முடிதரித்து
நடம்புரிந்த கருணை வாழ்வே. 1

* * * *

End:

இத்தகைய லீலைகளை யடியருக்காய்ச்
செய்தருளு மிறைவா யாங்கண்
முத்தநகை மீனலோ சனையாளே
தஞ்சமென்று முழுது நம்புங்
கொத்தடிமை பரம்பரையா ளடிச்சேறை
யாதலினுற் கருணை கூர்ந்து
சித்தமிரங் கிக்காக்கக் கடனுகுந்
தென்மதுரைத் தேவ தேவே. 12

No. 1620. TIRUVIḶAIYĀTAL-KARUṆAI-T-TIRUVIRUTTAM

திருவிளையாடல் கருணைத் திருவிருத்தம்

[633]

Size, $5\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 8. Lines, 8 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note: Same as No. 1619.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1619 பிரதி போன்றது. இதில் நூல் பூர்த்தியாக இல்லை. 10 செய்யுட்களுள்ளன.

அபூர்த்தி.

No. 1621. TIRUVIḶAIYĀTAṞ-PAYAKARA-MĀLAI—[TEXT AND ANNOTATIONS]

திருவிளையாடற் பயகர மாலை—[மூலமும் உரையும்]

[154]

Size, 18″×1¼″. Pages, 144. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is also another work summarising tha Tiru-Viḷayatals of the God at Mathurai. The author is one Vīra-Patra-K-Kampar. The Mss. has annotations also.

Complete.

குறிப்பு: இது, மதுரையில் சிவபெருமான் புரிந்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் விவரித்துக் கூறுவது. இதன் ஆசிரியர் வீரபத்திரக் கம்பர் என்பதாகும். இந்நூல் அச்சிடப் பெற்றுள்ளது. காப்புச் செய்யுள் இரண்டுபோக 64 திருவிளையாடல்களுக்கும் 64 பாடல்கள் உள்ளன. இந்தப் பிரதி உரையுடன் முற்றுமுள்ளன. ஏடுகள் சிதைந்துள்ளமையால் தெளிவாகப் படித்தறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

பூவிற் கவட விருத்தா சுரனைப் பொருதுகொன்று
மேவுற்ற பாவத்தை மண்பெண் புனன்மர மேனிறுத்திச்
சேவித் தொளிர்பொன் விமானமுஞ் சாத்திய தேவர்கள்கோன்
பாவத்தைத் தீர்த்தசொக் கேபர தேசி பயகரனே.

விருத்திராசுர னென்றொரு ராக்ஷச னுண்டு; அவன் சகல தேவர்கள் ரிஷிகள் மற்றுமுள்ள சகலரையும் இடுக்கண் படுத்துவா னப்போ..................

* * * *

End :

மரியாத காமறை மாய்ந்திட முன்னுகம் வந்தவந்நாட்
டெரியாம லந்தண ரெல்லாந் திகைப்பத் தெளிந்திடவே
விரிவான வேதத்தை யெல்லாருங்கண்டு விளம்பு கென்னப்
பரிவாய்ப் பகர்ந்தசொக் கேபர தேசி பயகரனே. 64

என்றது : முன் பிரளய காலத்திலே..................ல்லாம் போக்கிக்கிர ததிரேத துவாபர கலியுகமாகிய உலகங்களிலே முதலுகத்ததாகிய கிராதா யுகத்திலே கண்ணுவர் முதலான ரிஷிகள்கூடி கலியுகத்தாதியிலே பிராமணர்..............

Colophon :

பிரமாதி௵ ஆவணிமீ.

வேலாயுத நாடான் பயகர மாலை.

No. 1622. TOṬṬIKKALAI CITAMPARĒCURAR-VIRUTTAM—[TEXT]

தொட்டிக்கலை சிதம்பரேசுரர் விருத்தம்—[மூலம்]

[542-D]

Size, 14½″ × 1¼″. Pages, 2 Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This Mss. contains 5 stanzas in praise of Sri Natarāja at Toṭṭikkalai. Other particulars are not known.

Complete.

குறிப்பு : இது, தொட்டிக்கலையிலுள்ள நடராசப் பெருமான் மீது அமைந்தது. இந்தப் பிரதியில் ஐந்து செய்யுட்கள் உள்ளன. மற்றைய விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

நீரார் மதிப்பிறையா... விதழி சூட்டிய
நெடுஞ்சடைக் கற்றை யழகும்
நேரான வொருவேளை நூறவிழி காட்டுதிரு
நெற்றியில் வெண்ணீற்றி னழகும்
வாரார் தனத்திசிவ காமியெம தன்னையுறை
வாம பாகத்தி னழகும்
மானுமழு வுங்குலவு பாணியழ குங்கமல
மலரடித் துணையி னழகும்
ஏரார் வெள்விடைமீ தெழுந்தருளு மெய்யழகு
மேழையேன் கண்டு தெரிசித்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினி
லிசைந்துதுயில் கொள்வ தென்றோ
சீரார் தபோதனர்க் காதார மாகச்
சிறந்த தொட்டிக்கலை யில்வாழ்
தினநடனம் புரிபாத மனமடங் கியபோத
சிவசிதம் பரநா தனே. 1

* * * *

End :

மானினங் கானலைக் கண்டுபுன லென்றோடி
வாடித் தியங்கு மதுபோல்
மண்ணையும் பெண்ணையும் பொன்னையும் பொருளென்று
வாஞ்சித்து மதிம யங்கி
நானினங் கண்டுதெளி யாமல்விரு தாவிலே
நன்மார்க்க மொன்றி லாமல்
நாள்கழித் தேனுனது தாள்வழுத் தேனிந்த
நாயினுங் கடைய னேனை
பானினைந் தூட்டுமெய்த் தாயினுஞ் சாலப்
பரிந்தருள் புரிந்து சிந்தைப்
பதைபதைப் பெல்லா மடங்கி நன்னிலைபெறப்
பாது காத்தாள்வ தென்றோ
தேனினங் கானவிதி யோதுமலர் வாவிகள்
சிறந்ததொட் டிக்கலை யில்வாழ்
தினநடனம் புரிபாத மனமடங் கியபோத
சிவசிதம் பரநா தனே. 4

No. 1623. NATARĀCAR-PĒRIL-[RĀMACĀMY-AIYAR]-PĀṬAL

நடராசர் பேரில் [இராமசாமி ஐயர்] பாடல்

[772]

Size, 9¼″ × 1″. Pages, 8. Lines, 4 on a page. Condition. Injured. Appearance, New.

Note: In this Mss. we have 16 songs on Sri Nataraja by one Ramaswami Aiyar.

Complete.

குறிப்பு : *இது, நடராசப் பெருமான்பேரில் பாடப்படும் தோத்திரம். பத்துப் பாக்களையுடையது. இயற்றியவர் இராமசாமி ஐயர் என்பவராவர். நூல் முற்றுமுளது; முதல் ஏடு முகப்பில் ஒடிந்துள்ளது.*

பூர்த்தி.

Beginning :

ஹரி ஓம்

நடேசர் துணை

.... திருவிழியு மழகமருந் திருமுகமு
மிருளமருங் களமுமுய விடத்தமருந் திருப்பதமும்
தெருளமருந் இல்லைமறைச செல்வரமர் திருமுன்பு
மருமனத் தேனும்மன்... றமரக் கண்டேனே. 1

* * * *

End :

புல்லியசீ வகர்களெனும் புத்திரர்காணுந் தந்தை
அல்லியகத் தரப்பெருமா னவனருளா னடிக்கின்றன்
தில்லையின் கண்டுய்ம்மி னெனத்தெரிதல்போற் சிவகாம
வல்லியினை விழிநோக்கும் வள்ளலையான் கண்டேனே. 10

No. 1624. NIRAÑCANA-MĀLAI—[TEXT]

நிரஞ்சன மாலை—[மூலம்]

[819-F]

Size, 13″×1¼″. Pages, 12. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This work, by Civaprakāca Cwāmikaḷ of Tuṟaimangalam is a praise on Lord Civa in 31 stanzas. This Mss. contains only 28 stanzas.

Incomplete.

குறிப்பு: இது, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பெற்றது. அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் 28 பாடல்கள் பூர்த்திபெற்றும், 29-ஆம் பாடல் பூர்த்திபெருமலும் இருக்கின்றன.

அபூர்த்தி.

Beginning:

நிரஞ்சன சூனிய நிட்கள மாகிய நிட்களத்தின்
வருஞ்சிவ சித்துச்சின் ஞதவிந் துக்கலை மன்னியொன்ருய்
அருஞ்சுட ராயக ராதிப் பிரணவ மாகிநின்று
தருஞ்சுகம் யாவுமென் கையா லயத்திற் றனிமுதலே.

* * * *

End:

உருவஞ் சுவைநிறை வாகிய மூன்று முவந்துகொண்டு
மருவங்க முள்ள முருவக லாதுள்ள வாறுநின்ருய்
அருவன் றுருவன் றருவுரு வன்றி யறிவுருவாய்க்
கருவன் றுலகம் படைத்...... ....

No. 1625. NELLAI-MĀLAI—[TEXT]

நெல்லை மாலை—[மூலம்] (தோமாவ)

[1144]

Size, $16\frac{1}{4}'' \times \frac{3}{4}''$. Pages, 56. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a work in 100 stanzas on the Lord at Tirunelveli. Other particulars are not known.

Complete.

குறிப்பு : இது, திருநெல்வேலியில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமான் சம்பந்தமானது. இந்தப் பிரதியில் இறுதி ஏடு ஒடிந்துள்ளதெனினும், நூல் பூர்த்தியா யுள்ளது. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

தேரோடும் வீதியெல்லாஞ் செங்கயலுஞ் சங்கினமும்
நீரோ டுலாவும் நெல்லையே—காரோடு
கந்தரத்த ரந்தரத்தர் கந்தரத்த ரந்தரத்தர்
கந்தரத்த ரந்தரத்தர் காப்பு. 1

அமிழ்தும் புயலுங் கயலுந் தனியரக் காம்பலுந்தே
னுமிழும் பொசிய...... வெண்முலையு மாயஉழை யாரணமுந்
தமிழுந் தெருமணக் கும்நெல்லை நாதர் தடங்கிரிமேற்
கமழும் பொழில்வளர் வல்லிகண் டேகண் களிகொண்டதே.

* * * *

End :

வௌவ்விய செ...... .... யார்தன் மகிழ்ச்சியிற்பூ
வௌவ்விய சங்கமு மங்கல நாளு மனங்குழையு
வௌவ்விய .... நெல்வேலி நாதர் மனமகிழ
வௌவ்விய கோலமும் நெல்லையும் வாழி மனஞ்சிறந்தே.

No. 1626. PATTIṈATTĀR-PĀṬAL—[TEXT]

பட்டினத்தார் பாடல்—[மூலம்]

[866]

Size, $6\frac{1}{2}'' \times \frac{7}{8}''$. Pages, 124. Lines, 5 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: This Mss. contains 11 titles of the entire work of Pattiṉattār, a great mystic ascetic of the Tamil land.

Complete.

குறிப்பு: இது, முத்திநிலைக்குரிய சாதனங்களைக் கூறும் நூல். பட்டினத்தடிகளால் அருளிச்செய்யப்பட்டது. இதில் அடங்கியவை: கோயிலகவல் முதல் தகனக்கிரியை யீருகவுள்ளன. அவை; அகவல், திருவேகம்ப மாலை, திருத்தில்லை, திருச்சங்காடு, திருவொற்றியூர், திருவிடைமருதூர், திருக்கழுக்குன்றம், கைலாயம் இவைகளைப்பற்றிய பாடல்களும், மதுரை பொது, வெண்பா இவைகளும் ஆகும். இந்நூல் முற்றுமில்லை. ஏடுகள் புள்ளி விழுந்து படிக்கமுடியாதவாறு உள்ளன.

அபூர்த்தி.

Beginning:

அகவல்

நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
அலனகத் தேரி னலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலையோம் பற்க.

* * * *

நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே

* * * *

End :

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பரோ கூசாமல்—மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு.

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே
யானு...... ....

No. 1627. PATTIṈATTĀR-PĀṬAL—[TEXT]

பட்டினத்தார் பாடல்—[மூலம்]

[540]

Size, 1″ × 1¼″. Pages, 60. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 1626. This Mss. contains 5 songs only.

Incomplete.

குறிப்பு : இது, முன் எண் 1626 பிரதி போன்றது. ஆனால் இச்சுவடியில் 5 தலைப்புக்களே உள்ளன.

அபூர்த்தி.

Colophon :

இது பட்டணத்துப் பிள்ளையார் அருளிச்செய்த பாடல்.

இதனுள் :

முதல்வன் முறையீடு.
அருட்புலம்பல்.
பூரணமாலை.
நெஞ்சொடு மகிழ்தல்.
வண்ணம்.

முதலியன அடங்கியிருக்கின்றன.

No. 1628. PALA-TEIVAṄKAḶIN-PERIL-TUTI-NŪLKAḶ—[TEXT]

பல தெய்வங்களின்பேரில் துதி நூல்கள்—[மூலம்]

[68-II H]

Size, $16\frac{1}{2}'' \times 1\frac{1}{8}''$. Pages, 50. Lines, 6 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: This Mss. contains praises on many deities. Other particulars are not known. The Mss. is very much injured.

Incomplete.

குறிப்பு: *இது, சிவபெருமான் முதலாகப் பல தெய்வங்களின் மேல் தோத்திரப் பாடல்களை யுடையது. ஏடுகள் முதலிலும் இறுதியிலும் ஒடிந்துபோயுள்ளதனுல் இன்னின்ன தெய்வங்களின் துதி என்றவைபோன்ற விவரங்களும், ஆசிரியர் இன்னுரென்பதும் அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்றுப் பெறவில்லை.*

அபூர்த்தி.

Beginning:

அகார முதலா யஞ்செழுத்தாய் அன்ம எழுத்தாய்
ஊமை எழுத்தாய்
மகார மங்க......ா மதனைக்கடந்த வடிவே
வடிவுள்பட
உகாரத் துடனே .... ணவமாய்
ஒன்று யிரண்டாய் உச்சரித்த
சிகார முதலாய் வந்துதித்த
சிவனே வந்துதி... தொன்றுயோ. 1

* * * *

No. 1629. PAḶAMALAI-NĀTAR-VIRUTTAM

[TEXT]

பழமலைநாதர் விருத்தம்—[மூலம்]

[659]

Size, 10″×1″. Pages, 11. Lines, 5 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a work on Sri Paḷamalai Nātar at Vrittācalam (S. Arcot). There are oniy 8 stanzas in the Mss. Other particulars are not available.

Incomplete.

குறிப்பு: *இது, விருத்தாசலம் எனும் திருமுதுகுன்றம் பழமலை நாதர்மீது இயற்றப்பெற்றது. இந்தப் பிரதியில் எட்டுப் பாடல்கள் உள்ளன. பிற அறியக்கூடவில்லை.*

அபூர்த்தி.

Beginning:

சீர்பெற்ற சடைமுடியி னழகுமுக வழகுமொளிர்
திருநேத்தி ரத்தி னழகுஞ்
செம்பவள வாயழகு முறுவலழ குங்குழைச்
செவியழகு மிடறி னழகு
மேர்பெற்ற வரதா பயத்தினழகும் பதும
விருகைமான் மழுவி னழகு
மியலுற்ற நவரத்தின மணிவரைப் புயவழகு
மிதழி னலங்க லுடனே
ஆர்பெற்ற மார்பழகு முந்தியிற் சுழியழகு
மரைஞாணி னிடையி னழகு
மலர்வீர கிணி சதங்கைபொற் பரிபுரத்
தம்புயத் தாளி னழகும்
பார்பெற்ற வற்கரிய மேனிவடி வழகெலாம்
பாவியேன் காண்ப தெளிதோ
பரிமளத் திரள்வகைச் செழுமலர்ப் பொழிலணிப்
பழமலைப் பெரிய சிவனே. 1

* * * *

End :

தருவிடத் தாசனைச் செறகொடித் தெறிகாத்
தடறவிழ்ப் பொருது ....
தபனருக் குடையபற் கனையுதிர்த் தமரர்
சித்தலை நிரைத்...... புயனே
திருவணைத் திகழுறத் தினிலுறச் சொருகுமற்
றறிமுனைப் படையு டையனே
செறியதக் கனையெழிற் றலையறுத் தவமுனைச்
செவிந றுக்கிய முனிவனே
கருநிறத் தெமனைப் ......மொத் துணவிழக்
கழலெடுத் தடும் விசையனே
கரமலர் கணையனைக் கறுவியக் கணமதிக்
கணிலெழச் செயும் விசையனே
பரிவின்மெய்த் தவறுளத் தினிதினக் குடியிருப்
பவனுமைக் கதிய மிதமே
பரிமளத் திரள்வகைச் செழுமலர்ப் பொழிலணிப்
பழமலைப் பெரிய சிவமே. 9

No. 1630. PICCĀṬAṈA-NAVAMAṆI-MĀLAI

[TEXT]

பிச்சாடன நவமணிமாலை—[மூலம்]

[636-F]

Size, 4″ × 1¼″. Pages, 4. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a work in 9 stanzas on the Piccātaṇa Mūrti (Mendicant pose of the Lord) a1 Vrittācalam. Its author is Sri Civaprakāca Cwāmikal.

Complete.

குறிப்பு : இது, விருத்தாசலம் பிச்சாடன மூர்த்தியான பழமலை நாதர்மீது இயற்றிய நூல். இதன் ஆசிரியர் சிவப்பிரகாச சுவாமிகள். அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் நூல் முழுவதுமுள்ளது.

பூர்த்தி.

Beginning :

நங்குற்றந் தீர்க்கும் பழமலை நாதற்கு நற்பலிகொண்
டங்குற்று மென்றுநில் போக்கினள் வெற்றரை யாகியந்தோ
இங்குற் றனையென வெம்பெரு மானிவ் விருநிலத்திற்
றங்குற்றம் பார்க்கு மவருள ரோவெனத் தாழ்ந்தனளே. 1

* * * *

End :

சிறப்புப் பாயிரம்

பிச்சா டனநவ ரத்தின மாலையைப் பீடுபெறத்
தைச்சான் றுறைமங் கலமுறை சிவ தயாபரனம்
பொய்ச்சார் பதனை யொழிக்குஞ் செழும்புலி யூர்ப்புனிதன்
நற்சார்பு சார்ந்த சிவப்பிர காச நவமணியே.

No. 1631. PICCĀṬAṈA-NAVAMAṆI-MĀLAI

[TEXT]

பிச்சாடன நவமணிமாலை—[மூலம்]

[300-B]

Size, 14¼″ × 1½″. Pages, 3. Lines, 9 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1630.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1630 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1632. PICCĀṬAṈA-NAVAMAṆI-MĀLAI

[TEXT]

பிச்சாடன நவமணிமாலை—[மூலம்]

[819-C]

Size, 13″×1¼″. Pages, 3. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1630.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1630 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1633. PERIYA-TIRAṬṬIL-CILA-KAVIKAḶ

[TEXT]

பெரிய திரட்டில் சில கவிகள்—[மூலம்]

[542-K]

Size, 14¾″×1¼″. Page, 1. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a selection of 5 hymns from a work called Peruntiraṭṭu.

Complete.

குறிப்பு: *இது, பெருந்திரட்டு என்னும் நூலிலிருந்து எடுத்து எழுதின சில தோத்திரங்கள். திரட்டியவர் பெயர் தெரியவில்லை. 5 பாடல்கள் உள்ளன.*

பூர்த்தி.

Beginning :

அருட்டிறந் திகழவந்த
　　னடியிணை மலர்க ளேத்தி
மருட்டிற மாயைநீக்கி
　　மனமுரை யிறந்த வின்பப்
பொருட்டிறந் திகழ்த்தி மாளாப்
　　போதவா னந்த மாக்குந்
திரட்டிதி னியல்பை யெல்லாந்
　　திகழ்தரச் செப்ப லுற்றும். 1

*　　*　　*　　*

End :

மெய்ஞ்ஞான விளக்கம்

ஆதியா யுலகுக் கெல்லா
　　மணிகயிற் றரவு போலப்
பேதமாய்த் தோன்றிப் பார்த்தால்
　　பேரிலா னந்த சித்தாய்ச்
சோதியா யெங்கு மாகித்
　　தோன்றிநின் றவனை நானிவ்
வாதமா னதுமு டிப்பான்
　　வல்லவா வணங்கி னேனே.

No. 1634. MATURAI-P-PŌṞṞI-K-KALI-VEṆPĀ alias TIRUVILAIYAṬAL-PŌṞṞI-K-KALI-VEṆPĀ [TEXT]

மதுரைப்போற்றிக் கலிவெண்பா என்னும் திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா—[மூலம்]

[584-H]

Size, $7\frac{1}{2}'' \times 1\frac{1}{8}''$. Pages, 8. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work on Sri Cōmacuntarar at Maturai mentioning His Tiruviḷaiyātals. The author is Paranjōti Munivar.

Complete.

குறிப்பு: இது, மதுரையிலுள்ள சோமசுந்தரக் கடவுள் செய்த திருவிளையாடல்களைக் குறித்துக் கலிவெண்பாவால் கூறுகின்றது. இயற்றியவர் பரஞ்சோதி மாமுனிவர். இந்தப் பிரதியில் முற்று முள்ளது. நூல் அச்சாகி யுள்ளது. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் பாடபேத முள்ளது.

பூர்த்தி.

Beginning:

நாற்றிக்கும் போற்று நனிமதுரைச் சொக்கரையான்
போற்றிக் கலிவெண்பாப் போற்றிசெயச்—சீற்ற முடன்
றைக்குஞ் சரமுகத்தோன் மாயவிழித் தோனுதவுங்
கைக்குஞ் சரமுகத்தோன் காப்பு.

காப்பு முற்றும்.

பூமேவுங் கற்பகக்கா டாளும் புரந்தரனா
தீமேவு விருத்திரனைச் செற்றபழி—போமாறு
பொற்கலந் தோய்ந்து விமானமிசைப் பூசிக்க
நற்கருணைசெய்த நலம் போற்றி—நற்றவத்தோ

* * * *

End:

வண்ணங்கேட் டர்ச்சித்த மாமுனிவர் தாள்போற்றி
தண்ணங் கயற்கண்ணி தாள்போற்றி—யண்ணலருள்
போற்றி மதுரைநகர் விண்ணிழிந்த பொற்கோயில்
போற்றி கருணைமுகப் போது.

ஆகக் கண்ணி 112

போற்றிக் கலிவெண்பா முற்றும்.

No. 1635. MARUTAVĀṆAR-PATIKAM—[TEXT]

மருதவாணர் பதிகம்—[மூலம்]

[666]

Size, 10″ × $\frac{3}{4}$″. Pages, 10. Lines, 4 on a page. Condition, Good. Appearance, New.

Note: This is a small work in praise on Lord Civa at Tiru-Viṭai-Marutūr (Tanjore Dt). Other particulars are not known.

Complete.

குறிப்பு: இது, திருவிடைமருதூர் சிவபெருமான் பதிகம். இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாயுள்ளது. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

திருவார் நினது திருநீறே
தீர்க்கும் ஆர்க்கு முடற்பிணியுங்
கருவார் பிறந்தை யடற்பிணியு
மெனல்கண் டடைந்தேன் கருதுருவோ
டருவார் கருணைப் பெருங்கடலே
யடியார்க் கெய்ப்பில் வைப்பேநன்
மருவார் மலர்சா ரிடைமருத
வாணு வடியேற் கிரங்காயே.

* * * *

End:

ஆழி புடைசூ ழுலகினினை யன்றித் தெய்வம் பிறிதுளதோ
பாழி யமைநின் னருட்கலாப் படரு முளதோ பனிவரைவாய்
வீழி புரையும் பெருநலமா முலையாண் மேய விடப்பாகா
வாழி வளஞ்சா லிடைமருத வாணு வடியேற் கிரங்காயே.

No. 1636. MĀCILĀMAṆI-Y-ĪCAR-VIRUTTAM

[TEXT]

மாசிலாமணியீசர் விருத்தம்—[மூலம்]

[1542-G]

Size, 14½″ × 1¼″. Pages, 5. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a work on Sri Macilamony-T-Tevar at Tiru-Mullai-Vāyil near Madras. The Mss. contains only 8 stanzas.

Incomplete.

குறிப்பு: இது, திருமுல்லைவாயில் மாசிலாமணி யீசர்பேரில் பாடியுள்ளது. இந்தப் பிரதியில் எட்டுச் செய்யுட்கள்மட்டும் உள்ளன. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning:

வெள்ளிரிஷி பேறென்னும் வெள்ளிமலை மீதுசெம்
மேகந் திரண்டிருந்த
மேன்மைபோ லுனதுதிரு மேனியுந் தோன்றுபரி
வேடசெங் கமல முகமும்
பிள்ளைமதி யனையவெண் ணீறுபுனை யிந்திர
பிறுகவா ணுதலி னழகும்
பிறக்கின்ற மின்னெனப் பன்னகா பரணமும்
பிரபையென முத்தா ரமும்
தள்ளரிய தாரா கணத்தனைய புள்ளிசெறி
தண்புலித் தோலா டையுஞ்
சத்தித்த விடியெனக் குமுறுபரி புரமுமிரு
தாளுஞ் சடாம குடமும்
வள்ளையங் கொடியிடைப் பரையி னொடு
......வெனு முல்லை வாயில்
வாசனே சமகேச தேசராச கணேச
மாசிலா மணி யீசனே. 1

* * * *

End :

இப்படியி லிறைநீர் நொடிக்கின்ற நேரத்தி
லிந்திரன் கோடி பிர்மா
யிறந்தவ தரித்திடுவர் சந்திர சூரியர்கணக்
கிலையழிந் துண்டானபேர்
அப்படி யிருக்கின்ற மூர்த்தியுன தடிமுடிக
ளென்னமும் பன்றி யும்பே
ரண்டபா தாளமுந் தேடியுங் காணவில்லை
யடியனுக் கன்றுடகங்
கைப்படி யளந்துரட் சித்தருள்வ தெவ்வாறு
காத்தருள்வ தெவ்வா றினிக்
கண்ணெதிரின் வந்துமுன் னிற்ப தெவ்வாறுநான்
கதிபெறுவ தெவ்வாறு காண்
மைப்படிவ னுக்கிளைய கொடியிடைப் பெண்ணரசி
மணவாள முல்லை வாயில்
வாசநேச மகேச நீதசராச கணேச
மாசிலாமணி யீசனே. 8

No. 1637. VAṈMĪKA-NĀTAR-TUTI—[TEXT]

வன்மீகநாதர் துதி—[மூலம்]

[871-A (1)]

Size, 6½"×1¾". Leaves, 6. Lines, 11 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note : This work is on Sri Vanmika Nātar at Tiruvārur, Tanjore Dt. It contains 11 stanzas. The author's name is not known.

Complete.

குறிப்பு: இது, திருவாரூர் வன்மீகநாதர் (புற்றிடங்கொண்டான்) சம்பந்தமானது. இந்தப் பிரதியில் 11 செய்யுட்களுள்ளன.

பூர்த்தி.

Beginning :

ஒருவனு யுலக மேத்துநாளோர
வென்றேதியு மாதி பாதாளக்
கருவைநீள் வானமுகட் டினைத்தாங்கு
கனகநற் றூணினை யென்று
முறைதரு மறையை புணர்வனோவடியே
னுன்னடிக் குரியனு குவனோ
அருவுருவாகி யரிசெய்புற் றிடங்கொ
ளமலதென் கமலையா ரமுதே. 1

* * * *

End :

செய்யவார் சடையுந் திருமுக மைந்திற்
றிகழுநாட் டங்கள்மூ வைந்துங்
கைகளோர் பத்தும் படைக்கலத் தழகுங்
களமுறு காளமுங் கதிர்சேர்
மெய்யும் வெண்ணீறும் விரிஞ்சன்மா லங்க
மேவுற வுறுமிரு பதமு
மைய நான்மறவே னரிசெய்புற் றிடங்கொ
ளமலதென் கமலையா ரமுதே. 11

No. 1638. VĪRAPATTIRAR-V TTAM—[TEXT]

வீரபத்திரர் விருத்தம்—[மூலம்]

[542-H]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Page, 1. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is in praise of Sri Vīrapatra Cwami at Madras. The Mss. contains only 3 stanzas. The author's name is not known.

Complete.

குறிப்பு: இது, சென்னை வீரபத்திர சுவாமி மீது இயற்றப் பெற்றது. இந்தப் பிரதியில் மூன்று பாடல்களே யுள்ளன; மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning:

உள்ளங் குழைந்துமெய் யுடல்குழைந்தென்
பெலாமுருகி விழிநீராறதா
யுன்னடியர் தன்னடியர் பின்னடிமை செய்வதே
யூதியமெனத் தெளிந்து
கள்ளங் கலந்தவஞ் சகநெஞ்சர் நட்பினைக்
கனவிலு நினைந்திடாமற்
காமாதி யாறையுங் கட்டறுத் தைம்புலக்
கள்ளரையும் விறடக்கிப்
பள்ளம் புகும்புனற் போலுநன் னெறியிலே
பதிவாகி யொருமைமனதாய்ப்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறையுநின்
பரிபூர ணப்பிரவாகம்
வெள்ளம் படிந்துமன தின்புறுவ தெந்தநாள்
மெய்யனே சென்னை நகர்வாழ்
வீரபத்திரை மகிழ்நேச வார்மித்தி ரரகவாச
வீரபத்திர செகதீசனே. 1

* * * *

End:

கண்ணுமென் மனமுமிரு கையும்நின் திருவடிகள்
கண்டுகரு திப்பணிந்து
கனிவாயென் வாயுனைத் துதிசெய்து பலவிதக்
கவலைகளெலாந் தொலைத்திட்
டெண்ணரிய தழல்கண்ட வெண்ணெயென வுள்ளுருகி
யானெனதெ னுஞ்செருக்கும்
இருவினைப் பகையுமற் றிரவுபக லற்றபே
ரின்பத்திருக்க வருள்வாய்

பண்ணுமொரு சிறுவிதி மகத்தைத் தொலைத்தொளிப்
 பருதியைப்பல் தகர்த்துத்தூய
 பானிலாத் திங்களைத் தேய்த்தரி கரந்துணி
 படப்பொரு பரப்பிரம்மமே
விண்ணுமம் புவியுமெண் டிசையும்வந் தடிபணியு
 மெய்யனே சென்னைநகர்வாழ்
 வீரபத்திரை மகிழ்நேச வார்மித்தி ரரகவாச
 வீரபத்திர செகதீசனே. 3

---

3. அம்பிகை

No. 1639. APIRĀMI-VIRUTTAM—[TEXT]

அபிராமி விருத்தம்—[மூலம்]

[811-A]

Size, 10½″×1¼″. Pages, 4. Lines, 9 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note: Apirāmi is one of several names of the Goddess at Kānchipuram. This is a hymn on Her. This Mss. contains only 10 verses and other particulars are not known.

Incomplete.

குறிப்பு: இது, கச்சி அபிராமி யம்பிகை விஷயமானது. இந்தப் பிரதியில் 10 செய்யுள்கள் உள்ளன. சுவடி மிகவும் சிதலமாயிருப்பதால் முதலும் இறுதியும் படிக்க இயலவில்லை. மற்றைய விவரமும் அறியக்கூடவில்லை. இறுதி ஒடிந்துள்ளது.

அபூர்த்தி.

Beginning:

உன்னைக் கனவிலும் நினைவிலு மறவே
 னுன்னடி தலைவைப்பேன்
 உன்னடி யார்க்குப் பணிவிடை செய்வே
 னுன்னைப் பாடுவன்யான்

என்னைத் தயவொடு பாலித் துபதே
　　சித்தின்புற ரட்சிப்பாய்
　என்னிரு கண்ணே கண்ணிற் கொளியே
　　யிகபர முழுமுதலே
கன்னித் தவமுறு பவளக் கொடியே
　　காட்சிக் கொருமுகிலே
　கருணைக் கடலே சிந்தைக் கிளியே
　　கனியே மடமயிலே
அன்னப் பேடே வன்னக் குயிலே
　　யமிர்தக் கிளிமொழியே
　அம்பிகை கச்சிக் காமக் கோட்டத்
　　தபிரா மித்தாயே. 2

*　　*　　*　　*

End :

சொந்தப் பாசம் தாயுந் தந்தை
　　சுருபப் பெண்டிரும்
　சுற்றமும் மக்களும் வீடும் வாசலும்
　　தொலையாப் பெருவாழ்வும்
சந்தைக் கூட்டத் தெல்லா மய்யோ
　　சகலமும் பொய்யலவோ
　சவலைப் பிறவிக் கடலைத் தாண்டிச்
　　சரண மெனக்கருள்வாய்
இந்தப் பிறவியில் காவா யாகி
　　லெனக்குக் கதியேது
　ஏற்றுரு .... இந்தப் பிறவியில்
　　இடர்தவிர்த் தாள்வாய்...
அந்திப் பிறைமுடி அரனுக் கருள்கொண்
　　டருகே சேர்கச்சி
　அம்பிகை கச்சிக் காமக் கோட்டத்
　　தபிரா மித்தாயே.

No. 1640. ĀTĀRA-CATTI-Y-ARCCAṈAI—[TEXT]

ஆதாரசத்தி யர்ச்சனை—[மூலம்]

[789-A]

Size, $12\frac{1}{2}'' \times \frac{3}{4}''$. Pages, 2. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, New.

Note: Arccana is a form of worship with flowers. This work on Ampikai in general, contains the Mantrēs to be used in the Arccana and the Mss. is incomplete and injured.

Incomplete.

குறிப்பு: இது, சத்தியை அர்ச்சனை செய்யும் பெயர்களைக் கூறுகின்றது. எழுதியவர் இன்னாரென்று தெரியவில்லை. இப் பிரதி பூர்த்தியாயில்லை. இதன் ஏடு தனியாக நீண்டு மடிக்கப்பட்டுள்ளது.

அபூர்த்தி.

Beginning:

யோக பீடாய நமா.
ஆதார சத்தியே நமா.
ஆனந்தாய நமா.
ஞானாய நமா.
வயிராக்யாயாய நமா.

* * * *

End:

சத்திமண்டலாய நமா.
சத்திமண்டாலதிபதி மயேஷாய நமா.
சிவாசனாய நமா.
சிவமூர்த்தயே நமா.
சிவாய நமா.

No. 1641. ANANTA-MĀLAI—[TEXT]

ஆனந்த மாலை—[மூலம்]

[560-H]

Size, 7″×2¼″. Pages, 5. Lines, 17 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: In this hymn which contains 26 stanzas, the Goddess is addressed as Bliss. It is a general hymn on the Goddess. The author is one Kavirāja Paṇṭitar.

Complete.

குறிப்பு: *இது, அம்பிகை விஷயமானது. இதன் ஆசிரியர் கவிராச பண்டிதர் என்று இறுதிச் செய்யுளால் விளங்குகிறது. இந்தப் பிரதியில் முற்றும் தெளிவாகவுள்ளது.*

பூர்த்தி.

Beginning:

நாரணமே நான்முகமே நண்ணார் புரமெரித்த
காரணமே ஞானக் கடலே யருட்சுடரே
பூரணமே யொன்றே புராதனமே மெய்ப்பொருளே
யாரணமே யம்மே யானந்த நாயகமே. 1

* * * *

End:

கானம் பயிலார்க் கவிராச பண்டிதன்சொல்
லானந்த மாலைபடித் தானந்த வாழ்வுறுவார்
வானம் புவனம் வாரிநில மேழ்மகிழும்
ஞானம் பரமகுரு நாதரிடத் தெய்துவரே, 26

No. 1642. ĀNANTA-LAKARI [CAUNTARIYA-LAKARI]—[TEXT]

ஆனந்தலகரி [சௌந்தரியலகரி]—[மூலம்]

[250-B]

Size, 11″×1¼″. Pages, 18. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a translation of the first part of a work called Cauntariya Lakari by Sri Saṅkarācārya in Sanskrit on the Goddess. The translator is one Vīrai Kaviraja Pantitar. This Mss. consists of 40 stanzas.

Complete.

குறிப்பு: இது, ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அருளிச் செய்த [ஆனந்தலகரி என்னும்] வடமொழி நூலின் மொழி பெயர்ப்பின் முதற்பகுதியாகும். இதன் ஆசிரியர் வீரகவிராஜ பண்டிதராவர். இந்நூல் உரையுடன் அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் மூலம் 40 பாடல்கள் மட்டிலுள்ளன.

பூர்த்தி.

Beginning:

அன்னையு மீன்று பிதாவையு மீன்று ஆகமத்தின்
முன்னையு மீன்று முடிவையு மீன்று முழுதும்வல்ல
பொன்னையு மீன்று புவியையு மீன்று புரிசடையோன்
தன்னையு மீன்று சகலமு மீன்றிட்ட சங்கரியே.

மொழிந்தமறை நூலியற்று முகபடா
மணிந்துமுது ஞான தானம்
பொழிந்துதன திணைமணியென் றிருசுடரும்
புனைகளிற்றைப் போற்றல் செய்வாம்
வழிந்துபெரும் புனல்பரந்து வடவரையிற்
றுலகேழு மேழு மொக்க
வழிந்திடினு மழியாத வபிராமி
பாடல்வள மளிக்க வன்றே.

* * * *

இன்ன தன்மையின் நூலினைக்கவி ராச ராசவ ரோதயன்
மன்னு சம்பிர மாத ராயர் வடித்த ரும்பொருள் கூறவே
கன்ன லஞ்சிலை வேளெ னுங்கவி ராச பண்டிதன் வீரையான்
சொன்ன யம்பெறு காவி யக்கவி சொல்ல வென்று
[தொடங்குவான்.

* * * *

End :

நீநந்து மூலவா தாரத்தி லானந்த
நிர்த்தமிடு மிறைவி நின்றே
டானந்த தாண்டவம் விளைத்துநவ வடிவுபெறு
மாதிசிவ னைப்ப ரவுவாம்
வானந்தொ டுத்துலக மடையப் படைத்திடுமிவ்
வகையின் புணர்ச்சி யலவோ
ஞானங்கொ டனைதந்தை யெனவுலகு தெளிவுற
நடத்துவது ஞான வொளியே.

No. 1643. ĀṈANTA-LAKARI [CAUNTARIYA-LAKARI]—[TEXT]

ஆனந்தலகரி [சௌந்தரியலகரி]—[மூலம்]

[540-G]

Size, $7'' \times 2\frac{1}{4}''$. Pages, 42. Lines, 13 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1642. The Mss. is called Ānanta Lakari Cauntariya Lakari.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1642 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் மூலத்தின் இருபகுதிகளு முள்ளன; சுவடிக்கு இரு பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன.*

பூர்த்தி.

No. 1644. ĀṈANTA-LAKARI [CAUNTARIYA-LAKARI]—[TEXT]

ஆனந்தலகரி [சௌந்தரியலகரி]—[மூலம்]

[788-A]

Size, $8\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 100. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1642 containing text and yantras for them.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1642 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இரு நூல்களும் மூலங்களுடனும், சக்கரங்களுடனு முள்ளன. 95 செய்யுட்களே உள்ளன.*

அபூர்த்தி.

No. 1645. ĀṈANTA-LAKARI

[TEXT AND ANNOTATIONS]

ஆனந்தலகரி—[*மூலமும் உரையும்*]

[441]

Size, 15″×1½″. Pages, 82. Lines, 9 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is the same work as described under 1642 but containing a learned commentary on it by Caiva Ellappa Nāvalar.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1642 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் சைவ எல்லப்ப நாவலர் எழுதிய உரையுடன் நூல் முற்றுமுள்ளது.*

பூர்த்தி. 7-10-51

Beginning:

மொழிந்தமறை நூலியற்று முகபடா
மணிந்துமுது ஞான தானம்
பொழிந்துதல திணைமணியென் றிருசுடரும்
புனைகளிற்றைப் போற்றல் செய்வாம்
வழிந்துபெரும் புனல்பரந்து வடகரையிற்
றுலகேழு மேழு மொக்க
வழிந்திடினு மழியாத வபிராமி பாடல்வள
மளிக்க வென்றே.

என்றது:—இக் கவிமுதல் 6 கவியும் பாயிரம் கூறப்பட்டன. 'தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப் பெனத்தகு நூல்யாப் பீரிரண் டென்ப' என்பது கொண்டு, தேவியுடைய சரித்திரத்தையும் வைபவத்தையும் எடுத்து வடமொழியினால் முற்காலத்துச் சொல்லப்பட்ட பனுவலை மொழிபெயர்த்துத் தமிழ் மொழியில் இறக்கிச் சொல்லப்படும் பனுவல் இது வாகலானும் தமிழ் வழங்குமெல்லையளவும் இது நடத்தலானும், கற்போர் நாவிற்கு இனிய மொழிபடச் செய்தமையானும், இகபர மிரண்டி னும் நல்வழிப்படுத்து மென்பதனாலும் உரையெழுதவேண்டிய பிற் காலத்திற் சொல்லப்படும் பனுவல் இதுவென்பது கருதி, இதற்கு முற்காலத்திலும் பிற்காலத்தினும் கூறிய இலக்கண இலக்கியங் களுள் சில எடுத்துக்காட்டி யானறிந்த அளவினால் எழுதினே னாகலான், இவ்வாறெழுதிய உரைகொண்டும் தேவியுடைய சரித் திரங்களைச் சொல்லும் பிற நூல்கொண்டும் அந்தணர் முதலிய அறிவுடையோர் சொல்லு முபதேசங்கொண்டும் இதன் விரிவைப் பாடம் தெரிந்துகொள்க.

இதன் பொருள்: கடல்களெல்லாம் தத்தம் எல்லை கடந்து மகாப்பிரளய சலமாகப் பரந்து வடமேருகிரியும் இறுதலை யடைந்து அம்மேருவால் நிலைபெற்ற கீழேழுலகமும் மேலேழுலகமும் அழிந் திடினும் அழியாத அபிராமியுடைய பனுவலாக யான் சொல்லும் பாடலுக்கு வளந்தருகவென்று சிவனால் சொல்லப்பட்ட வேத மாகிய மதத்தைப் பொழிந்து சந்திர சூரியராகிய இருசுடரையும் தனது இரண்டு மணியாகப் பூண்ட யானையைப் போற்றுதல் செய்வாம்.

* * * *

End:

நீடந்து மூலவா தாரத்தி லானந்த
நிர்த்தமிடு மிறைவி நின்னோ
டானந்த தாண்டவம் விளைத்துநவ வடிவுபெறு
மாதிசிவ னைப்பர வுவாம்
வானந்தொ டுத்துலக மடையப் படைத்திடுமிவ்
வகையின் புணர்ச்சி யலவோ
ஞானங்கொ டனைதந்தை யெனவுலகு தெளிவுற
நடத்துவது ஞான வொளியே.

ஏ - து. நாதவொளியா யிருக்கின்றவளே! யாக்கம் பெற்றிருக்கின்ற மூலாதாரத்தி னிருத்தமிடுகின்ற இறைவி நின்னுடனானந்தத் தாண்டவத்தை வருவித்த நவரதவடிவு பெருகின்ற வெப்பொருட்கு மாதியாகிய சிவனைப் பரவுவாம். பரவுவ தாகாயமுதற்றெருடுத் துலகங்க ளடையப் படைத்திடுகின்ற திவ்வகைப்பட்ட புணர்ச்சியினு லல்லவோ வுலகத்திலுள்ள வாத்துமாக்க ளறிவு கொண் டுங்களைத் தெளிவுறத் தாயுந் தந்தையுமென நடத்துகின்றதனு லென்றவாறு.

உலகென்றது, உலகிலுள்ள ஆன்மாக்களை; உலகத்திற்ருய்தந்தையென நடப்பது. இதுபற்றி இருவரு மானந்த நிருத்தஞ் செய்தற்கிடனு யிருத்தலான், நீநந்து மூலவாதார மென்ருர். நவரதமாவன இனிமேல் 'அரனிடத்திற் பேரின்ப' என்னுங் கவியுட் காட்டப்படும். எண்வகைச் சுவையுடன் சாந்தமென்னும் சுவை கூட்டப்படும். அவை நிருத்தத்திற்கே பெரும்பான்மையும் உரிய.

No. 1646. UṈṆĀMULAI-Y-AMMAN-PATIKAM

[TEXT]

உண்ணுமுலையம்மன் பதிகம்—[மூலம்]

[962-B]

Size, $9\frac{1}{4}'' \times 1''$. Pages, 13. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a hymn in 10 stanzas on Uṇṇāmulai Amman at Tiruvaṇṇāmalai. Other particulars are not known.

Complete.

குறிப்பு: இது, திருவருணை அம்பிகை விஷயமான பாடல். இந்தப் பிரதியில் பத்து செய்யுட்களுமுள்ளன; ஆனல் எழுத்துப் பிழை அதிகம். மற்றைய விவரம் அறியக்கூடவில்லை.

பூர்த்தி

Beginning :

திங்கள் சேர்முகமும் கமுகிளங் கழுத்தும்
திருநுதல் திலகமும் காதில்
இருந்திய தோடும் மரகதக் கொப்பும்
செழுமணிக் கெண்டையம் விழியும்
குங்குமம் புனைந்த புளகித தனமும்
குளிர்மணி யாரமுந் துவண்ட
கொடியிடை யணியும் மணியுமே கலையும்
குலவுபூ ணாரமு முன்று
செங்கையி லணிந்த வளையுடன் கலந்த
செம்பொன்னின் கடையமும் தங்கச்
சிலம்பணி பதமும் தெரிசனஞ் செய்வோர்
தீவினை யகலவே நினைவாய்
அங்கையில் மழுமான் தரித்தசோ ணேசர்
அன்புடன் இடப்புற மமர்ந்த
அன்னமே உண்ணு முலையெனுந் தாயே
அருணையம் பதிவளர் மயிலே. 1

* * * *

End :

தன்மதா னத்தின் பரஉப காரத்
தன்மையும் உண்மையு மறியேன்
தத்துவ நிலையும் பத்தியும் அறியேன்
தாளிணைப் பணியவு மறியேன்
அன்புள்ள அரனர் அடியருக் கடியார்
அடியிணை பணியவு மறியேன்
அனுதின மும்நின பதமலர் பணியும்
அசடனை ஆளவே நினைவாய்
தென்மருக் கொழுந்து மணக்குமம் புயமே
சீறடிக் கருணைவா ரிதியே
தெய்வமா மயிலே அன்பருக் கிரங்கும்
திரிபுரை யேமஞ்ஞன் மணியே
அன்னபூ ரணியே அருணைவா நீசர்
அன்புடன் இடப்புற மமர்ந்த
அன்னமே உண்ணு முலையெனுந் தாயே
அருணையம் பதியில்வாழ் மயிலே.

No. 1647. UṆṆĀMULAI-Y-AMMAI-TUTI

[TEXT]

உண்ணமுலையம்மை துதி—[மூலம்]

[869-A (1)]

Size, 8″ × 1¼″. Pages, 5. Lines, 8 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note: Uṇṇamulai is the name of the Goddess at Tiruvaṇṇāmalai. This Mss. contains 11 stanzas on Her. This is different from No. 1646.

Incomplete.

குறிப்பு: *இது, திருவருணை உண்ணமுலையம்பிகை துதி. முன் எண் 1646-இனின்றும் வேறானது. இந்தப் பிரதியில் 11 பாடல்கள் உள்ளன. மற்றைய விவரங்கள் அறியக்கூடவில்லை. இறுதியிலும் ஒரு பிரதி ஏடு உள்ளது.*

அபூர்த்தி.

Beginning:

திருவா ரருள்முக முங்கண்ணுஞ் செவ்வியுஞ் செவ்விதழும்
கருவா களமங் கலநா ணருளிரு கைம்மலரு
மருவார் அகலத் திருத்தனப் பூணிடை வார்கலையும்
இருதாளு முன்னருள் மஞ்ஞையுண் ணமுலை யென்னம்மையே.

* * * *

End:

பொய்யா கியசெல்வந் தன்னைப்பொய் யென்றென் புந்தியினு
மெய்யாக் கருதியும் வெவ்வினை யாற்றடு மாறிவிழுங்
கையேற்கு நின்னருட் டாளால் கருணைதந் தேயருள்வாய்
செய்யார் மலர்ப்பொழில் மஞ்ஞையுண் ணமுலை சிற்சத்தியே.

No. 1648. ULAKAMMAI-CANTA-VIRUTTAM

[TEXT]

உலகம்மை சந்தவிருத்தம்—[மூலம்]

[1250-D]

Size, $10\frac{3}{4}'' \times 1\frac{1}{2}''$. Pages, 16. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Ulakammai is the name of the Goddess at Pāpanācam.

Complete.

குறிப்பு: இது, பாபநாசத்திற் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள உலகம்மைமீது இயற்றப்பெற்றது. இதன் பாடல்களில் சீர், அடி முதலியவை பிறழ்ந்து சந்தம் கெட்டுள்ளன.

பூர்த்தி.

Beginning:

வாழ்ந்த தென்ன விசால தலங்களை
யாண்ட தென்ன பிரதாபமிகுந்திறு
மாந்த தென்ன விருதாவில்
மதங்கொடு தலைகீழாய்
வீழ்ந்த தென்ன வய்யோ விரகங்கவர்
மாண்ட தென்னபொய்
வாழ்வதை யிங்கினி வேண்டி யென்ன
பிரயோசனநின் பதமடைவேனோ
சூழ்ந்த பன்னிரு காத மணங்கமழ்
தேன்கள் விம்மி யிருல்கள்
கிழிந்துதடை தூங்கு தென்மலை யாசன
நினதடியவர் போலத்
தாழ்ந்து சன்னிதியூடு புகுந்தலை மோந்து
தண்மலர் மாரி பொழிந்திடு
தாம்பிர வர்ணி மகாநதி நின்ற
வென்னுலகா மளை. 1

* * * *

End :

வாலாய மாயுனை வழுத்துகில னேடியெம
தூதாளு மோலேயு மழைக்க
வரிலேர்சி றிதுகால னைநாழி கைதரிக்க
வசமோபிசக விடுவரோ
காலாற நிழலொரு சற்றுமிலே யாம்வழியிலே
கீழு மேலும்நெருப் பெரியுமாம்
கால்பாவு மோவிது கடக்க யமலோர
கழிகை கொடு போனல்
நாலேழு கோடி நரகத்தெறிவ ரேசிறிது
தேவானு கூலமினி யெப்படி
யாமோ சும்மா வனுபவித்து முடியாது
......ருய்ய யாமோவடிய
ஆலால போசன வகத்திய முனிபூசனைசெய்
தேகாக மாகவொரு
சேடசவினை தீரவருள பாப நாசர்புணர்
கலியாணியெனும் உமையாளே. 55

No. 1649. ULAKAMMAI-PERIL-INNICAI-K-KALIPPĀ—[TEXT]

உலகம்மைபேரில் இன்னிசைக்கலிப்பா—[மூலம்]

[1230-A]

Size, $10\frac{7}{8}'' \times 1\frac{7}{8}''$. Pages, 30. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, New.

Note: This is another work on Ulakammai at Papanācam in 101 Kali Veṇpā stanzas. The author's name is not known.

Complete.

குறிப்பு: *இது, கலிப்பாவால் உலகம்மையென்னும் சத்திமீது பாடப்பெற்ற மற்றெரு நூல். 101 செய்யுட்களை யுடையது. பாடியவர் பெயர் முதலிய விவரங்கள் தெரியவில்லை. நூல் முற்று முளது.*

பூர்த்தி.

Beginning :

எனபா லிரங்கா திரும்பால் மனம்படைத்த
வன்பா லறுப்பா மறப்பால தாகாதோ
அன்பால் மு......பாலமும் பப்பா...... களித்த
வன்பா லடைந்தே னுலகுடைய மாதாவே. 1

என்னுடைய சென்ம மினியுடையே யல்லனெனிற்
பொன்னுடைய மின்னடியும் பொன்னடியுங் காண்பேனோ
மின்னுடைய பலதிக்கு மேதியுடை யான்வரு
நின்னுடைய தஞ்ச முலகுடைய மாதாவே. 2

* * * *

End :

ஏழிசைய வண்டிரங்க வண்டிசைய வெண்டுகிலார்
சூழிதனி நீண்டு துணைத்தா ளளித்தாள்வாய்
ஆழிநெடு நீரொருகை ஆபோசனத்த ......தொழ
ஊழிதொறும் வாழி யுலகுடைய மாதாவே.

உலகுடைய மாலை முற்றும்.

No. 1650. AIYĀṞAMMAN-VIRUTTAM—[TEXT]

ஐயாறம்மன் விருத்தம்—[மூலம்]

~~[831-A (3)]~~ 811 A (3)

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 8. Lines, 8 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note : This is a work in 10 Viruttams on the Goddess at Tiru-V-Aiyāṟu, Tanjore Dt. The Mss. is very much injured and is not readable.

Incomplete.

குறிப்பு : *இது, ஐயாறம்மன் என்னும் அம்பிகை விஷயமானது. இந்தப் பிரதியில் 10 செய்யுட்களுள்ளன. ஏடுகள் மிகவும் சிதிலமாயிருப்பதால் படித்தறிவது சிரமமாக வுள்ளது.*

அபூர்த்தி.

Beginning :

கொத்து முத்து...... .... கொண்டையுஞ்
கொண்டைச் ....ற்றின
கொப்பிட்ட காதுமயி லொப்பிட்ட பார்வையுங்
குயில்வார்த்தை கண்டு கிள்ளை
முத்தமிட்டுக் கொண்ட கனிவாயு முல்லையு
மூரலு ....ச் சேர்வையு
முத்துமா லையுமணியு முத்துமா லைக்கிணை
முளைக்குங் குரும்பை முலையும்
பத்துமாத் துத்தங்க வளையிட்ட கையுமொரு
....ங் கொண்டதும்
....
....

* * * *

End :

No. 1651. KAṞPAKAVALLI-MĀLAI

[TEXT AND ANNOTATIONS]

கற்பகவல்லி மாலை—[மூலமும் உரையும்]

[847-A]

Size, $13\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 156. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work in 105 stanzas—Text and Meanings—on Karpakavalli the Goddess at Mylapore. The author's name is not known. Many leaves in the Mss. are broken.

Complete.

குறிப்பு : இது, மயிலாப்பூர் கற்பகாம்பிகா சம்பந்தமானது. உரையுடன் 105 செய்யுட்களை யுடையது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்தப் பிரதியில் முதல் 25 ஓலைகள் முனை முறிந்துள்ளன. இறுதி ஓலைகளும் சிதிலமாயுள்ளன.

பூர்த்தி.

Beginning :

பொன்னகரும் பூமல ரோன்கரு மாலின்
 பொற்புதுமை வைகுந்தமுதற் கயிலைமீ தென்ன
மன்னுதிரு மயிலைநகர் வாழ்வாய...... கற்பகவல்லி
 மாலை தன்னைப்பாட
மின்னு மொளிதிகழும் பரஞ்சிவருசி விரைமருவும்
 வெண்கமல மீதுறை... பதியும்
பன்னுமறை யயன்றிருமால மரர்முனி வரரும்
 பரவியசீர் கூத்தாடுங் கணபதி காப்பாமே.

எ - து. பொன்னகராகிய தேவலோகமும், வெண்டாமரைக் கமலவாசரான பிரம்லோகமும் அழகு பொருந்திய—வளமை பொருந்திய கயிலாயமும் இதுவே தானென்னவேயான சிறப்பும் சீர்மையும் பொருந்திய—நகரியென நிற்கும் இடைவிடாமல் வாழ்ந்தருளாநின்ற மகாதேவியான கற்பகவல்லியம்மன் பேரில்............ நாயகி மாலை யென்னும் தோத்திரப் பிரபந்தம் பாடவே மின்னிற் பிரகாசிக்காநின்ற அபரஞ்சி வஞ்சியாமை ....யும் வாசனை பொருந்திய வெண்டாமரைப் பூவில் வாசமாயிருக்கிற சரசுவதியும், பன்னும் வேதத்து ....ன் பிரமாவும், மகாவிஷ்ணுவும் முதலான தேவாதி தேவரும் மகாரிஷிகளும் எந்நேரமும் பரவாநின்ற சி...... ....ருந்திய கூத்தாடும் பிள்ளையார் காத்து ரட்சிக்கக் கடவதென்றவாறு.

* * * *

End :

தற்பர னடியா ....
 மவனிடப் புறத் தமர்ந்த
கற்பக வல்லி மாலை நூற்றைஞ்சுங்
 கற்றவர் படிப்பவர் ....
விற்பனத் துடனே வரைந்தவ ரெவரும்
 வீறுல கெலாம்புரந் துயர்ந்த
சொர்க்கமுற் றிலகுசோ .... மாலைச்
 சுகமுற வாழ வாழ்கவே.

எ - து. கற்பகம்பா! அற்புதானந்த சத்தி! மாமாயி யத... ......திவை கேளாய்; தற்பர னடியார்க ளியாவரும் வாழ வாழ்ந்தருளும்படிக்கு வாழ்ந்தருளாநின்ற உனது கணவனை பேசு......

பாகத்திலே வாழ்ந்தருளாநின்ற கற்பகம்பா! இந்த கற்பகவல்லி மாலை என்னும் நூற்றைறந்து பா........... படித்தவர் கேட்டவர் இந்த பாடல் முற்றும் எழுதின பெரியோர்கள் ....ண்டரசு செலுத்தி தெய்வலோகமும் புரந்தாண்டு...சோதினபயன் வடிவான ....ருளாநின்ற கயிலங்கிரியிலே சுகபரானந்தம் பெற்று வாழ வாழ்ந்தருள்வர்...... ..நித்தியகல்லியாண சுந்தரிக்கு மங்களம்.

No. 1652. KARPAKAVALLI-VIRUTTAM

[TEXT]

கற்பகவல்லி விருத்தம்—[மூலம்]

[962-G]

Size, 9″×1″. Pages, 14. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is another hymn on the same Goddess as in previous number and is by Tirumayilai Arunācala Mudaliar.

Complete.

குறிப்பு: இது, மயிலாப்பூரில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை விஷயமான பிறிதொரு நூல். இதன் ஆசிரியர் திருமயிலை அருணாசல முதலியார். அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் பாடல்கள் முன்னும் பின்னுமாக முழுவது முள்ளன.

பூர்த்தி.

Beginning:

பூரணி மனோன்மணி தயாபரி பராபரி
　　புராதனி தராத லமெலாம்
பொற்புட னளித்தசிவ சத்தியிம வானுதவு
　　புத்திரிமக மாயி யென்றே
சீரணி தமிழ்க்கவிதை படிமுறை யிடுவதுன்
　　செவிதனக் கேற விலையோ
தேகியென் றுனுனக் கியவகை யில்லையோ
　　தீரட் சகியல் லையோ

ஆருலகி னிற்பெற்ற தாயன்றி மக்கடமை
யாதரிப் பவர்கள் சொல்லாய்
அன்னையே யின்னும் பராமுகம் பண்ணும
லடியேனை ரட்சிகண் டாய்
மேருவை வளைத்தவ னிடத்தில்வள ரமுதமே
விரிபொழிற் றிரும யிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப் பதவல்லி
விமலி கற்பக வல்லியே. 1

* * * *

End:

நடத்தையி லடக்கமு மிணக்கமும் வணக்கமுறு
நற்குண நற்செய் கையும்
நலந்தருங் கல்வியுஞ் செல்வமு மதற்கான
நல்லோ ரிடத்தி லுறவும்
திடத்துமன மும்பொறுமை யுந்திறமை யுந்தரும
சிந்தனை யுமதி நுட்பமும்
தீரர்க ளிடத்தில்விசு வாசமுமெந் நேரமுமவர்
தீப்பசி தணிக்க நினைவும்
கடக்கவரி தானசன னக்கடல் கடந்துகதி
காணமெய்ஞ் ஞான மோனக்
கப்பலுந் தந்துதவி செய்திரட் சித்துக்
கடைத்தேற வருள்புரி குவாய்
விடக்கடு மிடற்றின னிடத்தில்வள ரமுதமே
விரிபொழிற் றிரும யிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப் பதவல்லி
விமலி கற்பக வல்லியே. 10

No. 1653. KĀNTIMATI-Y-AMMAI-VIRUTTAM

[TEXT]

காந்திமதியம்மை விருத்தம்—[மூலம்]

[68-II. L]

Size, 10″ × 1″. Pages, 8. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This Mss. has 2 long Viruttams on Goddess Kānti-Mati-Y-Ammai at Tirunelvēli. The author's name is not known.

Complete.

குறிப்பு: இது, திருநெல்வேலியில் கோயில்கொண் டெழுந் தருளியிருக்கும் காந்திமதியம்மைமீது இயற்றப்பெற்றுள்ள 42 சீர்களையுடைய விருத்தம். இந்தப் பிரதியில் இரண்டு விருத்தங் களே சிதைந்து காணப்படுகின்றன. மற்ற விவரங்கள் அறியக் கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

சீர்கொண்ட நெல்லைநகர் சிவபுரங் காளத்தி
தெட்சணங் காசியென்றும்
தென்சிதம் பரமெனும் பூலோக கயிலாச
தென்கயி லாசமெனும்
திருந்துதெட் சணமெனும் அனந்துகோ வனமெனும்
செப்புதமிழ் கன்னியெனும்
செழிவேணு வனமெனும் தாருகா வனமெனும்
சித்திரபுர மானதேனும்
தெய்வமா புரமெனும் சிலலேதி வளமெனும்
திருக்காம கோட்டமென்னும்
சித்திர சேத்திர மென்னுங்கச்சை யாலயமெனுந்
தென்தரணி தார மெனும்

* * * *

End:

....

அந்தரி நிரந்தரி துரந்தரி சவுந்தரி
அழகுநெல் வேலி தனிலேவாழ்
அமைவனத் தரசுபுரி அழகிய
கலியாண வடிவே. 2

No. 1654. KĀMĀTCI-Y-AMMAN-PERIL-AMPĀ-P-PĀṬAL—[TEXT]

காமாட்சியம்மன்பேரில் அம்பாப்பாடல்—[மூலம்]

[1122]

Size, 15¼″ × 1¼″. Pages, 44. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, New.

Note: This is a song which ends with the refrain 'Ampa' in each stanza or line and the work is on Goddess Kāmatchi at Kānchipuram. The language is simple.

Complete.

குறிப்பு: இது, காஞ்சிபுரத்தி லெழுந்தருளியுள்ள காமாட்சி யம்மையின்மீது பாடப்பட்டது. பாடியவர் பெயர் முதலிய விவரங் கள் தெரியவில்லை. நூல் முழுதுமுள்ளது.

பூர்த்தி.

Beginning:

திருவாழுங் காஞ்சிபுரத் தெய்வகா மாட்சியின்மேல்
அருமையுட னம்பாவை யனைவோரும் பாடுதற்குக்
கடலைபொரி யெள்ளுடன் கனிவகையுந் தான்படைத்து
விகடச்சக்கரப் பிள்ளையாரே வேண்டுங்கா ணம்பாவாய். 1

சிந்தா மணியருக்குஞ் செல்வக் கணபதிக்கும்
வெந்த பணியாரம் விளாம்பழமுந் தேங்காயும்
கட்டிவெல்லஞ் சர்க்கரையுங் கற்கண்டுந் தான்படைத்து
குட்டிக்கொண்டு தெண்டனிட்டுக் கூறுங்கா ணம்பாவாய். 2

* * * *

End:

உலகத்தோ ரின்புறவே யொன்று யிருந்தார்கள்
வேத மாமரத்தின்கீழ் வீற்றிருந்தா ரம்பாவாய்
சோதி வடிவுடைய சுந்தரர்கா ணம்பாவாய்
காஞ்சி புரம்வாழி காமாட்சித் தாய்வாழி
எம்பிழையுந் தீர்த்தருளும் ஏகம்பர் தான்வாழி.

இக்கதையைக் கற்றோரும் இன்பமுடன் கேட்டோரும்
எக்காலும் பேரின்பத் தின்பமுற வாழ்ந்திருப்பார்.

ஏகாம்பரநாதர் காமாட்சிதேவி துணை.

சரஸ்வதி துணை.

சிவனே துணை.

சிவமயம்.

சிவசொரூபம்.

No. 1655. KĀMĀTCI-Y-AMMAI-TUTI—[TEXT]

காமாட்சியம்மை துதி—[மூலம்]

[871-D]

Size, $6\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 2. Lines, 4 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note: This Mss. contains 1 stanza on Goddess Kāmātchi Amman at Kānchipuram and is different from the one described in No. 1654.

Incomplete.

குறிப்பு: இது, காஞ்சி காமாட்சி சம்பந்தமானது. இந்தப் பிரதியில் ஒரு செய்யுள்மட்டு முள்ளது.

அபூர்த்தி.

Beginning:

மலையந்த மணிமுறுவல் மாதேயுன் வளமதனைக்
கலைநவின்ற பொருளாலுங் காண்பரிதென் றுலடியேன்
சொலவெளிதே நின்றனைவர் தொழிலுருவ முதலான
பலபொருளு நீகாஞ்சிப் பதியிடங்கொள் பசுங்கொடியே.

No. 1656. KULACAI-Y-AMMAN-[MURUKAN]-TUTI—[TEXT]

குலசையம்மன்,[முருகன்]துதி—[மூலம்]

[969-D]

Size, 14″×1″. Pages, 8. Lines, 5 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This hymn consists of 11 stanzas and is on Kulacai-Y-Amman and Murukan at Kaḷantai (Karuntattān-kudi) Tanjore Dt. Other particulars are not available.

Complete.

குறிப்பு: *இது, களந்தைப்பதி அம்பிகைமீதும், முருகன்மீதும் பாடப்பெற்ற சில துதிக்கவிகளைக் கொண்டுள்ளது. இந்தப் பிரதியில் 11 பாடல்கள் காணப்படுகின்றன. மற்ற விவரங்கள் அறியக் கூடவில்லை.*

பூர்த்தி.

Beginning:

முருகளவுந் தடம்பணைச்சந் தனப்பொதிய மீதுவளர்
முனிவன் போற்ற
வருகளபத் துரிபோர்த்த கலியாண லிங்கரெனும்
வள்ள லார்தம்
பெருகனக மெனுமாதை முடித்திருந்து களவாண்டு
பித்த ராளுல்
ஒருகளவோ விருகளவோ முக்களவும் பொறுத்தன
ளென்னுலகத் தாயே.

* * * *

End:

விதுவரையு மளவுதருச் சினையி லோங்கு
மென்மலர்கள் கற்பப்பூ வெனவேயார்ப்ப
மதுவரையா தொழுகுமணங் கமழுஞ் சில
மனஞ்செறியுந் தென்களந்தை மறுகினூடே

யிதுவரையு மிருந்தவித னங்கடர விறைவர்சத்
 தியவா கீசரடி யார்தம்மை
புதுவரைநேர் தனமடவார் தடையாற் போட்டுப்
 புகன்றருளிக் குற்றமெலாம் போற்றுகின்றரே. 11

No. 1657. CAKALA-KALĀ-VALLI-MĀLAI

[TEXT]

சகலகலாவல்லி மாலை—[மூலம்]

[1081-A]

Size, 17″×1″. Pages, 5. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work on Cakalakalā Valli (Goddess Caraswati) sung by Sri-La-Sri Adi Kumarakuruparar.

Complete.

குறிப்பு: இது, குமரகுருபர சுவாமிகளால் இயற்றப்பெற்று, அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியா யுள்ளது.

பூர்த்தி.

Beginning:

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென்
 [வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாகவுண்
 [டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

*   *   *   *

End :

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும்
[விளம்பி லுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே. 10

No. 1658. CARASVATI-MĀLAI—[TEXT]

சரஸ்வதி மாலை—[மூலம்]

[161-G]

Size, $10\frac{1}{2}'' \times 1''$. Pages, 8. Lines, 6 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note : This Mss. contains a hymn of Goddess Caraswati (Goddess of learning). The Mss. is so much damaged that nothing can be made out of it.

Complete.

குறிப்பு : இது, மிகவும் சிதலமாயிருப்பதால் விளக்கம் செய்ய இயலவில்லை.

பூர்த்தி.

No. 1659. CILA-AMPIKAI-TŌTTIRAṄKAḶ

சில அம்பிகை தோத்திரங்கள்

[1215-C II]

Size, $18\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 5. Lines, 7 on apage. Condition, Injured. Appearance, Old.

Note: This is a Mss. containing stotras on several Goddesses.

Incomplete.

குறிப்பு : *இது, வடமொழியிலுள்ளது.*

அபூர்த்தி.

No. 1660. CIVAKĀMA-VALLI-VIRUTTAM

[TEXT]

சிவகாமவல்லி விருத்தம்—[*மூலம்*]

[542]

Size, 14½″×1¼″. Pages, 6. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a hymn in 13 stanzas on Goddess Civakāma Valli at Citamparam and is different from other works on the Goddess.

Complete.

குறிப்பு : *இது, சிதம்பரம் அம்பிகை சம்பந்தமானது. இந்தப் பிரதியில் 13 செய்யுட்கள் பூர்த்தியா யுள்ளன.*

பூர்த்தி.

Beginning :

நித்தகல் யாணசுப மங்கள சவுந்தரி
நிரந்தரி யனந்த ரூபி
நிக்கிரகி யனுக்கிரகி நிரஞ்சனி தயாவதனி
நின்மலி செக ரட்சகி
சுத்தபரி பூரண கிருபாகரி சதானந்தி
தூலசூட் சுமகா ரணி
சூரிகுண சாலிபரி பாலியென் றனுதினந்
துதிசெய்து திபெ றுவனே

புத்தமுத மொத்தவச னத்தியிமை யத்தரசி
பொற்புட னளித்த புதல்வி
பொங்குபாற் கடலில்வளர் செங்கண்மால் சோதரி
புராந்தகற் கினிய மனைவி
சத்தமறை யாகம புராணசாத் திரவொலி
தழைத்திடும் புலியூரில் வாழ்
சலசமக லாதவல்லி கலையில்திரு வாகவல்லி
தலைவிசிவ காம வல்லியே. 1

* * * *

End :

இன்னமிப் பாழுட லெடுத்துழல வைப்பையோ
யீனர்பின் செலவிடு வையோ
இல்வாழ்க்கை யென்னுமொரு பொல்லாப்பி லேசற்று
மெண்ணுமல் நுழைவிப் பையோ
நன்னயமி லாக்கொடும் புல்லரோ டிணங்கிவீ
ணுள்கழித் திடவைப் பையோ
நச்சுவிதி யார்கள்மே லிச்சைகொடு பிச்சனும்
நரகெய்தி டச்செய் வையோ
அன்னமுத லானமுக் கலியெனுஞ் சனிபிடித்
தாடலை படச்செய் வையோ
அடுபிணி யெனும்பெருங் கொடுமைகள் தொடர்ந்ததி
லலைக்கழிந் திடவைப் பையோ
தென்னரு மைப்புதல்வி யெப்படிச்செய் தாலுமுன்
சித்தமென் பாக்ய மம்மா
தில்லைநட ராயர்நேயி புல்லரை யடாதமாயி
செல்விசிவ காமியாயி யே. 13

No. 1661. CIVAKĀMI-Y-AMMAN-TUTI—[TEXT]

சிவகாமியம்மன் துதி—[மூலம்]

[871-C]

Size, $6\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 4. Lines, 13 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note: This is yet another hymn on Goddess Civakāmi at Citamparam in 10 stanzas. Its author's name is not known.

Complete.

குறிப்பு: இது, சிதம்பரம் சிவகாமசவுந்தரி துதி. இந்தப் பிரதியில் 10 பாடல்களுமுள்ளன.

பூர்த்தி.

Beginning:

ஒருமுதலே கருமத்தாற் பலவாகிப் பெயரு...
திருயுபைய மாகி
வருவுருவாய் குணங்களா யையஞ்சி னப்புறமா
யசலமாகிக்
கருதருசிற் ககனத்துக் கடவுளிடத் தமர்ந்
தெமையாளக் கருணையாலே
திருமகளுந் தொழுகின்ற சிவகாம சவுந்தரிதாள்
சென்னி சேர்ப்பாம். 1

* * * *

End:

அடியிணையுங் கொடியிடையு மருள்சுரக்குந் தனதடமு
மம்பொற் பூணு
மிடியிரியக் கதியணைய வேண்டுமவர்க் கபயமென
விளங்குங் கையும்
வடிவுடைய செவ்வாயும் வெண்ணகையு முக்கண்ணு
மலர்க்குழலு மாகச்
செடியகலத் தினம்போற்றிச் சிவகாம சவுந்தரியைச்
சிந்திப் பாமே. 10

No. 1662. CIVAKĀMI-Y-AMMAN-VIRUTTAM [TEXT]

சிவகாமியம்மன் விருத்தம்—[மூலம்]

[542-D (1)]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 2. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a work on Goddess Civakāmi Amman at Tottikkalai, near Madras. It contains only 5 (long) Viruttams. The author is perbappes Totti-K-Kalai Cupramania Munivar.

Complete.

குறிப்பு : இது, தொட்டிக்கலை என்ற பதியில் கோயில்கொண் டெழுந்தருளும் சிவகாமவல்லி என்ற அம்மன்மீது பாடப்பெற்றது. 5 விருத்தங்களே உள்ளன. ஆசிரியர் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவராக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

பூர்த்தி.

Beginning :

தெட்டுண்ட மடமாதர் இடையிலே நடையிலே
சேலுண்ட வேல்வி ழியிலே
திகிரியுண் டெழுகும்ப முலையிலே கலையிலே
செம்பவள வாயி தழிலே
பொட்டுண்ட நெற்றிநுதல் தன்னிலே புயலைப்
பொருங்குழ லிலேயிழ லிலே
புற்றிலர வத்தைநிக ரல்குற் றடத்திலே
புல்லறிவு நாள்க டோறுங்
கட்டுண்டு வீணாள் கடத்தியுயிர் வாடுமென்
கண்கலக் கம்பார்த்து நீ
கண்பார்த் துனக்கடிமை செயுமவர்க் கடிமையெக்
காலமுஞ் செய்ய வருள்வாய்
மட்டுண்ட சோலைசெறி தொட்டிக் கலைக்குள்வளர்
வள்ளலார் பங்கி லுறையும்
மங்களகல் யாணவல்லி யெங்களபி ராமவல்லி
மங்கைசிவ காம வல்லியே. 1

* * * *

End :

நல்லா ரிணக்கங்கள் முன்வேணும் நல்குரவு
நாடா திருக்க வேணும்
நன்மைவளர் கல்விநெறி செல்வமு தறிவுடைமை
நானிலத் தெய்த வேணும்

இல்லாத பேரிடத் தீகையு மிரக்கமுமென்
னியல்பா யிருக்க வேணும்
யாவர்க்கும் நல்லவனெனப் பெயர் படைத்துமன
தின்புற் றிருக்க வேணும்
பொல்லாத வாணவப் பற்றகல வேணுநின்
பொன்னடிக் காட்செய்து நான்
பூரணு னந்தசுக மிகபர மிரண்டும்
பொருந்திநிலை நிற்க வேணும்
வல்லாண்மை பேர்பரவு தொட்டிக் கலைக்குள்வளர்
வள்ளலார் பங்கி லுறையும்
மங்களகல் யாணவல்லி யெங்களபி ராமவல்லி
எங்கள் சிவகாம வல்லியே. 5

No. 1663. CIVAKĀMI-Y-AMMAI-IRATTAI-MAṆI-MĀLAI

சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

[636-B]

Size, 4″ × 1¼″. Pages, 8. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is another work in 2 metres containing 20 stanzas on Goddess Civakāml Ammai at Citamparam by Sri La Sri Kumarakurupara Cwamikal.

Complete.

குறிப்பு: இது, சிதம்பர க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவகாமியம்மை விஷயமாகக் குமரகுருபர சுவாமிகளால் இயற்றப் பெற்றது. அச்சிடப்பெற்றுள்ளது.

பூர்த்தி.

Beginning :

சீர்பூத்த செல்வத் திருத்தில்லை மன்றகமென்
கார்பூத்த நெஞ்சமாக் கைக்கொண்டான்—ஏர்பூத்துள்
ஐயமொருங் கீன்ற வந்நுண் மருங்கொசிய
வையமொருங்கீன்ற மான். 1

* * * *

End :

தருவற நாணத் திருவறச் சாலை சமைத்தம்மைநீ
பொருவறு நல்லறம் பூண்டதென் னுமெந்தை பொற்புலியூர்
மருவறு மத்த முடித்துக் கடைப்பலி தேர்ந்து வம்பே
தெருவற வோடித் திரிதரு மான்மற்றுன் சீர்த்தி கொண்டே.

No. 1664. CIVAKĀMI-Y-AMMAI-IRATTAI-MAṆI-MĀLAI—[TEXT]

சிவகாமியம்மை இரட்டைமணிமாலை—[மூலம்]

[584-A A (1)]

Size, $7\frac{1}{2}'' \times 1''$. Pages, 4. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as previous No. 1663.

Complete.

குறிப்பு : *இது, முன் எண் 1663 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1665. CAUNTARIYA-LAKARI—[TEXT]

சௌந்தரியலகரி—[மூலம்]

[250-C]

Size, $11'' \times 1\frac{3}{4}''$. Page, 22. Lines, 7 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is the latter part of the work described in No. 1642 and contains the text alone.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1642-இல் விவரித்த ஆனந்த லகரியின் பிற்பாகமாக இயற்றப்பெற்றுள்ள சௌந்தரிய லகரி யாகும். இந்தப் பிரதியில் 41-ஆவது செய்யுளிலிருந்து (ஆனந்த லகரி 40 போக) முழுவதுமுள்ளது.*

பூர்த்தி.

Beginning:

அந்தர மணித்தபனர் பலமணியின் வடிவெடுத்
தமருமுன தம்பொன் முடிமே
லிந்துகலை நவமணியி னெழுகுபல நிறமடைந்
திலகுமதி சயவ டிவினுற
சந்த்ரகலை நன்றுநன் றென்பர்சில ரன்றன்று
சந்த்ரகலை யிந்த நிறமோ
விந்த்ரசிலை யிந்த்ரசிலை யென்பர்சில ராதலால்
யாதென வழுத்த வுமையே. 41

* * * *

End:

வேத நுண்பொரு ளாதி சுந்தரி வீற டங்கலு மாயமே
யீத றிந்து விடாசொ லுங்கவி ராஜ பண்டிதன் வீரையா
ேனாத ரஞ்சுகி தாள்பெ றுந்திரு நாம மென்பது நாறுமே
யோதி னன்பல போக முஞ்சிவ லோக மும்பெறு வார்களே.

Colophon:

பிரசோற்பத்திஸு அற்பிசிமீ 20உ எழுதி முகிந்தது.

No. 1666. CAUNTARIYA-LAKARI—[TEXT]

சௌந்தரியலகரி—[மூலம்]

[881]

Size, $7\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 60. Lines, 7 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note: Same as No. 1665.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1665 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1667. CAUNTARIYA-LAKARI—[TEXT]

சௌந்தரியலகரி—[மூலம்]

[450-A]

Size, 16″ × 1¼″. Pages, 28. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1665.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1665 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1668. CAUNTARIYA-LAKARI

[TEXT AND ANNOTATIONS]

சௌந்தரியலகரி—[மூலமும் உரையும்]

[441-A]

Size, 15″ × 1½″. Pages, 82. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as No. 1665 but containing commentary by Ellappa Nāvalar.

Complete.

குறிப்பு : இது, முன் எண் 1665 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் சைவ எல்லப்ப நாவலர் எழுதிய உரையுடன் நூல் பூர்த்தியா யுள்ளது.

பூர்த்தி.

Beginning :

அந்தர மணித்தபனர் பலமணியின் வடிவெடுத்
தமருமுன, தம்பொன்முடிமே
லிந்துகலை நவமணியி னெழுகுபல நிறமடைந்
திலகுமதி சயவடிவினூற்,
சந்த்ரகலை நன்றுநன் றென்பர்சில ரன்றன்று
சந்த்ரகலை யிந்தநிறமோ
விந்த்ரசிலை யிந்த்ரசிலை யென்பர்சில ராதலால்
யாதென வழுத்தவுமையே.

எ - து. உமையே விண்மணி யென்னு மாதித்தர் பன்னிருவரும் பல நிறங்களையுடைய மணியின் உருவம் எடுத்துப்பொருந்துகின்ற வுனதழகிய பொன்முடிமேலே யிருக்கு மிந்துவின் கலையாகிய விளம்பிறையானதவ் வொன்பது வகைப்பட்ட மணியிற் புறப்படும் பலநிறங்களை யடைந்தொளிரு மதிசயத்தைத் தருகின்ற வடிவினூற் சிலர் சந்திரகலை யிவ்வணம் பெற்றது நன்று நன்றென்பர் சிலரன்றன்று சந்திரகலை யிந்த நிறத்தையுடையதோ வஃதிந்திரசிலை இந்திரசிலை யென்று சொல்வா ராதலாற் சந்திரகலை யிந்திரசிலை யென்னுமிரண்டினுள் யாதென்று சொல்லிப் புகழ்வே னென்றவாறு.

* * * *

End :

பிறைபுனைந் தருளுஞ் சிவன்றன துவகைப்
பெருக்கென வடமொழிமுனிவ
னறைசவுந் தரிய லகரியைத் தமிழா
லருள்கவி ராஜபண்டிதன்ற

னிறைநம் கருதித் தாழைமா நகரி
னிலைபெற வாழ்கவியெல்லா
னிறையென வெனினுந் தவறிலா துரைதேர்ந்
தெழுதின னெழில்விளக்கெனவே. 104

No. 1669. CAUNTARIYA-LAKARI

[TEXT AND ANNOTATIONS]

சௌந்தரியலகரி—[மூலமும் உரையும்]

[450]

Size, 16″×1¼″. Pages, 140. Lines, 8 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1668.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1668 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1670. TIRIPURAI-ĀṈANTA-MĀLAI—[TEXT]

திரிபுரை ஆனந்தமாலை—[மூலம்]

[161-I]

Size, 17″×1¼″. Pages, 6. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a song in 33 stanzas on Goddess Tirupurai Āṉanti. The place name is not known. Other particulars also are not available.

Complete.

குறிப்பு : இது, திரிபுரை ஆனந்தி என்னும் அம்பிகை விஷயமானது. இந்தப் பிரதியில் 33 பாடல்கள்மட்டும் காணப்படுகின்றன. ஏனைய விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

திருபுரை ஆனந்த மாலையென்றே தமிழ்ச் செப்புதற்குக்
குருபர னெங்கள் குழந்தையும் வள்ளியுங் குஞ்சரியுந்
தெரிவுறும் வாகினி செந்தா மரைமினனும் செங்கடலும்
கரிமுகற் றனையும் போற்றுநெஞ் சேவினை கட்டறவே.

திருவே நிறைந்த திருமேனி பச்சையுஞ் செம்மலர்த்தாள்
தருவே யெனக்குன் சரணார விந்தமுந் தாயுந்தந்தை
குருவே யெனக்குன் குழந்தைக்கு மான குகனும்மே
அருவே யறம்வளர்த் தாயே திரிபுரை யானந்தியே. 1

* * * *

End :

திரிபுரை மாலை... என்றுங் கொருகல்வி தெரிந்துரைப்போர்
பரிவுடன் கற்பகக் காவும்பொன் னும் படைத்தரச
உரிமை யுடனிருந் தாள வவரவர்க் கேற்பதன்றித்
தெரியுடன் இருப்பார் வினைவே கல்லைச் சிந்தையாளே. 33

No. 1671. TIRUMULLAIVĀYIL-KOTI-Y-IṬAI-AMMAN-VIRUTTAM—[TEXT]

திருமுல்லைவாயில் கொடியிடையம்மன் விருத்தம்—[மூலம்]

[542-F]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 5. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This hymn is on Goddess Koti-Y-Iṭai Amman at Tiru-Mullai-Vayil, near Madras. It contains 10 stanzas. Other particulars are not available.

Complete.

குறிப்பு: இது, திருமுல்லைவாயில் அம்பிகை சம்பந்தமானது. இந்தப்பிரதியில் 10 செய்யுட்கள் உள்ளன. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning:

பொட்டிட்ட நெற்றியுங் கொப்பிட்ட காதும்
பொருப்பை ஒப்பிட்ட தனமும்
புயலிட்ட அளகமும் கயலிட்ட கட்கடை
பொசிந்திட்ட கருணை யமுதும்
நெட்டிட்ட பைங்கழையை நிகரிட்ட தோளுமின
நிலவிட்ட புன்மு றுவலும்
நீறிட்ட சடையாளர் மணமிட்ட நாளிலவர்
நெஞ்சிட் டமொடு கரத்தால்
தொட்டிட் டெடுத்தம்மி மிதித்திட்ட பதமுந்
துலங்கிடக் கண்டிட் டும்நான்
துதியிட்டுனைத் தெண்டனிட் டிறைஞ்சி டவருள்
சொரிந்திட்டு வந்தா ளவையோ
மட்டிட்ட சோலைசெறி முல்லைநகர் மாசிலா
மணியிடத் துறைக ரும்பே
வாழ்த்துமடி யவர்தம்மை யாழ்த்து பிறவியின்வெம்மை
மாற்றுகொடி யிடையம்மையே. 1

* * * *

End:

முடிவற்ற பலகொடிய ரமரும்புவ னத்தை
முன்பெறுத லாற்பின் னுமா
மோகமுற விண்டம்ப ராகமுற் றிடுதலால்
முத்தச் செழும்ப லதனுற்
புடையுற்ற கொங்கைக ளிரண்டு திரண்டெழும்பும்
பண்பி னுலி லங்கும்
பொன்னரி பரந்தகண் மலர்மணிக் கொப்பிட்ட
பூங்குழை யடர்ந் திலகலாற்

துடிபெற் றெழும்புசிற் றுலிவளைக் கையினுற்
   றுலங்கிதழ்க் கோவை யுறலால்
  சொல்லரிய வில்பாக நன்னு தலினுற்
   சிந்துரந் தங்கலா லுனதுமெய்
வடிவொத் திருந்ததிரு முல்லைநகர் மாசிலா
   மணியிடைத் துறைக ரும்பே
  வாழ்த்துமடி யவர்தம்மை யாழ்த்து பிறவியின்வெம்மை
   மாற்றுகொடி யிடையம்மையே. 10

No. 1672. TIRUVAṈMIYŪR-COKKANĀYAKI-Y-AMMAN-VIRUTTAM

[TEXT]

திருவான்மியூர் சொக்கநாயகி யம்மன் விருத்தம்—[மூலம்]

[542-B]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Page, 1. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This Mss. contains only one song on Goddess Cokkanāyaki at Tiruvonmiyūr, near Madras.

Incomplete.

குறிப்பு: *திருவான்மியூர் சொக்கநாயகி அம்மன் விருத்தமாக உள்ள இந்தப் பிரதியில், ஒரே ஒரு பாடல் உள்ளது. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.*

அபூர்த்தி.

சிற்பரி நிரந்தரி துரந்தரி சவுந்தரி
   செகம்பல பெறும்பகவதி
  செல்விமலை வில்லிபுணர் மெல்விமலை வல்லிவெகு
   சித்திமுத் திக்குவித்தாம்
தற்பரி பரம்பரி திரியம்பகி வராகிசெஞ்
   சலசப்ப தாம்புயத்தி
  சர்வரி பூரணி யெனத்துதித் துனையே
   சதாகால மும்நினைவனே

அற்புதச் சற்குணச் சற்சன ருளத்தைவிட்
டகலாத கருணைவடிவே
ஆறுமுக னைக்கரிய மாறுமுக னைப்பெறு
மருந்திரு வயிற்றமுதமே
சொற்பொரு ளெனத்தின மருந்தீசர் பங்கில்வளர்
தோகையே வான்மியூர்வாழ்
சொர்க்கபா தலரன்னை மிக்கபூ தலரன்னை
சொக்கநாயகி யன்னையே. 1

* * * *

No. 1673. TIRU-VAIYĀṞU-ṬARMA-CAMVARTTANI-MĀLAI—[TEXT]

திருவையாறு தர்மசம்வர்த்தனி மாலை—[மூலம்]

[1147]

Size, $14\frac{1}{4}'' \times \frac{3}{4}''$. Pages, 16. Lines, 4 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This work in 30 stanzas is on the Goddess at Tiruvaiyār, Tanjore Dt. Its author's is one Civañāṉaṉ.

Complete.

குறிப்பு: இது, திருவையாறு அம்பிகை விஷயமாய், சிவஞானன் என்பவரால் இயற்றப்பெற்றதாக இறுதிச் செய்யுள் மூலம் விளங்குகிறது. இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியா யுள்ளது. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

சீரார் கமலத் திருமுகத் தாய்சிறி யேனகமே
யூரா யுவந்தரு ளுத்தமி யேயுனை யேதுதிக்கப்
பேரா யிரங்கொண்ட வெண்ணணங் கேயருட் பேறமைப்பாய்
வாரார் தனமுடை மாதே தருமசம் வர்த்தினியே.

* * * *

End :

அய்யாற் றினில்மகிழ் தர்மசம் வர்த்தினி யம்பிகைமேல்
மெய்யா யறிவு மிகுசிவ ஞானன் விளம்பு முப்பான்
செய்யா ளுறையுந் திருவாணி சேருவள் செப்பினர்பால்
பொய்யாத வின்பம் பொருந்தவைப் பாளெங்கள் பூங்கொடியே.

No. 1674. TŌTTIRA-CIKĀMAṆI—[TEXT]

தோத்திர சிகாமணி—[மூலம்]

[766]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 22. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a work on Cakti in general. The colophon states that the author is Koṟṟavaṉ-Kudiyūr.

Complete.

குறிப்பு : இது, சத்தியின்மீது பாடப்பட்ட தோத்திரம் ; கலி வெண்பாவாலாகியது. கொற்றவன்குடியாரால் அருளிச்செய்யப் பட்டது என்று தெரிகிறது. மூலம்மட்டும் உள்ளது. இச்சுவடி பூர்த்தியா யுள்ளது. கடைசி ஏடு சிதிலம்.

பூர்த்தி.

Beginning :

பூங்கமல யோனிமுதற் புத்தேளி ரைவ(ரு)க்கு
மாங்கவர்தஞ் செய்கை யனைத்தினுக்கு—மோங்கிவளர்
வித்தாய்ப் பராபரையாய் விரிந்த பரையா(ய்)...சிரக்
கொத்தாய் மனோன் மணியாய்க் குறைந்தா(ய்)—தத்துவங்கள்

*   *   *   *

End :

....
னுள்ளத் தியானந் தொழியா திருத்தியருள்
வெள்ளத்தை நீந........ ......ளையாடும்—பிள்ளையாய்ப்
பேயேனை யாண்ட .... பரம்பொருளே
தாயேநின் றுளே சரண்.

திருச்சிற்றம்பலம்.

கொற்றவன்குடியார் அருளிச்செய்த தோத்திர சிகாமணி

முற்றும்.

No. 1675. PALAMALAI-NĀYAKI-VIRUTTAM

[TEXT]

பழமலைநாயகி விருத்தம்—[மூலம்]

[676]

Size, 10″ × 1″. Pages, 24. Lines, 5 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note : This work is on Goddess Periya Nāyaki at Paḻamalai [Vriddhacalam] S. Arcot Dt. The Mss. is very much injured and cannot be deciphered properly.

Complete.

குறிப்பு : *இது, பழமலை பெரியநாயகி விஷயமானது. சுவடி மிகவும் சிதலமாயுள்ளதால் படித்தறியக்கூடவில்லை. பத்துப் பாடல்கள் உள்ளதாகத் தெரிகிறது.*

பூர்த்தி.

Beginning :

அரிபிர மாதியிந் திரன்முனி வோர்களு மமரர்களுமே
ஆதித்த னிருள்சோதிச் சந்திரன் அஷ்டதிசை பாலர்
புரிதந்திரி கின்னரி கந்திருவ ரும்புகழ் கிம்புருடருமே
பொன்னுர ரம்பைதி லோத்தமை மேனகை
[பூருர்வசிரதியும்

மரும்மறை ......சி வாணியிந் திராணியும் வானம்பூமாது
[மற்றுள
பெயர்களும் பெற்றபெரு பதமணி முத்தா நதியாம்
திருவுறை புண்ணிய மடுவுறை கங்கைதீர்த்தப் பெருமைதரு
திருமுது குன்றமாம் பழமலைமேவிய சிவபெரியம்பிகையே.

*　　*　　*　　*

No. 1676. PIRAMARĀMPIKAI-Y-AMMAN VIRUTTAM—[TEXT]

பிரமராம்பிகை யம்மன் விருத்தம்—[மூலம்]

[542-E]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Page, 1. Lines, 8 on a page. Condition, Falr. Appearance, Old.

Note: This is a work on Goddess Bramarambikai at Madras; only 2 stanzas are found in the Mss. The author's name is not also known.

Incomplete.

குறிப்பு : இது, சென்னை அம்பிகை சம்பந்தமானது. இந்தப் பிரதியில் இரு செய்யுள்களே யுள்ளன. பிற விவரம் அறியக்கூடவில்லை.

அபூர்த்தி.

Beginning :

அறியாத சிறியனேன் விண்ணப்ப மொன்றெனக்
கழியாச் செல்வம் வேணும்
அங்கத்தி லூனமொன் றில்லாத வரம்வேணும்
அருளுடைமை வேணு மருளைக்
குறியாத பேருடன் கூடாது நித்தமுன்
கொத்தடிமை செய்ய வேணுங்
கோடாத புத்தியும் வித்தையும் வேணும்வெங்
கோபமலம் நீங்க வேணும்

முறியாத வாணவப் பற்றகல வேணும்
முன்னிற்க வேணு மென்றால்
முடியாத காரியம் நினைத்தபடி யாவையு
முடித்தருள வேணு மார்க்கும்
பிறியாத கதிவீடு பெறவேணு நின்கருணை
பிரியா திருக்க வேணும்
பெருகுபூம் பொழில்தன்னை முகில்கள்தீண் டிடுசென்னை
பிரமராம் பிகையன் னையே. 1

* * * *

End :

இத்தரையி லென்னைப் படைத்தவன் கைகாய்க்க
வென்தாயார் வயிறு காய்க்க
யீன்றவழி காய்க்கச் சராசர மடங்கலு
மெடுத்த சனனங்கள் காய்க்க
குத்திரங் கற்றுமொழி வாய்காய்க்க மேனியிற்
கொடியவெம் பிணிகள் காய்க்க
கொலைகளவு காய்க்கின்ற வேற்கடைக் கண்ணியர்
கொடுத்தமயல் காய்க்க நெஞ்சில்
துந்துரங் காய்க்கநம தூதர்கால் காய்க்கச்
சுமந்தவர்கள் தோள்கள் காய்க்கவெஞ்
சுடலையுங் காய்க்கப் பிறந்திறந் திப்படி
தொறும்பவங் காய்க்க வசமோ
பித்தரங் கத்திலொரு பாதியுங் காய்க்கப்
பிறங்குமலை பெற்ற கனியே
பெருக்கும்பூம் பொழில்தன்னை முகில்கள்தீண் டிடுசென்னை
பிரமராம் பிகையன் னையே. 2

No. 1677. [VIRUTTAKIRI]-PERIYANĀYAKI-Y-AMMAI-VIRUTTAM

[விருத்தகிரி] பெரியநாயகி யம்மை விருத்தம்

[636-D]

Size, 4″ × 1¼″. Pages, 10. Lines, 12 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This work is by Civaprakāca Cwāmikal on the Goddess at Vrittācalam. The work is also called [Viruttagiri] Periya Nāyaki Viruttam.

Complete.

குறிப்பு: *இது, விருத்தாசலம் எனும் திருமுதுகுன்ற க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் பெரியநாயகி அம்மை விஷயமானது. இதன் ஆசிரியர் சிவப்பிரகாச சுவாமிகள். அச்சிடப்பெற்றுளது.*

பூர்த்தி.

Beginning :

முழுமணி மிடற்றன் கனன்மழு வீரன்
முக்கணுண் டகைநின தொழில்கூர்
முகம்புலர் தலைக்கண் டுடல்வளைந் தடியின்
முனைப்பிறைக் கோடுகொண் டுழுது
விழுமணி யரவ நுழைசடா டவியின்
விண்ணதித் தண்புனல் விடுப்ப
விரைவொடு குளிர்ந்து முகமலர் தலிறுல்
மென்கொடி யெனநினை யுணர்ந்தேன்
செழுமணி நீல மழைமுகி றவழுஞ்
சிலம்பெனும் புற்றினின் றூர்ந்து
திரைபொரு கடற்பேர்ப் பெரும்படம் விரித்துப்
தினமணி யெனப்படுஞ் செங்கேழ்
கெழுமணி யுமிழ்ந்து பேரிரு டுரந்து
கிடக்குமெய்ம் முடக்குமா சுணமாய்க்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 1

* * * *

End :

புரிசடைக் காட்டு ளாடவிட் டிளவம்
புலியினைச் சிறப்புலி யொடுகோட்
புலிதொழ விருக்கு மொருபெருந் தெய்வப்
புலிபணி மலையிள மானைச்

பரிவுறத் தொழுது மருவிய வதனாற்
பயமறச் சாதிக டனது
பாங்கர்வந் தெய்தப் பெற்றதென் றறிந்து
பசுவெலா மருவுறப் பெறுமே
சுரிகுழற் கயற்கட் பிறைநுதற் கனிவாய்த்
துடியிடைக் குவிமுலைத் தளிர்க்கைத்
துணைவிமுற் கங்கை பெயர்சொலக் கூசுஞ்
சுடர்மணிக் கட்செவிப் பணியான்
கிரிமகட் கெடுத்த கறைமிடற் றிறைவன்
கிளக்குமேற் புகழெனத் தோன்றிச்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 10

No. 1678. [VIRUTTAKIRI]-PERIYANĀYAKI-Y-AMMAI-VIRUTTAM—[TEXT]

[விருத்தகிரி] பெரியநாயகி யம்மை விருத்தம்—[மூலம்]

[663]

Size, 10″ × 1″. Pages, 14. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old

Note: Same as No. 1677.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1677 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1679. [VIRUTTAKIRI]-PERIYANĀYAKI-Y-AMMAI-VIRUTTAM—[TEXT]

[விருத்தகிரி] பெரியநாயகி யம்மை விருத்தம்—[மூலம்]

[300]

Size, $14\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 6. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1677.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1677 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1680. POḶI-C-CALŪR-CIVAṈANTI-Y-AMMAN-VIRUTTAM—[TEXT]

பொழிச்சலூர் சிவானந்தி யம்மன் விருத்தம்—[மூலம்]

[542-H (1)]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Page, 1. Lines, 8 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This Mss. has only 3 stanzas. The name of the Goddess is Aṉanta Nāyaki.

Incomplete.

குறிப்பு: *இந்தப் பிரதியில் மூன்று பாடல்கள் உள்ளன. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.*

அபூர்த்தி.

Beginning :

வெண்பா

அன்னையன்றி வேறொன் றறியாக் குழவியைப்போல்
உன்னையன்றித் திக்குவேறொன் றில்லையே—என்னையென்றும்
வானந்த மெய்ஞ்ஞான வாழ்வளித்துத் துன்பொழிசை
ஆனந்த நாயகமே யாள். 1

* * * *

End :

கொச்சகம்

கூறப்பார் நின்பொழிசைக் கூறித்துயர்க் கடல்விட்
டேறப்பார் நல்லோ ரிணக்கம்பெற வருள்பார்
தேறப்பா ருள்ளந் திடப்படப்பார் தீவினைத்தீ
ஆறப்பார் தென்பொழிசை ஆனந்த நாயகமே.

No. 1681. MATURĀPURI-AMPIKAI-MĀLAI

[TEXT]

மதுராபுரி அம்பிகை மாலை—[மூலம்]

[68-H]

Size, 16″×1¼″. Pages, 8. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a hymn on Goddess Minakshi at Mathurai. Its author is Kulacēkara Pāntiyar.

Complete.

குறிப்பு : இது, மதுரை மீனாட்சியம்மை விஷயமானது. கடவுள் வாழ்த்துள்பட 31 பாடல்களை யுடையது. இயற்றியவர் குலசேகர பாண்டியர். அதனை இறுதிச் செய்யுளா லுணரலாகும். அச்சிடப் பெற்றுள்ளது.

பூர்த்தி.

Beginning :

நடக்குந் திருவிளை யாட்டோ ரறுபத்து நாலுஞ் சொக்க
ரடக்குந்தென் கூடலி லம்பிகை மாலையை யாறுகவி
தடக்கும்ப கம்பச் சிறுகட் புகர்முகத் தாலவட்ட
முடக்குந் தடக்கை யொருகோட்டு வாரண முன்னிற்கவே.

திருவே விளைந்த செந்தேனே வடியிட்ட தெள்ளமுதே
யுருவே மடக்கிள்ளை யோதிம மேயொற்றை யாடகப்பூந்
தருவே நின்றுமரைத் தாளே சரணஞ் சரணங்கண்டா
யருவே யணங்கர சேமது ராபுரி யம்பிகையே. 1

* * * *

End :

பிடித்தாரக் கட்டி யணைத்தமு தூட்டிய பேயினுயிர்
குடித்தாடு மாயன் குலசே கரன்வட குன்றைச் செண்டா
லடித்தான் படித்த சொல்லம்பிகை மாலையை யாறுகவி
படித்தார்கள் கற்பகக் காவும் பொன்னூடும் படைப்பவரே. 30

No. 1682. MATURĀPURI-AMPIKAI-MĀLAI

[TEXT]

மதுராபுரி அம்பிகை மாலை—[மூலம்]

[459]

Size, 13″ × ¾″. Pages, 20. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 1681.

Incomplete.

குறிப்பு : *இது, முன் எண் 1681 பிரதி போன்றது.*

அபூர்த்தி.

No. 1683. [MATURAI]-AṄKAYAR KAṆṆI-MĀLAI—[TEXT]

[மதுரை] அங்கயற்கண்ணி மாலை—[மூலம்]

[738-E]

Size, 12½″ × 1″. Pages, 14. Lines, 5 on a page. Condition, Good. Appearance, Old.

Note: In this work on Goddess Aṅkayaṟkaṇṇi [Mīnākshi] at Madura there are 30 stanzas. The author's name is not known. This is a different work from the previous one.

Complete.

குறிப்பு: *இது, மதுரை மீனாட்சியம்மை மீது பாடியுள்ள மாலை. இதன் ஆசிரியர் இன்னாரென்பது விளங்கவில்லை. முன் எண் 1682 இதிலிருந்து வேறானது. இந்தப் பிரதியில் 30 பாடல்கள் தெளிவாக உள்ளன.*

பூர்த்தி.

Beginning:

ஆதி பராபரையாம் அங்கயற்கண் மாலையென
ஓது தமிழா லுரைக்கவே—சோதியெனுந்
தொந்திவயிற் றைந்துகரத் தும்பிமுகத் தம்பியெனுங்
கந்தர் துணைக் குஞ்சரமே காப்பு

கடங்காணப் பாண்டியன் முன்பாக ஆடிய நாதர்சொக்கர்
இடப்பாகங் கொண்டவ ளேந்திழை யேநின் றிலங்கு
[செம்பொன்
வடங்காணுங் கொங்கையும் மங்கல நாணு மடந்தையர்க்குள்
அடங்கா தளவுகண்டாய் கூடல்வாழுங் கயற்கண்ணியே. 1

* * * *

End:

வாழி மதுரை தழைத் தெந்நாளு மறைகளென்றும்
வாழி செங்கோல் நடத்தும் மன்னவர் வாழி மனமகிழ்
வாழி கயற்கண்ணி மாலையுரைத்தவர் வாழி......ம்
வாழி மனோன்மணியே மகவான்பெற்ற வாணுதலே. 30

No. 1634. [MATURAI]-UMAIYAVAḶ-TIRUPPUKAḺ—[TEXT]

[மதுரை] உமையவள் திருப்புகழ்—[மூலம்]

[921]

Size, 13½″×1¼″. Page, 42. Lines, 7 on a page. Condition. Injured. Appearance, Old.

Note: This is a Tiruppukaḻ on the Goddess at Mathurai. This is a rare work containing 40 songs but the Mss. is so damaged that it is difficult to read it. The author's name is not known.

Complete.

குறிப்பு: *இது, மதுரை அம்பிகை விஷயமான ஒரு திருப்புகழ்; இந்தப் பிரதியில் 40 பாடல்கள் உள்ளன. அவற்றை அறிவது மிக்க சிரமமாகவுள்ளது. மற்றைய விவரங்கள் அறியக் கூடவில்லை. மேலும் 2 ஏடுகள் ஒடிந்துள்ளன.*

பூர்த்தி.

Beginning :

ஓம்நம சிவாய மாயி ஞானகுரு தேசி வாயி
ஓதமறை நாலுவேத—முடையாளே
ஓர்பரம மானபோது சீர்மருவு சாலகு......
ஓசையொலி மூலதாது—வளியாகி,
மானமபி மான லோக நாலுவகை யோனி பேத
மாய்கைபல வாகி ஏதும்—விரிவாகி
வாசினை செ.........மூவர் தேவரீசர்சரு வேசர்தானும்
வாகுனது ஏவலான—ரெனவே தான்.
மோனமது வாகி மோக யேககயி லாச மேறிப்
மூடுதி.........மூடனூடல்—விளையாடி
மூவரறி யாத ஞடு கோலமுத லாறுவீடு
மூலவரை கீழு மேலும்—முடிமேலும்

வானமிர்த மான தான பானமு.........தாரை
வாலிதிரி கோண மேவு மதிநீயே
மாடநெடு கூட மேடை தேடவரி தானகூடல்
மாமதுரை மீதில்வாழும் (உமையாளே). 1

No. 1685. MALAIVAḶAR-KĀTALI-PATIKAM

[TEXT]

மலைவளர் காதலி பதிகம்—[மூலம்]

[560-J]

Size, 7″ × 2¼″. Pages, 3. Lines, 12 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a work on Ambikai, who is called here as Malai Vaḷar Kātali and is by Tāyumaṉavar. The Mss. contains only 2 stanzas.

Incomplete.

குறிப்பு: தாயுமானவர் பாடலிலுள்ள மலைவளர் காதலி என்னும் தலைப்புடைய பாடலில் கீழ்க்கண்ட இரு செய்யுட்கள் மட்டில் இந்தப் பிரதியில் காணப்படுகின்றன.

அபூர்த்தி.

Beginning:

பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கண் மித்திரர்கள்
பக்கமுண் டெக்காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
படரெனுந் திமிர மணுகா
கதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதிருண்டு
காயசித் திகளு முண்டு
கறையுண்ட கண்டர்பா லம்மைநின் னருளிற்
கருத்தொன் றுமுண்டா குமே

நதியுண்ட கடலெனச் சம்பத்தை யுண்டபர
ஞானவா னந்த வொளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நானெனு மகந்தை தீர்த்தென்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே
மதுசூத னன்றங்கையே
வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப்பெணுமையே. 1

* * * *

End:

தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே
சிற்றிடையிலே நடையிலே
சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே
சிறுபிறை நுதற்கீற் றிலே
பொட்டிலே யவர்கட்டு பட்டிலே புனைகந்த
பொடியிலே யடியி லேமேற்
பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே
புந்திதனை நுழைய விட்டு
நெட்டிலே யலையாம லறிவிலே பொறையிலே
நின்னடியார் கூட்டத்திலே
நிலைபெற்ற வன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞான
ஞேயத்தி லேயு னிருதாண்
மட்டிலே மனதுசெல நினதருளு மருள்வையோ
வளமருவு தேவை யரசே
வரைராச னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப்பெணுமையே. 2

No. 1686. MĪṈĀTCI-Y-AMMAI-IRATTAI-MAṆI-MĀLAI—[TEXT]

மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை—[மூலம்]

[584-J]

Size, $7\frac{1}{2}'' \times 1''$. Pages, 4. Lines, 10 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a work on Sri Minatci Ammai at Maturai in Veṇpā and Kattaḷai-K-Kalitturai. The author is Sri-La-Sri Kumarakuruparar.

Complete.

குறிப்பு: இது, ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பாடிய மதுரை மீனாட்சியம்மை சம்பந்தமானது. இந்தப் பிரதியில் நூல் முற்று முள்ளது.

பூர்த்தி.

Beginning:

வெண்பா

கார்பூத்த கண்டத்தெங் கண்ணுதலார்க் கீரேழு
பார்பூத்த பச்சைப் பசுங்கொம்பே—சீர்கொள்
கடம்பவனத் தாயேநின் கண்ணருள்பெற் றேரே
யிடம்பவனத் தாயே யிரார். 1

* * * *

End:

பொற்பூர வல்லிக் கமலத்த ளேகொல் புகுந்தகமும்
வெற்பூர வல்லி பிறந்தக மும்மது மீட்டுமென்னே
யற்பூர வல்லியென் வன்னெஞ்சக் கஞ்செத்தெம் மையநெடுங்
கற்பூர வல்லி குடிபுகுந் தேநின்ற காரணமே. 20

No. 1687. MĪṈĀTCI-Y-AMMAI-VIRUTTAM

[TEXT]

மீனாட்சியம்மை விருத்தம்—[மூலம்]

[811-C]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 8. Lines, 9 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note : This is a different work on the same Goddess from No. 1687 and is in 12 Viruttams. Its author's name is not known. The Mss. is damaged.

Complete.

குறிப்பு : *இது, மதுரை மீனாட்சியம்மன் மீதுள்ளது. இந்தப் பிரதியில் 12 விருத்தங்கள் உள்ளன. ஏடுகள் மிகவும் சிதலமாயிருப்பதால் படித்தறிவது சிரமமாக வுள்ளது. ஆசிரியர் பெயர் முதலியன தெரியவில்லை.*

பூர்த்தி.

Beginning:

மலர்முல்லை மல்லிகை செவ்வந்தி செண்பக
மணந்தருங் கரியகூந்தல்
வாரிச் சொருக்கிட்ட கொண்டையுங் குழையதனில்
மருவுகுந் தளவோலையும்
சிலையென விளங்கிய புருவமு...... குளவி
சேர்ந்திருந் தாலென்னவே
திருநுதலுமந் நுதலிலிட்ட செந்தூர முந்திலத
கஸ்தூரி யொளியும்
சொல்லரிய வச்சிரச்சுட .....ம் பொட்டுமொரு துய்ய
செந்தா மரையெனச்
சோதிநிறை வதனமுந் தெ......ணப்படி முன் துதிக்க
வந்தருள் செய்குவாய்
பலகலை நிரம்பிய தமிழ்ச்சங்க மேருலவு
பாண்டி மயிலே
பாரதத் தடிகள் மதுரைமீ னாட்சி தேவியே
பங்கேருகச் செல்வியே. 1

* * * *

End:

எந்தவே ளையுநின் பாதார விந்தத்தை
ஏத்தித் துதிக்குமெளியே
னிருநிலந் தனிலதிகமாக் கண்டனென வாழ்ந்திருக்க
நின்கருணை யுதவி

உந்தனடி யானென்று மனதிரங்கிப் பெருமையுற்று
வளர்கல்வி செல்வ
முலகத்தின் மிக்கான பொருள்வளந் தந்தென்னை
உவந்துரட் சித்தருள்வாய்
விந்தைசெறி கச்சிநக ராதிபதி மன்னவர்
விரும்புகர்த் தாக்களான
விசயரங் கச்சேடக் கருத்துரைசெங் கோன்மை
மேதினியில் கைதழைக்க
பைந்தமிழ் ....
....
.... மதுரைமீ னாட்சிதேவியே
பங்கேருகச் செல்வியே.

No. 1688. VAṬIVUṬAI-Y-AMMAN-PAÑCARATTIṈAM—[TEXT]

வடிவுடையம்மன் பஞ்சரத்தினம்—[மூலம்]

[962]

Size, 9″×1″. Pages, 8. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a hymn in 5 stanzas on the Goddess at Tiruvoṟṟiyūr, Vaṭivuṭai Ammai by name. Other particulars are not known.

Complete.

குறிப்பு: இது, திருவொற்றியூர் வடிவுடையம்மன்மீது இயற்றப்பெற்ற பஞ்சரத்தினம். இந்தப் பிரதியில் ஐந்து செய்யுட்களுமுள்ளன. மற்றைய விவரங்கள் அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

நீர்கொண்ட மேகத்தை நிகரான குழலழகு
நிலவொழுகு நகையி னழகும்
நித்திலச் சுட்டிதிகழ் நெற்றியழ குங்கருணை
நிறையுமிரு விழியி னழகும்
சீர்கொண்ட கும்பத் தனத்தழகு மின்னைசொல்
சிற்றிடையி னழகு மிலகு
சேவடியி னழகும்யான் சிந்திப்ப தன்றியே
செய்தவம் வேறு முளதோ
தார்கொண்ட புயவொற்றி யூரவாமி தோமில்
தபோதனர் வழுத்து நாமி
தவபூமி சிவகாமி தன்னேரி யபிராமி
சௌந்தரிய மாதர் சாமி
வார்கொண்ட கனதனத் தெய்வயா னைப்பெண்ணும்
வள்ளியும் வணங்கு மாமி
மருமலர்த் துன்னுகுழல் அனநடைக் கன்னியெனும்
வடிவுடைய பெண்ண முதமே. 1

* * * *

End :

சரணகமல துகளிலெழு பரம ணுவினிற்
சதகோடி பங்கி லொன்ற
சதுர்முகப் பிரமனுயர் பலகோடி யண்டங்கள்
சராசர மும்ப டைப்பான்
அரணமெழு கடலாக வரவணையின் மீதுதுயி
லரிமுறைமை யால ளிப்பான்
அரனுமொரு நிமிடத் திலேபூதி யாக்கிமே
லணிவனுன் பெருமை யெளிதோ
கிரணநவ மணியிலகு கிரீடவேணி விஞ்சை
கிரயத்தா மாந்திரி கோணி
கிதபாணி யங்குச பாசபா ணியென்
கிருபா சமுத்திர பாணி
வரனளினமல மற்சங்க குதிகொள் வாவி
மருவொற்றி யூரின் வாழ்வே
மன்னுமறற் றுன்னுகுழ லனநடைக் கன்னியெனு
வடிவுடைய பெண்ணமுத மே. 5

No. 1689. VAṬIVUṬAI-Y-AMMAN-VIRUTTAM

[TEXT]

வடிவுடையம்மன் விருத்தம்—[மூலம்]

[962-I]

Size, 9″×1″. Pages, 12. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is another Viruttam work on the Goddess at Tiru-v-oṟṟiyūr. The author is said to Ciru-Maṉavūr Municāmi Mutaliyar. The Mss. contains 10 stanzas.

Complete.

குறிப்பு : *இதுவும் திருவொற்றியூர் அம்பிகை விஷயமானது. ஆசிரியர் சிறுமணவூர் முனிசாமி முதலியா ரென்கின்றனர். அச்சிடப்பெற்றுள்ளது. இப்பிரதியில் 10 பதிகங்கள் உள்ளன அச்சுப்பிரதியில் 11 பதிகங்கள் உள்ளன.*

பூர்த்தி.

Beginning :

சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
சோதியாய் நின்றவுமையே
சுக்கிரவா ரப்பெருமையுங் கண்டுனது சேவையும்
சொல்லவும் எளிதாகுமோ
சந்ததி யாகியே செந்தமிழ்ப் புராணியென்
சலிப்பெலா மாற்றியருள்வாய்
சற்குணி மெற்குணி நிற்குணி சதுர்வேத
சமயமும் மாரிநீயே
சிந்தைமிக நொந்துயான் வந்தகுறை யுன்றன்முன்
செப்பவுங் கேட்கவில்லையோ
சேய்பெற்ற தில்லையோ நீதியுணர் வில்லையோ
செகமெலாம் பெற்றதாயே

தந்திர முருந்தனிட தங்கைசிவ மங்கையே
தரணிபுக ழொற்றியூர்வாழ்
தங்கமலர் நாதர்சடை கங்கையுரு வானகொடி
திங்களொளி வானவடிவே. 1

* * * *

End :

படிக்கவறி யேனுனைத் துதிக்கவறி யேனென்ன
பாதகத் தின்கொடுமையோ
பாட்டுமறி யேன்கவிதை கேட்டுமறி யேன்மிக்க
பாவலர்கள் நேசமறியேன்
நடுங்கிடக் குருவடி வணங்கியறி யேன்சடில
நாதனடி பூசையறியேன்
நான்மனித னுருவாகிப பூமியிற் சன்மித்து
நலமான செல்வமறியேன்
கடல்சூழு மிவ்வுலகில் என்போலு மூடனைக்
கண்டதுண் டோவருளுவாய்க்
காமாட்சி யுன்றனிட பாதமே நம்பினேன்
கன்மவினை யணுகாமலே
தடுத்தடிமை கொண்டெனைக் கடைத்தேற வேயருளித்
தரணிபுக ழொற்றியூர்வாழ்
தங்கமலர் நாதர்சடை கங்கையுரு வானகொடி
திங்களொளி வானவடிவே.

No. 1690. VAṬIVUṬAI-Y-AMMAN-TŌTTIRAM

வடிவுடையம்மன் தோத்திரம்

[1037-B]

Size, 1 7″ × 1¼″. Pages, 12. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 1689.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1689 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1691. [TIRUVORRIYŪR]-VAṬIVUṬAI-Y-AMMAN-VIRUTTAM—[TEXT]

[திருவொற்றியூர்] வடிவுடையம்மன் விருத்தம்—[மூலம்]

[542-C]

Size, 14½″ × 1¼″. Pages, 7. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is another hymn in 10 Vlruttams on the same Goddess Sri Vaṭivuṭai Amman at Tiru-v-orriyūr.

Complete.

குறிப்பு: இதுவும் திருவொற்றியூர் அம்பிகை சம்பந்தமானது. அச்சியற்றப்பெற்றது. நடைசிறப்புடையதன்று. இந்தப் பிரதியில் பத்துப் பாடல்கள் பூர்த்தியா யுள்ளன.

பூர்த்தி.

Beginning:

சந்திரன் தன்னைச் சடையினி லணிந்தசங்
கரரளக் கின்றபடியைத்
தயவதா யெடுத்துத் தரணியி லுள்ளசருவ
சீவன்களைக் காக்க
அந்தமா யளித்துஆ தரித்தவளே அட்சர
மைந்தையும் எனக்கு
அன்பதா யளித்து ஆட் கொள்ளு மம்மா
அம்பிகை கெவுரிசிற்றிடைச்சி
எந்தநா ளுன்ற னடிமை நானென்று
இருந்திட இடைந்துநீயிருப்ப
தென்னுடைய விதியோ உன்னுடை மதியோ
எனக்குநீ உரைத்திடுமம்மா

வந்தெனை யாள்வாய் ஒற்றியூர் தியாகர்
மருவிய வடிவுடைத்தாயே
மைந்தனைக் காத்து வரமது மளித்துவாழ்வு
மெந்நாளுமே புரிவாய். 1

* * * *

End :

அண்டர்கள் முனிவர்கள் யாவருந் துதிக்கும்
அம்பிகை ஆதியேசத்தி
அம்மைமீ னாட்சியா மளவல்லி ஐங்கரன்
றன்னையே பெற்றாய்
வண்டுகள் மொய்க்குங் குழலுடை யாளே
மாரியே வல்லபிராமி
மயூரவா கனனைச் சுதனென வளித்த
வயிரவ சூலிகள்ளி
தண்டைபொற் பாத தாமரை வல்லி
தரணியை யளந்தவர் தங்கை
தயவுட னென்னை யாட்கொள்ளு மம்மா
தாமிச மாயிராதே
மண்டலந் தனிலே ஒற்றியூர் தியாகர்
மருவிய வடிவுடைத்தாயே
மைந்தனைக் காத்து வரமது மளித்துவாழ்வு
மெந்நாளுமே புரிவாய். 10

No. 1692. VAṬIVUṬAI-Y-AMMAN-MĀLAI

வடிவுடையம்மன் மாலை

[161-T]

Size, $14\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 4. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is another work on the Goddess at Tiruvottiyur. The Mss. is very much injured.

Incomplete.

குறிப்பு : இதுவும் திருவொற்றியூர் வடிவுடையம்மன் சம்பந்தமானது. ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. இந்தப் பிரதியில் ஒரு ஏடு சிறிது ஒடிந்தும், மற்றொரு ஏடு முழுவதுமொடிந்துமுள்ளன. முழுமையும் எவ்வளவு செய்யுட்களை யுடையது என்பதும் அறிதற்கில்லை.

அபூர்த்தி.

Beginning :

(பெற்ற)பிள்ளை யெத்தனைதான் பிழைகளது செய்தாலும்
குற்றமென்று கொள்வர்களோ குமரிப் பகவதியுன்
சித்த மிரங்கியம்மா யென்றீவினையைத் தானறுத்து
வற்றாத செல்வமருள் வடிவுடைய மாதரசே. 20

* * * *

End :

சின்ன வயதிலம்மா சிறியேன் படுந்துயரம்
அன்னைநீ யின்ன மறிந்திலையோ அன்பாக
மின்னே ரிடையாய் மெய்யருக்கு மெய்யான
வன்னவ .... வடிவுடைய மாதரவே. 28

அழுதகண்ணீ ராற்றுதற்கு அம்மா உனையுமன்றி
பழுதில்லா பூவுலகில் பண்பாக வேறுளரோ
தொழுதே னினடி...... ....
(மழு)வேந்திப் பங்கிலுறை வடிவுடைய மாதரவே. 29

No. 1693. VARAMAṄKAI-NĀYAKI-PATIKAM

[TEXT]

வரமங்கைநாயகி பதிகம்—[மூலம்]

[161-K]

Size, $16\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 4. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a hymn on Sri Varamaṅkai. Other particulars are not known.

Incomplete.

குறிப்பு: *இது, வரமங்கைநாயகியைக் குறித்தது. இந்தப் பிரதியில் ஒன்பது பாடல்கள் உள்ளவெனினும், தெளிவாக இல்லை. மற்ற விவரங்களும் அறியக்கூடவில்லை.*

அபூர்த்தி.

Beginning:

ஊத்துக்கா லுளங்கருணை உள்ளக்கா லுலவாமல்
வேத்துக்கா லேதுமழை மேகக்கால் வந்திறங்கி
நாத்துக்கால் பூம்பயிருக்கு நண்ணுங்கால் நீர்பெருக்குஞ்
சேத்துக்கா ல்ச்செல்வித் தெனது வரமங்கைத் தாயே. 1

* * * *

End:

ஊத்தாய்க் கபாலத் துறையுள் ளேயிருந்துவருஞ்
.... ரோகத்தைத தீர்த்தருள வேணுமம்மா
காத்தாய்க் கனலாய்க் கமலமாய் ஆயிரத்தெண்
மாத்தாய்த் துலங்கும் வரமங்கை நாயகியே. 9

No. 1694. VARĀKI-MĀLAI—[TEXT]

வராகி மாலை—[மூலம்]

[250-A]

Size, 11″×1¼″. Pages, 10. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is a prayer in 31 stanzas to Goddess Varāki. It has also Manträs and Cakras pertaining to the Goddess.

Complete.

குறிப்பு : இது, 'வராஹி' என்னும் தேவதையைப் பிரதான மாகக்கொண்டு விளங்குவது. மந்திர சக்கரங்களும் அமைந் துள்ளது. அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் துதியாக மட்டும் 31 செய்யுள்களுள்ளன.

பூர்த்தி.

Beginning :

பெருக்குங் கருணை வராகிதன் மாலை பேசுதற்கு
நெருக்குங் குவிமுலை யம்பிகை வாமம் நிறைந்துமகிழ்ந்
திருக்கும் பரன்சுத னங்குச பாச மெனதுவினை
கருக்குந் தகைமை விநாயகன் சேவடி காப்பதுவே.

இருகுழை கோமளந் தாள்புட்பராக மிரண்டு கண்ணும்
குருமணி நீலங்கைக் கோமே தகநகங் கூர்வயிரம்
திருநகை முத்தங் கனிவாய்ப் பவழஞ் சிறந்தவல்லி
மரகத நாமத் திருமேனியும் சச்சை மாணிக்கமே.

* * * *

End :

வீற்றிருப் பாள்நவ கோணத்துள் ளேயென்னை
[வேணுமென்று
காத்திருப் பாள்கலி வந்தணு காமல்யென்க ணகலத்து
பார்த்திருப் பாளல்ல அன்றே அங்குச பாசம்கையில்
சேர்த்திருப் பாள்இவளே யெனையாளும் குலதெய்வமே. 31

No. 1695. VARĀKI-MĀLAI—[TEXT]

வராகி மாலை—[மூலம்]

[450-C]

Size, 16″×1¼″. Pages, 10. Lines, 5 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : Same as No. 1694.

Complete.

குறிப்பு: இது, முன் எண் 1694 பிரதி போன்றது.

பூர்த்தி.

No. 1696. VARĀKI-MĀLAI—[TEXT]

வராகி மாலை—[மூலம்]

[1032]

Size, $8\frac{3}{4}'' \times 1''$. Pages, 48. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1694.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1694 பிரதி போன்றது.

அபூர்த்தி.

No. 1697. VĀLIKONṬĀPURAM-PERIYANĀYAKI-TŌTTIRAM—[TEXT]

வாலிகொண்டாபுரம் பெரியநாயகி தோத்திரம்—[மூலம்]

[1037-C]

Size, $17'' \times 1\frac{1}{4}''$. Pages, 10. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This hymn in 10 stanzas is on Goddess Periyanāyaki at Vāli-Koṇṭāpuram.

Complete.

குறிப்பு: இது, பெரியநாயகியம்மன் துதி. அச்சிடப்பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

பூர்த்தி

Beginning :

அரிபுர மாரி தேடுதற் கரிய
அன்னபூ ரணிசதா நந்தி
அந்தரி கௌரி சுந்தரி அகோரி
அம்பிகை துரந்தரி மாரி
திரிபுர தகனி மயிடசங் காரி
தேவர்கள் பணிந்தசிங் காரி
திங்கள்செஞ் சடைச்சி யிங்கித நடைச்சி
செங்கண்மி னைசெம் படைச்சி
சொருகுகொந் தளிச்சி அழகுகண் சுளிச்சி
துர்க்கையா மணிதுடை யிடைச்சி
துங்கமா மறத்தி விபூதிருத் ராட்சி
துரிதா மானசெல் லாட்சி
மருவணி குழலே வரநதி சூழும்
வாழ்ந்திடு வாலிமா நகரில்
வாலிபூ சித்த வாலிநா யகரை
மருவிய பெரிய நாயகியே. 1

* * * *

End :

எண்டிசை யெல்லாம் திரிந்தலந் துழன்று
இடுக்கம்வந் தேங்கிநா னிருக்க
என்னுடை யுடம்பில் வியாதிவந் தணுகி
யெங்குமே படர்ந்தசங் கிதமாய்
கண்டபேர் நகைக்கத் தலைகுனிந் திடவே
கள்ளனைப் போலவே பதுங்கி
கன்னியர் மாய்கை தன்னிலே யழுந்தி
கசடனைப் போலவே யானேன்
தொண்டன்மேல் கிருபை வைத்துநோய்ப் பிணியைத்
தொலைத்துநீ காத்திடு மம்மா
தோத்திர மாக பத்துமே பதிகம்
சொன்னதுன் செயலது தாயே
மண்டலம் புகழும் வரநதி சூழும்
வாழ்ந்திடு வாலிமா நகரில்
வாலிபூ சித்த வாலிநா யகரை
மருவிய பெரிய நாயகியே. 10

4. முருகன்

No. 1698. ĀPATTĀRAṆA-MĀLAI—[TEXT]

ஆபத்தாரண மாலை—[மூலம்]

[66]

Size, 14″×1″. Pages, 2. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Muruga is called Kāḷi-Kāvala-T-Taranan and this is a hymn on Him. The Mss. is named Āpattaraṇa Mālai. The Mss. contains only 8 stanzas. Other particulars are not known.

Incomplete.

குறிப்பு: இது, காளி காவலத்தாரணன் என்று அழைக்கப் பெறும் முருகப்பெருமான் மீது பாடியதாகத் தெரிகிறது. ஆபத் தாரண மாலை என்று சுவடியின் பெயர் காணப்பெறுகிறது. செய்யுள் நடை சிறந்ததன்று. இந்தப் பிரதியில் எட்டுச் செய்யுட் களே காணப்படுகின்றன. மற்றைய விவரங்கள் அறியக்கூட வில்லை.

அபூர்த்தி.

Beginning:

சீர்கொண்ட செம்பொற் றிருமேனி யுஞ்செம் முகமலருங்
கார்கொண்ட சடையுந் தெண்டா யுதமு .....களெட்டுங்
கூ..............கொண்டருள் கூர்ந்த கொன்றையந்
தார்கொண்ட வேணியனே காளிகாவலத் தாரணனே. 1

* * * *

End:

நெறியும் பிறையுந் தவழுமெய் ஞானமும் நீறிடவும்
பொறியும் புகழுங் கொடுத்தருள் வாய்புரங் காய்ந்தவனே
குறியு... ....குள்க் கன்றுகட்டுந்
தறியுங்கண் வந்தோனே காளி காவலத் தாரணனே.

No. 1699. KATIR-KĀMA-VĒLAN-MĀLAI

[TEXT]

கதிர்காம வேலன் மாலை—[மூலம்]

[161-J]

Size, 17″×1″. Pages, 10. Lines, 4 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Katirkāmam, in Ceylon, has a famous shrine ror Lord Muruka. This is a poem in praise of Him. Its author's name is not known. There are 28 stanzas in the Mss.

Incomplete.

குறிப்பு: *இது, (இலங்கைத் தீவிலுள்ள) கதிர் காமத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் விஷயமானது; இதனை இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இந்தப் பிரதியில் 28 செய்யுட்களுள்ளன.* அந்தாதி

அபூர்த்தி.

Beginning:

அத்தி முகவனை மத்தன் மதலையை
நித்தம் நினைபவர் முத்தி பெறுவரே.

வேழ முகத்து விநாயகனைத்தொழ
வாழ்வு மிகுத்து வரும்.

வித்தை முகத்து விநாயகனைத் தொழ
புத்தி மிகுத்துவரும்.

நித்த முனைத்துதிக்க நீணிலத்தோர் கொண்டாட
பத்துலட்சங் கோடித்தமிழ்ப் பாடவர மேயருள்வாய்
அத்த னருள்குமரா ஆயன் மருகோனே
கர்த்தனே யெங்கள் கதிர்காம வேலோனே. 1

* * * *

End :

மன்னிமை யாகவேமணம் வைத்த நாள் முதலா
சொன்னீ ரதைமறந்து தோகைதனக் குண்டாளீர்
பண்ணீர் தனக்குப் பழநீர் ஙிகராமோ
கன்னிகையைத் தொட்டீர் கதிர்காம வேலோனே. 28

No. 1700. KATIR-KĀMA-VĒLAN-MĀLAI
[TEXT]
கதிர்காம வேலன் மாலை—[மூலம்]
[639-B]

Size, $6\frac{3}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 8. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : Same as No. 1699 but containing oniy 11 stanzas.

Incomplete.

குறிப்பு : *இது, முன் எண் 1699 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் 11 செய்யுள்களே யுள்ளன.*

அபூர்த்தி.

No. 1701. KUMĀRAPURI-CAṆMUKAR-TIRUPPUKAḺ—[TEXT]
குமாரபுரி சண்முகர் திருப்புகழ்—[மூலம்]
[1031]

Size, $8\frac{1}{4}'' \times 1''$. Pages, 16. Lines, 4 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This Tiruppukaḷ on Kumārapuri, (Vaḷavanur, near Pondichery) is supposed to have been sung by Taṇṭapāṇi Cwāmikal of Tiru-Ā-Māttūr. The Mss. contains 5 stanzas.

Complete.

குறிப்பு: இது, வளவனூர் குமாரபுரி சண்முகன் விஷயமானது. இந்தப் பிரதியில் ஐந்து பாடல்களே யுள்ளன. திருவாமாத்தூர் தண்டபாணி சுவாமிகள் பாடியிருக்கக் கூடுமென எண்ண இடமிருக்கிறது.

பூர்த்தி.

Beginning:

விண்முகிற் றண்மாரி மிகுக்குங் குமாரபுரிச்
சண்முகன்மேற் சந்தத் தமிழ்பாட—வண்மைமலி
தோகைப் பரியுஞ் சுடர்வேலுங் குக்குடப்புள்
வாகைப தாகையுங்கா வல்.

சத்தி வேலே யனுதின மெச்சி வாழு மவரொடு
தக்க வாறு பழகிடு—முயர்வாலே
சத்த சாகர முகிலை கெட்டு மோத முகிலெதிர்
சர்ப்ப மீது நடமிடு—மயின்மீதே
யத்தி மாது மடன்மிகும் வெற்றி வேடர் சிறுமியு
மச்சமாறி யருகுற—நினைவார்தா
மக்குமாலை யுடனு முற்றுநீறு புனைநல
மற்ப மாகு மெனுமொழி—பகர்வாரோ.
பத்தி மீறி வழிபடன் முத்தியாகு மெனுநெறி
பற்றி நாடு மடியவர்—குருநாதா
பச்சைமேனி யுமையவள் பெற்றபால னெனுமவர்
பட்ச மாகியு மிலகிய—புகழோனே
நத்தி டாத புலவன்முன் முட்டை யாகி யருள்செயு
நட்பை நாடி யுருகிட—விடுவோனே
நக்கன் மாயன் மலரவ னெத்த தேவர் பலர்வரு
நற்கு மார புரிவளர்—பெருமாளே. 1

*　　*　　*　　*

End:

பருத்த நீடு முலையின ருதட்டி னூற னுகர்பவர்
பழக்க மான வினைசிறி—தணுகாதே
பறித்த காய முறுதலை யுடைப்பொ லார்செரல் விதிமுறை
படித்த தீயர் கவிகளை—மதியாதே.

தெருக்க டோறு மனைதொறு முளுக்கி லாத மனதொடு
சிரித்து லாவி யிழிபொருள்—கவராதே
சினத்த சேவ லெழுதிய கொடிக்கு மேன்மை பகர்பவர்
திருத்தி யாக வனுதின—முயல்வேனோ
மருக்கு ராவும் விரவிய கடப்ப மாலை மணமிக
மணத்த தோளி லொருகிளி—புணைவோனே
வளர்த்த தாய ரறுவர்கள் கொடுத்த பாலு முமைமுலை
வடித்த பாலு நுகர்சிறு—கனிவாயா
இருக்கு மூல மறிகில னெருத்த னுவி மறுகிட
விடித்து மேரு விடைதனை—யிடும்வீரா
விமைப்பி லாரு முனிவரு நெருக்க மாகி வழிபட
வெழிற்கு மார புரிவரு—பெருமாளே. 5

No. 1702. CAṆMUKA-CINTĀMAṆI—[TEXT]

சண்முக சிந்தாமணி—[மூலம்]

[68-A]

Size, 15″ × 1″. Pages, 8. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a hymn in 30 stanzas on Lord Muruka at Vaḷḷinakar [Vaḷḷi Malai, North Arcot Dt.] Other particulars are not available.

Complete.

குறிப்பு: இது, வள்ளிமலை முருகப்பெருமான் மீது பாடியது. செய்யுள் நடை சிறந்ததன்று. மற்றைய விவரம் அறியக்கூட வில்லை. இந்தப் பிரதியில் 30 செய்யுட்கள் உள்ளன. ஏடுகள் முனை முறிந்துள்ளன.

பூர்த்தி.

Beginning:

சொல்வளர்ந்த வெற்றிச் சுதினந் தொழும்பர்தன்பால்
அல்வளர்ந்த தீவினையை ஆற்றியே—நல்வளர்ந்த
சண்முகசி காமணியாந் தண்ட
கண்முகவே ளப்பொருளே காப்பு.

கந்தா கதிர்வடிவேல் காங்கேயா அண்டபிண்டம்
அந்தாதி யான அருளே பராபரமே
மந்தா கினியுதவும் மைந்தாதென் வள்ளிநகர்
சந்தான பந்தான சண்முகசி காமணியே. 1

* * * *

End :

ஐவ ரிரங்கி லருளிரங்கு மென்ற சொல்லும்
பொய்வருமோ நின்கருணை போதிப்பாய் நீயெனக்குத்
தெய்வ குமரகுரு தேவா தமிழ்க்கனிந்த
செல்வமிகும் வள்ளிநகர் சண்முகசி காமணியே. 30

No. 1703. CASTI-KAVACAM—[TEXT]

சஷ்டி கவசம்—[மூலம்]

[652-A]

Size, $8\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 12. Lines, 10 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : Kavacam is an invocation to God for personal protection. This work is on Lord Muruka.

Complete.

குறிப்பு : *இது, முருகப்பெருமான் துதியாக தேவராயர் என்பவரால் இயற்றப்பெற்றது. அச்சிடப்பெற்றுள்ளது. அச்சுப் பிரதியிலில்லாத முதல் மூன்று வெண்பாக்களும், இறுதியில் ஒரு விருத்தமும் இந்தப் பிரதியில் அதிகமாகக் காணப்படுகின்றன. முழுதுமுள்ளது.*

பூர்த்தி.

Beginning :

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

வெண்பா

வேலர் சஷ்டி கவசம் விரும்பித் தொழுவோர்க்குக்
கால னணுகா கலியணுகா—நாலு
பதமும் பெறுவர் பழனிக் கிரிமேவும்
சுதனை தினந்துதித்தக் கால். 1

* * * *

End:

விருத்தம்

ஓராறுமுகத் தொருவா சரணம் ஒருபன் னிருபுயனே சரணம்
பேரா யிரமுள் ளவனே சரணம் பேசற் கரிய மறையே சரணம்
நீராய் நிலனாய் யெரிகால் வெளியாய் நினைவார் நினைவின்
[பொருளே சரணம்
வேராய் நடுவாய் முடியாய் நிறைவேலா யுதனே சரணம்.

No. 1704. [CUPPIRAMAṆIYAR]-CAṢTI-KAVCAM—[TEXT]

[சுப்பிரமணியர்] சஷ்டி கவசம்—[மூலம்]

[1215-B]

Size, $18\frac{1}{2}'' \times 1\frac{1}{8}''$. Page, 1. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1703.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1703 பிரதி போன்றது*

அபூர்த்தி.

No. 1705. CĪR-PĀTA-VAKUPPU—[TEXT]

சீர்பாத வகுப்பு—[மூலம்]

[413-A]

Size, $17\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 2. Lines, 11 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This is a work extolling the greatness of the Feet of Lord Muruga, by Aruṇakiri Nātar.

Complete.

குறிப்பு : இது, அருணகிரிநாதர் முருகப்பெருமானது திருவடியைப்பற்றிப் புகழ்ந்து கூறுவது. அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் 'பாதவகுப்பு' என்றே குறிக்கப்பெற்றுள்ளது. நூல் முழுவது முள்ளது.

பூர்த்தி.

Beginning :

உததியிடை கடவுமர கதவருண குலதுரக
வுபலளித கனகரத சதகோடி சூரியர்கள்
உதயமென மதுபமித கலபகக மயிலின்மிசை
யுகமுடிவி லிருளகல வொருசோதி வீசுவதும்

* * * *

End :

வசனமது மதியமலை விசைதிரி புரைபுனிதை
வனிதையபி னவையளகை யபிராம நாயகிதன்
மதலைமலை கிழவனனு பவனபைய னுபயசது
மறையின்முத னடுமுடிவின் மணநாறு சீறடியே

No. 1706. CUPPIRAMAṆIYAR-PĒRIL-AKAVAL [TEXT]

சுப்பிரமணியர்பேரில் அகவல்—[மூலம்]

[161-II E]

Size, $12\frac{3}{4}'' \times 1''$. Pages, 8. Lines, 8 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work on Lord Supramania (Muruka) in Kali Veṇpā metre. Other particulars are not known.

Complete.

குறிப்பு: இது, சுப்பிரமணியர்மேல் பாடப்பெற்ற தோத்திரம். கலிவெண்பாவா லாகியது. அகவல் என்றும் கூறப்படுகிறது. இயற்றியவர் பெயர் முதலிய விவரங்கள் அறியக்கூடவில்லை. இச் சுவடியில் நூல் பூர்த்தியா யுள்ளது. அச்சானதாகத் தெரிய வில்லை.

பூர்த்தி.

Beginning:

சீர்மாதும் பூமாதுஞ் செய்ய திருமாதும்
பார்மாது மென்றுவில் பாவித்துச்—சீர்மாதும்
வள்ளிக்கு வாய்த்தவனு மயிலேறுஞ் சேவகனும்
தெள்ளுதமிழ்க் கீர்த்தியான் செப்பவே—வெள்ளைக்
கலையுடுத்து வானவர்தன் கணபதிக்கு முன்னோடி
அலைதிரள்போல வந்துதித்து ஆலித்துப்—பலவிதநூல்
வேதாந்த வேதியனே விண்ணோர்கோன் பயந்தீர்த்த
நாதாந்த வேதியர்க்கு நாயகமே—வாதாடு

* * * *

End:

அஞ்சலென்று நல்லசவு பாக்கியமு நல்கியே
யெந்தனையு .... ளக்கொண்டு—சொந்தமாய்
வடிவேலெடுத் தனை......மலங்கார மாமயில்வீரா
அடியேனைக்கா வுனக்க பயம்.

தெண்டாயுதந் துணை.

No. 1707. CUPPIRAMAṆIYAR-VIRUTTAM

[TEXT]

சுப்பிரமணியர் விருத்தம்—[மூலம்]

[652-B]

Size, 8½″ × 1½″. Pages, 11. Lines, 10 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a prayer to Lord Cupramanya (Muruka) in 12 Viruttams.

Complete.

குறிப்பு: இது, முருகப்பெருமான்மீது துதி. அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் நூல் முழுதுமுள்ளது. பிற விவரங்கள் தெரியவில்லை.

பூர்த்தி.

Beginning:

மாமேவு நவரத்தின கேயூர மணிமகுட
மன்னிப் பொலிந்த முடியும்
வச்சிர நுதற்றிலக வெண்ணீறு மோராறு
வதனவிம் பத்தி னழகும்
பாமேவு பத்தர்க்கு மடைதிறந் தன்பொழுகு
பன்னிரு விழிக்க ருணையும்
பகரிய பழமறை பழுத்தொழுகு சிறுநகைப்
பவளஞ் சிறந்த வாயும்
காமேவு கரகமல பந்தியுஞ் சேவலுங்
கனமயி லுங்கிண்கிணிக்
காலுமுந் நூலும்வடி வேலுமென் மேலுமெக்
காலுந் துலங்க வருவாய்
தாமோத ரானந்த கோவிந்த வைகுந்த
சரசகோ பாலன் மருகா
சதுர்மறைக ளோதந்த பரமகுரு வாய்வந்த
சரவண பவானந் தனே. 1

* * * *

End :

கண்ணேறு வாராது பிணியொன்றுஞ் சேராது
கவலைப் படாது நெஞ்சில்
கலியாது சலியாது நலியாது மெலியாது
கலியென்ற பேய டாது
விண்ணேறு மணுகாது கன்மவினை தொடராது
விஷமச் சுரம்வ ராது
வெய்யபூ தம்பில்லி வஞ்சனைக டொடரா
விஷம்பரவு செந்து மணுகா
எண்ணேறு ஜனனங்கள் இடையாது காலபய
மெள்ளளவு மேமிராதிவ்
வேழைக் கிரங்கியரு டெய்வமுனை யல்லாம
லின்னமொரு தெய்வ முளதோ
தண்ணேறு கங்கைமலை மங்கையரு டங்கமே
சராசகோ பாலன் மருகா
சதுர்மறைக ளோதந்த பரமகுரு வாய்வந்த
சரவண பவானந் தனே. 12

No. 1708. CUPPIRAMAṆIYAR-VIRUTTAM

[TEXT]

சுப்பிரமணியர் விருத்தம்—[மூலம்]

[811]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 4. Lines, 9 on a page. Condition, Much injured. Appearance, Old.

Note : Same as No. 1707 but completely damaged.

Incomplete.

குறிப்பு : இது, முன் எண் 1707 பிரதி போன்றது. இந்தப் பிரதியிலுள்ள ஏடுகள் முழுவதுமே சிதைந்துபோயுள்ளமையால்

அறிவது அருமையாகவுள்ளது; அன்றியும், ஒரு பதிகம்கூட முழுவதும் இல்லை.

அபூர்த்தி.

No. 1709. CUPPIRAMAṆIYAR-VIRUTTAM

[TEXT]

சுப்பிரமணியர் விருத்தம்—[மூலம்]

[1122-B]

Size, 15½″ × 1″. Pages, 2. Lines, 4 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a different work on the same subject as described in No. 1707 but containing only one stanza.

Incomplete.

குறிப்பு: *இந்தப் பிரதியில் ஒரே பாடல் இருக்கிறது. மற்ற விவரங்கள் அறியக்கூடவில்லை.*

அபூர்த்தி.

Beginning :

திருமுருக செயமுருக மயில்மீதில் வருமுருகா
  சென்னிமலை வாழ்முருகவேள்
 தேவர் சேனுபதி தலைவனே தணிகைவாழ்
  தெய்வானை வள்ளிபங்கா
அருமறைகள் அந்தணர் ஓதிவா யிருபக்க
  மானந்த மாகஅமரர்
 அகிலாண்ட கோடிவெகு பிரமாண்ட நாயகா
  அறுமுகா சரணமெனவே
திருமொழிகள் தெரிவதற் கொருவர்வச மல்லவே
  சரசசல் லாடமயில்மேல்
 தாண்டியே ஒருநொடியில் உலகைவல மாகவரு
  சரவணேற் பவமுருகனே

குருபர னெனும்பழநிக் குன்றில்வாழ் மூர்த்தியே
குழந்தைவடி வானகோவே
கொச்சைக் குறத்திமிக மிச்சைப் புனத்தருகில்
இச்சித்திடுங் குமரனே. 1

No. 1710. CENTIL-MĀLAI—[TEXT]

செந்தில் மாலை—[மூலம்]

[161-L]

Size, 18″×1¼″. Pages, 8. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work on Lord Muruka at Tiru-C-Centūr, Tirunelveli Dt. by a chieftain by name Tiru-V-Anantal-Āḻvār. The Mss. is very much damaged.

Complete.

குறிப்பு: இது, திருச்செந்தூரில் கோயில்கொண்டுள்ள முருகப்பெருமான் விஷயமானது. இந்தப் பிரதியில் நூல் முழுதுமுள்ளது. மற்றைய விவரங்கள் அறியக்கூடவில்லை. ஆசிரியர் திருவனந்தல் ஆழ்வார் மகிபதியென இறுதிச்செய்யுளால் விளங்குகிறது.

பூர்த்தி.

Beginning:

அந்திமதி யணியு மரன்பாலன் மால்மருகன்
தந்திக் கிளையதொரு சண்முகனூர் தன்பேரில்
செந்திமாலைபாடத் திரள்கோட்டு விகடதடத்
தொந்திவயிற் றைங்கரனுஞ் சொலவாழி காப்பாமே.

ஓராறு சென்னி ஓராறு திருமுகமும்
ஈராறு நாட்ட மீராறு ....

* * * *

End :

ஐயன் திருவனந்தல் ஆழ்வார் மகிபதிசொல்
மெய்யன் வடிவேல் முருகன் விளம்புசெந்தில் மாலைதன்னை
வையம் புகழ வண்டமிழோர் ....
செய்யும் பராபரனே செந்தில்வடி வேலோனே.

No. 1711. CENTIL-MĀLAI—[TEXT]

செந்தில் மாலை—[மூலம்]

[161-II A]

Size, 10″ × ¾″. Pages, 2. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note :- Same as No. 1710 but containing only the last stanza.

Incomplete.

குறிப்பு : *இது, முன் எண் 1710 பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இறுதிச் செய்யுள்மட்டு முள்ளது. ஓலையும் ஒடிந்துளது.*

அபூர்த்தி.

No. 1712. CĒVAL-VIRUTTAM—[TEXT]

சேவல் விருத்தம்—[மூலம்]

[914]

Size, 12¾″ × 1″. Pages, 26. Lines, 4 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note : This is a work on Cock-flag of Sri Muruka—different from Cēval Pattu.

Complete.

குறிப்பு: இது, முருகப்பெருமான் சேவல் கொடியைப்பற்றிக் கூறுவது. இயற்றியவர் பெயர் முதலியன அறியக்கூடவில்லை. இதில் 12 பாடல்கள் உள்ளன. கடைசி ஏடு முறிந்திருக்கிறது.

அருணகிரி நாதர் அருளியது.

பூர்த்தி.

Beginning:

உலகிலனு தினமு வருமடியவர் களிடரகல
வுரியபர கதிதெரியவே
உரகமணி யெனவுழலு மிருவினையு முறைபடவு
மிருள்கள்மிடி கெடவருளியே
கலகமிடு மலகைகுறள் மிதிபணிகளை வலிமையொடு
கானமுறவரி லவைகளை
கண்ணைப் பிடுங்கியுடல் தன்னைப் பிளந்துசிற
கைக்கொட்டி நின்றாடுமாம்
மலைகள்நெறு நெறெனவலைகள் சுவறிட வசுரர்
மடியவயில் கடவுமுருகன்
மகுடவட கிரியலைய மலையமுள வனிதைகுடி
வரிசையி னங்களுடன்
சிலைகுளி சனமகள் மருவுபய விலவரு
....வருவிவிறகிற்
சிரமிசையில் வெகுசின மொட்டியுதரு மறுமுகன்
சேவற்றிருத் துவசமே.

* * * *

End:

......சோம கலசப்த... லங்கார தா ஜடாகுடி காலாந்தகர்
......துங்க ரக்ஷித் துரோணகட்க குலிச...குலதுரக கேசரமாம்
...சம்வடமாம் புயப்பரண சங்காபரண திகம்பா திரியம்பகம்
......தவநந்தன கஜானன சகோதர குகன்செம்பொற்
[திருத்துவசமே.

No. 1713. TIRU-C-CENTŪR NĀṈMAṆI-MĀLAI

[TEXT]

திருச்செந்தூர் நான்மணிமாலை—[மூலம்]

[893]

Size, $7\frac{3}{4}'' \times 1\frac{3}{4}''$. Pages, 24. Lines, 12 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work on Lord Muruka at Tiru-C-Centūr (Tirunelvely Dt.) by Ilakkaṇam Kacciyappa Muṉivar.

Complete.

குறிப்பு: *இது, இலக்கணம் கச்சியப்ப முனிவர் இயற்றியது. அச்சிடப் பெற்றுள்ளது. இந்தப் பிரதி முற்று முளது எனினும், முதல் ஏடு பாதி ஒடிந்துள்ளது.*

பூர்த்தி.

Beginning:

நந்துலவுஞ் செந்திலான் நான்மணிமா லைத்தொடைக்குப்
பந்தவனம் பாற்றவருட் பார்வைதொறும்—சிந்துமெரி
மேன்மேற் கிளைப்பச் செவிவிசிறி வீசிவரும்
கான்மே விருங்கடத்தான் காப்பு.

* * * *

End:

நினைதொறு நினைதொறு நீங்குதற் கரிதாய்
இதனினும் வேறொன் றின்பமு முளதோ
....
வரிசைவே றுளதோ மன்ற
புரிபுலால் யாக்கை பொறுத்தவிப் புவிக்கே.

No. 1714 TIRU-T-TAṈIKAI CEṄKALVARŌYAR TŌTTIRAM—[TEXT]

திருத்தணிகை செங்கல்வராயர் தோத்திரம்—[மூலம்]

[542-K (1)]

Size, 14½″ × 1¼″. Page, 1. Lines, 6 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This Mss. contains only 1 Viruttam on Lord Muruka at Tiruttaṇi. There is also one stanza extracted from each of Toṇṭamaṇṭala Catakam and from Arunācala Purāṇa.

Incomplete.

குறிப்பு : *இந்தப் பிரதியில் ஒரே பாடல் பிரதி செய்யப்பெற்றுள்ளது. அன்றியும் தொண்டை மண்டலம் பற்றியும், அருணாசல புராணம் திருமலைச் சருக்கப் பாடல் ஒன்றும் குறிப்பிடப்பட்டுளது.*

அபூர்த்தி.

Beginning :

நீர்பூத்த குவளையணி மார்பமுங் கண்ணரு
ணிறைந்தமுழு மதிவதனமும்
நிகரில் பன்னிருதோளும் ஆறிரு மணிக்குழையு
நிலவுபொழி தாளங்கையும
கார்பூத்த மின்னெனப் பிறழுமணி மகுடமுங்
கதிர்கொள்வே லுஞ்சேவலுங்
கவினுலவு மரகதக் கலபமா மயிலுமிரு
கனகதண் டைபதமுநின்
ஏர்பூத்த திருவழகு மென்றனிரு கண்காண
விதயங்களிக்க நாவா
லெற்றியிரு கைகூப்பி முடிதாழ்த் திறைஞ்சியென்
னிடர்களை யொழிப்பதென்றோ
சீர்பூத்த நாற்கோட்டு மும்மதத் திருசெவிச்
சிந்துரத்தொருபு ழைக்கைத்
திற்றக ளிற்றின்செலவி தாயநிறக்குறப் பெண்புல்குநேய
திருத்தணிகை செங்கல்வராயனே. 1

No. 1715. TIRUTTAṈIKAI VIRUTTAM

திருத்தணிகைவிருத்தம்

[293-D]

Size, 16″ × 1¼″. Pages, 8. Lines, 7 on a page. Condition, Good. Appearance, New.

Note: This work by Tottikkalai Cupramaṇiya Muṉivar is on Lord Muruka at Tiruttani. The Mss. contains 10 stanzas. There are also 5 stanzas extracted from another work i.e. Naṉṉeṟi.

Complete.

குறிப்பு: *இது, திருத்தணிகையில் கோயில்கொண் டெழுந் தருளியிருக்கும் முருகப்பெருமான் விஷயமான பதிகம். இதன் ஆசிரியர் தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர். அச்சிடப்பெற் றுள்ளது. இந்தப் பிரதியில் பத்துச் செய்யுள்களும் தெளிவாக உள்ளன. கடைசிப் பக்கத்தில் 5 நன்னெறிப் பாடல்கள் பிரதி செய்யப்பெற்றுள்ளன.*

பூர்த்தி.

Beginning:

ஓங்கார வுருவசின் மயவிமல வொளியாகி
யுலகமுழு வதுநிறைந்த
வுண்மைப் பராபர நிராமய நிராலம்ப
வும்பர்கள்சி கரத்தினமே
ஆங்கார நீங்காத நிங்காண வத்தின்வரும்
அலகிலாப் பிறவிதோறும்
அடியேன்செய் கொடுவினை யளக்கரு வரம்பினை
யளந்திடினு மளவுபடுமோ
வாங்காம லவ்வினை வருத்தலா லுன்றிருமுன்
வந்தபய மபயமென்றேன்
மயிலேறி வந்துதிரு மந்திர சடாட்சர
மருந்தரு டிருந்துமடியார்

தாங்காணா முன்னின்ற சண்முகத் தெய்வமே
சரவணோற் பவகுமரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புபதேச
சகலபண் டிதாராசனே.

* * * *

End :

நலமருவு மதுரைத் தமிழ்ச்சங்க மேற்புலவர்
நடுவீற் றிருந்த முதல்வா
நக்கீரர் சொன்னமுரு காற்றுப்ப டைத்தமிழும்
நல்லருணா கிரிநா தர்சொற்
புலமையுறு சித்திரச் சந்தப்ர வாகமும்
புனிதச்செ விக்குளார்த்த
புகழாள குறுமுனிக் காரணத் துட்பொருள்
புலப்படுத் தியகு ரவனே
கொலைகளவு முதலான பாதனா மெனக்குவெகு
கோடிக ளிருந்தி டினுமுன்
கூர்மந்தி ரப்படையி ஞல்வீட்டி யெனதுளம்
குடிகொண டிருந்த ருளுவாய்
சலனமறு சருவபரி பூரண தயாநிதே
சரவணோற் பவகு மரனே
தணிகையங் கிரிவாச வரன்விரும் புவதேச
சகலபண் டிதரா சனே. 10

No. 1716. TIRU-P-PUKAḺ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[953]

Size, $16\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 46. Lines, 9 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a famous composition of Saint Aruṇakīri-Nātar on several places of Muruka worship in the land.

Incomplete.

குறிப்பு : இது முருகக் கடவுள் புகழைக் குறித்துப் பாடப் பட்ட சந்த விருத்தங்கள் பல கொண்டது. திருவண்ணாமலை அருணகிரிநாதராலியற்றப்பெற்றது. மூலம் மட்டும் உளது. இப் பிரதி பூர்த்தியாயில்லை. நூல் முற்றும் அச்சாகியுள்ளது. இச் சுவடிகளிற் சில விடங்களிற் பாட பேதங்கள் காணப்படுகின்றன. பாக்கள் வரிசைகளும் அச்சுப் பிரதியோடு மாறுபடுகின்றன. இறுதி ஏடு இருபுறமும் ஒடிந்துள்ளது.

அபூர்த்தி.

Beginning :

கைத்தல நிறையவல் முப்பழ மொடுபொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தளிவயிறனை யுத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ டைவினை முற்படு கிரிதனில்
முற்பட வெழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த வச்சிவ னுறைரத
வச்சது பொடி செய்த வதிதீரா
வச்சர வணைவரு சுப்பிர மணியவ
னத்துயர் துதிதனை யதுவாகி
யச்சிறு முருகனை யக்குற மகளுட
னக்கண மணமருள் பெருமாளே.

* * * *

End :

பொற்ப தத்தி னைத்து தித்து நற்ப தத்தி லுற்றபத்தர்
பொற்பு ரைத்து நெக்கி ருக்க ... வறியா......
பொத்த கப்பி தத்தை விட்டு வித்தகத்து ணைப்புரித்த
புத்தி யிற்க லக்க மற்று கினையாதே

முற்ப டத்த லத்து இத்த விற்ப டைத்த குற்ற மற்ற
முத்தி டைத்த வ...ற்று முயலாதே
முட்ட விக்க டைப்பி றப்பி லுட்கி டைப்ப கைத்தவிந்தது
முத்தி ருத்தெ னக்களிப்ப தொருநாளே
வெற்ப ளித்த தற்ப ரைக்கி டப்பு றத்த ளித்......
......தா வித்தர் கத்தர் பெற்றகொற்ற மயில்வீரா
வித்தை தித்து முத்த மிழ்ச்சொ லத்த சத்த
வித்த ரிக்கு மெய்த்தி ருத்த ணிப்பொருப்பி
லுறைவோனே
கற்ப கப்புன் க......த்தி கச்ச டர்த்த சித்திர மொத்த
கற்பு ரத்தி ருத்த ை த்தி லணைவோனே
கத்த ரக்கர் கொத்து கச்சி நத்துவச்சி ரற்க டைத்த
கைத்தொ ழுத்த றித்து விட்ட பெருமாளே.

No. 1717. TIRU-P-PUKAL—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[918]

Size, 18″ × 1¼″. Pages, 74. Lines, 5 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 1716.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1716 பிரதி போன்றது. முதற் **கண்** பாயிரப் பாடல்களை யுடையது. நூல் பூர்த்தியா யில்லை. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் பாடபேதங்களுண்டு. ஏடுகள் மிகவும் சிதிலம்.

அபூர்த்தி.

Colophon:

மன்மதஞு மார்கழிமீ 5உ ....வாரம் உத்திர.......... இந்த சுபதினத்தில் எழுதி முகிந்தது.

முற்றும்.

No. 1718. TIRU-P-PUKAL̤—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[930]

Size, 17″×1″. Pages, 94. Lines, 5 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. இந்தப் பிரதி முற்றுமில்லை. இறுதி ஏடு மிகவும் சிதிலம்.*

அபூர்த்தி.

No. 1719. TIRU-P-PUKAL̤—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[1236]

Size, $18\frac{1}{2}$″×$1\frac{1}{8}$″. Pages, 128. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, New.

Note: Same as No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது.*

கணபதி துணை.

அபூர்த்தி.

Colophon:

சிரஞ்சீவி பாலசுந்தர முதலியார் வாசிக்கின்ற அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ். விசுவாவசுஷு கார்த்திகைமீ 21உ.

முருகன் துணை.

No. 1720. TIRU-P-PUKAḶ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[954]

Size, $19\frac{3}{8}'' \times 1\frac{1}{4}''$. Pages, 78. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1716 but with different songs.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. வேறு பாடல்கள் பெற்றுள்ளது. நூல் பூர்த்தியாயில்லை.*

அபூர்த்தி.

No. 1721. TIRU-P-PUKAḶ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[917]

Size, $11\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$. Pages, 26. Lines, 6 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: Same as the work in No. 1716 but the Mss. is very badly injured.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. ஏடுகள் மக்கியும், ஒடிந்தும், ஓரங்கள் சிதைந்தும், தொளைகள் வீழ்ந்தும் சிதிலமா யிருப்பதனால் படிக்க முடியாதபடி யிருக்கின்றன. சில பாடல்களே யுள்ளன. பிரதி முற்றுமில்லை.*

அபூர்த்தி.

No. 1722. TIRU-P-PUKAḶ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

] 445]

Size, $17\frac{3}{4}'' \times 1\frac{7}{8}''$. Pages, 180. Lines, 12 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: Same as in No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. முதலில் காப்பு, பாயிரம் ஒன்றுமில்லை. 'முத்தைத்தரு' என்னும் பாடலிலிருந்து ஆரம்பமாகிறது.*

அபூர்த்தி.

No. 1723. TIRU-P-PUKAḶ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[922]

Size, $16'' \times 1\frac{1}{4}''$. Pages, 168. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. முதற்கண் பாயிரச் செய்யுள்கள் உள்ளன.*

அபூர்த்தி.

Beginning:

தருப்புகழ் வல்ல அசுரேசர் நாயகர்சங்க ரர்க்குக்
குருப்புகழ் வல்ல குமரேசன் சண்முகன் குன்றெறிந்தோன்
மருப்புகழ் வல்ல பொழிலரு ணைபுரி மன்னன்வெற்பிற்
திருப்புகழ் வல்லவர் சீர்பாத தூளியென் சிந்தையுள்ளே.

மடங்க நடுங்குந் தனைச்சுடு மீதென்று மாதிரத்தோ
ரடங்கி நடுங்குவர் சூலா யுதமென் றசுரர்கட
லொடுங்கு நடுங்கு வேலா யுதமென் றுரகனுங்கீழ்
கிடங்கி னடுங்கு மயிலோன் றிருப்புகழ் கேட்டளவே.

* * * *

End :

மருக்கு லாவிய மல......... ....தே
வளர்த்த தாய்தமர் வசையது மொழியாதே
கருக்கு லாவிய அயலவர் ......பழியாதே
கடப்ப மாலையை வரவிட வருள்வேணுந்
தருக்கு லாவிய கொடியிடை ...மணவாளா
சமத்த னேமணி மரகத மயில்வீரா
திருக்கு ருவடி நிலைதனி...... லுறைவோனே
திருக்கை வேல்தனிலழகிய ....

Colophon :

பேறங்கியூர் கணக்கு சுப்பராய பிள்ளை வாசிக்கின்ற சுப்பிரமணியப் பிள்ளை 2-ஆவது புத்தகம். திருப்புகழ் இரண்டாவது பாடல் 176. இது அறியவும். ஆங்கீரசஹு ஐப்பசிமீ 2உ ....

No. 1724. TIRU-P-PUKAḶ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[929]

Size, $16\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 134. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : Same as No. 1716.

Incomplete.

குறிப்பு : இது, முன் எண் 1716 பிரதி போன்றது. பாயிரச் செய்யுளில் அச்சுப் பிரதிகளில் இல்லாதவை சில காணப்படுகின்றன. இதிலுள்ள ஏடுகள் 166 என்று முதல் எட்டின்மேல் குறிக்

கப்பட்டுள்ளது. ஆனால் இப்பிரதியில் 67 ஏடுகளே இருக்கின்றன. இப்பிரதியில் நூல் முற்றுமில்லை. பாடபேதங்களு முண்டு.

அபூர்த்தி.

Beginning :

எல்லாரு ஞானத் ....செவி
திருப்புகழ் படிக்கு .... பெருமானே
வேதம் வேண்டா ..... கேளீர் தினம்.

மாணிக்கம் பூண்பார்க்கு மற்றக்கலம் வேணுமோ
ஆணிப்பொன் பூண்பார்க் கருமையோ—......ணிக்க
செவ்வேல் விநோதன் திருப்புகழைக் கேட்டுரைப்பார்க்
கெவ்வேலை வேணு மினி.

சீராந் திருப்புகழை தேவர்கோன் கண்டுமெச்ச
வராய்ந் துரைத்தா னருணகிரி—நேராக
அந்தப் புகழை அனுதினமு மோதாதார்
எந்தப்புக ழோது மினி.

* * * *

Colophon :

அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ். இப்பாடல் 361.

முதல் திருப்புகழ் ஏடு	...	76
இரண்டாவது திருப்புகழ் ஏடு	...	88
காப்பு ஏடு	...	2
ஆக ஏடு	...	166

இந்தப்படிக்கு சுப்பராயப் பிள்ளை பொஸ்தகம்.

முத்திக்கு.

No. 1725. TIRU-P-PUKAL̤—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[919]

Size, $17\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 190. Lines, 7 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: Same as No. 1716.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1716 பிரதி போன்றது. பாயிரச் செய்யுட்களை முதலில் கொண்டுள்ளது. நூல் முற்றுமில்லை. ஏடுகள் உடைந்தும் துளை விழுந்தும் இருப்பதனால் படிக்கவியலாதபடி உள்ளன.

அபூர்த்தி.

No. 1726. TIRU-P-PUKAL̤—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[920]

Size, $14'' \times 1\frac{1}{2}''$. Pages, 84. Lines, 7 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: Same as No. 1716.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1716 பிரதி போன்றது. முதலிலுள்ள ஏடுகள் உடைந்தும் ஓரங்கள் சிதைந்து முள்ளன. எழுத்துக்கள் விளக்கமாயில்லை; நூலும் பூர்த்தியாயில்லை.

அபூர்த்தி.

No. 1727. TIRU-P-PUKAḺ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[923]

Size, $14\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 228. Lines, 6 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: Same as in No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. முதலில் 5 ஏடுகள் ஒடிந்துபோயுள்ளன. ஏடுகள் மக்கியும் துளைகள் மிகுதியாக விழுந்தும் இருத்தலால் அவற்றிலுள்ள எழுத்துக்கள் படிக்க முடியவில்லை. நூல் முற்றுமில்லை.*

அபூர்த்தி.

No. 1728. TIRU-P-PUKAḺ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[925]

Size, $7\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 130. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as in No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. ஆயினும் முதலில் விநாயகர் காப்புச் செய்யுள் ஒன்றும், பாயிரச் செய்யுள்களும் உள்ளன. இப்பிரதி முற்றுமில்லை.*

அபூர்த்தி.

Beginning:

ஸ்ரீராமஜெயம்

கருங்குழி புத்தகம்

அங்கன் வாசிக்கின்ற திருப்புகழ்

சுபமஸ்து

விக்கின வணக்கம்

முருகர் வணக்கம்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு—முருவாக்கு
மாதலால் வானோரு மானைமுகத் தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

எல்லாரு ஞானத் தெளிஞரே கேளீர்சொற்
கல்லெல்லா மாணிக்கக் கல்லாமோ—பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி.

No. 1729. TIRU-P-PUKAL—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[926]

Size, $18\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 86. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as in No. 1716.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1716 பிரதி போன்றது. ஆயினும் பாயிரச் செய்யுட்களைக் கொண்டுள்ளது. இப்பிரதியில் நூல் முற்றுமில்லை. பாடபேதங்களுண்டு.

அபூர்த்தி.

Beginning:

ஹரி ஓம் குரு வாழ்க குருவே துணை

வானவநல்லூர் புத்தகம்

எல்லாரு ஞானத் தெளிஞரே கேளீர்......
கல்லெல்லா மாணிக்கக் கல்லாமோ—பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி.

வேதம்வேண் டாஞ்சகல வித்தைவேண் டாங்கீத
நாதம்வேண் டாம்ஞானம் வேண்டாமே—யாதிக்
குருப்புகழை மேவுகின்ற கொற்றவன்ருள் போற்றுந்
திருப்புகழை யோதீர் தினம்.

தருப்புகழ் வல்ல சுரர்மகள் நாயகன் சங்கரர்க்குக்
குருப்புகழ் வல்ல குமரேசன் சண்முகன் குன்றெறிந்தோன்
மருப்புகழ் வல்ல திருவருணைபுரி மன்னர்வெற்பிற்
றிருப்புகழ் சொன்னவர் சீர்பாத தூளியென் சென்னியதே.

காப்பு முற்றும்.

* * * *

End :

இமகிரி மத்திற் புயங்க வெம்பணி
கயிறது சு......... ....
லிமையவர் பற்றிக் கடைந்த வன்றெழு... நஞ்சுபோலே
....
கமல மலர்க்கைச் சரந்து ரந்தவர்
மருக வெருக்குக் கரந்தையந் தொடைக்
கிறைய வருக்குக் குறை...... ....
....வுளரு தத்தணங்கு கந்தருள்
குமர குறத்திக் கிசைந்த குங்கும
கமன வனத்திற் கலந்தி ரங்கிய தம்பிரானே

* * * *

Colophon :

காப்புள்பட மொத்தம் பாடல் 155. 25-ஆவது ஏடு குறைவு பாடல் 2; நீக்கு இருப்பு பாடல் 103. வானவநல்லூர் புத்தகம்.

No. 1730. TIRU-P-PUKAḶ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[927]

Size, $16\frac{1}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 76. Lines, 6 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: Same as No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. முதலில் சில ஏடுகளில்லை. நூல் முற்றுமில்லை. ஏடுகள் மிகவும் சிதிலம். பாடபேதங்களுமுண்டு.*

அபூர்த்தி.

No. 1731. TIRU-P-PŪKAḶ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[928]

Size, $15\frac{1}{2}'' \times 1''$. Pages, 93. Lines, 5 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: Same as No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. முதற்கண் பாயிரச் செய்யுள்களுள்ளன. பாடலின் எண்களும் முறைபிறழ்ந்தும், ஏடுகள் மிகச் சிதிலமாகவும் உள்ளன. பாடபேதங்களுண்டு. நூல் பூர்த்தியாயில்லை.*

அபூர்த்தி.

Colophon:

> வெல்லும் ....வே வெகுளியை
> செல்லும் பொழுது செலுத்துவேன் சிந்தையை
> அல்லும் பகலு மறிவுட னிறைஞ்சிஞற்
> கல்லும் பிளந்து கடுவெளி யாகுமே.
> விசியரங்கன் படிக்கின்ற திருப்புகழ் புஸ்தகம்.

தெரிந்த பெரியோர்கள் பார்த்துப் பிழை திருத்துவாராகவும்.

தேவி சகாயம்.

No. 1732. TIRU-P-PUKAḶ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[931]

Size, 15″×1¼″. Pages, 242. Lines, 6 on a page. Condition, Very much injured. Appearance, Very old.

Note: Same as in No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. முதற்கண் பாயிரம் உள்ளது. எல்லா ஏடுகளும் ஓரங்கள் முறிந்தும், இடை ஒடிந்தும் கிடக்கின்றன. மிகவும் சிதிலம். நூல் முற்றுமில்லை. பாடபேதங்கள் மிகுந்துள்ளன. பிழைகளும் மலிந்துள்ளன.*

அபூர்த்தி.

Colophon:

சர்வதாரி௵ ஆனி......... ....மி திதி புனர்பூச நக்ஷத்திரம் அஷ்டநாம யோகம் இந்தச் சுபதினத்தின் .... மன்னப் பிள்ளை குமாரன் சுப்பராயன் படிக்கின்ற திருப்புகழ்..................

ஒருநான்கு மீரரையு மொன்றே கேளாய்
முண்மையா ஐயரையு ....
யிருநான்கு மூன்றுமொரு ஒன்றே சொல்லா
யிம்மொழியைக் கேட்டதி ....
.... மருநான்கும் பெறுவாய் பெண்ணே
பின்னையொரு மொழியுரைக்க வேண்டா......
....சாலே
சயிக்கமுடி யாதெனக்குச் சாற்றுய்மானே.

ஆறுமுகக் குருவே துணை.

காம்புல்லூர் கணக்கு மன்ன பிள்ளை குமாரன் சுப்புராய ....மிப் பிள்ளை படிக்கின்ற திருப்புகழ்.

No. 1733. TIRU-P-PUKAḺ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[933]

Size, $17\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 290. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as in No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் 1716 சுவடிப் பிரதியைப் போன்றது ஆயினும் முதற் கண் ஒரு ஏடும் இடையில் முப்பது ஏடுகளும் இல்லை; ஏடுகள் முதலிலும் இறுதியிலும் முறிந்திருக்கின்றன. இப்பிரதி பூர்த்தியா யில்லை. பாடபேதங்கள் மலிந்துள்ளன.*

அபூர்த்தி.

No. 1734. TIRU-P-PUKAḺ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[934]

Size, $19\frac{1}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 126. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as in No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் 1716 சுவடிப் பிரதியைப் போன்றதாயினும் பாடல் முறைகள் மாறியுள்ளன. நூல் முற்றுமில்லை. முதற் கண் உள்ள ஏடும் இடையில் உள்ள ஏடுகளும் இல்லை. பாடல் அட்டவணை ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. முதல் முகப்பேட்டின் கண், "இவை கூடலூரைச் சேர்ந்த சாணார்பாளையத்திலிருக்கும் பச்சையப்ப கிராமணி வாசிக்கின்ற திருப்புகழ் புதுவை புத்தகம்" என்று எழுதப்பட்டுள்ளது.*

அடுத்த வேடொன்றில் "சாரதாம்பாள் சகாயம் உண்டாவதாகவும்" என்றும், "கடுக்கப்பட்டு சேரிதம்பிரான் குமாரன் பாவாடை வாசிக்கின்ற திருப்புகழ்; எடுத்தவர்கள் கொடுத்துவிட வேண்டியது" என்றும் எழுதப்பட்டுள்ளன. பாடபேதமும் மலிந்துள்ளது. பின்வரும் பாடல்கள் தொடக்கத்தில் உள்ளன.

அபூர்த்தி.

Beginning :

திருப்புகழ் படிக்குமவர் சிந்தை யருளாலே
யொருத்தரை நினைப்பதிலை யுந்தனடி நாயேன்
பொருப்புகழ் மிகப் பெருகு............யில் மீதே
தரித்துயர் திருத்தணியினின்ற பெருமாளே.

* * * *

End :

வேதம் வேண்டாஞ் சகல வித்தை வேண்டாங்கீத
நாதம் வேண்டாம் ஞானம் வேண்டாம்...........
குருப்புகழை மேவுகின்ற கொற்றவன்ருள் போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்.

No. 1735. TIRU-P-PUKAḶ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[935]

Size, $15\frac{3}{4}'' \times 1\frac{3}{8}''$. Page, 248. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as in No. 1716.

Incomplete.

குறிப்பு: இது, முன் எண் 1716 பிரதி போன்றது. முதலிற் பாயிரச் செய்யுட்களுள்ளன. நூல் முற்றும் இல்லை. பாடபேதங்களுண்டு.

அபூர்த்தி.

No 1736. TIRU-P-PUKAL—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[936]

Size, $13\frac{3}{4}'' \times 1''$. Pages, 200. Lines, 6 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: Same as No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. இதன் கண் முதலில் ஓர் ஏடு இல்லை. எல்லா ஏடுகளும் உடைந்தும் மக்கியும் துளைகள் விழுந்து முள்ளன; மிகவும் சிதிலம். நூல் முற்றும் இல்லை.*

அபூர்த்தி.

No. 1737. TIRU-P-PUKAL—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[937]

Size, $18\frac{5}{8}'' \times 1''$. Pages, 92. Lines, 5 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: Same as in No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. ஆயினும் முதற்கண் பாயிரச் செய்யுட்களைக் கொண்டுள்ளது. இப்பிரதியில் நூல் முற்று மில்லை. ஏடுகள் சில இல்லை. எல்லா வேடுகளும் மிகவும் சிதைந்தும் மக்கியும் செல்லரிக்கப்பட்டும் தொளைக்கப் பட்டும் உள்ளன. மிகவும் சிதிலம். முதற் செய்யுள் 2 ஏடுகளிலும் எழுதப்பட்டுள்ளது.*

அபூர்த்தி.

No. 1738. TIRU-P-PUKAḶ—[SELECTIONS]

திருப்புகழ்—[திரட்டு]

[834]

Size, 17½″×1″. Page, 28. Lines, 5 on a page. Condition, Very much injured. Appearance, Old.

Note: This Mss. contains a few songs selected from Tiruppukaḷ.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. இதில் 14 ஏடுகளே யுள்ளன. நூல் முதலும் இறுதியும் இல்லை. ஏடுகள் ஒடிந்தும் படிக்க முடியாதபடி விழுந்தும் இருக்கின்றன. நூல் முற்றுமில்லை; சில பாடல்களே யுள்ளன.*

அபூர்த்தி.

No. 1739. TIRU-P-PUKAḶ—[TEXT]

திருப்புகழ்—[மூலம்]

[913]

Size, 18″×1″. Pages, 48. Lines, 6 on a page. Condition, Very injured. Appearance, New.

Note: Same as No. 1716.

Incomplete.

குறிப்பு: *இது, முன் எண் 1716 பிரதி போன்றது. முதலேடு உடைந்தும், உடைந்த பாகம் இல்லாமலும் இருக்கின்றது.*

அபூர்த்தி.

No. 1740. TIRU-P-PUKAḶ-[PĀṬALKAḶ]—[TEXT]

திருப்புகழ் [பாடல்கள்]—[மூலம்]

[789]

Size, $9\frac{1}{2}'' \times 1''$. Pages, 14. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This Mss. consists of 4 songs from Tiruppukaḷ.

Incomplete.

குறிப்பு: *இதில் 4 திருப்புகழ்ப் பாடல்களே யுள்ளன.*

அபூர்த்தி.

No. 1741. TIRU-P-PUKAḶ-PAÑCARATTIṈAM [TEXT]

திருப்புகழ் பஞ்சரத்தினம்—[மூலம்]

[887]

Size, $8\frac{7}{8}'' \times 1\frac{1}{4}''$. Pages, 16. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a selection of five songs from the full work (Tiru-p-pukaḷ).

Complete.

குறிப்பு: *இது, ஐந்து திருப்புகழ்பாடலைத் தனியாககொண்டது.*

பூர்த்தி.

No. 1742. PAÑCARATTIṈA-T-TIRU-P-PUKAḺ

[TEXT]

பஞ்சரத்தினத் திருப்புகழ்—[மூலம்]

[1237]

Size, $12\frac{7}{8}'' \times 1''$. Pages, 21. Lines, 4 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: Same as No. 1741.

Complete.

குறிப்பு: *இது, முன் எண் 1741 பிரதி போன்றது. நூல் பூர்த்தியா யுள்ளதெனினும், முதல் ஏடு ஒடிந்துள்ளது.*

பூர்த்தி.

No. 1743. TIRU-P-PUKAḺ-CEYUḶ-AKARĀTI

திருப்புகழ் செய்யுள் அகராதி

[970]

Size, $1\frac{1}{8}'' \times 13\frac{3}{4}''$. Pages, 28. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old. ...

Note: This is an index of the contents of Tir

Complete.

குறிப்பு: *இது, அருணகிரிநாதர் திருப்புகழ்ச் செய்யுளின் முதற்குறிப்பகராதியை வரிசைப்படுத்திக் கூறுவது. எழுதியவர் பெயர் முதலிய விவரம் அறியக்கூடவில்லை. இப்பிரதி முற்று முள்ளது. (இது செங்கல்பட்டு புத்தகம் என்று முதல் ஏட்டில் காணப்படுகிறது).*

பூர்த்தி.

Beginning :

இல்லை.

அகர முதலெனவிளம்	...	17
அகலர நறுஞ்சேறு	...	116
அகல நீளம் யாதாலு	...	91
அங்கை மென்குழலாய்	...	80
அங்கை நீட்டி யழைத்து	...	183
அஞ்சுவித பூதமுங்	...	49

* * * *

End :

வரி சேர்ந்திடுசேல்	...	17
வாசித்த நூல் மதங்கள்	...	25
வாதந்தலைவலி	...	25
வாரியிலே யெழுதிங்க	...	7
ஆக இல்லாத பாடல்	...	51

Colophon :

இந்தச் செங்கல்பட்டு திருப்புகழ் புத்தகத்தில் மொத்தம் ஏடு 212 ; காப்புப் பாடல் 3 சேர்ந்து மொத்தம் பாடல் 490. 3-ஆவது ஏடுமுதல் 22-ஆவது ஏடுவரைக்கும் 20 ஏடு இல்லாததனால் அதிற் போய்விட்ட பாடல் 51 ; இரட்டிப்பில் கழிந்த பாடல் 2 ; ஆகக் கழிவு பாடல் 53 போக நீக்கு இருக்கும் அசல் பாடல் 437.

திருச்சிற்றம்பலம்.

Note : Thi ———

'Tiru-p-pukal).

No. 1744. TIRU-P-PUKAḶ-AKARĀTI [PIRATIKAḶ-NĀṈKU]

திருப்புகழ் அகராதி [பிரதிகள் நான்கு]

[971]

Size, $19\frac{1}{4}'' \times 1\frac{1}{8}''$. Pages, 40. Lines, 7 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note : Same as No. 1743 in four parts.

Complete.

குறிப்பு : *இது, முன் எண் 1743 பிரதி போன்றது. ஆயின், இதில் நான்கு பிரதிகளிருக்கின்றன. முதல் பிரதி 1 முதல் 10-ஆம் பக்கம் வரையிலும், இரண்டாம் பிரதி 11 முதல் 17-ஆம் பக்கம் வரையிலும், மூன்றும் பிரதி 18 முதல் 24-ஆம் பக்கம் வரையிலும், நான்காம் பிரதி 25 முதல் 40-ஆம் பக்கம்வரையிலு முள்ளன. எல்லாப் பிரதிகளும பூர்த்தியா யுள்ளன. ஏடுகள் சிதிலம். நான்காம் பிரதியின் முதலில் 9 ஏடுகள் இல்லை. ஏனையவை ஓரத்தில் ஒடிந்துள்ளன.*

பூர்த்தி.

Beginning :

முதல் பிரதி

அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ் செய்யுள் அகராதி. (இது) கருங்குழி பாலையர் மடம் ஆறுமுக உபாத்தியாயரால் எழுதப்பட்டது. பாடல்கள் :

அகாமுதலெனவிளம்	...	*40*
அங்கதன் கண்டகன்	...	*88*
அஞ்சன வாள்விழி யிட்ட	...	*92*
அடைபடாது நாடோறு	...	*70*
அதல விதல முதலம்	...	*23*
அத்தைக் கத்தைக் கொப்பி	...	*42*
அந்தகன் வருந்தின	...	*7*

....

* * * *

End :

....

வீணையிசை கோட்டியால	...	*99*
வெஞ்சரோருகமோ கடுநெஞ்ச	...	*74*
வெற்றிசெய வுற்றகழை	...	*125*
வேதம் வேண்டாஞ் சகல (காப்பு)	...	*1*
வேலைப்போல் விழியிட்டு மிரட்டி	...	*124*

Colophon :

இதுவரையில் திருப்புகழ் அகராதி முடிவுபெற்றது. பார்த்திப௵ வைகாசிமீ 9௳ எழுதி நிறைவேறியது. ஆறுமுக உபாத்தியாயர் கையெழுத்து. காப்பு உள்பட ஆக மொத்தம் செய்யுள் 324-க்கு 16 ஏடு போய்விட்டதால், கழிந்த பாடல் 49; இரட்டிப்பினால் கழிந்த பாடல் 12; ஆக பாடல் 60 போக நீக்கு அசல் இருப்புப்பாடல் 260. வரிகளின் தலைப்பில் சுன்னம் வைத்திருப்பது. பாடல் இரட்டிப்பென் றறியவும்.

வேலுமயிலுந் துணை.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவதி பிரதி

Beginning :

......யொடு பற்கழன்று தோல்வற்றி	...	267
......ங்க ரோமங்காட்டிவரேந்து	...	196
......த்தேடித் தொழுவார் திரிவார் பானு னைத்தா.........	...	209
நாதவிந்துக லாதி நமோநம வேத	...	32
நாரியர்க ளாசை கருதாதே நானுன்	...	90
நாலிரண் டிதழாலே கோலிய ஞால	...	152
நாலு சதுரொத்த பஞ்சறை மூலகமல	...	155

* * * *

End :

....

வேதம் வேண்டாம் சகல	...	1
வேலைப்போல் விழியிட்டு	...	13

Colophon :

இதுவரையில் முடிவு பெற்றது. ஆக காப்பு உள்பட செய்யுள் 173. இந்த வெளியநூர் திருப்புகழ் புத்தகத்தில் மொத்தம் ஏடு

142. காப்புப் பாடல் சேர்ந்து மொத்தம் பாடல் 320-க்கு 107-வது ஏடு முதல் 122-வது ஏடு வரையில் 16 ஏடு இல்லாததனால் 211-ஆவது பாடல் முதல் 259-ஆவது பாடல் வரையில் போய் விட்ட பாடல் 49; இரட்டிப்பினால் கழிந்த பாடல் 12; ஆகக் கழிவு பாடல் 61 போக நீக்கு இருக்கும் அசல் பாடல் 259.

திருச்சிற்றம்பலம்.

வேலும் மயிலுந் துணை.

மூன்றும் பிரதி

Beginning :

(வானவநல்லூர்)

சிவமயம்

அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ் செய்யுள் அகராதி.

கருங்குழி பாலை ....மடம் ஆறுமுக உபாத்தியாயரால் ஏற்படுத்தியது. பக்கம், பாடல் :

அகரமுதலெனா விளம்	...	22
அடைபடாது நடோறு	...	22
அதலசேட னாராட	...	23
அத்தைக் கத்தைக் கொப்பி	...	10
அந்தகன் வருந்தினம்பிற	...	15

* * * *

End :

வெருட்டி யாட்கொளும்	...	9
வேதம் வேண்டாஞ் சகல (காப்பு)	...	1
வேலைப்போல் விழியிட்டு	...	4
ஆகச் செய்யுள்	...	103

Colophon :

பார்த்திபஹு வைகாசிமீ ...உ எழுதி நிறைவேறியது.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

வேலும் மயிலுந் துணை.

நான்காம் பிரதி

Beginning :

......ட்டுலாவு கண்கள் மாதர்க்கு ... ...
......விய வோதிமமான ......ரநடை ... 80
......சிறக்கு மேனி பசேல் பசேலென ... 91
......ல முளதாயர் தந்தை மாதுமனே ... 84
......றல சடன்வினை கா .....முறமை ... 42
......சுட்டது போலாசை விட்டுல காசார ... 225

* * * *

End :

தலையில்லை. பாடலின் முடிவு: தஞ்சை மாநகர ராசகோபுரத் தமர்ந்த பெருமாளே. 292

தலையில்லை. பாடலின் நடுவு: மனமகிழ் குமார வெனவுன திருநாண் மலரடி தொழுமா..................

தலையில்லை. பாடலின் நடுவு: கொளகொளென வளவிபுழு நெளுநெளென விகரகு ....கடக முடனமர் பொருது கயிலை மலை தனின்மருவு பெருமாளே. 305

No. 1745. TIRU-P-PUKAḶ-AKARĀTI

திருப்புகழகராதி

[972]

Size, $11\frac{1}{2}'' \times 1''$. Pages, 24. Lines, 8 on a page. Condition, Very injured. Appearance, Old.

Note: Same as No. 1743 with slight differences.

Complete.

குறிப்பு: இது, முன் எண் *1743* பிரதி போன்றது. இந்தப் பிரதியில் நூல் முற்று முள்ளது. ஏடுகள் ஓரங்களில் ஒடிந்துள்ளதனால் எழுத்துக்கள் மறைந்துவிட்டன. இறுதி ஏடுகள் *2* பிற்பகுதி பூராவும் ஒடிந்துள்ளன.

பூர்த்தி.

Beginning:

......ணகிரிநாதர் செய்த .... ப்புகழ் செய்யுள் அகராதி

......இதில் காப்பு உள்பட ...த்தம் பாடல் ... *343*

......ச்சிற்றம்பலம் (இது சொந்தப் புத்தகம்)

அகரமுதலென விளம் ... *128*

அங்கதன் கண்டகன் ... *162*

அங்கைமென் குழலாய்பண் ... *226*

அஞ்சனவேல் வாள்விழியிட்டமை ... *186*

அஞ்சனவேல் மடமாதர் ... *111*

* * * *

End:

ஆக காப்பு உள்ளபட மொத்தம் பாடல் ... ...

இரட்டிப்பில் கழிவு பாடல் ... *1*

தலைப்பெழுத்தில்லாத பாடல் ... *2*

பாடலென்றறியவும்.

திரு............

.... மயிலுந் துணை.

No. 1746. [PAḺANI]-AṬAIKKALA-P-PATTU

[TEXT]

[பழநி] அடைக்கலப் பத்து—[மூலம்]

[68-E]

Size, 16½″×1″. Pages, 4. Lines, 7 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Pāttu denotes 10 stanzas but this Mss. has 15 stanzas. This work is an expression of a devotee's surrender to the service of Lord Muruka at Paḷani. The author's name is not known. The leaves in the Mss. are broken.

Complete.

குறிப்பு: இது, பழநித் தலத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான் விஷயமாகவுள்ளது. இதன் ஆசிரியர் யார் என்பது விளங்கவில்லை. இந்தப் பிரதியில் பதினைந்து பாடல்கள் உள்ளன. ஏடுகள் ஒடிந்துள்ளமையால் சில பாடல்கள் படிக்கக்கூட வில்லை.

பூர்த்தி.

Beginning:

சீரும் பழனி சிவமும் பழனி செழித்தபுகழ்
ஊரும் பழனி யுலகும் பழனி வுதவுமிந்திர
தாரும் பழனி சகல தெரிசன சண்முகமும்
ஆரும் பழனி யருள்தேசி காவுன் னடைக்கலமே. 1

* * * *

End:

இடைந்தோ மெனவந்த வானவர்க் காக யெறிதிரைநீர்
கடைந்தே விடமுண்ட கண்டத்தர் போலிந்தக் காசினிக்குள்
உடைந்தே னெனவந்த தொண்டனைக் காப்ப துனதுகடன்
அடைந்தேன் பழனி யருள்தேசி காவுன் னடைக்கலமே. 103

No. 1747. PAḶANI-ĀṆṬAVAR-PATIKAM

பழநி ஆண்டவர் பதிகம்

[871-A]

Size, $6\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 8. Lines, 12 on a page. Condition, Much injured. Appearance, Very old.

Note: This is a work in 10 stanzas on Lord Muruka at Paḻani Hills. The Mss. is so damaged that it is very difficult to decipher it. Name of the author etc. are not known.

Complete.

குறிப்பு: *இது, பழநியாண்டவர் விஷயமானது. இந்தப் பிரதி மிகவும் சிதலமாயிருப்பதால் அறிவது சிரமமாக வுள்ளது. பத்து செய்யுட்கள் உள்ளன.*

பூர்த்தி

Beginning:

பூதலத் தேவர்களு மோதருங் கலியினிற்
புதுமையீ தென்று
பொய்யின்றி யவரவர்கள் கைகண்ட தெய்வமாய்ப்
புன்கணறவின்ப மருள்வாய்
மாதவர்க ளுமருக போதனுக் கருள்குரவ வாரணு
சிப்பதியில் வாழ்
மாதேவ ரருள்செயு... முகமுலை மைந்தனே ....
....

No. 1748. PAḶANI-IRATTAI-MAṆI-MĀLAI

பழநி இரட்டைமணி மாலை

[554-Z (2)]

Size, $7\frac{1}{2}'' \times 1''$. Pages, 4. Lines, 10 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is a work on the God at Paḻani in 20 stanzas. Its author's name is not known.

Complete.

குறிப்பு: *இது, பழநி முருகப்பெருமான் சம்பந்தமானது. அச்சிடப்பெற்றிலது. ஆசிரியர் பெயரும் அறியக்கூடவில்லை. இந்தப் பிரதி பூர்த்தியாக வுள்ளது,*

பூர்த்தி.

Beginning :

ஞான விரகறியா நானுஞ் சிலதமிழால்
வானவரேத் தும்பழனி வந்தானைத்—தானவரை
வென்றானை வாழ்த்த விரைப்பா திரிவளஞ்சேர்
கன்றானை மாமுகத்தான் காப்பு.

பூமாது கேள்வன் புகழ்மருகோன் பொய்யாத
பாமாது வாழ்த்தும் பழனியர்—நாமத்
தனிவேலை யுந்தோகை தன்னையுமே பாட
லினிவேலை கண்டீ ரெமக்கு. 1

* * * *

End :

நல்லார்முன் னெங்கன முய்யவல் லேஃபழ நான்மறையும்
வல்லாய் பழநி மலைவள்ள லேயிரு மங்கையர்க்குஞ்
சல்லாப லீலைத் தலைவாவென் ஞேயைத் தணிக்கும்வண்ணம்
பொல்லா வினைவர்ச்சி யென்றர்ச்சி யேனொரு பூவெடுத்தே.

No. 1749. PAḶANIMALAI-K-KANTACĀMI-PĒRIL-KALITTUṞAI MĀLAI—[TEXT]

பழநிமலைக் கந்தசாமி பேரில் கலித்துறை மாலை—[மூலம்]

[746]

Size, 11½″×1″. Pages, 30. Lines, 4 on a page. Condition, Fair. Appearance, New.

Note: This is another work on Lord Muruka at Paḷani. Name of the author and other particulars are not available.

Complete.

குறிப்பு: இது, பழனிமலைக் கந்தசாமி பேரில் இயற்றியது. முப்பது செய்யுட்களும் பூர்த்தியாயுள்ளன. ஆசிரியர் பெயர் முதலியன அறியக்கூடவில்லை.

பூர்த்தி.

Beginning :

காப்பு

சலசத் திணைகிரா மானனைக் கோடி தன்னுதரக்
கலசத் திணையெடுத் தாள்கரனே முருகக் கடவுள்
குல......க் காப்புயங் கட்கணி மாலையைக் கூறுதற்குப்
பலசக் கரச்சொற்க ளெனவாக் கணுகக்கண் பார்த்தருளே.

* * * *

End :

அப்பணி வேணியன் றன்சுத னேநின் னடியிணைமேல்
முப்பது பாவெ னலங்கலன் பாக மொழிகின்றதைச்
செப்பிய பேருடன் கேட்கின்ற பேர்க்குஞ் சிறப்பருள்வாய்
மைப்புயல் மேவும் பொழில்சூழ் பழனிமலைக் கந்தனே. 30

No. 1750. [PAL̤ANI]-MURUKAṈ-MĀTA-P-PATIKAM—[TEXT]

[பழநி] முருகன் மாதப் பதிகம்—[மூலம்]

[233-A (4)]

Size, $15\frac{1}{4}'' \times \frac{3}{4}''$. Pages, 7. Lines, 5 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This work contains 13 stanzas—one introductory invocation song and 12 for twelve months in a year.

Complete.

குறிப்பு: இது, பழநி முருகப்பிரான் சம்பந்தமானது. அச்சிடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியா யுள்ளது.

பூர்த்தி.

Beginning :

சீர்தரு பழனிவெற்பிற் செங்கையில் வடிவே லேந்தும்
பார்புகழ் முருகன்மீதிற் பன்னிரு மாதஞ் சொல்லத்
தார்குழல் வள்ளியம்மை சரசுவதி பாதம் போற்றி
கார்குழ லுமையாளீன்ற கணபதி காப்புத் தானே.

நூல்

அத்தன் குமாரன் முருகேசன் பாதம் அனுதினமும்
நித்திரை தன்னிலும் யான்மற வேனெடு மால்மருகர்
உத்தரஞ் சொல்ல மயிலேறி யேயுர் வேலெடுத்து
சித்திரை மாதம் வருவார் பழநிநற் றேசிகனே 1

* * * *

End :

பன்னிரு மாதமு முன்னிரு தாளைப் பணிபவர்க்குச்
சொன்ன வரங்கள் மிகத்தரு வாய்தோகை மாமயில்மேல்
வன்னக் கிளிமொழி தெய்வானை மால்குற வள்ளியுடன்
பன்னிரு மாதம் வருவீர் பழனிப் பதிக்கந்தனே. 13

No. 1751. [PALAṆI]-MURUKAN-VĀRA-P-PATIKAM—[TEXT]

[பழநி] முருகன் வாரப் பதிகம்—[மூலம்]

[738-F]

Size, 12½″×1″. Pages, 4. Lines, 4 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This work contains songs invocating Lord Muruka at Palaṇi to bless the devotee on the 7 days in a week—one stanza for a day.

Complete.

குறிப்பு : *இது, ஏழு நாட்களிலும் முருகன் வரவேண்டுமென ஏழு செய்யுட்களால் கூறுவது. அச்சிடப்பெற்றுள்ளது. இப்பிரதி முழுதுமுள்ளது; பாடபேதங்களு முள்ளன.*

பூர்த்தி.

Beginning :

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற் றிற்பிறந்த
தொல்லைபோம் நெஞ்சில் துயரம்போம்—நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்தில் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக் கால்.

வாதித்த சூரனை வடிவே லெடுத்து வளைந்துகொண்டு
சாதித்து வென்ற தயாபரனே அடியேன் சஞ்சலத்தை
சோதித்துப் பார்த்துத் துயரத்தைத் தீர்த்துநற் றேகையுடன்
ஆதித்த வாரம் வருவாய் பழனியில் அறுமுகனே. 1

* * * *

End :

கனிவாயி மலாரெண்டுங் கந்தஞ் சிவனென் றுங் கருதரிய
அனியாய மாகவி சேஷஞ்செய் தாலத ஞல்குறைவே
பனியா னதைவந்து கதிரோனைக் கண்டார் வினைபோல்
சனிவாரந் தன்னில் வருவாய் பழனியிற் சண்முகனே.

No. 1752. [PAḶANI]-MURUKAN-VEṆṆĪṞṞU-P-PATIKAM—[TEXT]

[பழநி] முருகன் வெண்ணீற்றுப் பதிகம்—[மூலம்]

[811-A (1)]

Size, $10\frac{1}{2}'' \times 1\frac{1}{4}''$. Pages, 6. Lines, 9 on a page. Condition, Much Injured. Appearance, Very old.

Note :

Incomplete.

குறிப்பு : *இது, பழநிமலை முருகர் சம்பந்தமானது. இந்தப் பிரதியில் 10 பாடல்கள் உள்ளவெனினும் முதல் ஏடும், இறுதி ஏடும் ஒடிந்துள்ளமையால் அவைகளை படித்தற்கியலவில்லை. மற்ற விவரங்களும் அறியக்கூடவில்லை.*

பூர்த்தி.

Beginning :

மாருத குளிர்சுரம் மீளாத குன்மநோய்
வயிறுவலி தலைவி யாதி
மண்டைதனி லமர்தலால் அதிர்சன்னி சூலைநோவு
வகையறுத் திடும்வெண் ணீறு
தேருத முயலகன் உள்வலி பிரத்திவலி
தெரியாத நெஞ்ச டைப்பு
சிதறியே கட்டுவிப் பிரிதியுள் மூலமுஞ்
சிதறிட அடித்த நீறு
கூருத கல்கோவை ஈளைபரு வரைகள்பல்
குத்து வெள்ளை குட்டம்
குமரகண் டம்வலி யன்துடை வாழைஅரை
யாப்புகுலை குலைத்திட்ட நீறு
ஆருத முலைநோவு சகலபிணி யாவையும்
அடித்துத் துரத்து நீறு
அமரர்புகழ் பழநிமலை யதனிலுறை முருகர்குகர்
அறுமுகவர் திருவெண் ணீறே. 5

* * * *

End :

பாகாரு மொழிமாதர் வலையில்வரு குலைநோய்
பகரரிய சீய்ப் பிரமியம்
பலகாலு மகலாத உதிரப் பிரமியம்
பட்டிட அடித்த நீறு
போகாத கொடுகூலை யரையாப்பு நிருப்பைபூ
விளைத்திடுங் கிரந்தி போல
போதபிணி களும் கெட்டிடும் கிரந்தியும்
பொடிபொடி அடித்த நீறு
நோகாம லென்பினை யுருக்கிடு வியாதியும்
நோய்வகை சூலை யாவும்
நொய்ய பாய்தனிற் கிடத்திடு வியாதியும்
நொறுக்கிட அடித்த நீறு
ஆகாதி வினைகுறுக அரோகங்க ளானவையு
மடித்துத் துறத்து நீறு
அமரர்கள் புகழ்பழனி யதனிலுறை முருகர்குகர்
அறுமுகர் திருவெண் ணீறே. 10

No. 1753. [PAḶANI]-MURUKAN-VEṆṆĪṞṞU-P-PATIKAM—[TEXT]

[பழநி] முருகன் வெண்ணீற்றுப் பதிகம்—[மூலம்]

[754-C]

Size, 14¼″ × 1″. Pages, 6. Lines, 7 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This is a different work in 10 stanzas on the greatness of Paḷani Vipūti (Sacred Ash). The work is printed.

Complete.

குறிப்பு: *இது, பழநி முருகன் திருவெண்ணீற்றுப் பெருமையைக் கூறுவது. அச்சிடப் பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் நூல் பூர்த்தியாயுள்ளது.*

பூர்த்தி.

Beginning:

கொண்டகொண் டிட்டவெகு சொரூபங் களுக்கழகு
கொடுக்கச் சமைந்த நீறு
கொடியவெண் ணாயிரஞ் சமணரைக் கழுவினிற்
கொலைசெய்து கண்ட நீறு
துண்டகண் டப்படக் கொடூரவெகு சூரனுடல்
துணிக்கவேல் தொட்ட நீறு
சொல்லரிய பூதப் பிசாசு பில்லிச்சூனியஞ்
சுடரிட்டெரித்த நீறு
சென்றுபோற் கயிலைமலை யெடுத்தவன் கூன்முதுகு
செவ்வையாய் நிமிர்ந்த நீறு
சிவபக்தி யில்லாத முழுமூடர் நெஞ்சந்
திடுக்கிடக் கொடுத்த நீறு
அண்டரவ கண்டமுதல் வணங்கிடத் துதித்திட
ஆண்மையாய் வந்த நீறு
அடியவர்க் கருங்கிருபை பொழிபழநி யங்கிரி
அறுமுகவர் திருவெண் ணீறே. 1

* * * *

End :

பத்தான கவிதையும் மனதிற் றுதிப்போர்க்குப்
பாக்கியந் தந்த நீறு
பரிவாக எந்நாளுஞ் சரவண பவாவென்னப்
பரிசுபெற வைக்கும் நீறு
கத்தூரி குங்குமங் கமழுவள்ளி நாயகன்
காங்கேயன் தந்த நீறு
கார்த்திகை நாள்தோன்றி வெற்றிவே லாயுதன்
கடம்பனூர் தந்த நீறு
முத்துநவ ரத்தினத் தண்டையணி யாதநன்
முடிமேற் றரித்த நீறு
முநீழுல மயிலேறி வந்துமுன் னின்றுமே
முன்கையிற் றந்த நீறு
அத்தனூர் பங்கினிற் சத்துருசங் காரியாய்
அபிராமி வல்லிதந்த நீறு
அடியவர்க் கருள்கிருபை பொழிபழனி யங்கிரி
அறுமுகவர் திருவெண்ணீறே.

No. 1754. PAḶANIYIṈ-MĀLAI

பழநியின் மாலை

[68-F]

Size, 16½″×1″. Pages, 12. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note : This is a work in 30 stanzas on Lord Muruka at Paḷani (Mathurai Dt.). The author's name is not known.

Complete.

குறிப்பு : இது பழநி என்னும் தலத்திலுள்ள முருகக் கடவுள் விஷயமானது. நூலாசிரியர் வாக்கு நயமாக இல்லை. பிழைகள் மிகவும் காணப்படுகின்றன.

பூர்த்தி.

Beginning :

சயிலாதி தலத்திலு மன்பர் தனதுளமும்
பயிலாதி யான பழநிய மாலை பகரமுந்நீர்
துயிலாதி யாரணன் போற்றுஞ் சுடரொளியும்
கயிலாதி கையிலக் கனியேந்து மைங்கரன் காப்பென்றுமே.

மிடியார்க்கு மேதவிர்ப் பான்தேவர் கோன்சிறை மீட்டுவிட்ட
படியார்க்கு மீயும் பராசத்தி பாலன் பரங்கிரி யிலக
குடியார்க்கு மெங்கள் குலதெய்வம் யார்க்குமுன் கூறுமுண்மை
அடியார்க் கெளிய பெருமாள் பழநிக் கதிபதியே. 1

* * * *

End :

மாமா லெனுபய ஞபத்துக் காத்தவன் மைந்தனிசை
கோமான் தமிழக கொற்கையார் காவலன்மீனக் கூறுஞ்
[சொலப்
பாமாலைக் கந்தன் பழநியின்மாலை படிப்பவர் தம்
தாமார்ந்த கன்வாழ் வெய்துவீரிது காணுண்மையே. 30

No. 1755. PAḶANIYIṈ-MĀLAI

பழநியின் மாலை

[161-M]

Size, $16\frac{1}{4}'' \times 1\frac{1}{4}''$. Pages, 8. Lines, 6 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: Same as No. 1754.

Complete.

குறிப்பு : *இது, முன் எண் 1754 பிரதி போன்றது.*

பூர்த்தி.

No. 1756. PAḶANI-VĒLAVAR-TŌTTIRAM

[TEXT]

பழநிவேலவர் தோத்திரம்—[மூலம்]

233 A (2)
[~~253-A~~ (2)]

Size, $15\frac{3}{8}'' \times \frac{7}{8}''$. Pages, 10. Lines, 5 on a page. Condition, Injured. Appearance, Old.

Note: This is another prayer to Lord Muruka at Paḻani. Other particulars are not known.

Complete.

குறிப்பு: இது, பழனியிலுள்ள முருகர்மேல் பாடப்பெற்ற பிறிதொரு தோத்திரம். பாடியவர் பெயர் தெரியவில்லை. இப் பிரதி பூர்த்தியாயுள்ளது. எழுத்துப் பிழைகள் பல,

பூர்த்தி.

Beginning:

மகர மமரிடை புரள வுரககணவணை மௌலியும்
மதியுமிரவியு மலையவே வளரொளியு மிருளகல
யிமையவர்க...யாகலமகிழவும் பெறு
இரு சிறைய வான
சிகர வளர மணமரு மறுகுதொளிருள மகணீர்
செ...ணிலொடு தா... மிடறவே
சிரமகிரிதி முதல் திகள்கததிபெற வுத்திடனுடைய
நுகரும் வடிவேல்.

*　　*　　*　　*

End:

பற்றுத கெங்கை வளநாடுயர்ந்த
வரைமேலிருக்கு முருகா
உற்றுரெனக்கு ஒரு பேருமில்லை யுன்பாத
நம்பு மடியார்

எத்தேச காலம் வேலென்ப வற்கு எமனுலே
வாதை வருமுன்
வற்ருத முத்துமயில் மீதிலேறி
வரவேணுமென் றனருகே.

No. 1757. PALANI-VELAVAR-VARUKAI-P-PATTU—[TEXT]

பழநிவேலவர் வருகைப்பத்து—[மூலம்]

[962-D]

Size, 9½″×1″. Pages, 8. Lines, 6 on a page. Condition, Slightly injured. Appearance, Old.

Note: This is an appeal to Lord Muruka at Palani to appear before the devotee and bless him. The work consists of 10 stanzas. Language is not chaste.

Complete.

குறிப்பு: இது, முருகப் பெருமான் விஷயமானது. செய்யுள் நடை சிறந்த தன்று. பிழைகளும் அதிகம். இந்தப் பிரதியில் பத்துச் செய்யுட்களு முள்ளன.

பூர்த்தி.

Beginning:

கொஞ்சமெனும் வயதுமிகக் குறித்து நாயேன்
கூடவினுல் சத்தமது கேளாதா னென்னை
நெஞ்சக மன்றியிலே யிருக்கா தானேன்
நீர்ச் சுழலிற் பூச்சிபோல் அலையுறேனே
பஞ்சைகளைப் போலத் தவித்து வாடுகிறேனே
பராமுகமா யிருப்பதுவும் நியாயந் தானே
வஞ்சனைகள் செய்யாமல் பழநிவேலா
மயிலேறி அடியேன் முன்வருகு வாயே. 1

End :

ஏதுவாய னீயிருக்கப் பில்லா மக்கள்
இதம்பேசி முகந்தந்து அடியே னுன்தான்
ஊதுபதம் பெற்ற வகைகள் என்று
உண்மையது தெரியாமல் புலம்ப லுற்றேன்
காதுதான் கேட்கிலையோ மந்த மாச்சோ
கமலவிழி நோக்கியென்னை கடாட்சம் பெற்றேன்
………… சென்றதுவே பழநிவேலா
மயிலேறி அடியேன் முன்வருகு வாயே.

No. 1758. PŪṬA-VĒṬĀḶA-VAKUPPU

பூத வேதாள வகுப்பு

[413]

Size, $17\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 4. Lines, 11 on a page. Condition, Fair. Appearance, Old.

Note: This work by Aruṇakiri Nātar, describes the mirth of spirits and demons who accompanied Lord Muruka in His battle against Cūrapatman.

Complete.

குறிப்பு: இது, அருணகிரிநாதர் முருகப்பெருமான்மீது இயற்றியது. அபபெருமான் சூரனோடு பொருத போர்க்களத்தில் ஆடிய அநேகவித பூத வேதாளங்களின் வருணனை இதனில் கூறப்பெற்றுள்ளது. இப்பிரதியில் நூல் முழுதுமுள்ளது.

பூர்த்தி.

Beginning :

அருண கணபண புயக சுடிகையி
னகில புவனமு முதவு மலைமகள்
அமலை யாரியை யந்தரி சுந்தரி
யிமய மாமயி லம்பைத்ரி யம்பகி

அச்சுதச கோதரிய ளைத்துவே தத்தலைவி
யற்புதபு ராதனிவ ரப்ரகா சப்ரக்ருதி.

* * * *

End :

கடியகு ணத்த சினத்த சகத்ர யோசனை
நெறிய கழுத்த கழித்த விழித்த பார்வைய
காதநூ ருயிர கோடி வளைந்தன
பூதவே தாள மநேகவி தங்களே.

No. 1759. MAYIL-VIRUTTAM—[TEXT]

மயில் விருத்தம்—[மூலம்]

[413-D]

Size, $17\frac{1}{2}'' \times 1\frac{3}{4}''$. Pages, 4. Lines, 16 on a page. Condition, Fair. Appearance, Old.

Note : This work by Sri Aruṇakiri Nātar is a description of the divine prowess of the Peacock, the Lord's vehicle.

Complete.

குறிப்பு : *இது, அருணகிரிநாதர், முருகப்பெருமான் ஏறும் மயிலின் சிறப்பைக் கூறுவது; அச்சிடப் பெற்றுள்ளது. காப்பும், நூற்பயனும் சேர்ந்து 12 விருத்தங்கள் இந்தப் பிரதியில் உள்ளன.*

பூர்த்தி.

Beginning :

சந்தன பாளித குங்கும புளகித சண்பக கடகபுயச்
சமர சிகாவல குமர சடானன சரவண குரவணியுங்
கொந்தள பாரகி ராதைபு ராதனி கொண்க வெனப்பரவக்
கூதள சீதன பாத மெனக்கருள் குஞ்சரி மஞ்சரிதோய்

